

அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மன்

# வாட்டம் தீர்த்திடும்

# திருவான்மியூர் ஈசர்

## அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில்

## தல வரலாறு




ஆக்கியோர்

**மா. இராஜகோபாலன்**

M.A. (History), M.A. (Tamil)

**இரா. ப்ரகதீஸ்வரன்**

**திருக்கோயில் வெளியீடு**

**1989**

முதல் பதிப்பு : ஜனவரி 1989

உரிமை : திருக்கோயிலுக்கே

அச்சிட்டோர்
ஸ்ரீ காமாக்ஷி பிரிண்டர்ஸ்
சென்னை-41

த. ஆளுடையபிள்ளை, இ. ஆ.ப.
ஆணையர் மற்றும்
அரசுச்செயலாளர்.

வணிகவரி மற்றும்
அறநிலையத்துறை
புனித ஜார்ஜகோட்டை
சென்னை-600 009.
நாள் : 9-1-1989.

# வாழ்த்துரை

சென்னை மாநகர் வாழ் மக்களுக்கு அருட் கொடையாய் ஈசன் எழுந்தருளியுள்ள சிவத்தலங்களுள் தனிச்சிறப்பு பெற்று விளங்கும் திருத்தலமாக விளங்குவது திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயில். காலத்தை வென்று நிற்கும் இத்தலம் பற்றிய வரலாற்றை வெளியிட கோயில் நிர்வாகம் மேற்கொண்டுள்ள முயற்சி பாராட்டத்தக்கது.

தொண்டை, நாடு அந்நன்னாட்டில் திருவான்மியூர் பெற்றுள்ள இடம், மூர்த்தி-தலம்-தீர்த்தம் என்றான சிறப்பு, திருவான்மியூர் தல புராணம், கல்வெட்டுக்கள், சிற்பங்கள் மற்றும் திருக்கோயிலைப் பற்றிய பல்வேறு விவரங்களை இந்நூல் கொண்டுள்ளது.

திருஞானசம்பந்தப் பெருமானாலும், அப்பரடிகளாலும் பாடப்பெற்ற இத்தலம், பிற்காலத்தில் அருணகிரிநாதராலும் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளாலும் போற்றிப் பரவப் பட்ட பெருமை கொண்டது. பல்வேறு இன்றியமையாத செய்திகளைத் தன்னுள் அடக்கியுள்ளது. இந்நூலின் தனிச்சிறப் பெனக் கருதுகிறேன். இந்நன்முயற்சிக்கு என் வாழ்த்து. சீரிய இப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் மருந்தீசர் உடனாய திரிபுரசுந்தரியின் அருள் நிறைய வேண்டும்.

**வ. ராமதாஸ்,** ஐ.ஏ.எஸ்.
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600 034.

# வாழ்த்துரை

காசி, திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை ஆகிய நான்கு தலங்களை முத்தி தரும் சிவத்தலங்களாகப் போற்றுவர்.

காசியில் இறக்கவும், திருவாரூரில் பிறக்கவும், சிதம்பரத்தைக் காணவும், திருவண்ணாமலையை நினைக்கவும் முக்தி கிட்டும் என்று நம் ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

பிறந்தாலும், இறந்தாலும், கண்டாலும், நினைத்தாலும் முக்திதரும் தலமாகத் திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருத்தலம் போற்றப்படுவது இங்கு நினையத்தக்கது

"மருவிய காசி ஆரூர் மன்னிய அருணை தில்லை
இரும்பெரு வீட்டைச் சூழில் இறந்திடில் பிறக்கில் உன்னில்
அருள்பெறக் காணில் என்பர் அரிய இத்தலத்தில் இவ்வாறு
அருகிய பேதமின்றி அளித்திடும் எவர்க்கு முத்தி"

என்று திருவான்மியூர்த் தலபுராணத்தில் பூவை கல்யாண சுந்தரனார் பாடியுள்ளார்.

இத்தகைய திருத்தலத்தை வணங்கும் அடியார்கள் கல்வியறிவு, செல்வம், அழகிய மனைவி, சிறந்த புத்திரர்கள் ஆகிய பல பேறுகளையும் ஒருங்கு பெற்றுச் சிறப்புற வாழ்வர் என்பதையும் அவரே

"கல்வி வேண்டுநர் கனகம் வேண்டுநர் காதல்
செல்வி வேண்டுநர் சேய்கள் வேண்டுநர் தேர்ந்த
பல்விதப் பொருள் வேண்டுநர் அவையெலாம் பகுக்கு
நல்விழாத் தினம் வளர் திருவான்மியூர் நகரம்".

என்று பாடியிருக்கக் காண்கிறோம்.

19 படலங்கள், 1022 விருத்தங்களில் (பூவை கல்யாண சுந்தரனார்) செய்யுள் வடிவில் பாடிய திருவான்மியூர்த் தலபுராணச் சிறப்புகள் அனைத்தையும் உரை நடையில் வடித்துக் கொடுத்திருப்பதோடு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறந்த இத்திருத்தலத்தின் ஏற்றங்களை எல்லாம் எழிலுறத் தொகுத்து

உள்ளார்கள் இந்நூலின் தொகுப்பாசிரியர்கள் திரு மா. இராஜ கோபாலன் மற்றும் இரா. பிரகதீசுவரன் ஆகியோர்.

சமயக்குரவர் நால்வருள்ளும். திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் ஆகிய இருவராலும் பாடப்பெற்ற மிகப் பழமையான திருத் தலம் ஆகும் இது. திருவான்மியூரில் எழுந்தருளியுள்ள பால் வண்ணநாதராம் மருந்தீஸ்வரரை மணம் நிறைந்த மலர்களைக் கொண்டு வழிபடுவார் வினை யாவும் தீர்ந்துவிடும் என்பதைத் திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

''விண்ட மாமலர் கொண்டு விரைந்து நீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டுநீர் செய்த பாவம் பறைந்திடும்
வண்டுசேர் பொழில் வான்மியூர் ஈசனே''
ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயில்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே''

என வரும் திருநாவுக்கரசரின் திருப்பாடல்களைப் பாடி மருந் தீஸ்வரரை வழிபட, வழிபடுவோர் தீவினைகள் யாவும் மறையும் என்பது திண்ணம். அதனால்தான் இத்திருத்தலத்தை இரு பதி கங்களால் போற்றியுள்ள திருஞானசம்பந்தரும்

''அரையா உன்னை யல்லால் அடைய தென தாதரவே''
''ஐயா உன்னை யல்லால் அடையா தென தாதரவே''
''அன்பா உன்னை யல்லால் அடையா தென தாதரவே''
அண்ணா வுன்னையல்லால் அடையா தென் தாதரவே''

என்று திருவான்மியூர் ஈசனைப் பாடிச் சரண் அடைந்திருக்கக் காண்கிறோம்.

இத்தகைய திருத்தலத்தைத்திருமால், நான்முகன் முதலான தேவர்களும் வால்மீகி முனிவர், அகத்தியர் முதலான ரிஷிகளும், காமதேனுவும் வழிபட்டுய்ந்த வரலாறுகள் எல்லாம் இந்நூலில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன. இத்திருத் தலத்திற்குள்ள இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுச் சிறப்புகளை யும் பூஜை, வழிபாட்டு முறைகள் மற்றும் திருவிழாக்கள் பற்றிய விவரங்களை எல்லாம் கற்போர் பயனுறும் வண்ணம் மிகச்சிறப் பாகத் தொகுத்தளித்துள்ள தொகுப்பாசிரியர்கள் இருவருக்கும் என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறையடியார் கள் அனைவரும் இவ்வினிய நூலைப் படித்துப் பயனுறவேண்டு கிறேன்.

ந. ச. இராமசந்திரன், பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர்,

# வாழ்த்துரை

சென்னை மாநகரில் ஒரு பகுதியாகத்தற்போது அமைந்துள்ள திருவான்மியூர் பழமையும், திருவருளும் பொருந்திய ஒரு திருத் தலமாகும். திருவான்மியூரில் அமைந்திருக்கும் அருள்மிகு, மருந்தீஸ்வரர் திருக்கோயில் மூவர்களாலும், அருணகிரிநாதர். தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோர்களாலும் பாடப் பெற்ற ஒரு திருத்தலமாகும். திருவான்மியூர் அருள்மிகு. மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் அமைந்துள்ள சிவபெருமான்சுயம்பு லிங்க வடிவிலே அமைந்துள்ளார். இந்தத்திருத்தலம் தீர்த்தத் திற்கும் பெருமை வாய்ந்ததாகும். இத்தகைய ஒரு சிறப்புமிக்க திருக்கோயிலின் வரலாற்றினைத் தொகுத்துக்கொடுத்துள்ள ஆசிரியர் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்து இத்தல வர லாறு வெளியிட முயற்சி மேற்கொண்ட அனைவருக்கும், மற்றும் இத்திருக்கோயில் வந்து வழிபடும் பக்த கோடிகள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டுமாய் அருள் மிகு. மருந்தீஸ்வரரைப்பிரார்த்திக்கின்றேன்.

கே. கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.,
துணை ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

# வாழ்த்துரை

செந்தமிழ்நாடு தெய்வமணங்கமழும் திருநாடு. எண்ணிலாத் திருக்கோயில்களைத் தன்னகத்தே கொண்ட நன்னாடு. ஊர் தோறும் கோயில்கள் அமைத்து, 'மண்ணகத்தின் விண்ணகமாய் ஆலய வழிபாட்டைப் போற்றி வருபவர் நம் மக்கள்.

சான்றோர் மிக்க தொண்டை வளநாட்டில் சென்னையம்பதி யில் அமைந்துள்ள பாடல் பெற்ற பெரிய சிவத்தலங்களுள் திரு வான்மியூர் திருக்கோயிலும் ஒன்றாகும். அருட்சுரங்கமாக, கலை களின் கருவூலமாக, வரலாற்றுப் பெட்டகமாக விளங்கும் தமிழகக் கோயில்களில் இத்திருக் கோயிலும் ஒன்றாகும்.

இத்திருக்கோயிலின் தொன்மையையும், தேவாரப் பாடல் பெற்ற சிறப்பையும்,வரலாற்றுச் செய்திகளைத் தரும் கல்வெட்டுக் களையும்சிற்பங்களின் அருமையையும், பூஜை, திருவிழாக்கள், நிர்வாகம் போன்ற பல்வேறு செய்திகளையும் ஒன்றாகத் திரட்டி "வாட்டம்தீர்த்திடும் திருவான்மியூர் ஈசர்" எனும் தலைப்பில் இத் திருக்கோயிலின் தலவரலாறு, நூல் வடிவில் திருக்கோயில் வெளி யீடாக வெளி வருகிறது. நூல் படைத்த ஆசிரியர்கள் திருவாளர் கள் மா இராஜகோபாலன், இரா. பிரகதீசுவரன் இருவரின் புலமை பக்கந்தோறும் பளிச்சிடுகிறது. பாமரர் முதல் பண்டிதர் வரை படித்து மகிழத்தக்க வகையில் நூல் எளிமையாக, தெளி வான மொழி நடையில் அமைந்துள்ளது. அவர்களுக்கு என் பாராட்டுதல்கள்.

இந்நூலினை நல்ல முறையில் வெளியிட முயற்சிகள் எடுத்த திருக்கோயில் தக்கார், அறநிலைய உதவி ஆணையர் திரு ப. தனபால் எம்.ஏ., பி எல்., அவர்களுக்கும், நிர்வாக அலு வலர் திரு இரா. வெங்கடேசன் பி.ஏ.,பி.ல். அவர்களுக்கும் என் னுடைய அன்பார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பக்தர்கள் இந்நூலை வாங்கிப் படித் துப்பயன் பெறுவார்களாக.

வாழிய தெய்வத் திருத்தொண்டு !

இரா. தண்டபாணி, பி.எஸ்ஸி., பி எல்.
இணை ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34

# வாழ்த்துரை

"வாட்டம் தீர்த்திடும் திருவான்மியூர் ஈசர்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் தல வரலாற்று நூலைப் படித்து நான் மகிழ்ந்தேன்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல்களைப் பெற்ற இத்திருத்தலம், மிகத் தொன்மையான ஆலயம்; சுயம்புலிங்க சேத்திரம்.


இங்கெழுந்தருளியுள்ள இறைவர் வால்மீகி முனிவர் வழிபட்டதால் வான்மீகநாதர் எனவும், காமதேனு பாலாபிசேகம் செய்து வழிபட்டதால் பால்வண்ணநாதர் எனவும், பாற்கடலில் விளைந்த அமுதத்தால் தேவர்கள் அபிசேகம் செய்து வழிபட்டதால் அமுதேசர் எனவும், அகத்திய முனிவருக்குச் சிவபெருமான் மூலிகைகளின் தன்மைகளை உபதேசித்தபடியால் ஔஷதீசர் எனவும் நால் வேதங்களும் வழிபட்டதால் வேதபுரீஸ்வரர் எனவும் போற்றப்படுகிருர். காமதேனு சுயம்புலிங்கத்தின் மீது பாலினைப் பொழிந்தபோது அதன் காற்குளம்புகள் பட்டதால் உண்டான வடுக்களைப் பால்வண்ணநாதர் இன்றும் தமது திருமேனியில் தாங்கியிருப்பது முதலான பல செய்திகள் இந்நூலில் விவரிக்கப் பட்டுள்ளன.

சிவபெருமான் உண்டாக்கிய ஜன்மநாசனி, காம நாசனி, பாபநாசனி, ஞானதாயினி, மோட்சதாயினி முதலிய தீர்த்தங்களும் மற்றைய தேவர்களால் உண்டாக்கப்பட்ட சூரியதீர்த்தம், பிரம்ம தீர்த்தம், இயம தீர்த்தம் முதலான தீர்த்தங்களைப் பற்றிய செய்திகளும் கூட இந்நூலில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன.

திருவான்மியூர் ஆலயம் பற்றிய கல்வெட்டுக்களைத் தொகுத்து வழங்கியும், தேவாரப்பாடல்களை விளக்கவுரையுடன் வழங்கியும், பூவை கல்யாணசுந்தரனர் செய்யுள் வடிவில் பாடியுள்ள திருவான்மியூர்புராணத்தின் சிறப்பை உரைநடையில்விளக்

கியும், அருணகிரிநாதர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகியோர் பாடியுள்ள திருவான்மியூர் சிறப் பைத்தொகுத்து வழங்கியும் இந்நூலைப் பயன்மிகு நூலாக வடித் துள்ள இந்நூலின் தொகுப்பாசிரியர்கள் திரு. மா. இராஜ காபாலன் மற்றும் இரா. பிரகதீசுவரன் ஆகிய இருவரையும் நான் மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

இப்பயன்மிகு நூலைப் படித்து ஆன்மீகப் பெருமக்கள் அனை வரும் வாட்டம் தீர்ந்து நலமுறை வாழுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்,


7
8
9
10
6
6
11
21
25
24
25
22
26
27
23
20
18
19
13
12
3
14
5
2
15
17
16
4
1
28
29

# கோயிலின் வரைபடம் விளக்கம்

1 கிழக்கு வாயில் கோபுரம்
2 நான்கு கால் மண்டபம்
3 அபிஷேக தீர்த்தம்
4 மடைப்பள்ளி
5 ஸ்ரீ விநாயகர்
6 வாகன அறை
7 மேற்கு வாயில் கோபுரம்
8 கொடிமரம்
9 பலிபீடம்
10 நந்தி
11 தல விருட்சம்
12 அலுவலகம்
13 யாக சாலை
14 பள்ளியறை
15 திரிபுர சுந்தரி அம்மன் கருவறை
16 சுக்கிரவார அம்மன்
17 அம்மன் சந்நிதி வெளிமண்டபம்
18 சுப்பிரமணியர் சந்நிதி
19 விஜயகணபதி
20 தியாகராஜர் மண்டபம்
21 தியாகராஜர் சந்நிதி
22 மருந்தீசர் சந்நிதி நுழைவு வாயில்
23 அறுபத்து மூவர்
24 மருந்தீசர் சந்நிதி மகாமண்டபம்
25 உற்சவர்கள்
26 நடராஜர்
27 மருந்தீஸ்வரர் கருவறை
28 சித்திரைத் திருக்குளம்
29 முற்றுப் பெறாத கோபுரம்

# முன்னுரை

மூர்த்தி தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புக்களையும் ஒருங்கே பெற்றுள்ள திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் பற்றிய விரிவான தல வரலாற்று நூல் ஒன்றை வெளியிட வேண்டும் என்ற எங்களது நீண்டநாள் அவா இறையருளால் நிறைவேறியது. உள்ளன்புடன் வழிபடும் பக்தர்களைக் காத்தருளும் அருள்மிகு திரிபுரசுந்தரி உடனுறை மருந்தீஸ்வரருக்கு இந்த நூல் எங்களது சிறிய காணிக்கை. இதிலுள்ள குறைகளைப் பொறுத்து அவற்றை நீக்க வழிகாட்டுமாறு ஈசனைத் துதிக்கிறோம்.

தமிழக அரசின் ஒப்புதலுடனும் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் ஆதரவுடனும், தமிழக ஆலயங்கள் பற்றிய களஞ்சியத்தை உருவாக்கி வரும் திரு. முத்துசாமி பிள்ளை (இ. ஆ. ப ஒய்வு) அவர்கள் இந்நூலை எழுதுவதில் வழிகாட்டியாக விளங்கினார். இப்பணியில் பல அரிய ஆலோசனைகளை வழங்கிய திரு. முத்துசாமி பிள்ளையவர்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம்.

இந்நூல் எழுதுவதில் எங்களைப் பெரிதும் ஊக்குவித்த முன்னாள் தக்கார் திரு ஸ்ரீ ராம் அவர்களுக்கும், ஆலயத்தின் நிர்வாக அதிகாரியான திரு இரா. வெங்கடேசன் அவர்களுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றி.

வடமொழியில் ஆதியில் எழுதப்பட்ட திருவான்மியூர் தல புராணத்தை அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர யதீந்திரர் தமிழில் இயற்றியுள்ளார் இப்போது இவ்விருநூல்களும் கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே கலியாணசுந்தரர் இயற்றிய நூலிலிருந்து சில பாடல்களைத் தலபுராணச் சுருக்கம், இலக்கியம் ஆகிய பகுதிகளில் இடம் பெறச் செய்துள்ளோம்.

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் பற்றிய நூலாக இருந்தபோதிலும் தமிழக வரலாறு, கலை, இலக்கியம், கல்வெட்டுக்கள் போன்ற பொதுவான தகவல்களை அவ்வப் பகுதிகளில் அளித்துள்ளோம். இதுபோன்ற செய்திகளைப் படித்தறிய வாய்ப்பு இல்லாதவர்களும் தமிழர்களின் கலைப்பாரம்பரியத்தை அறிந்து கொள்ள இவை உதவும் என நம்புகிறோம். இக் கோயிலின் வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுதுவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லாமையால் ஆலயத்தின் வளர்ச்சியை மட்டும் வரலாற்றுப் போக்கில் குறிப்பிட்டுள்ளோம்.

எம். இராஜகோபாலன்
பிரகதீஸ்வரன்

# நன்றியுரை

தெய்வமணம் கமழும் செந்தமிழ் நாட்டின்கண் "சான்றோரு டைத்து" எனும் பெருமை பெற்றது தொண்டை நன்னாடு. இத்தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் திருவான்மியூர் திருத்தலமும் ஒன்றாகும். தருமமிகு சென்னையின் தென்பாகத்தில் அமைந்துள்ள பழைமையான திருத்தலம் திருவான்மியூர், அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலாகும்.

ஸ்ரீ அஷ்டாவதானம் பூவை கலியாண சுந்தர முதலியார் அவர்கள் செய்யுள் வடிவில் எழுதிய திருவான்மியூர்த் தலபுராணம் பண்டிதர்கள் மட்டுமே படித்து மகிழத்தக்கது. மேலும் அந்நூல் இன்று கிடைத்தற்கரிது. இத்திருக்கோயில் பற்றிய தலபுராணச் சிறப்புகள், பூஜை, திருவிழாக்கள், கல்வெட்டுச் செய்திகள், இத்திருக்கோயிலைப் பற்றிய சான்றோர்கள் பாடியது போன்ற பல்வேறு விவரங்களைத் தொகுத்து எளிய தமிழில் அனைவரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் திருவாளர்கள் மா. இராஜகோபாலன் அவர்களும் இரா. பிரகதீசுவரன் அவர்களும் நூல் வடிவில் அழகாகப்படைத்துள்ளனர். அவர்கள் அருள்மிகு மருந்தீசுவரர் திருவருள் பெற்று இன்பமுடன் வாழ்வார்களாக!

இந்நூலை அச்சிடுவதற்கான காகிதத்தைத் தன் உபயமாக அளித்துதவிய திரு பி. இராமச்சந்திர ஆதித்தன் (நிர்வாக ஆசிரியர், மாலைமுரசு & தேவி வார இதழ்), நல்ல முறையில் இலவசமாக அச்சிட்டுக்கொடுத்த திரு. L. சோலைமலை(உரிமையாளர் காமாட்சி அச்சகம்) மற்றும் முகப்பு அட்டை செலவினை ஏற்றுக் கொண்ட திரு. பி. என். குமார் (இயக்குனர், சியர்ஸ் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம்) ஆகியவர்களுக்கும் எங்களது இதயபூர்வமான நன்றியும், இறைவன் அருளும் உரித்தாகுக!

எங்கள் விருப்பத்தினை ஏற்று திருக்கோயில் மூலம் வெளியிடப்படும் இந்நூலுக்கு வாழ்த்துரைகள் வழங்கிய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உயர் அதிகாரிகள் அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல் வெளியீட்டு வகையில் ஒத்துழைத்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி! பக்தர்கள் கரங்களில், நெஞ்சங்களில் "வாட்டம் தீர்த்திடும் திருவான்மியூர் ஈசர்" எனும் இத்திருத்தல நூல் விளங் குவதாகுக!

இங்ஙனம்

**இரா. வெங்கடேசன்**
பி.ஏ.பி.எல்.
நிர்வாக அதிகாரி

**ப. தனபால்**
எம்.ஏ.,பி.எல்
தக்கார்/உதவி ஆணையர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | தோற்றுவாய் | 1 |
| 2 | தொண்டைநாடு | 9 |
| 3 | திருவான்மியூர் | 12 |
| 4 | கோயிலின் அமைப்பு | 15 |
| 5 | திருவான்மியூர் ஸ்தலபுராணம் | 29 |
| 6 | ஆலயவரலாறு | 74 |
| 7 | சிற்பங்கள் | 83 |
| 8 | கல்வெட்டுக்கள் | 95 |
| 9 | இலக்கியம் | 107 |
| 10 | திருப்பணிகள் | 150 |
| 11 | கோயிலால் விளைந்த நன்மைகள் | 154 |
| 12 | பூஜை, அபிஷேக முறைகள், திருவிழாக்கள் | 158 |
| 13 | பிழைத்திருத்தம் | 173 |

# தோற்றுவாய்

உலகம், உயிர், தெய்வம் என்ற முப்பெரும் உண்மைகளைப் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொள்ளுவர். இவற்றுள் தெய்வம் முற்றுணர்வும் முடிவிலா ஆற்றலும் கொண்டதாய், அனைவருக்கும் பொதுவானதாய், அவரவர்க்குச் சிறப்பாகவும் அருள் புரிந்து வருகிறது. உருவம், பெயர் ஆகிய எதுவும் இல்லாத தெய்வத்தை அவரவர்க்கு ஏற்ற பெயரிலும், உருவத்திலும் உலகோர் வழிபட்டு வருகின்றனர். இதனையே, "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாததற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமே", என்று மாணிக்க வாசகர் விளம்புகிறார். இவ்வாறு அவரவர் செய்யும் பூஜைக்கு ஏற்ப பலன் கிடைக்கிறது. மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டு வேறு சமயத்தைத் தோற்றுவிப்பவரும், வேறுபட்ட சமயத்தைச் சார்பவரும் உண்டு. அவர்களும் தங்களது புதிய நெறிகளுக்கேற்ப வழிபட்டுப் பயன் பெறுகிறார்கள்

இந்த உண்மையை நம்மாழ்வாரின் பாடல் வலியுறுத்துகிறது

அவரவர் தமதம தறிதறி வகைவகை
அவரவ ரிறையவ ரென வடிவடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவில ரிறையவர்
அவரவர் விதிவழி யடைய நின்றனரே"

இக்கருத்தைச் சைவ சமயம் வேறொரு வழியில் எடுத்துரைக்கிறது. சிவஞான சித்தியார் எனும் சைவ சித்தாந்த நூல்

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

என்று விளம்புகிறது.

எல்லாம் வல்ல முழு முதற் பொருளான சிவபெருமான் சைவர்களால் வழிபடப்பெறுகிறார். இவரையே சிவன் என்றும் சிவம் என்றும் போற்றுகின்றனர். சிவனுக்குரிய நாமங்கள் எண்ணாயிரங்கோடி என்பர். அவற்றுள் சிறந்தவை சிவன், பவன் என்பவை. இவ்விரண்டினுள் அனைவரும் அறிந்து ஓதத்தக்க நாமம் சிவன் என்பதாகும். இச்சொல் மங்கலம், நிறைவு என்ற இறை குணங்களை உணர்த்தும். சிவன் என்றால் தூய தன்மையுடையவர்: பேரின்பத்திற்குக்காரணமானவர்; முற்றுணர்வுடையவர்

எனும் மூன்று பொருட்களைச் சிவஞான போதம் குறிப்பிடுகிறது. சிவ சிவ என்று சொன்னால் ஒருவனின் தீயவினைகள் அழியும் என்பது திருமூலர் கண்ட உண்மை;

''சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.''

-திருமூலர்.

உலகிலுள்ள உயிர்களைப் பசுக்கள் என்றும், அப்பசுக்களைப் பாதுகாக்கும் சிவபெருமானே பதி என்றும் சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. உயிர்களைச் சுற்றி உலகியலில் ஈடுபாடு எனும் கயிறு கட்டப்பட்டுள்ளது. அந்தப் பிணைப்பே பாசம் எனப்படும். அப்பிணைப்பு விடுபட்டால் வீடுபேறு கிடைக்கும். பிறவிப் பெருங்கடலில் உயிர்கள் நீந்திக் கரையேற வேண்டுமெனில் பாசம் எனும் கயிற்றை அறுக்கவேண்டும். அதற்குரிய வழி இறைவனை இடைவிடாமல் வழிபடுவதேயாகும். பிறவியான கடலைக் கடக்க மனமெனும் தோணியேறி,அறிவு எனும் துடுப்பால் நீந்த வேண்டும் சினம் போன்ற தேவையற்ற பொருட்களைத் தோணியில் ஏற்றிச் செல்லும்போது, ஆசை எனும் பாறை தாக்கினால் அனைத்தும் அழியும். இதற்கு இறைவனை உரிய முறையில் வழிபடுவதே பரிகாரமாகும். இக்கருத்தை அப்பரின்பாடல் தெளிவுறுத்துகின்றது.

''மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகடலோடும்போது
மதன் எனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
உனையுனு முணர்வை நல்காய் தற்றியூர் உடையகோவே''

உலகம் உய்யும் பொருட்டும் அடியார்க்கு அருள் புரியும் பொருட்டும் சிவபெருமான் பல கோலங்கள் கொள்கிறார். முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்கும் சிவபரம் பொருள் சுத்த சிவமாகும். அத்தத்துவங்களில் நின்று ஐந்தொழில்களையும் செய்து, ஆன்மாக்களின் மும்மலங்களையும் நீக்கி முக்தியளிக்கும் நோக்கத்துடன் சிவபெருமான் அருவம், அருவுருவம், உருவம் எனும் மூவகைத் திருமேனி கொண்டு விளங்குகிறார்.

உலகும், உயிர்களும் சிவபெருமானிடம் பொலிவுறுவதால் ''எல்லாம் சிவமயம்'' என்று சான்றோர்கள் கூறுவர். சிவம் மங்

களத்தைக் குறிக்கும். இதனையுணர்ந்து ஒழுகுவோர் சிவஞானம் பெறுவர்.

தம்மை உள்ளன்புடன் வழிபடும் தேவர்கள், மானுடர் மற்றும் அனைத்து உயிர்கட்கும் அருள் புரியும் பொருட்டு, ஈசன் தமது அருவநிலையிலிருந்துஇறங்கி அருவுருவத்திருமேனி அல்லது உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள இடமே ஆலய மாகும். ஆன்மா இறைவனுடன் சேர்வதற்கு உரிய இடம் அது. ஆ எனும் சொல் உயிரைக் குறிக்கும். லயம், லயித்தல் அல்லது ஈடுபடுதல் என்பதைச் சுட்டும். பதி, பசு, பாசம் என்பனவற்றுள் பதி இறைவனையும் பசுஉயிர்களையும்,பாசம் இவைஇரண்டிற்கும் இடையேஉள்ள தடையையும்குறிக்கும். உயிரின்ஆணவ மலத்தை ஒடுக்கும் திருத்தலமே ஆலயமாகும். கோ எனும் சொல் ஈசனை யும், இல் எனும் சொல் அவ்விறைவன் உறையும் இடத்தையும் சுட்டுகின்றன. இறைவன் எழுந்தருளியுள்ள இடமே கோயிலாகும். பழத்தில் சாறு போலவும், விறகில், தீ போலவும், எள்ளில் எண் ணெய் போலவும், பாலில் வெண்ணெய் போலவும் எங்கும் நீக் கமற நிறைந்து நிற்கும் சிவபிரான், கோயில்களில் தயிரில் நெய்போல நின்று ஆன்மாக்களுக்கு அருள் புரிகிறார். அடியார் கள் இறைவனை அமைதியுடன் வழிபடவும், ஆகம முறைப்படி பூசைகள் புரியவும், ஈசனின் அருளை எளிதில் பெறவும் ஆலயங் கள் உதவுகின்றன.

இறைவன் எங்கும் நிறைந்துள்ளார். அவரது அருளைப் பெற, அவரை வழிபட ஒரு முறை உள்ளது. சூரியனின் ஒளிக் கதிர்கள் நெருப்பேயாகும். ஆயினும் ஒரு துணியை வெய்யிலில் காட்டினால் அதில் உடனே நெருப்புப் பற்றிக் கொள்வதில்லை. பூதக்கண்ணுடிக்குக் கீழ் அதனைப் பிடித்து,வெய்யிலில் நீட்டினால் தீப்பற்றிக் கொள்கிறது. அநேக கதிர்களையும் பூதக்கண்ணாடி ஒரு சேரக் குவிக்கிறது. எங்கும் வியாபித்துள்ள மின்சார சக்தியை வெளிப்படுத்த ஒரு கருவி தேவைப்படுகிறது. எங்கும் நிறைந்துள்ள ஈஸ்வரரின் அருளை நமக்குக் கிடைக்கச் செய்ய ஆலயம் தேவையாகிறது. பசுவின் உடல் முழுதும் பால் நிறைந்துள்ள போதிலும் அது வெளிப்பட அதன் மடி தேவைப் படுவது போலவே ஆண்டவனின் அருளை வெளிப்படுத்த ஆலயம் அவசியமாகிறது.

சிவாலயங்களைச் சிவபெருமானாகவே கருதி வழிபட வேண்டும். இந்த உண்மையைச் சைவசித்தாந்த சாத்திரமான சிவஞானபோதம்,

"மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்று வலியுறுத்துகின்றது. சிவாலய வழிபாடு தீவிரமாக்கப்படவும், இறைவனிடம் உயிர்கள் கொள்ள வேண்டிய தொடர்பு செறிவுறவும் விரதங்கள், நோன்புகள் போன்றன வகுக்கப்பட்டன. இவற்றிற்கும் சிவாலயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. சிவாலய வழிபாடு செய்து பேறு பெற்ற அடியார்களுள் மார்க்கண்டேயர் தலைசிறந்த உதாரணமாகத் திகழ்கிறார். இந்த உண்மையை ஒரு கந்த புராணச் செய்யுள் அழகாக எடுத்துக் காட்டுகிறது.

"அத்த னாலய மனைத்தும் வைகலும்
பத்தி யோடுமுன் பரவியே மிகுஞ்
சுத்த னாகிய தொலைவி லாருயிர்
முத்தி யெய்தினான் முழுது ணர்ந்துளோன்"

புண்ணிய பூமியெனக் கருதப்படும் நம்நாட்டில் எண்ணற்ற சிவத்தலங்கள் உள்ளன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்படைந்த தலங்கள் பல உள்ளன. சைவ நெறி தழைக்கச் செய்த சமயக் குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரின் பதிகங்களையும் பெற்ற பதிகள் 'பாடல் பெற்ற தலங்கள்' என்று சிறப்பிக்கப்படுகின்றன. மேலும் இவ்வடியார்கள் தனிப்பதிகம் பாடாமல் பிற பாடல்களில் குறிப்பிட்டுள்ள தலங்களும் உள்ளன. இவையே 'வைப்புத்தலங்கள்' எனப்படும். சிவநெறி வளர்வதற்காக இவ்வடியார்கள் தலவழிபாடு புரிந்தார்கள் "சதமணிக்கோவை" இக்கருத்தை

"வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்றுமுளோர்
பொன்றறிய ஞானம் புகுந்திருக்கச் சென்று
மதிதோறும் பாடிப் பணியும் தென் மாட
மதிதோ யருட்டுறை யாய்வந்து"

என்று குறிப்பிடுகிறது

பாடல் பெற்ற சிவத்தலங்கள் மொத்தம் 274 அவற்றுள் சோழநாட்டில் 190 தலங்கள் உள்ளன. இவற்றுள் காவிரியின் வடகரையில் 63 தலங்களும், தென்கரையில் 127 தலங்களும் உள்ளன. பாண்டி நாட்டில் 14 தலங்களும், மலைநாட்டில் ஒன்றும், துளுவ நாட்டில் ஒன்றும், கொங்கு நாட்டில் ஏழு

தலங்களும், நடு நாட்டில் 22 தலங்களும், தொண்டை நாட்டில் 32 தலங்களும், வட இந்தியாவில் 5 தலங்களும், இலங்கையில் இருதலங்களும் அமைந்துள்ளன. தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் திருவான்மியூர் 25-வது இடத்தைப் பெற்றுள்ளது.

## வைப்புத் தலங்கள் :

தேவாரம் பாடிய மூவரும் நேராகச் சென்று பதிகங்கள் பாடாமல், தாங்கள் பாடிய பதிகங்களில் சில தலங்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய ஊர்கள் வைப்புத் தலங்கள் எனப்படும், திருப்பேரூர், பேராவூர், இரும்புதல், ஏமநல்லூர், ஏமப்பேரூர், மந்தாரம், மாறன்பாடி, கஞ்சாறு கருந்திட்டைக்குடி, தக்களூர், துடையூர், மூவலூர், முழையூர், சேவூர், சேலூர், ஊற்றத்தூர், காட்டூர், குண்டையூர், சடைமுடி, சாத்தங்குடி, கொண்டல், மிழலை, நாங்கூர், புரிசை, பழையனூர், புலிவலம், பொய்கை நல்லூர், திருக்காரிக்கரை, திரிபுராந்தகம் போன்ற தலங்களின் பெயர்கள் தேவாரப்பாசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றையே வைப்புத் தலங்களாகக் கருதுவர்.

*சிவத்தலத் தொகுதிகள் :* ஒவ்வொரு வகையால் தனிச் சிறப்புப் பெற்ற சிவத்தலங்களைத் தொகுதிகளாகப் பிரித்துள்ளனர்.

*1) அஷ்ட வீரட்டானத்தலங்கள் :* இந்த எட்டு வீரட்டத் தலங்களில் சிவபெருமான் எட்டுவகையான வீரச் செயல்களைப் புரிந்தார்.

1) திருக்கண்டியூர் —பிரம்மனின் ஐந்தாவது தலையைக் கொய்தல்.
2) திருக்கோவலூர் —அந்தகாசுர வதம்.
3) திருவதிகை —திரிபுரதகனம்.
4) திருப்பறியலூர் —தக்ஷன் தலையைக் கிள்ளியது.
5) திருவிற்குடி —ஜலந்தர சம்ஹாரம்.
6) திருவழுவூர் —கஜாசுரனை ஒறுத்தல்.
7) திருக்குறுக்கை —காம தகனம்.
8) திருக்கடவூர் —காலனைத் (யமன்) தண்டித்தல்

2) சப்த விடங்கத் தலங்கள் : முசுகுந்த மன்னன் தேவ லோகத்திலிருந்து கொணர்ந்த லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்த இடங்கள் 7 ஆகும். இங்குள்ள சோமாஸ்கந்தர் வீதிவலம் வரும்போது ஒரு தனிவிதமான நடனத்தை யாடுவார்.

1) திருவாரூர் — வீதிவிடங்கர் — அசபா நடனம்
2) திருநள்ளாறு — நாகவிடங்கர் → உன்மத்த நடனம்
3) நாகைக் காரோணம்—சுந்தரவிடங்கர்—பராவாரதரங்க நடனம்
4) திருக்காறாயில் — ஆதிவிடங்கர் — குக்குட நடனம்.
5) திருக்கோளிலி — அவனிவிடங்கர் — பிருங்க நடனம்
6) திருவாய்மூர் — நீலவிடங்கர் — கமல நடனம்
7) திருமறைக்காடு — புவனிவிடங்கர் — அம்சபாத நடனம்

3) ஆறு தாண்டவத் தலங்கள்: சிவபெருமான் தனிப்பட்ட நடனத்தை ஆடிய இடங்கள்.

1) சிதம்பரம் — ஆனந்தத் தாண்டவம்
2) பேரூர் — ஆனந்தத் தாண்டவம்
3) திருவாரூர் — அசபா தாண்டவம்
4) மதுரை — ஞானசுந்தரத் தாண்டவம்
5) புக்கொளியூர் அவிநாசி — ஊர்த்துவத் தாண்டவம்
6) திருமுருகன் பூண்டி — பிரமதாண்டவம்

4) பஞ்ச பூதத் தலங்கள் . இப்பூவுலகை இயக்கும் பஞ்சபூதங்களுக்கு உகந்த தலங்கள்—5.

1) திருவாரூர் அல்லது காஞ்சீபுரம் — பிருத்வித்தலம். (பூமி)
2) திருவானைக்கா — அப்புத் தலம் (நீர்)
3) திருவண்ணாமலை — தேயுத்தலம் (நெருப்பு)
4) திருக்காளத்தி — வாயுத்தலம் (காற்று)
5) சிதம்பரம் — ஆகாயத் தலம்

5) பஞ்ச சபைத் தலங்கள் : நடராஜப் பெருமான் எழுந்தருளியுள்ள இந்த ஐந்து சபைகளும் வெவ்வேறு பொருட்களால் ஆனவை.

1) சிதம்பரம் — கனகசபை (பொன்னம்பலம்)

2) மதுரை — இரஜித சபை (வெள்ளியம்பலம்)
3) திருநெல்வேலி — தாமிரசபை
4) திருக்குற்றாலம்— சித்திர சபை
5) திருவாலங்காடு - இரத்தினசபை

6) பஞ்சநாதத் தலங்கள் :நாதம் என முடியும் இத்தலங்களாவன. விசுவநாதம், சோமநாதம், ஜகந்நாதம், இராமநாதம், வைத்தியநாதம்.

7) பஞ்ச ஆரண்யத் தலங்கள்

திருவெண்பாக்கம் - இலந்தைக்காடு
திருப்பாசூர் — மூங்கிற்காடு
திருவெவ்வூர் — ஈக்காடு
திருவாலங்காடு — ஆலங்காடு
திருவிற்கோலம் (கூவம்) — தர்ப்பைக்காடு

8) முக்தியளிக்கும் தலங்கள் ஏழு :

காசி, காஞ்சி, வடமதுரை, அயோத்தி, பூரி, அவந்தி, துவாரகை

9) தென்கயிலைத் தலங்கள் :

காளத்தி, திருச்சிராப்பள்ளி, திரிகோணமலை,

10) காசிக்கு இணையான தலங்கள்

திருவெண்காடு, திருவையாறு, மாயூரம்,
திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருவாஞ்சியம்,

11) காயாரோகணத் தலங்கள்

காஞ்சி, கும்பகோணம், நாகப்பட்டினம்

12) மயானத் தலங்கள்

காஞ்சி, திருக்கடவூர், நாலூர்,

13) சப்தஸ்கானந் தலங்கள்

திருவையாற்றைச் சுற்றியுள்ள ஏழூர்கள்.
திருவையாறு, திருப்பழனம்' திருச்சோற்றுத்துறை, திருவேதிக்குடி திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம்.

14) மூன்று அர்ச்சுனத் தலங்கள் :

(வட) உத்தரார்ச்சுனம் — ஸ்ரீ சைலம்
மத்தியார்ச்சுனம் — திருவிடைமருதூர்
(தென்) புட்டார்ச்சுனம் — திருப்புடைமருதூர்.

இவை தவிர அருணகிரிநாதர் போன்ற முருகன் அடியார்களால் பாடப்பெற்ற முருகா ஆலயங்களும் உள்ளன. மேலும் அன்னை பராசக்தி முழுமுதற் கடவுளாக எழுந்தருளியுள்ள ஆலயங்களும், அன்னையின் வடிவான காளி போன்றோர்களுக்காக எழுப்பப்பட்ட ஆலயங்களும் உள்ளன. தேவி பராசக்தியின் உடற்பாகங்களைக் கொண்ட கோயில்கள் நம் நாட்டின் பல பகுதிகளில் தோன்றின; அவையே சக்தி பீடங்களாகத் திகழ்கின்றன. சக்தி பீடங்கள் 51 என்றும், 64 எனவும், 108 எனவும் கணக்கிட்டுள்ளனர்.

தொண்டைநாட்டிலுள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றான திருவான்மியூரின் பெருமையைப் பற்றிக் கூறும் முன்னர் அத்தலம் அமைந்துள்ள தொண்டை நாட்டின் சிறப்புக்களை அறிந்து கொள்ளுதல் பொருத்தமாகும்.



# 2

# தொண்டை நாடு

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்கள், தமிழகத்திலேயே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த ஆதிமக்களே ஆவர் என்பது பல ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக் கொண்ட கருத்து. தமிழகத்திலுள்ள ஆறுகள், மலைகள், குன்றுகள், கிராமங்கள் ஆகியவற்றிற்கு வழங்கும் தூய தமிழ்ப் பெயர்களே இந்த உண்மைக்குச் சான்றாக உள்ளதாக சர். ஜான் மார்ஷல் எனும் தொல்பொருளியல் நிபுணர் அறிவித்துள்ளார். தமிழர் வடநாட்டினருடனும், கடல் கடந்த பல நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். முன்பு லெமுரியா என்னும் பெரிய கண்டத்தின் ஒரு பகுதியாகத் தமிழகம் இருந்தது என்றும், அதன் பெரும்பகுதி கடற்கோளால் அழிவுற்றது என்றும் கருதப்படுகிறது. முதல் இரண்டு சங்கங்களின் உறைவிடமான மதுரை, கபாடபுரம் ஆகிய இரு நகரங்களும் கடல்கோளால் அழிவுற்றன. இச்செய்தியை ''பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. (நாடுகாண் காதை).

இத்தகைய தொன்மை வாய்ந்த தமிழ்நாடு முடியுடை மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களால் ஆளப்பட்டது. அவர்கள் ஆட்சிசெய்த பகுதிகள் சேர நாடு, சோழநாடு, பாண்டிய நாடு எனப்பெயர்பெற்றன. இவைதவிரத் தொண்டைநாடு கொங்கு நாடு, நாஞ்சில் நாடு என்ற பகுதிகளையும் உள்ளடக்கி இருந்தது இன்றைய கோவை, பெரியார், சேலம் மாவட்டங்கள் கொங்கு நாட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம் நாஞ்சில் நாட்டிலும் அடங்

கும். இன்றைய செங்கல்பட்டு மாவட்டமும் தற்போதுள்ள ஆந்திர நாட்டின் சிறுபகுதியும், வட ஆற்காடு தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளும் தொண்டை நாட்டில் அடங்கும்.

தொண்டை நாட்டின் வடவெல்லை திருவேங்கட மலை; தென் எல்லை பிறைகை எனப்படும் சேயாறு; கிழக்கே ஒலிக்கின்ற கடல்; மேற்கே கிழக்குத் தொடர்ச்சி மலை. இதன் இடைப்பட்ட தொண்டை நாட்டின் பரப்பு நான்கு காத தூரம். இந்த விவரங்களை ஔவையாரின் பாடல் தெரிவிக்கிறது.

"மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்குமவரியணி கிழக்குச்-சீர்களுயர்
தெற்குப் புனாகை திகழிருபது காத
நற் தொண்டை நாட் டெல்லை நாடு"

முதலில் குறும்பர்களுக்குச் சொந்தமான இப்பகுதியானது ஆடு,மாடுகள் மேய்க்கப்படும் தரிசு நிலமாகவே இருந்தது. குறும்பர் காலத்தில் இது இருபத்துநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது, குறும்பர் காவிரிப்பூம்பட்டினத்து வணிகருடன் கடல் வாணிகம் செய்துகொண்டிருந்தனர். பின்னர் ஆதொண்டச் சக்கரவர்த்தி என்பவன் குறும்பரை வென்று இந்நாட்டைக் கைக்கொண்டான். அம் மன்னர் பெயரால் இப்பகுதிக்குத் தொண்டை நாடு என்ற பெயர் ஏற்பட்டது இதுவே இப்பகுதியில் வழங்கி வந்த செவிவழிச் செய்தியாகும்.

சங்க காலத்தில் இப்பகுதி கரிகாற்சோழனின் ஆட்சிக்குட் பட்டிருந்தது.தொண்டைநாட்டின் வளத்தைப்பற்றி வேடன்ஒருவன் சொல்லிக் கேட்ட கரிகாலன், குறும்பரை வென்று இப்பகுதியைக் கைப்பற்றினான் காடுகளையழித்து இப்பகுதியை மேலும் வளப் படுத்திய அம்மன்னன், காஞ்சியில் குன்று போன்ற மதிலை யெழுப்பினான். காஞ்சியிலுள்ள சாத்தக் கடவுளை வழிபட்டுப் பெற்ற செண்டால், இமயமலைச் சிகரத்தில் தம் புலிக் கொடியை நாட்டினான்; பின்பு தொண்டை நாட்டில் சான்றோர்கள் பலரைக் குடியேற்றினான். இச்செய்திகளைச் சிலப்பதிகாரம், பெரிய புராணம் ஆகிய இலக்கியங்கள் மூலம் அறியலாம். தொண்டை நாட்டைக் கரிகாலன் கைப்பற்றி, அதனை வளமைப்படுத்திய செய்தியைப் பட்டினப்பாலை கூறுகிறது.

பின்னர் கரிகாலன் ஆதரவில் தொண்டைமான் இளந் திரையன் என்பவன் இப்பகுதியை அரசாண்டான். தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டுக் கடல் திரையில் வீசப்பட்டதால் அவனுக்கு இப்பெயர் ஏற்பட்டது. இம்மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெரும்பாணாற்றுப்படை எனும் நூலைக்

கடியலூர் உருத்திரங்கண்ணனார் எனும் புலவர் இயற்றியுள்ளார். இளந்திரையனின் அறிவாற்றல், ஆட்சித்திறன், ஈகைக்குணம், நல்லொழுக்கம் ஆகியவற்றை இந்நூல் சிறப்பிக்கிறது; இம்மன்னன் இயற்றிய புறநானூற்றுப் பாடலில் "சான்றோர் வகுத்த வழியில் மன்னன் நடந்து வருவானேயானால் அவன் சீரும் சிறப்புமாக வாழ்வான்; அவனது குடிமக்களும் யாதொரு குறையுமின்றி நெடிது வாழ்வார்கள்" என்ற கருத்து கூறப் பட்டுள்ளது. மணிமேகலை காலத்தில் தொண்டை நாட்டை ஆண்ட இளங்கிள்ளி என்ற மன்னன் தன் நாட்டைக் கைப்பற்ற வந்த சேர,பாண்டியரை "காரிக்கரை" என்ற இடத்தில் வென்றான் ஆறாம் நூற்றாண்டு முதல் தொண்டை நாடு பல்லவர்களின் ஆட்சியில் சிறப்புடன் திகழ்ந்தது.

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து', 'வையம் பெரினும் பொய் சொல்ல மாட்டார்தொண்டை நாட்டார்' என்ற மொழிகள் தொண்டை நாட்டுக்குப் புகழ் சேர்க்கின்றன. வணிகன் ஒருவனுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத் தம் இன்னு யிரை நீத்த எழுபது வேளாளர்கள் தொண்டைநாட்டிலுள்ள திருவா லங்-காட்டிலுள்ள பழையனூரில்வாழ்ந்தனர். திருக்கழுக்குன்றம், திருப்பதி, காளத்தி, திருத்தணிகை போன்ற மலைகளும், பாலாறு செய்யாறு, பெண்ணை, ஆரணி, நீவா, கூவம், அடையாறு போன்ற ஆறுகளும், பூண்டி, புழலேரி, பழவேற்காடு, செம்பரம் பாக்கம் போன்ற ஏரிகளும் இந்நாட்டில் உள்ளன.

நேமிநாத ஆசிரியரான 'குணவீர பண்டிதர்', புகழேந்திப் புலவர் ஆகியோரின் இருப்பிடமான "பொன் விளைந்த களத்தூர்" சேக்கிழாரின் பிறப்பிடமான குன்றத்தூர், பரிமேலழகர் வாழ்ந்த காஞ்சி, வரலாற்றுப்பிரசித்தி பெற்ற மாமல்லை, செஞ்சி, வேலூர் ஆகிய ஊர்கள் தொண்டை நாட்டில் உள்ளன. இந்நாட்டில் சைவ சமயக் குரவர்களின் பாடல்கள் பெற்ற தலங்கள் முப்பத்து இரண் டும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருப்பதிகள் இருபத்தி இரண்டும் உள்ளன. குகனேரியப்பன், கச்சியப்ப சிவாச் சாரியார், இராமானுஜர் ஆகிய சமயச் சான்றோரும், காளியப்பன், கருப்பன் நெற்குன்றவாணன், மணிகண்டன் ஆகிய கொடைவள் ளல்களும் இங்கு வாழ்ந்தனர். படிக்காசுப் புலவர் இயற்றிய "தொண்டைமண்டல சதகம்" எனும் நூல், கட்டளைக் கலித்துறை யில்அமைந்த நூற்றொன்று செய்யுட்களை உடையது. தொண்டை மண்டலத்தின் எல்லைகள், அங்குள்ள வழிபடுதலங்கள் பற்றிய குறிப்பு, அங்கு வாழ்ந்த அடியார்கள், வள்ளல்கள், சான்றோர்கள் பற்றிய குறிப்பு ஆகிய செய்திகளை இச்சிறு நூல் தெரிவிக்கிறது. இத்தகைய சிறப்புக்களை உடைய தொண்டை நாட்டில் திருவான்மியூர் அமைந்துள்ளது.

# 3

# திருவான்மியூர்

## (அ) இருப்பிடம்

வான்மீகி முனிவர் ஈசனை வழிபட்டுத்தவம் புரிந்ததால் திருவான்மியூர் எனப்பட்ட இத்தலம் தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரத்தின் தெற்கு எல்லையாக அமைந்துள்ளது. முன்பு செங்கல்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த இவ்வூர், தற்போது சென்னை மாநகரின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது. தேர்தலுக்காகத் தென் சென்னையில் தாம்பரம் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. வருவாய்த்துறையின் கணக்குப்படி 140 சுரோத்தியம் கிராமம் எனவும், மாநகராட்சிக் கணக்குப்படி 150 வது வட்டமாகவும் அஞ்சலகக் கணக்கின்படி 600 041 என்ற பிரிவாகவும் உள்ளது. வங்காள விரிகுடாவின் கரையோரத்தில் மாமல்லபுரம் செல்லும் முதன்மைச் சாலையின் ஓரமாகத் திருக்கோயில் அமைந்துள்ளது. சென்னை நகரின் பிறபகுதிகளிலிருந்து இவ்வூருக்கு வருவதற்குப் பேருந்து வசதி போதுமான அளவில் உள்ளது.

## (ஆ) இயற்கை அமைப்பு

முற்காலத்தில் இப்பகுதியில் மரங்கள், செடிகொடிகள் நிறைந்த கானகமும், சோலைகளும் இருந்தன. சென்னை நகரின் இடநெருக்கடிப்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட

புறநகர் வளர்ச்சித்திட்டத்தின்கீழ் இப்பகுதி பெரிதும் வளர்ச்சி யடைந்துள்ளது. இந்திராநகர், காமராஜ்நகர், இராஜாஜிநகர், அருண்டேல் நகர், ஔவை நகர், வால்மீகி நகர், பெசன்ட் நகர் போன்ற குடியிருப்புப்பகுதிகளால் சூழப்பட்டுச் செயற்கை அழகு மிளிரக் காட்சியளிக்கிறது. தற்போது திருவான்மியூரில் கல்விச் சாலைகள், திரையரங்குகள், உணவு விடுதிகள், கடைகள், பேருந்து நிலையம் ஆகிய அனைத்து வசதிகளும் உள்ளன. கடற்கரையோரம் அமைந்துள்ளதால் இங்கு சுவைமிகு நீருக்கும் காற்றுக்கும் வாய்ப்புகள் உள்ளன.

'மருந்தீஸ்வரஸ்தலம்' என்ற பெயருக்கு ஏற்ப இங்கு பல தரப்பட்ட அரிய மூலிகைகள் கிடைக்கின்றன. இதனால், சித்த, யூனானி, ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கும் தொழில் அகமும் வைத்தியசாலையும் இங்கே அமைந்துள்ளன. மேலும் கலைவளர்ச் சிக்காகவே பாடுபடும் கலாக்ஷேத்திரம் எனும் கலாச்சார மையம் இவ்வூரில் உள்ளது. உலகப்புகழ் பெற்ற இப்பள்ளியில் மேனாட் டாரும், பிற மாநிலத்தவரும் நடனம், ஓவியம், இசை, போன்ற கலைகளில் பயிற்சி பெறுகின்றனர். அரிய ஓலைச்சுவடி களையும், நூல்களையும் தன்னகத்தே கொண்டுள்ள உ.வே சுவாமிநாத ஐயர் நூல்நிலையமும், இங்கு உள்ளது.

திருவான்மியூர் பெரிய வளர்ச்சியை அடைந்துவிட்ட போதிலும், கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகள் பழைய சுவடு களைப் பெற்று ஒரு கிராமம் போன்ற காட்சியை அளிக்கின்றன.

## (இ) சுற்றுப்புறத்திலுள்ள கோயில்கள்

மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில், சைதாப்பேட்டை காரணீஸ்வரர் திருக்கோயில், வேளச்சேரி தண்டீஸ்வரர் திருக் கோயில், மாங்காடு காமாட்சியம்மன் கோயில், குன்றத்தூர் திருக் கோயில்கள் திருப்போரூர் கந்தஸ்வாமி திருக்கோயில், திருவிட வெந்தை நித்தியகல்யாணப் பெருமாள் திருக்கோயில், திருக்கழுக் குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயில் ஆகிய முக்கிய ஆலயங்கள் திருவான்மியூரைச் சுற்றிலும் அமைந்துள்ளன. வெளியூரிலிருந்து வருகை தரும் அன்பர்கள் திருவான்மியூருக்கு எளிதில் வந்து இங்கு எழுந்தருளியுள்ள மருந்தீசரை வழிபடலாம் இங்கு மாட வீதியைச்சுற்றி எல்லா முனைகளிலும் விநாயகர் கோயில்கள் உள் ளன. அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் தென்மேற்கில் புத்திராங்கண்ணி அம்மன் வடக்கில் செல்லியம்மன். ஆகிய இரு கிராமதேவதைகள் குடிகொண்டுள்ளனர்.பங்குனிப்பெருவிழாவின்

போது இந்ததேவதைகளுக்கு மதிப்பு அளிக்கப்படுகிறது. இத்திருக் கோயிலின்வட மேற்கில் வான்மீகி முனிவர் அருள் பெற்றதாகக் கூறப்படும் இடத்தில், அம்முனிவருக்கான சிறுகோயில் உள்ளது. வடகிழக்கில் (சண்முகக்கவசம்) போன்ற பல நூல்களை இயற்றிய (பாம்பன் குமரகுருதாச சுவாமிகளின் ஜீவசமாதியும்,) முருகப்பெருமான் சந்நிதியும் உள்ளன. திருவான்மியூரின் வடகிழக்கு எல்லை முடிவில், பெசன்ட் நகர் அருகில்,அஷ்டலக்ஷ்மி ஆலயம் உள்ளது. கிழக்கில் அமைந்துள்ள காசி விஸ்வநாதர் கோயில் மிகவும் பழமையானது; மௌன சாமியார்ஒருவர் அதில்தங்கி வழிபட்டு வருகிறார். அஷ்டலக்ஷ்மி ஆலயத்திற்கும், காசி விஸ்வநாதர் ஆலயத்திற்கும் இடையே ஆறுமுகப்பெருமானின் அறுபடை வீடுகளை நினைவுறுத்தும் கோயில்கள் அமைக்கப்பட உள்ளன.



# 4

# கோயிலின் அமைப்பு

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுர்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

-திருமூலர்

## மூல மூர்த்தங்கள்
## (அ) மூலவர்

முழுமுதற்கடவுளான சிவபெருமானுக்கு உருவமோ, பெயரோ இல்லை. இதுவே அருவ (அரூப) நிலையாகும். ஆயினும் இவ்வுலகிலுள்ள அடியார்களுக்கு அருளும் பொருட்டுச் சிவனுர் எத்தகையஉருவத்தையும்தாங்கி அவ்வுருவநிலையில்காட்சியளிக்க வல்லார். சிவபெருமானின் மூர்த்தங்களை அறுபத்து நான்கு எனக் கணக்கிட்டுள்ளனர். கண்ணால் காணப்படமுடியாத அருவத்தையும், கண்ணால் காணக் கூடிய உருவத்தையும், ஒரே சமயத்தில், ஒரே அமைப்பில் காட்டும் அடையாளமே சிவலிங்கம்.


''காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்''
(சேக்கிழார்-சாக்கிய நாயனார் புராணம்)

சிவலிங்கம் என்ற சொற்றொடர், தெரிவித்தல் எனும் பொருள் கொண்ட 'லிக்' எனும் சொல்லிலிருந்து தோன்றியதாக ஒரு கருத்து உண்டு. அனைத்துப் பொருட்களும் சிவபெருமானிடமிருந்து தோன்றி அவரிடமே ஐக்கியமாவதைச் சிவலிங்கம் குறிப்பதாகவும் ஒரு கருத்து உண்டு. நாதம், விந்து எனும் இரண்டின் சேர்க்கையைச் சிவலிங்கம் உணர்த்துவதாகவும் கூறுவர். சிவலிங்கத்தின் உள் அமைப்பும் வெளி அமைப்பும் 'ஓம்' எனும்பிரணவமந்திரத்தைக்குறிப்பதாகத்திருமூலர் குறிப்பிடுகிறார்.


"இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்க நற்கண்டம் நிறையும் அகாரம்
இலிங்கத்துள்வட்டம் நிறையு முகாரம்
இலிங்க மகாரம் நிறை விந்து நாதமே"

சிவலிங்கத்தின் அடிபாகம் படைக்கும் கடவுளாகிய நான்முகனுக்கு உரியது. எட்டுப் பகுதிகளையுடைய இடைபாசம் எட்டு சக்திகளைக் குறிப்பதுடன் ஒன்பதாம் சக்தியையும் சேர்த்து நவசக்திகளாக விளங்கும் இப்பகுதி காக்கும் தொழிலுக்கு அதிபதியான திருமாலுக்கு உரியது. உச்சிபாகம் பெருங்கருணை வள்ளலான சிவபெருமானுக்கு உரியது. அனைத்துச் சிவாலயங்களிலும் இத்தகைய சிறப்புக்களையுடைய சிவலிங்க உருவினராகவே மூலவர் காட்சியளிப்பது வழக்கம்.


பண்டைக்காலத்தில் தமிழகத்தின் பெரும்பகுதி காடாக இருந்தது. அனைவருக்கும் அருள்புரியும் ஈசன், இலிங்க உருவினராக அப்பகுதிகளில் எழுந்து, பல அருட் செயல்களைப் புரிந்துள்ளார். இவ்வாறு சிற்பிகளின் கையால் செய்யப்படாமல் தானாகவே தோன்றிய இலிங்கத்தைச் சுயம்புலிங்கம் என அழைப்பதுண்டு. சுயம்புலிங்கங்கள் சிற்ப நூல்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்குக் கட்டுப்படமாட்டா: மரம், சிலை, உலோகம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பொருளால் அமைந்த சுயம்பு லிங்கங்கள், உருவ அமைப்பிலும் எந்த விதிக்கும் கட்டுப்படமாட்டா. அவ்வாறு தோன்றிய சுயம்பு லிங்கங்களில் சிவ பெருமானின் சாந்நித்தியம் என்றும் நிலைத்து இருக்கும். அங்ஙனம் சுயம்பு லிங்கங்கள் உண்டான தலம் சுயம்பு லிங்க க்ஷேத்திரம் எனப்படும். அத்தகைய சுயம்புலிங்க க்ஷேத்திரங்களில் திருவான்மியூரும் ஒன்று.



உட்புறத் தோற்றம்



கிழக்கு வாயில் கோபுரம்



மேற்கு வாயில் கோபுரம்



தல விருட்சம் வன்னி மரம்

இச்சுயம்பு மூர்த்தியை வான்மிக முனிவர் வழிபட்டுப் பேறு பெற்றதால் அவருக்கு வான்மிகநாதர் என்ற பெயர் ஏற்பட்டது காமதேனு தினமும் பாலாபிஷேகம் செய்து வழி பட்டதால் இலிங்கத்திற்கு வெண்மை நிறம் உண்டாயிற்று; எனவே, அவரைப் பால்வண்ணநாதர் என்றும் அழைப்பர். பாற்கடலில் விளைந்த அமுதத்தால் தேவர்கள் ஈசனை அபிஷேகம் செய்து பூஜித்ததால் அமுதேசர் எனும் பொருள் படும்படியான மருந்தீசர் என்ற பெயரும் ஈசருக்கு ஏற்பட்டது. உலகில் தோன்றிய மூலிகைகளின் தன்மைகளையும், அவற்றால் உண்டாகும் பயன்கள் பற்றியும் அகத்தியருக்கு உபதேசம் செய்ததால் மருந்தீசர் அல்லது ஔஷதீசர் எனும் பெயரும் அவருக்கு ஏற்பட்டது. நான்கு வேதங்களும் இப்பதியில் வழிபட்டதால் இவ்வூருக்கு வேதபுரி என்ற பெயரும், ஈசருக்கு வேதபுரீஸ்வரர் என்ற திருநாமமும் உண்டாயின.

மூலவர் சுமார் ஒன்றரை அடி உயரமாகவும், சற்றே சாய்ந்த தோற்றத்துடனும் காட்சியளிக்கிறார். வேட்டையாட வந்த சதயூ மன்னனிடமிருந்து தப்பிச் செல்லும்போது காமதேனுவின் குளம்புகள் ஈசர் மீது பட்டதால் ஏற்பட்ட வடுவை இன்றும் தனது திருமேனியில் தாங்கிக் கொண்டுள்ளார். நாகாபரணம் அணியப்பெறும் போது இவரது அழகு அதிகரிக்கிறது.

## அம்மன் :

தனிக் கோயிலில் எழுந்தருளியுள்ள அம்மனைச் சொக்க நாயகி என்றும் திரிபுரசுந்தரி என்றும் குறிப்பிடுவார்கள். நின்ற கோலத்தில், நான்கு கரங்களுடன் காட்சியளிக்கும் அன்னையின் முகத்தில் மந்தகாசம் குடிகொண்டுள்ளது. அவரது இருகரங்கள் அங்குச பாசங்களை ஏந்தியுள்ளன. மற்ற இரு கரங்கள் அபய முத்திரைகளைப் பெற்றுள்ளன. விசேட நாட்களில் சந்தனக்காப்பு, மஞ்சள் காப்பு, புஷ்ப அலங்காரம் ஆகியவற்றுடன் அம்மன் தோன்றும் போது, அக்காட்சியைக் காணும் கண்களே பாக்கியம் செய்தவை.

## முருகப் பெருமான் :

முருகப் பெருமானின் தனிக்கோயில், அம்மன் சந்நிதிக்கு அருகே உள்ளது. வள்ளி, தெய்வயானை ஆகியோர் இருமருங்கும் தோன்ற, நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் இப்பெருமான் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார். வெள்ளிக் கவசத்தினுல் அலங்கரிக்கப்பட்டவுடன், இவர்களது பொலிவு அதிகரிக்

கிறது. முருகப் பெருமானும் வெள்ளியினால் செய்யப்பட்ட வேல், சேவற்கொடி ஆகியவற்றை ஏந்தியுள்ளார். அவரது சந்நிதிக்கு முன்புறம் மயில் வாகனம் உள்ளது.

மருந்தீசர் சந்நிதி அமைந்துள்ள மண்டபத்தில் வள்ளி, தெய்வயானை சமேதரான முத்துக் குமாரசாமிப் பெருமான் கிழக்கு நோக்கியவாறு தோன்றுகிறார். தனிக்கோயிலிலுள்ள மூர்த்திகளை விட உருவத்தில் இவர்கள் சிறியவர்கள். மயில் அருகே நின்றவாறு தோன்றும் முத்துக்குமாரசாமியின் இருகரங்களில் ஆயுதங்கள் உள்ளன. மற்றொரு கரம் அபயமுத்திரையை அளிக்கிறது. சூரபத்மனுடன் போர்புரியச் சென்றபோது, முருகப் பெருமானின் தானைத் தளபதியாக விளங்கிய வீரபாகுவின் உருவம் அருகேயுள்ளது. ஒரு கரத்தில் வாளும், மற்றொரு கரத்தில் கேடயமும் ஏந்தியவாறு, வீரருக்கே உரிய மிடுக்குடன் வீரபாகு காட்சியளிக்கிறார். மற்றொரு புறத்தில் இரு கரங்களையும் கூப்பியவாறு, சாந்தம் தவழும் முகத்துடன் அருணகிரிநாதர் விளங்குகிறார்.

### *விநாயகர் :*

விநாயகரின் உருவங்கள் பல பகுதிகளில் இடம் பெற்றுள்ள போதிலும் முருகப் பெருமானின் சந்நிதியை அடுத்துள்ள விஜய கணபதியின் சந்நிதியே பிரதானமானது. நான்கு கரங்களுடன் கம்பீரமாகத் தோன்றும் இந்த மூர்த்தி 1985-ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது பிரதிஷ்டை செய்யப்பட்டவர். அண்மையில் ஏற்பட்டதால் இச்சந்நிதி புதுப்பொலிவோடு காட்சியளிக்கிறது.

ஆலயத்தின் தெற்குப்பகுதியில், நான்கு கால் மண்டபத்தை அடுத்துள்ள ஸ்ரீ விநாயகர் சந்நிதியில் விநாயகரின் மூன்று உருவங்கள் உள்ளன. இடையிலே உள்ள விநாயகர் உருவத்தால் சிறியவர் மற்றிருவரும் உருவத்தால் சற்றே மாறுபட்டுள்ளனர்.

முருகப் பெருமானின் சந்நிதிக்கு முன்பும், தியாகராஜரின் சந்நிதிக்கு முன்பும் கமலவிநாயகரின் அழகிய திருவுருவங்கள் உள்ளன.

### *தல விநாயகர் :*

ஆதியில் இக்கோயிலின் எதிர்வாயிற்படியில் கோலம் கொண்டிருந்த திருமுடி விநாயகரே இங்கு தல விநாயகராகக்

கருதப்படுகிறுர் அருணகிரிநாதர் இத்தலத்திற்கு வருகை புரிந்த போது அவருக்குக் காட்சியளித்தாராம். திப்பு சுல்தான் காலத்தில் வெட்டுண்ட இப்பெருமானின் திருவுருவத்தைப் பின்னர் புதுப் பித்தனராம். தற்போது ஆலயத்தின் தென்புறத்தில் இவர்எழுந் தருளியுள்ளார் இவரை 'ஒண்டிமரப் பிள்ளையார்' என்று அழைக் கின்றனர்.

## பரிவார தேவதைகள்

*நாயன்மார்கள் :*

அனைத்துப் பிரதான சிவாலயங்களிலும், சைவ சமய வளர்ச் சிக்குப் பெரிதும் உதவிய நாயன்மார்களின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன. மருந்தீசர் எழுந்தருளியுள்ள மண்டபத்தின் வடக் குப்புறத்தில், நுழைவாயிலின் இருபுறங்களிலும் அறுபத்து மூன்று நாயன்மார்களும், ஒன்பது தொகையடியார்களும் காட்சியளிக் கின்றனர். அனைத்து அடியார்களும் கை கூப்பியவாறு, நின்ற கோலத்தில் தோன்றுகின்றனர். காரைக்கால் அம்மையார் மட்டும் அமர்ந்தவாறு காட்சியளிக்கிறார். இவர்களுள் அரச பரம்பரை யைச் சார்ந்தவர்களும், வீரர்களும் ஆயுதங்களை ஏந்தியுள்ளனர். அரிவட்டாய நாயனார் தம் பெயருக்கு ஏற்றவாறு அரிவாளைத் தோளில் சார்த்திக் கொண்டுள்ளார். ஆனாய நாயனார் குழ லூதும் கோலத்தில் உள்ளார். இவ்வடியார்கள் அனைவரின் உருவங்களும் வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.

*நம்பியாண்டார் நம்பி :*

இராஜராஜ சோழன் காலத்தில் சைவ பக்திப் பாடல்களைத் திருமுறைகளாகத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி கூப் பிய கரங்களுடன் காட்சியளிக்கிறார். இவரது உருவம் நாயன் மார்களுக்கு அடுத்தாற்போல் உள்ளது.

*சேக்கிழார் :*

திருத்தொண்டர் புராணத்தை எழுதியதன் மூலம் நாயன் மார்களுக்குச் சாகாவரம் அளித்த சேக்கிழார் வடமேற்கு மூலை யில், எழுந்தருளியுள்ளார்.

*ஸ்ரீ விநாயகர்*

வடமேற்குப் பகுதியில், அமர்ந்த கோலத்தில் அருளாட்சி

புரியும் ஸ்ரீ விநாயகரின் தோற்றம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ விநாயகரின் இரு புறங்களிலும் ஆறு நாகலிங்கங்கள் உள்ளன.

### *நால்வர்*

தேவாரம் பாடிய மூவர், திருவாசகம் இயற்றிய மாணிக்க வாசகர் ஆகியோரின் உருவங்கள் கம்பீரமாக அமைந்துள்ளன. திருஞானசம்பந்தர் கைகளில் தாளத்தை ஏந்தியுள்ளார்; உழ வாரப்படையை ஏந்தியுள்ள திருநாவுக்கரசர் அடக்கமாகத்தோற்றம் கொண்டுள்ளார்; சுந்தரர் இருகரங்களையும் விரித்தவாறு உள் ளார்; மாணிக்கவாசகரின் கரங்களிலும் தாளங்கள் இடம் பெற் றுள்ளன. நின்ற கோலத்தில், உயர்ந்து தோன்றும் இவ்வுருவங் கள் எழில்மிக்கன.

### *கஜலக்ஷ்மி*

மூடியுள்ள மேற்கு வாயிலை அடுத்து கஜலட்சுமியின் உருவம் உள்ளது. குடமேந்திய யானைகள் இரு மருங்கிலும் உள்ளன; அன்னையின் கைகளில் மலர்ச்செண்டு துலங்குகிறது. அமர்ந்த கோலத்தில் அன்னை அமைதியாகத் தோன்றுகிறார். இவரை அடுத்து முத்துக்குமாரசாமிப் பெருமான் தேவியருடன் இடம்பெற்றுள்ளார். அருகே வீரபாகுவும், அருணகிரிநாதரும் உள்ளனர்.

### *நடராஜர்*

மண்டபத்தின் தெற்குப்பகுதியில் ஐம்பொன்னாலான நட ராஜரின் அழகிய உருவம் உள்ளது. இரு கைகளில் உடுக்கை யும், சுடரும் விளங்க, மற்றிரு கைகள் அபய முத்திரையை அளிக்க, முயலகன் மீது நடனமாடும் இந்த மூர்த்தியின் எழிலை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. அருகில் ஓலைச் சுவடுகளை ஏந்திய மாணிக்க வாசகரும், சிவகாம சுந்தரியும் இடம் பெற்றுள் ளனர்.

### *108 சிவலிங்கங்கள்*

பன்னிரெண்டு வரிசைகளில், வரிசைக்கு ஒன்பது என்ற விகிதத்தில் நூற்றெட்டு சிறிய சிவலிங்கங்கள், நடராஜரின் சபை யை அடுத்து அமைந்துள்ளன. இவற்றுள் ஒவ்வொரு வரிசை யின் நடுவிலுள்ள சில சிவலிங்கங்கள் மட்டும் உருவில் சற்றே பெரியனவாக உள்ளன.

### கால பைரவர்

தென் கிழக்கு மூலையில், 108 லிங்கங்களுக்கு இடையே தோன்றும் கால பைரவரின் உருவம் காண்போரை மெய் சிலிர்க்கச் செய்கிறது. மூன்று கரங்களில் சூலம் உடுக்கை, சர்ப்பம் ஆகிய வற்றை ஏந்தியவாறு, நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

### பஞ்சலிங்கங்கள்

மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் ஐந்து பெரிய லிங்கங்கள் உள்ளன. இவற்றுள் கேதார ஈஸ்வரரும், அருணாசலேஸ்வரரும் குறிப்பிடத் தக்கவர்கள். அண்ணாமலையாருக்கே அருகே உண்ணாமலையம்மையின் திருவுருவம் உள்ளது.

### சூரியன்

வடகிழக்கு முனையில் சூரிய பகவான் அருள்புரிகிறார். சூரியனுக்கு அருகே விநாயகரும், அவரையடுத்து அறுபத்து மூவரும் உள்ளனர்.

## கருவறைக் கோஷ்டங்கள்

கருவறையின் புறச் சுவர்களிலுள்ள கோஷ்டங்களில் சில திருவுருவங்களை அமைக்கும் பழக்கம் பல்லவர் காலத்தில் தொடங்கியது. தற்காலத்தில் கட்டப்படும் ஆலயங்களிலும், புதுப்பிக்கப்படும் கோயில்களிலும் இது போன்ற உருவங்கள் அமைக்கப்படுகின்றன. இக்கோயிலில் காணப்படும் திருவுருவங்களாவன :

### துர்க்கை

எருமை உருவினனான மகிஷாசுரன் மீது காலூன்றிய வராயக் கையில் சூல மேந்தியுள்ள துர்க்கையம்மன் சிறந்த வரப்பிரசாதி. வெள்ளி,செவ்வாய் மற்றும் விசேட தினங்களில் துர்க்கையம் மனுக்குச் சந்தனக் காப்பு, மஞ்சள் காப்பு மற்றும் விசேட அலங்காரங்கள் செய்யப்படும். எலுமிச்சைப்பழ இதழ்களில் எண்ணெய் இட்டு அவற்றில் விளக்கேற்றி மகளிர் பலர் வழிபாடாற்றி வருகின்றனர்.

### *நான்முகன்*

துர்க்கையம்மனை அடுத்துள்ள கோஷ்டத்தில் பிரமதேவன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். துர்க்கை, நான்முகன் ஆகியோருக்கு அருகே சண்டேஸ்வரரின் இரு உருவங்கள், ஈச னின் சந்நிதியை நோக்கியவாறு, தியான நிலையில் உள்ளன. இவற்றுள் இரண்டாவதாக உள்ள உருவம் அப்பைய தீக்ஷிதரைக் குறிப்பதாகவும் ஒரு கருத்து உள்ளது.

### *திருமால்*

கிழக்கிலுள்ள கோஷ்டத்தில் திருமால் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

### *தென்முகக் கடவுள்*

தென்புறக் கோஷ்டத்தில் கல்லால மரத்தினடியில் அமர்ந்த கோலத்திலுள்ள தட்சிணாமூர்த்தியைக் காணலாம். சிங்கங்களால் தாங்கப்படும் சிறு மண்டபம் போன்ற அமைப்பில் தென்முகக் கடவுள் காட்சி தருகிறார். இப்பெருமானிடம் உபதேசம் பெறும் சனகாதியர்கள் இரு புறங்களிலும் இடம் பெற்றுள்ளனர். கீழ்ப் பகுதியில் ''கல்லால மரத்தில்" என்று தொடங்கும் திருவிளை யாடற் புராணப் பாடல் எழுதப்பட்டுள்ளது இதனை அடுத்துள்ள கோஷ்டத்தில் விநாயகரின் அழகிய உருவம் உள்ளது.

## தல விருட்சம்

சுயம்பு லிங்கங்கள் மட்டுமின்றித், தவம் புரியும் முனிவர்கள் பிரதிஷ்டை செய்த லிங்கங்களும் உள்ளன. இந்த லிங்கங்கள் பெரும்பாலும் வனங்களில், மரத்தடியில் தோன்றின. நாளடைவில் காடுகள் அழிக்கப்பட்டுச் சிற்றூர்களும், பேரூர்களும் எழுந்தன. லிங்கங்கள் இருந்த இடத்தைச் சுற்றிச் சிறிய, பெரிய கோயில்கள், சிற்ப, ஆகம முறைப்படி எழுப்பப்பட்டன. அப்போதும் இறைவர் எழுந்தருளின இடத்திலிருந்த ஒரு மரமாவது காக்கப்பட்டது. உலகில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் தமிழகத்தில் முன்பிருந்த மூல லிங்கங்களும், தலவிருட்சங்களும் அவ்வாறே காக்கப்பட்டதிலிருந்து அவை தெய்வத் தன்மை பெற்றிருப்பது கண்கூடு. அநேக ஆலயங்களில் தல விருட்சம் இருப்பதுண்டு.

ஆதியில் வன்னி மரத்தடியிலிருந்த ஈசரை வான்மிகி முனி வர் வழிபட்டதாலும், அகத்தியருக்குச் சிவபெருமான் வன்னி

மரத்தடியில் திருமணக்கோலத்தில் காட்சி அளித்ததாலும். வன்னி மரமே இங்கு தலவிருட்சமாக உள்ளது. ஆலய மேற்குக் கோபுர வாயிலுக்குச்சிறிது தூரத்தில் அமைந்துள்ள இப்பழமையான மரம் நன்கு வளர்ந்துள்ளது. இங்கு பிரார்த்தனைக்காகக் கட்டப் பட்ட பல தொட்டில்கள் உள்ளன. பங்குனிப் பெருவிழாவின் போது ஒன்பதாம் நாளில் அகத்தியருக்கு வன்னிமரத்தடியில் ஈசன் திருமணக்காட்சியளித்த நிகழ்ச்சி இம்மரத்தடியில் நடைபெறு வதுண்டு.

## தீர்த்தங்கள்

ஆதியில் தோன்றிய நாகரீகங்கள் அனைத்தும் ஆற்றங் கரையில் அமைந்திருந்தன. அம்மக்களின் வாழ்வுடன் இன்றி யமையாத தொடர்பு கொண்டிருந்த தண்ணீர் தெய்வத்தன்மை பொருந்தியதாகவே போற்றப்பட்டது. மேலும் இயற்கையின் சக்திகளையே இறைவனாக வழிபட்டு வந்த அம்மக்களுக்குத் தண்ணீரும் ஈசனாகவே தென்பட்டது. பிற்காலத்தில் ஆலயங் களிலுள்ள திருக்குளங்கள், கிணறுகள், ஆலயத்திற்கு அருகே யுள்ள ஆறு, குளம் போன்றவற்றைப் புண்ணிய தீர்த்தங்களாகக் கருதும் பழக்கம் ஏற்பட்டது.

திருவான்மியூரிலுள்ள புண்ணிய தீர்த்தங்கள் சிவபெரு மானால் படைக்கப்பட்டதாகத் தல வரலாறு இயம்புகிறது. வான் மிகி முனிவருக்குச் சிவபெருமான் காட்சியளித்தபோது ஈசனின் சடையிலுள்ள கங்கையிலிருந்து ஐந்து நீர்த்துளிகள் சிந்தின. அவையே ஐந்து திசைகளிலும் ஐந்து தீர்த்தங்களாக உருவெடுத் தன.

ஜன்மநாசனி :

இரட்சசு எனும் வானரனுக்கும், இந்திரனுக்கும் நற்கதி யளித்த இப்புனல் கிழக்கில் அமைந்திருந்தது. இன்று ஆலயத் தின் கிழக்குக் கோபுரத்திற்கு அருகே "சித்திரை குளம்" என்ற பெயருடன் அமைந்துள்ளது.

காமநாசனி :

தெற்கில் அமைந்துள்ள இத்தீர்த்தத்தில் மூழ்கிய சந்திரன் சாபவிமோசனம் பெற்றான். தற்போது இத்தீர்த்தம் மருந்தீசர் ஆலய மடைப் பள்ளியில் ஒரு கிணறு வடிவில் உள்ளது.

பாபநாசனி :

ஆலயத்திற்குக் கிழக்கே அமைந்துள்ள பெரிய திருக்குளமே பாபநாசனியாகும். இதில் நீராடி நற்கதியடைந்தவர்களுள் பார்த்தசாரதியும் ஒருவர்.

ஞானதாயினி

இத்தீர்த்தம் வடக்கில் அமைந்திருந்தது. வான்மீகி முனிவரின் சிறு ஆலயத்திற்கு அருகே 'மங்கல ஏரி' என்ற பெயருடன் விளங்கிவந்த இத்தீர்த்தம் அண்மைக்காலத்தில் மூடப்பட்டுவிட்டது

மோட்சதாயினி :

மேற்கூறிய நான்கு தீர்த்தங்களுக்கும் நடுவில் அமைந்திருந்தது அம்மன் சந்நிதிக்கு எதிரே "கிணறு" வடிவில் இத்தீர்த்தம் இடம் பெற்றுள்ளது. இக்கிணற்று நீர் சுவாமியின் அபிஷேகத்திற்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

*இவை தவிர வானவர்களால் உண்டாக்கப் பட்ட மூன்று தீர்த்தங்களும் இங்கு உள்ளன.*

சூரிய தீர்த்தம்:

ஆதவனால் உண்டாக்கப்பட்ட இத்தீர்த்தம், அவனுக்கு மந்தேகம் என்ற திவிலிருந்த அவுணர்களிடமிருந்து விடுதலை பெற உதவியது.

பிரம்ம தீர்த்தம்:

தானே ஏற்படுத்திய இத்தீர்த்தத்தில் நான்முகன் நீராடி வழிபட்டார்

இயமதீர்த்தம் :

சிவபெருமானால் ஒடுக்கப்பட்ட காலன், தன் தண்டத்தால் உருவாக்கிய தீர்த்தமே இயம தீர்த்தமாகும். இவ்வாறு திருவான்மியூரில் எட்டு தீர்த்தங்கள் அமைந்திருந்ததாகத் தலவரலாறு செப்புகிறது.

# பிற சந்நிதிகளும் மண்டபங்களும்

திருவான்மியூர் ஆலயம் மிகப் பெரியதும் அல்ல; மிகச் சிறிய தும் அல்ல. கிழக்கு, மேற்கு ஆகிய இரு வாயில்களிலும் அண் மையில் கட்டப்பட்ட ஐந்து நிலை இராஜ கோபுரங்கள் அணி செய்கின்றன. வெகு காலமாகவே கிழக்கு வாயிலே பிரதானமாக உள்ளதால் அதன் வழியாகவே ஆலயத்தினுள் நுழையலாம்.

ஆகமங்கள் சிவாலயத்தை மூன்று பகுதிகளாகப் பிரித் துள்ளன. கோபுரத்தை ஸ்தூலலிங்கம் என்றும் பலிபீடத்தைப் பத்திரலிங்கம் என்றும், மூலஸ்தானத்தைப் பரார்த்தலிங்கம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆலயமிருக்குமிடம் வெகு தொலை விலிருந்தே தெரிய வேண்டும் என்பதற்காகவே கோபுரங்கள் எழுப்பப்பட்டன. 'கோபுர தரிசனம் கோடி பாப விமோசனம்' என்கிறமொழியும் வழக்கிலுள்ளது. கோபுரத்தை இருகரங்களாலும் கூப்பி வணங்கியபின் ஆலயத்தினுள் செல்லலாம்.

ஆலயத்தினுள் நுழைந்தவுடன் பலிபீடத்தினருகே சாஷ் டாங்கமாக நமஸ்கரிக்க வேண்டும் என்பது ஆகமங்கள் வகுத்த வழி. ஆலயத்தின் கிழக்கு வாயிலின் அருகிலும், மேற்கே வாயிலுக்கு எதிராகவும் இரு பலி பீடங்கள் அமைந்துள்ளன. மனதிலுள்ள தீயஎண்ணங்களை அங்கேயே பலி கொடுத்துவிட்டுப் பிரகாரத்தை வலம் வரவேண்டும். பிரகாரத்தைச் சுற்றி வலம் வருவதற்காகவே அழகிய பாதை போடப்பட்டுள்ளது. வெளிப் பிரகாரத்தை வலம் வந்தபின் மேற்கு வாயிலினருகேயுள்ள நந்தி தேவரை வணங்கவேண்டும். கிழக்கு வாயில் அருகே நான்கு கால் மண்டபமும், பலி பீடமும் அமைந்துள்ளன. பலி பீடத்தின் அருகே, ஆலயத்தின் தென் கிழக்குப்பகுதியில் மடைப்பள்ளி அமைந்துள்ளது.

## தியாகராஜர் மண்டபம் :

தியாகராஜரின் சந்நிதி அமைந்துள்ள இம்மண்டபத்தைக் கடந்த பின்னரே மருந்தீசரின் சந்நிதியை அடைய முடியும். நகரத் தாரின் கருங்கல் திருப்பணியைப் பெற்றுள்ள இம்மண்டபச் சுவரில் திருவான்மியூர் மீது இயற்றப்பட்ட தேவாரப் பதிகங்கள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. அழகிய சிற்பங்களையுடைய முப்பத்தாறு பெருந்தூண்கள் இம்மண்டபத்தைத் தாங்குகின்றன. விசேட நாட்களில் இசைக் கச்சேரிகள், பஜனை, திருவிளக்குப் பூஜை, இலக்கியச் சொற்பொழிவுகள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகள் இம் மண்டபத்தில் நடைபெறுகின்றன.

## மருந்தீசர் மகாமண்டபம்

சுமார் நாற்பது தூண்களால் அணி செய்யப்பட்டுள்ள இம் மண்டபத்தின் நடுவே அர்த்த மண்டபமும் கருவறையும் உள்ளன. இம்மண்டபத்தின் நான்கு பகுதிகளிலும் அனைத்துப் பரிவார தேவதைகளும் இடம் பெற்றுள்ளன. மருந்தீசர் சந்நிதிக்கு முன்பு நந்தி உள்ளது. இம்மண்டபத்தின் மேற்கு வாயிலுக்கு வெளியே நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பம் ஆகிய மூன்றும் உள்ளன.

அர்த்த மண்டப வாயிலின் இருபுறங்களிலும் கம்பீரமான தோற்றத்தை உடைய இரு துவாரபாலகர்கள் உள்ளனர். கதாயுதத்தின் மேல் காலையூன்றி நிற்கும் இவ்விருவரின் கரங்களிலும் ஆயுதங்கள் உள்ளன. இடது புறத்திலுள்ள துவார பாலகரின் கரத்தில் சூலமும், சர்ப்பமும் இடம் பெற்றுள்ளன.

மருந்தீசர் சந்நிதியைக் கடந்து தியாகராஜர் மண்டபம் வழியாக வெளியேறிப் பிரகாரத்தை வலம் வந்தால், வட மேற்கு மூலையிலுள்ள தலவிருட்சத்தை வணங்கலாம். பிரகாரத்தை வலம்வந்து அம்மனின் சந்நிதியை அடையலாம்.

## அம்மன் சந்நிதி

அம்மன் சந்நிதி வெளிமண்டபத்தில் பதினெட்டு தூண்கள் உள்ளன இம்மண்டபம் ஒரு அற்புதசிற்பக் களஞ்சியமாகவே தோற்றம் அளிக்கிறது. இம்மண்டபச் சுவர்களில் இந்நூற்றாண்டைச் சேர்ந்த சில கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் சுக்கிரவார அம்மன் திருவுலா நிறைவு பெற்றவுடன் இம்மண்டபத்தில் அம்மனின் திருவுருவத்தை ஊஞ்சலாட்டி வழிபடுவதுண்டு. நவராத்திரியின் போது அம்மனின் திருவுருவத்தை அற்புதமாக அலங்கரித்து இம்மண்டபத்தில் எழுந்தருளச் செய்வர்.

பழமையின் சிறப்புக்களைப் பெற்றுள்ள அம்மன் சந்நிதி மகாமண்டபத்தை முப்பது தூண்கள் தாங்குகின்றன. இம்மண்டப நடுவில் அர்த்தமண்டபமும், கருவறையும் உள்ளன. அம்மனுக்கு முன்னர் அவரது வாகனமான சிம்மம் இடம் பெற்றுள்ளது. இம் மண்டபத்தின் இரு புறங்களிலும் பள்ளியறையும், சுக்கிரவார அம்மனின் சந்நிதியும் உள்ளன. அம்மன் சந்நிதியை அடுத்து ஆலய அலுவலகம் உள்ளது.

அம்மன் சந்நிதிக்கும், தியாகராஜர் மண்டபத்திற்கும் இடையே

விஜய கணபதி, சுப்பிரமணியர் ஆகியோரின் சந்நிதிகள் உள்ளன. தியாகராஜர் மருந்தீசர், நடராஜர், சுப்பிரமணியர், விஜயகணபதி, திரிபுரசுந்தரி ஆகியோரின் சந்நிதிகளுக்கு மேல் அழகிய விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை வண்ணச் சுதையுருவங்கள் அலங்கரிக்கின்றன.

ஸ்ரீவிநாயகர் தெற்கு நோக்கியவாறும், மருந்தீசர் மேற்கு நோக்கிய வண்ணமும், திரிபுரசுந்தரி அம்மன் வடக்கு நோக்கியவாறும், முருகப்பெருமான் கிழக்கு நோக்கியவாறும் கோலம் கொண்டுள்ளனர். இவ்வாறு பிரதான மூர்த்திகள் திசைக்கொரு பக்கம் நோக்கியவாறு அமைந்திருப்பது இங்கு சிறப்பான அம்சமாகும்.

வன்னிமரத்திற்கும், யாகசாலைக்கும் இடையே நின்று எதிர்நோக்கினால் இக்கோயிலின் விமானங்கள், கோபுரங்கள், கலசங்கள் ஆகிய அனைத்தையும் ஒருங்கே காணலாம். இவ்வாறு ஒரே இடத்திலிருந்து அனைத்துப்பகுதிகளையும் காணுமாறு அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## வெளிப்புறம்

இத்திருக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலுக்கு வெளியே மதிற்சுவர் ஓரமாக அருள்மிகு இராமநாதரின் சந்நிதியும், அதற்கெதிரே சித்திரைத்திருக்குளமும் உள்ளன. திருவாதிரைத் திருநாளன்று இவ்விடத்தில் அருள்மிகு நடராஜரின் உற்சவம் நிகழும்

ஆலயத்திற்கு வெளியே அமைந்துள்ள பெரிய திருக்குளத்தில் பங்குனித்திருவிழாவின்போது தெப்போற்சவம் நடைபெறும். நான்கு புறங்களிலும் ஒரே மட்டத்தில் சீராக அமைந்த படிகளும், நடுவில் அமைந்துள்ள நீராழி மண்டபமும் இக்குளத்திற்குப் பொலிவான தோற்றத்தைத் தருகின்றன

முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் பாதியில் நின்றுவிட்ட கோபுரம் ஒன்று, ஆலயத்திற்கு வெளியே, சந்நிதித்தெருவின் தொடக்கத்தில் உள்ளது, அதனை அடுத்துப் பதினாறு கால் மண்டபம் உள்ளது. மூன்றடி உயரமுள்ள பவனிமேடை இத்தெருமுடிவில் அமைந்துள்ளது, பங்குனித்திருவிழாவின்போது, 3, 4, 5, 6 ஆகிய நாட்களில் தியாகராஜப்பெருமான் பவனிவந்து நடனமாடுவதற்காக இது அமைக்கப்பட்டது. இன்றும் பங்குனித்

திருவிழாவின் போது நான்கு நாட்களுக்குத்தியாகராஜரின் திரு நடனம் பவனிமேடையில் நடைபெறுகிறது

ஆலயத்தைச் சுற்றியுள்ள மாடவீதிகள் மிகவும் ஒழுங்கா கவும் சீராகவும் அமைந்துள்ளன. மாடவீதிகளின் எல்லைகளாக நவசந்திகள் என்ற ஒன்பது முனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



# 5

# திருவான்மியூர் ஸ்தல புராணம்

## தல புராணங்களின் வளர்ச்சி

புராணம் என்றால் பழமை என்பது பொருள். தெய்வ அருள் தொடர்புடைய பழைய வரலாறுகளே புராணமாகும். இவை வேதம், இதிகாசம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. வடமொழியில் பதினெட்டு புராணங்களும், பதினெட்டு உபபுராணங்களும் உள்ளன. உப புராணங்களின் ஒரு உட்பிரிவே தல புராணம் ஆகும்.

இறைவன் வழிபாடு பற்றிய செய்திகளைப் பண்டைய இலக்கிய நூல்கள் விரிவாக எடுத்துக் கூறியபோதிலும், புராணம் என்ற இலக்கியம் வளர்ந்தது, பிற்காலத்திலேயாகும். புராணங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன;

1. *சான்றோர்களின் வாழ்க்கையை எடுத்துக் கூறும் புராணங்கள்*

2. *ஈசனின் செயலை மட்டும் விளக்கும் புராணங்கள்*

## 3. ஏ்சனின் சிறப்பை ஒரு தலத்துடன் இணைத்து அங்குள்ள மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகிய வற்றை விளக்கும் தல புராணங்கள்.

பதினாறாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதிவரை இலக்கிய உலகையே தன் ஆட்சிக்குட் படுத்தி, ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த பெருமை தல புராணங் களுக்கு உண்டு. தமிழில் மொத்தமாக அறுநூறுக்கும் மேற்பட்ட தலபுராணங்கள் உள்ளன. அவை செய்யுள் அல்லது வசன வடிவில் அமைந்துள்ளன. வாய்மொழியாகவும், ஏட்டு வடிவிலும், அச்சுவடிவிலும் வெளிவந்த புராணங்களுள் சில அழிந்துவிட்டன.

தலபுராணத்தின் வளர்ச்சிக்குப் பல காரணங்கள் வித்திட்டன. பக்தியின் முதிர்ச்சியால் தோன்றிய சிறு சிறு பாடல்கள் பக்தி இலக்கியத்தை வளர்த்திட்டன. இறைவன் மீதும், அவன் குடி கொண்டுள்ள தலங்கள் மீதும் பாடப்பட்ட பாடல்களைக் காப்பிய வடிவில் புலவர்கள் எழுத முயன்றபோது தலபுராணங்கள் எழுந்தன. ஊர் தோறும் எழுப்பப்பட்ட கோயில்களை மையமாகக் கொண்டு தோன்றிய கதைகள், வரலாறுகள் போன்றவை புராணங் கள் தோன்றுவதற்கு வழிகாட்டியாக உள்ளன. மதம், அற்புதக் கதைகள் மேலுள்ள மோகம் ஆகிய இரு சக்திகளும் தல புராணங் கள் தோன்றுவதற்கு அடிகோலின. கோவில்களில் விழாக்கள், பூசைகளும் தொடர்ந்துநடைபெற்ற போதிலும் தலங்களின் பெருமையைவிளக்கப்புண்ணியகதைகள்தேவைப்பட்டதால்தலபுராணங் கள் எழுந்தன. இலக்கிய, காவிய நடை தோன்ற எழுந்ததலபுராண கள் இலக்கியத்தில் ஈடுபாடு உள்ளவர்க்கு நல்விருந்தாக அமைந்தன. அரசியல் காரணங்களும் தல புராணங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டின. சோழர் காலத்திலிருந்த அமைதியான சூழ்நிலை ஆன்மீகத் துறையில் ஈடுபாடு ஏற்பட ஏற்றதாக இருந்தது. பின்னர் ஆட்சிபுரிந்த விசய நகர நாயக்க மன்னர்கள் அந்நியர்களாகையால், புலவர்களுக்கு அவர்கள் மீது பற்று ஏற்படவில்லை. பதிலாகத் தமது ஊர், அங்குள்ள கோயில் போன்றவற்றின் மீது பற்று எழுந்ததால் தலபுராணங்களை அவர்கள் இயற்றினர். வடமொழியில் உள்ள புகழ்மிக்க புராணங்கள் தமிழிலும் எழுதப்பட்டன. தென்னாட்டில் தோன்றிய மடங்கள் தல புராண வளர்ச்சிக்கு ஊக்கமளித்தன. இக்காரணங்களால் தலவரலாறுகள் மிகுந்த அளவில்தோன்றின.

இவ்வாறு தோன்றிய தல புராணங்கள் பலவகையான நற் பலன்களை அளித்தன. துன்பத்தில் வாடிய மக்களுக்குத் தன்னம்

பிக்கையை உண்டாக்கிய பெருமை இவற்றிற்கு உண்டு. ஒவ்வொரு ஊரையும் அதிலுள்ள கோயில்களையும் புண்ணியத் தலங்களாகவும், பலருக்கு இன்னல் நீக்கி நல்வாழ்வு அளித்த இடங்களாகவும் அவர்கள் எழுதியதால்,மக்களுக்கும் அறத்துடன் இயைந்தவாழ்வு வாழவேண்டும் என்ற தன்னம்பிக்கை எழுந்தது. செய்த தவறுகளுக்கு மன்னிப்பு உண்டு என்று அவை புகலுவதால் பாவச்செயல்கள் புரிந்தோரும் திருந்த வாய்ப்பு உள்ளது. மேலும் நாடு, நகரம், ஊர், மன்னர், வள்ளல்கள் போன்றோரின் வரலாறு போன்ற செய்திகளைப் புராணங்கள் உணர்த்துகின்றன, நாட்டு வரலாறு, சமுதாயச் செய்திகள், அரசியல் நிலைமை, செல்வச் செழிப்பு போன்ற செய்திகளையும் தலபுராணங்கள் மூலம் அறியலாம். உயர்ந்த சமயக் கருத்துக்களையும், தத்துவங்களையும் சம்பவங்கள், கதைகள் போன்றவற்றில் பொதிந்து அளிப்பதன் மூலம், சாதாரண மக்களும் அறிந்து பயனடையச் செய்வது தல வரலாறுகள் புரிந்த தலைசிறந்த பணியாகும்.

பொதுவாக அனைத்துத் தலபுராணங்களிலும் சில பகுதிகள் இடம் பெற்றுள்ளன. அவையாவன:

1. காப்பு செய்யுள்
2. கடவுள் வாழ்த்து
3. அவையடக்கம்
4. திருநாட்டுச் சருக்கம் அல்லது படலம்
5. திருநகரச் சருக்கம்
6. நைமிசாரண்யச் சருக்கம்
7. புராண வரலாற்றுச் சருக்கம்
8. திருநதிச் சருக்கம்
9. தல மகிமைச் சருக்கம்
10. மூர்த்தியின் சிறப்பு

இதுபோன்ற பொதுக் கூறுகளெல்லாம் வெவ்வேறு பெயர்களுடன் இடம் பெற்றிருக்கும். இனி திருவான்மியூர்த் தல புராணம் பற்றிக் காணலாம்.

## திருவான்மியூர்த் தல புராணமும் அதன் ஆசிரியரும்:

திருவான்மியூர்த் தல புராணம் முதலில் வடமொழியில் தோன்றியது. அதனைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட பெருமை ஸ்ரீ அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலி யாருக்கே உரியது. 19 படலங்களும், 1022 விருத்தங்களும் உடைய இத்தல புராணம் 1895-ல் (மன்மத வருடம் வைகாசி மாதம்) சென்னை இந்து யூனியன் அச்சுக் கூடத்தில் அச்சாகியது இந்த இரண்டு நூல்களும் இப்பொழுது கிடைப்பது அரிதாக உள்ளது, அதனை உரைநடையில் சுருக்கமாக எழுதி வெளி யிட்டுள்ளனர். அவற்றுள் அமரபாரதி நிறுவனத்தைச் சேர்ந்த திரு மகாதேவ அய்யர் வெளியிட்டுள்ள தல வரலாற்றுச் சுருக்கம் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர்

சைவ சித்தாந்தப் பெரும் புலவரும், செந்தமிழ்க் கவிஞரும் ஆன கலியாணசுந்தரர் சென்னையின் ஒரு பகுதியான பரங்கிமலையில் 10-5-1854 அன்று அவதரித்தார். அவரது பெற் றோர்கள் அண்ணாசாமி முதலியாரும், உண்ணாமலையம்மையும் ஆவர். சிறு வயதில் பூவிருந்தவல்லியில் ஆரம்பக் கல்வி பயின்ற கலியாண சுந்தரர், சென்னையில் ஆங்கிலமும், தமிழும் பயின் றார். சொக்கலிங்கபுரம் இராமலிங்கத் தம்பிரானிடம் பெரிய புராணமும், திருக்கோவையாரும் கற்றார். தசாவதானம் ஜகந் நாத பிள்ளையிடம் தமிழ் இலக்கணமும், அவதானப் பயிற்சியும் பெற்றார். முப்பது வயதில் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. சென்னை ஜார்ஜ் டவுன் பகுதியில் நீண்டநாள் வாழ்ந்து வந்தார். இவரது மக்கள் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை. சில ஆண்டுகள் ஒரு அலுவலகத்தில் வேலைபார்த்து வந்தார். பின்னர் வேலை பிடிக்காததால் அதை விட்டுவிட்டு மாணவர்களுக்குத் தமிழ் மொழி கற்றுக் கொடுப்பதிலும். சைவ சமயப் பிரச்சாரம் செய்வதிலும் காலத்தைக் கழித்தார். 1918-ஆம் ஆண்டில் "சித்தாந்தம்" எனும் இதழைத் தொடங்கி, அதன் ஆசிரியராகப் பணிபுரிந்தார். வயதானவுடன் துறவறம் பூண விரும்பிய கலியாண சுந்தரர் காஞ்சிபுரம் மெய்கண்ட சந்தான பீடத்திலிருந்த தவத் திரு ஞானப்பிரகாச சுவாமிகளிடம் தீட்சை பெற்றார். யதீந்திரர் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. (யதி-முனிவர், இந்திரன்-தலைவன்) இவர் சிவனடியார் திருக்கூட்டத்தையும், சிவனடியார் தலயாத்திரைச் சங்கத்தையும் நிறுவினார். தமிழுலகமும், சைவ சித்தாந்தவாதிகளும் துயரம் அடைய 28-12-1918 அன்று தமது 64-ஆம் வயதில் கலியாணசுந்தர யதீந்திரர் இறைவனடி சேர்ந் தார்.

பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர்களாக இருந்த மோசூர் கந்தசாமி முதலியாரும், மணி திருநாவுக் கரசு முதலியாரும் இவருடைய மாணவர்கள். சிறந்த கவிஞரான கலிபாணசுந்தரர் எழுதிய யாப்பிலக்கண நூல் எளிய முறையில் அமைந்திருந்தது. திருப்போரூர்ப் புராணம், காளத்திப் புராணம், சேக்கிழார் சரித்திரம், சித்தாந்த தசக் காரியக் கட்டளை, சித்தாந்த சாதனக் கட்டளை, சித்தாந்த வசன பூஷணம் ஆகிய நூல்களை யும் கலியாண சுந்தர யதீந்திரர் எழுதினார்.

அவதானப் பயிற்சி பெற்ற யதீந்திரர் 'அஷ்டாவதானம்' என்ற பட்டத்தையும் பெற்றார். பலதரப்பட்ட மக்கள் நிறைந்த கூட்டத்தில் எட்டு வெவ்வேறு செயல்களை ஒரே பொழுதில் செய்பவருக்கே இப்பட்டம் வழங்கப்படும். சித்தாந்தத்தில் வல் லவராய் விளங்கியதால், ''சித்தாந்த சரபம்'' என்ற பெயரும் இவருக்குக் கிட்டியது. ஸ்ரீ அஷ்டாவதானம் பூவை கலியாண சுந் தர யதீந்திரர் எழுதிய திருவான்மியூர்த் தல புராணம் கவிதை யழகும், எளிய நடையும் பெற்றுள்ளது. அதன் சுருக்கத்தை வசன வடிவில் காணலாம்.

## தலபுராணச் சுருக்கம்

### *திருநாட்டுப் படலம்*

இப்பகுதியில் ஆலயம் அமையப் பெற்றுள்ள நாட்டின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது.

தேன் சொரியும், வாசனை மிக்க துளசி மாலையை அணிந்த திருமாலும், படைக்கும் தொழிலைப் புரியும் நான்முகனும் போற்றும் ஏற்றமிகு கயிலையில் சிவபெருமானுடன் அமர்ந்துள்ள உமை யம்மை அறங்களைப் புரிந்து சிறப்புப் பெற்றது தொண்டை நாடு. இக்கருத்தைத் தெளிவிக்கும் பாடல்

''நறவது கொப்பளிக்கு நறுந்துழாய் மாலையானும்
விறல்கெழு பிரமன்தானும் வீற்றிருந் தேத்தியுய்யும்
உறலுறுங் கயிலைப்பெம்மானுடனுறைய மலைவந்திங்கு
அறமெலாம் வளர்க்கப் பெற்ற தழகிய தொண்டை நாடு''

(நறவு-தேன்; கொப்பளிக்கும் - சொரியும்; நறுந்துழாய் - வாசனை உடையது; துளசி. - துளசிமாலை அணிந்த திருமால்

விறல்கெழு - ஆற்றலுடன் படைப்புத் தொழிலைப் புரியும்; உறல் உறு கயிலை - ஏற்றமிக்க கயிலை; பெம்மானுடன் உறை அமலை- சிவபெருமானுடன் திகழும் உமை; அறமெலாம் வளர்க்கப் பெற்ற- தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சியில் ஆகம முறைப்படி வழிபாடு புரிந்த உமையம்மை,அங்கு முப்பத்திரெண்டு அறங்களைச் செய்ததால் காஞ்சியும், தொண்டை நாடும் சிறப்புப் பெற்றன)

சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் மக்கள் நலம் கருதிப்பண்பு மிக்கோர் களிப்புடன் செய்யும் பூசையும், கவின்மிகு திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுவதால் பெருமை பெற்று விளங்குகிறது தொண்டை நாடு.

சிவப்பெருந்தேவன் வாழுஞ் சிவாலயச் சிறப்புந் தக்கோர்
பவப்பிணி போக்கச் செய்யும் பண்புறு பூசைப் பொற்பும்
உவப்புற நாளுங் காணுமுயரிய விழாவி ஞேர்ப்பு
நிவப்புட னென்று மோங்கி நிலைத்தது தொண்டை நாடு

(மக்கள் நலன் கருதிச்செய்யப்படும் பூஜை பரார்த்த பூஜை எனப்படும்)

அழகிய தோற்றமும் வனப்பும் உடைய உமையம்மையுடன் சேர்ந்திருக்கும் சிவபெருமான் அருளிய இருக்கு முதலிய வேதங் களிலுள்ள கருத்துக்களை எளிதாகத்திருக்குறள் எனும் நூலில் எடுத்துக் கூறிய திருவள்ளுவர் அவதரித்தது தொண்டை நாட்டில் ஆகும்

முருக்கிதழ் நிறத்துச் சீரின் முதவடிக் கௌரியோடும்
இருக்கினி லிருக்கு மெம்மா னீந்ததோர் வேதத்துற்ற
பெருக்கமே யொருங்கு பூத்துப் பிறங்குநன் னீதிநூ லிற்
றிருக்குற டந்தவெந்தை செனித்தது தொண்டை நாடு

(மறைமலையடிகள் திருவள்ளுவரையும், சிவபெருமானையும் தனது கட்டுரைத் தொகுதியில் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். திரு மயிலையில் தோன்றிய திருவள்ளுவர், பலகாலம் அங்கு தங்கி, நாடி வந்தோர்க்கு அருளுரை வழங்கினர். அப்போது திருமயிலாப்பூர், தேவாமிழ்தம் தோன்றிய பாற்கடலைப் போல் பொலிவுற்றது. பல நாடுகளிலிருந்தும் அவ்வமுதைப் பருகத்தேவர்களைப் போல மக்கள் வந்தனர். அமுதுடன் தோன்றிய நஞ்சு போல அம்மக்களின்

அறியாமை விளங்கியது. நஞ்சினைப் பருகித் தேவர்களை உய்வித்த சிவபெருமான் போலத் திருவள்ளுவரும் அவ்வறியாமையை நீக்கித்திருக்குறளை உபதேசித்தார். இவ்வாறு தெய்வப்புலவர் திருவள்ளுவர் உலகனைத்தும் நல்லொழுக்கப் படுத்தித் தம் மேனியினை அருள் வெள்ளத்தில் அழுத்தி இறைவனுடன் இரண்டரக் கலந்தார்.)

பிற சமயத்தினரும் பகைமை உணர்ச்சியை மறந்து சைவ சமயத்தார் இன்பம் பொங்க வணங்கும் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற உண்மையை உணர்ந்து அன்பு செலுத்துவராயினர். ஆளுடைய பிள்ளையாரான திருஞான சம்பந்தர் அங்கம் பூம்பாவைக்கு உயிர் அளித்ததைக் கண்ணுற்ற அனைவரும் இவ்வாறு சிவபெருமானைப் போற்றத் தொடங்கினர். இத்தகைய சிறந்த நிகழ்ச்சி நடைபெற்ற திருமயிலை எனும் ஊரும் தொண்டை நாட்டிலுள்ளது.

'' வன்புறு மனத்தராகி வாழ்வுறுஞ் சமயத்தோரும்
இன்புடன் சைவஞ்சொற்ற விறைவனே தெய்வமென்று
வன்புகொண் டேத்தயாரும் ஆளுடைப்பிள்ளையாரால்''
என்பு பெண்ணாகி வந்த திருத்தமிழ்த் தொண்டைநாடு

(இவ்வுலகில் பிறந்தோர் அடையக் கூடிய பயன் சிவனடியார்க்கு அமுது செய்விப்பதும், அப்பெருமானுக்காக நடைபெறும் நல்விழாக்களில் பங்கேற்பதும் ஆகும். அத்தகைய நிகழ்ச்சிகள் நடப்பது உண்மையானால், அங்கம் பூம்பாவை உயிர்பெற்றெழ வேண்டும் என சம்பந்தர் கூறியவுடன் எலும்பும், சாம்பலும் இருந்த பெட்டியிலிருந்து உயிருள்ள உருவம் எழுந்தது. இந்த நிகழ்ச்சி சிவபெருமானே முழுமுதற்கடவுள் என உணர்த்தியது.)

மூவுலகங்களிலும் சைவத்தின்பெருமையை நன்குணர்த்தித் தமிழ் வேதம் எனப்படும் தேவாரப்பாடல்களை இயற்றிய தொண்டர்களின் வரலாற்றை உலகோர்க்குத் தெரிவித்த சேக்கிழார் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்.

''மருவிய உலகமூன்று மண்ணு வான்சைவப் பேறே
பெருகுறச் செய்து செல்வப் பெருந்தமிழ் வேதஞ் சொற்ற
திருவளர் தொண்டர் சீர்த்திதெரிக்கவந் தவதரித்த
வருண்மொழித் தேவரன் பினமர்ந்தது தொண்டை நாடு''

தமிழ் மறைபோன்ற தேவாரப் பாடல்களைப் பாடியவர்களுள் திருநாவுக்கரசர் தொண்டை நாட்டிலுள்ள திரு ஆமூரில் தோன்றினார். அப்பர் தோன்றியதால் திரு ஆமூர் பிற உலகிற்கும் தமிழ்மறை பரவியதற்கு ஆதரவு அளித்தது. சுந்தரமூர்த்தி நாயனாரும் தொண்டை நாட்டிலுள்ள திருநாவலூரில் அவதரித்தவர். பெரியபுராண உரையாசிரியர் சிவக்கவிமணி, திருநாவுக்கரசர் சைவ சமயத்தை மூவுலகிற்கும் பரப்பிய திறத்தைக் கூறுகிறார். "நிலவுலகில் திருநாவுக்கரசரும், திலகவதியாரும் சைவ சமய வளர்ச்சிக்காகப் பெருந்தொண்டு புரிந்தனர். நாவுக்கரசர் தமது இறுதிக் காலத்தில் திருப்புகலூரில் இருந்தபோது வானுலகிலிருந்து ஊர்வசி போன்றோர் இவரை மயக்க முயன்றனர். தேவர் கோமானே வணங்கும் திருவாரூர் ஈசனின் அடியாரிடம் தங்களது முயற்சி பலிக்காமல் அப்பெண்கள் தேவருலகம் சென்றனர். அப்பெண்கள் மூலம் சைவ சமயத்தின் பெருமை வானுலகிற்குப் பரவியது. நாவுக்கரசரின் ''காலப்பாசக் குறுந்தொகை" மூலம் சிவனடியார்களின் சிறப்பைக் காலன் தனது தூதுவர்களுக்குத் தெரிவித்ததாக அறியலாம். திருப்புகலூரில் திருநாவுக்கரசரின் மனத்திண்மையைச் சோதிக்கும் பொருட்டு அவர் முன் நவரத்தினங்களும் மணிகளும் குவிக்கப்பட்டன பொருள் மேல் பற்றுக் கொள்ளாத அப்பர் அவற்றைக் குளத்தில் வீசியெறிந்தார். அவ்வாறு எறிந்த ஓசையைக் கேட்ட பாதாள உலக மக்களும், அதன் காரணத்தைக் கண்டறிய முனையும் போது சைவ சமயத்தின் பெருமைகளை அறிந்தனர். இவ்வாறு வானுலகம், நிலவுலகம், பாதாள உலகம் ஆகிய மூன்றிலும் சைவ சமயத்தின் பெருமை பரவியது." அத்தகைய அரிய செய்திகளை அளித்த சேக்கிழார் தனது இறுதிக் காலத்தில் பணி செய்த குன்றத்தூர், அதனையடுத்த திருநாகேஸ்வரம் ஆகிய இரு இடங்களும் தொண்டை நாட்டில் அமைந்துள்ளன.

பலவகைச் சமயங்களின் கோட்பாடுகளுக்கு ஏற்ப செய்யப்படும் வழிபாடுகளெல்லாம், சைவ சமயத்தோர் போற்றும் முழுமுதற்கடவுளான சிவபெருமானை அடைகின்றன. அது போலவே பற்பல அருவிகளாகத் தோன்றிய நீர்ப்பெருக்கு பாலாருக ஒன்று சேர்கிறது. இப்பாலாற்றால் பல வகைகளில் வளம் பெற்றது தொண்டை நாடு

'' அருவிகளென்ன வந்தவவையெலா மொன்ருக்கூடி
மருவிய பாலியாரு மண்மிசை யோடாநிற்கும்
பெருகிய சமயத்தோர்கள் பேணுறும் வழிபாடெல்லாம்
ஒருவருஞ் சைவஞ்சொற்றவொருவனை யடைதல் போன்றே"

எந்தத் தெய்வத்தைக் கொண்டாடினாலும் அத் தெய்வமாக வந்து அருள்புரிவார் மாதொரு பாகனுர் என்பது சிவஞானசித்தியார் கூறும் அரிய கருத்து. வேறு தெய்வத்தை வழிபடும் போது சிவபெருமானே அத்தெய்வமாக வந்து அத்தெய்வம் கொடுக்கத்தக்கவற்றை அருள்புரிவார். ஆனுல் சிவபெருமானை வழி படும் போது வழிபடுபவரின் ஆற்றலுக்கேற்ப எல்லாப் பேறுகளையும் அளிப்பார் பிற சமயங்கள் குறிப்பிடும் வழிபாடுகள் அந்தந்த வழிபாட்டுக்குரிய பலனையே தருகின்றன. சிவவழிபாடு அனைத்து நன்மைகளையும் அளிக்க வல்லது என்பது சைவ சித்தாந்தம் கூறும் கருத்து.

பாலாறு 'பாலியாறு' எனக் குறிப்பிடப்படுகிறது. சுரபியின் திருமுலை சொரியும் பால் தீர்த்தமாக வரும் காரணமாகப் பாலி என்ற பெயர் ஏற்பட்டதாம். புது வெள்ளம் ஏற்படும் போது சில நாட்கள் தவிரப்பிற நாட்களில் இங்கு நீர் ஓடுவதில்லை. மேல் வெள்ளம் ஓடாமையால் இது மணல் திட்டுப் போலத் தோன்றும். ஆனுல் இதனடியில் நீர் மறைந்து ஓடும். இம்மணலைத் தோண்டினுல் உண்டாகும் ஊற்று நீர் விவசாயத்திற்குக் கூட உபயோகப்படுகிறது.

## திரு நகரப் படலம்

பாலியாற்ருல் வளம் பெற்ற தொண்டை நாட்டில், அவ்வாற்றின் தென் கிழக்கில் அமைந்துள்ள திருவான்மியூரின் சிறப்பை ஆசிரியரின் பாடல்கள் வலியுறுத்துகின்றன. அறியாமையை உண்டாக்கும் பாசம் எனும் மலத்தின் வசப்பட்டு, பிறவியெனும்கடலில் அகப்பட்ட பேதை மக்களின் பிணியைநீக்கி, முக்தியளிக்கவல்ல மருந்தீசர் எழுந்தருளியுள்ள பெருமையுடையது திருவான்மியூர் இவ்வூர் இங்கு வாழும் துறவிகளுக்கு ஆக்கமாக உள்ளது.

"மறவியைச் செய்யும் பாசமலத்திடை மூழ்கி நாளும்
பிறவியங் கடலிற்பட்ட பேதையர் பிணியைப் போக்கி
உறவியைக் காக்க வேண்டியுயர் மருந்தீசன் வாழ்தல்
துறவிகட்கு ஆக்கமான தொன்மை யவான்மியூரே"

மறவி-அறியாமை ; பாசமலத்திடை-ஆணவம் முதலிய மூன்று பாசங்களில்; பிறவிக்கடல்-பிறப்பும் இறப்பும் தொடர்ந்து வரும் கடல் போன்ற மாந்தரின் நிலை; உறவி-உறவு நிலையை.

பிறவித் துன்பங்களிலிருந்து நீக்கி அடியார்க்கு முக்தியை அளிக்கவல்ல மருந்தீசர் திருவான்மியூரில் எழுந்தருளியிருப்பது துறவிகளுக்கு ஆக்கமாக உள்ளது. துறவிகள் மருந்தீசனை வழி படுவதுடன், மற்றவர்களுக்கும் நல் வழியைக் காட்டுகிருர்கள்.

'காசியில் இறந்தால் முக்தியடையலாம்; திருவாரூரில் பிறந் தால் முக்தி கிடைக்கும்; சிதம்பரத்தைக் கண்டால் முக்தி பெறலாம்; திருவண்ணுமலையை நினைத்தால் முக்தி கிட்டும்', என்று நம்பப்படு கிறது. அரிய தலமான திருவான்மியூரில் பிறந்தாலும்,இறந்தாலும் முக்தி கிடைக்கும்; இதனைக் கண்ணுல் கண்டாலும் மனத்தால் நினைத்தாலும் முக்திபெறுவது திண்ணம்.

''மருவியகாசி ஆரூர்மன்னிய வரு ணைதில்லை
இரும்பெரு வீட்டைச்சூழில் இறந்திடில் பிறக்கில் உன்னில்
அருள்பெறக் காணில் என்பர் அரிய வித்தலத்தில்இவ்வாறு
அருகிய பேதமின்றி அளித்திடும் எவர்க்கு முத்தி.''

மூவுலகில் உள்ளோரும் வளமான செல்வம், கல்வி, ஞானம் ஆகியவற்றில் புகழ்பல பெற்று ஓங்கி நிற்கும் திருவான் மியூரில் வேண்டிப் பெறுவர்; இதை வெறும் பெருமைக்காகச் சொல்லவில்லை; இவை அனைத்தும் உண்மை.

முகமனுச் சொல்வதன்று முப்புவனத்து ளாரு
மிகமலி செல்வங் கல்வி விரும்பிய ஞானமாதி
யக மகிழ்வுடனே வேட்டங்கடைகுவர் சரதமாகப்
புகழ்பல வோங்கும் இந்தப்புண்ணிய வான்மியூரில்.

(முகமனு - பெருமைக்காக; மிகுமலி-மிகவும் பெருகிய; வேட் டங்கடைகுவர்-கோரியவாறு அவற்றைப்பெறுவர்.)

கல்வியறிவு, செல்வம், அழகிய மனைவி, சிறந்த புத்திரர்கள் தேர்ந்த பலவகைப்பொருட்கள் ஆகியவை பெற விரும்புபவர்கள், நாள்தோறும் திருவிழாக்கள் நடைபெறும் திருவான்மியூர் சென்று அவற்றைப் பெற வேண்டும்.

"கல்வி வேண்டுநர் கனகம் வேண்டுநர் காதல்
செல்வி வேண்டுநர் சேய்கள் வேண்டுநர் தேர்ந்த
பல்விதப்பொருள் வேண்டுநர் அவையெலாம் பகுக்கு
நல்விழாத் தினம்வளர் திருவான்மியூர் நகரம்"

கனகம்-செல்வம்; காதற்செல்வி-மனைவி; சேய்கள்-மக்கட் பேறு திருவான்மியூரில் நாள்தோறும் திருவிழாக்கள் நடைபெறு வதால் அவற்றில் பங்கேற்றுப் பேறு பெற வேண்டும் என்ற கருத்து அமைந்துள்ளது.

## நைமிசாரண்யப் படலம்

மெய்முழுதும் திருநீறு அணிந்தவராய், கழுத்தில் உருத்தி ராக்கம் பூண்டவராய், சிவாயநம வெனும் ஐந்தெழுத்தை அருமந் திரமென ஓதி, அரனின் திருவடிகளை அன்போடு சிந்தித்து வரும் முனிவர்கள் பலர் நற்புகழ் பெற்ற நைமிசாரண்ய வனத்தில் கூடி யிருந்தனர். அவர்கள் சதா சங்கரன் உருவத்தையே காண்பர்; சங்கரனின் கதையையே கேட்பர்; சங்கரனின் திருநாமத்தையே உச்சரிப்பர்; சங்கரனின் தொண்டைப் பெருந்தொண்டாக ஏற்பர்.

"சங்கரன் உருவே காண்பர் சங்கரன் கதையே கேட்பர்
சங்கரன் பெயரே சொல்வர் சங்கரன் அருளே கொள்வர்
சங்கரன் தனையே தேர்வர் சங்கரன் தொண்டே ஏற்பர்
சங்கரன் அடியாரோடு சதிருற வாழ்தல் செய்வார்"

அரிய கலைகளை நன்கறிந்த சூதமுனிவரே அவர்களுக்கு அருள் மொழிகளை நவிலும் ஆசான் ஒரு நாள் அம்முனிவர்கள் சூதரிடம், "பலதுறை அறிவு நிரம்பப்பெற்ற அருந்தவ முனிவ! பிறவிக்கடலைக் கடந்து ஈசனின் திருவருளில் திளைப்பதற்குத்தக்க வழியை எங்க ளுக்கெடுத்துரைத்தருளுங்கள்"என இறைஞ்சினர். சூதமுனிவரும், "சிவபக்தியில் திளைத்த சீலர்களே ! நீங்கள் விடுத்துள்ள வேண்டு கோள் மிக அருமையானது. எனது உரைகளுக்குச் செவி சாய்ப் பீர்களாக ! சிவபெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்களின் புக ழைக் கேட்டல்; அக்கோயில்கள் அமைந்துள்ள தலங்களில் வாழ்தல், அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடல், அங்கு

எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தினை நறுமலர் கொண்டு நாள் தோறும் வழிபாடு புரிதல், ஆகிய செயல்களுள் ஏதாவது ஒன்றை மேற்கொண்டு ஒழுகினால் உங்களது விருப்பம் ஈடேறும்" என இயம்பினர்.

சூதர் கூறிய மொழிகளால் மன நிறைவு பெருத முனிவர்கள் அப்பெரியோரிடம் மேலும் கூறினர். "ஞானத்தின் திண்மை சேர் முனிவா! ஏந்தத் தலத்தைக் காணுதலால், அல்லது அது பற்றிக் காதால்கேட்பதால், அல்லது அதன்திசையை நோக்கிப்பணிவதால் அல்லது, அதன் பெயரை வாயால் உச்சரிப்பதால் அல்லது மனம், ஒன்றி அங்கு வாழ்வதால் முக்தி கிடைக்குமோ அத்தலத்தைப் பற்றி தயவு செய்து எங்களுக்கு உரைத்தருளுங்கள்!" முனிவர் களின் அன்புக் கட்டளையைச் சிரமேற்கொண்ட சூதர் மேலும் செப்பினர், "முனிவர்களே! நான் கூறுவனவற்றைச் செவி மடுத் துக்கேளுங்கள். மேன்மை பொருந்திய கயிலை மலையில் தேவர், தானவர், சித்தர்கள் போன்ருேர் அனைவரும் கண்ணுதற் கடவு ளான சிவபெருமானை உள்ளன்போடு வணங்கினர்கள். பின்னர் அப்பெருமான் உமையன்னையோடு தனித்திருக்கும் போது அன்னை ஈசனிடம் "பிறைமதியும், அரவமும் தலையில் தரித்த தலைவா! பண்டு திருமயிலையில் யான் தவம் புரிந்த காலத்தில், ஒளிமிக்க வேற்படையை முருகனுக்கு அளித்தேன். அப்பொழுது திரு மயிலைக்கு இணையாக முக்தியளிக்கும் தலத்தைப் பற்றிக்கூறுவதாக வாக்களித்தீர்கள். அவ்வாக்கிற்கு ஏற்ப அத்தகைய தலத்தின் மேன்மையை எனக்கு உரைத்தருள்க." என வேண்டினர். அவ் வேண்டுகோளுக்கு ஏற்ப அரனர் வழங்கிய இன்னுரை காந்தம் எனும் உத்தம புராணத்தில், கேந்திரம் எனும் காண்டத்தின் மையத்தில் இடம் பெற்றுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு நான் உங்களுக்கு எடுத்தியம்புகிறேன்"

"வான்மிகர், இரட்சசு, பார்த்தசாரதி, இந்திரன், கதிரவன் சந்திரன், நான்முகன், இயமன், இராமர், அகத்தியர், காமதேனு; வேதங்கள் ஆகியோர் மருந்தீசரைப் பூசித்து அவர் அருளைப் பெற்றனர். சில காலத்தில் பிருங்கி எனும் மாமுனிவர் ஈசனை வழி பட இவ்விடத்திற்கு வருவார். அதுவரை அருகிலுள்ள மலையில் தங்கியிருங்கள். பிருங்கிமுனிவர் இவ்விடம் வந்தவுடன் அவரு டன் நீங்களும் சென்று மருந்தீசரை வழிபாடு செய்யலாம்" சூதர் கூறியபடியே முனிவர்களும் பிருங்கிமுனிவரின்வருகைக்காகக் காத் திருந்து, பின்னர் அனைவரும் மருந்தீசரை வழிபட்டனர்.

# வான்மீகர் பூசித்த படலம்

நான்முகனின் புத்திரர்களுள் ஒருவரான வியாகிருதி முனிவர் தவவலிமை மிக்கவராக விளங்கினார். அவரது மைந்தரான பிரசேதச முனிவர் கானகத்தில் தனியே வாழ்ந்து வந்தார். அவருடைய புதல்வரே வான்மீகி முனிவர். சிறுவயது முதலே தமது குல ஒழுக்கத்தை முழுவதும் கைவிட்ட வான்மீகி, கானகத்தே வாழ்ந்த மறவர்களுடன் பழகிவந்தார். வேடர்க்கு உரிய உயிர்க் கொலை, களவு போன்ற தொழில்களை அவர் புரிந்து வந்ததால் அவரை வேடர் என்றே ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஒரு சிங்கத்தை வேட்டையாடிவிட்டு வந்த இவ்வேடரின் கண்களில் தலை கீழாக நின்றவாறு தவம்புரியும் பெரியவர் தென்பட்டார். வெறுப்பினால் அவரை அம்பு எய்து கொல்ல வேடர் முயன்றார். அவர் எய்த அம்பு இரண்டாகப்பிளந்தது. பெரியவரைக் கொல்ல இவ் வேடர் எடுத்த அனைத்து முயற்சிகளும் பலனில்லாமல் போகவே அப்பெரியவர் தவவலிமை மிக்கவர் என வேடர் அறிந்தார். பெருந் தவசியின் பார்வை தன்மீது பட்டவுடனே தனது பாவமெல்லாம் நீங்கிவிடும் என்ற எண்ணத்துடன் அவ்விடத்திலேயே வேடர் தங்கி இருந்தார்.

தவநிலையிலிருந்து விழித்த முனிவர் வேடரின் மன நிலையை அறிந்தார். முற் பிறவியில் செய்த நற்செயல்களின் பயனாக இப்பிறவியில் வேடனுக்கு நற்பயன் கிடைக்கும் என்பதையும் உணர்ந்தார். எனவே ஐம்புலன்களையும் அடக்கித் தவம்புரியும் மார்க்கத்தை வேடருக்கு உபதேசித்தார். வேடரும் கங்கைக்கரையில் ஆசிரமம் அமைத்துப் பல்லாண்டுகள் கடுந் தவம் இயற்றினார். அவரைச் சுற்றி மரங்களும், செடிகளும் தோன்றின; அவர்மீது புற்றுக்கள் எழுந்தன.

சத்தியலோகத்தில் நான்முகன் மூலம் இராமசரிதை தோன்றிய விதத்தை நாரதர் அறிந்தார். பூவுலகில் நான்குவானரங்கள் நாள்தோறும் உணவு உட்கொள்ளும் முன்னர் சிவபூஜை புரிவதைக் கொள்கையாகக் கொண்டிருந்தன. சிவராத்திரிபூஜையின் மகிமையையும், அன்று கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளையும், பற்றி முனிவர்கள் பேசிக் கொண்டிருந்ததை அவை தற்செயலாக அறிந்தன. தாமும் சிவராத்திரி பூஜையைப்புரியும் நோக்கத்துடன் வில்வ இலைகளுடன் சிவாலயத்தை அணுகின. அன்று புலத்திய முனிவர் கோயிலின் கதவைத் தாளிட்டவாறு சிவராத்திரிபூஜை புரிந்து வந்தார். மூன்று ஜாமங்கள் கடந்தும் கதவு திறக்கப்படவில்லை; கோபமுற்ற வானரங்கள் கதவைப்

பிளந்து உள்ளே நுழைந்தன. தவம் கலைந்ததால் வெகுண்ட புலத்திய முனிவர் அவ்வானரங்களை இறக்குமாறு சபித்தார். இறக்கும் தறுவாயில், "எங்களால் உங்கள் குலம் அழியும்" என்று வானரங்களும் பதில் சாபம் அளித்தன. மறுபிறவியில் புலத்தியர் இராவணனாக அவதரித்தார்; நான்கு வானரங்களும் அப்பிறவியில், வாலி, சுக்ரீவன், அனுமன், அங்கதன் எனத் தோன்றி அரக்கரின் அழிவுக்குக் காரணமாயின.

தான் அறிந்த வரலாற்றை நாரதர் பூவுலகில் தவம் புரிந்து வந்த வேடரிடம் கூறினார். வேடரும் தவம் கலைந்து வெளிப்பட்டார். புற்றிலிருந்து வெளிவந்ததால் வான்மீகர் என்ற பெயர்பெற்ற அம்முனிவரும் (வான்மீகம்-புற்று) இராமகாதையைக் காவியமாகப் படைத்தார்

ஒருநாள் சிரஞ்சீவியான மார்க்கண்டேயரைச் சந்தித்த வான்மீகி, தான் படைத்த காவியத்தைப் பற்றி எடுத்துரைத்தார். "மலர், நீர் இவைகளால் சிவலிங்கத்தை வழிபடுபவர் அறியாமை, மரணபயம் ஆகியன நீங்கப் பெற்றுப் பரமனடியை அடைவர். சிவலிங்க வழிபாட்டுடன், சிவனடியார்களை ஆதரித்தால் விமலன் அடியை அடையலாம். சிவவழிபாடே இம்மைக்கும், மறுமைக்கும் வழி; வருக்கும் நல்ல வரங்களை அளிக்க வல்ல சிவபிரானின் திருநாமத்தை உச்சரித்தாலும், எழுதினாலும், படித்தாலும் சிறந்த பயன் கிடைப்பது உறுதி" என மார்க்கண்டேயர் சிவபூஜையின் சிறப்பை எடுத்தியம்பினார்.

சிவபெருமானை நேரில் காண வான்மீகர் விரும்பினார். "இந்திய நாடு முழுவதும் பயணம் செய்து, புண்ணிய தலங்களிலெல்லாம் முறைப்படி வழிபாடு செய்யுங்கள். எந்த இடத்தில் "நான் இங்கு இருக்கிறேன்" என்ற அசரீரி தோன்றுகிறதோ அங்கு ஆகம முறைப்படி வழிபாடு செய்து பயனடையுங்கள்" என மார்க்கண்டேயர் வலியுறுத்தினார். சிரஞ்சீவிக்கு நன்றி தெரிவித்த பின் வான்மீகர் சிவத்தல யாத்திரை மேற்கொண்டார். பாலாற்றின் தென் கிழக்கில், கடற்கரையோரத்தில், திருமயிலைக்கு ஒரு கடிகை தொலைவிலுள்ள அமுதபுரி என்ற இடத்தில் அசரீரி உதித்தது.

பேரின்பமுற்ற வான்மீகரும், நீராடித் தூய உடை உடுத்தி அவ்விடத்தில் வன்னிமரத்தடியிலிருந்த சுயம்பு லிங்கத்திற்குத்தூப தீபம் காட்டி, மலரிட்டு, அபிடேகம் செய்தார். பதினாறு உபசாரங்களும் செய்து வழிபாடு புரிந்தார். அவ்வாறு தியானம் புரிந்து கொண்டிருக்கையில் அவருக்கு ஈசனின் தரிசனம் கிட்டியது. நீல கண்டமும், முக்கண்களும் தோன்ற, உமையொருபாகராகக் காட்

சியளித்த ஈசரின் கரங்களில் மானும், மழுவும் இருந்தன. இரு புறங்களிலும் விநாயகரும், முருகனும் தோன்றினர். திருமால் ''தண்ணுமை'' எனும் கருவியுடன் 'தஞதஞ' எனும் தாளத்தை எழுப்பினுர். நான்முகன் 'கஞ்ச' தாளத்தைக் 'கணீர் கணீர்' என ஒலி எழுமாறு தட்டினுர். நாரத,கிம்புருடர்கள் யாழ்களை மீட்ட, தேவ மாதர்கள் நடனமாடினர். எண்ணற்ற அளவில் அங்கு கூடியிருந்த தேவர்களும், முனிவர்களும் " ஹர ஹர" எனும் ஒலியெழுப்பினர். பொற்பிரம்பைக் கையிலேந்திய நந்திதேவர் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தார்.

அளவற்ற வியப்பும், ஆனந்தமும் பெருகியதால் வான்மீகர் உடல் மயிர்க்கூச்செறிந்தது: கண்களில் ஆனந்தப் பெருவெள்ளம் திரண்டது; நாக்குக் குழறியதால் பேச்சு வரவில்லை. இறைவனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிய வான்மீகர் ஈசனைப் போற்றித் துதித்தார்.

'கலியாண சுந்தர நற்கவித்தாமந் தோளணி முக்கண்ணு!போற்றி!
வலிவாய கொடியவிடமணி மிடற்றிலேயமர்ந்த அரனே! போற்றி!
பொலிபல வாங்குண்டலிக வாபரணமாயிலகப் பூண்டாய்!போற்றி!
மலியுமுன் பதத்தன்பர் இதயத்திலெஞ்ஞான்றும்வாழ்வாய்போற்றி!

இதனுல் மகிழ்ந்த சிவபெருமானும், "நீ புரிந்த வழிபாட்டை ஏற்றோம். உனக்கு வேண்டும் வரத்தை அளிக்கிறேன். கேட்பாயாக'' என்ருர்.

"ஐயனே! யான் அறிந்தும், அறியாமலும் இதுவரை புரிந்த குற்றங்களை மன்னித்து அருளுங்கள்! உன் திருவடியான மலரில் என் மனமான வண்டு என்றும் உலாவி, உன் அருள் எனும் தேனையுண்ணத் திருவுளம் பற்றவேண்டும். என் உடல், பொருள் ஆவி ஆகிய மூன்றையும் தங்களுக்கே அர்ப்பணித்து விட்டேன். என்னுடைய சொந்த தேவைக்காக எதையும் விரும்பவில்லை. பாற்கடலிலெழுந்த ஆலகால விஷத்தைக் கழுத்திலடக்கி, அமரர்களுக்கு நல்வாழ்வு அளித்த பெருமானே! முக்தியளிக்கவல்ல தங்களது திருவடிகளை அடியார்களுடன் தொடர்ந்து வழிபடுவதையே விரும்புகிறேன். அத்தகைய வாழ்வே என்றும் நிலைக்க அருள் புரியுங்கள். உலகமாந்தர் உய்யும் பொருட்டு மேலும் இரண்டு வரங்களைக் கோருகிறேன்."

"தங்களது தரிசனம் எனக்குக்கிடைத்த இவ்விடம் அடியேன் பெயரால் என்றும் வழங்கப்படவேண்டும். இப்புண்ணியத் தலத்

தில் பிறக்கும் அனைத்து உயிர்களும் வீடுபேறு அடையவேண்டும். தாங்கள் உமையன்னையுடன் இப்பகுதியில் கோயில் கொண்டு என்றென்றும் விளங்க வேண்டும்." இவ்வாறு வான்மீகர் இறைவனிடம் விண்ணப்பம் விடுத்தார்.

தம்மை இரந்து வேண்டிய முனிவர் விரும்பியவண்ணமே வரங்களை அளித்த சிவபெருமான், மேலும் செப்பினர் "என் சிரசிலுள்ள கங்கையிலிருந்து சிந்தும் ஐந்து நீர்த்துளிகள் இப்பகுதியில் ஐந்து புனிதத் தீர்த்தங்களாக உருவாகும். அவை கிழக்கே ஜென்மநாசனி என்றும், தெற்கே காமநாசனி என்றும் மேற்கே பாபநாசனி என்றும், வடக்கே ஞானதாயினி எனவும், நடுவில் மோட்சதாயினி எனவும் பெயர் பெறும். இன்று பங்குனி மாதம் பௌர்ணமி தினமானதால், ஆண்டுதோறும் இதே தினத்தில் எம்மை வழிபட்டவர் அனைவரும் நற்கதியடைவர். நீயும் ஞானதாயினியில் நீராடி, வேதாகமத்தின் உட்பொருளான பதி, பசுபாசம் எனும் முப்பொருள் உண்மையை உணர்ந்து இத்தலத்தின்' மேற்குத் திசையில் தங்கி என்னை வழிபட்டு வருவாய்" இத்துடன் முக்கண் முதல்வனர், தமது பரிவாரங்களுடன், "அருட்குறியாம்" சிவலிங்கத்தில்மறைந்தருளினர். (காண முடியாத அருவத்தைக் காணக் கூடிய உருவில் காட்டுவதே சிவலிங்கம். இதனையே 'அருட் குறி' என வழங்குவர். சேக்கிழாரும் சாக்கியர் புராணத்தில் 'காணுத அருவினுக்கும், உருவினுக்கும் காரணமாய் நீணுகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்" என்று குறிப்பிடுகிறர்.)

வான்மீகி முனிவர் மருந்தீசரை வழிபட்ட வரலாற்றைத் திருவொற்றியூர் புராணத்திலுள்ள "வான்மீகி முனிவர் நித்தியத்துவம் பெற்ற சருக்கம்" எடுத்துக் கூறுகிறது சிவப்பதிகளைத் தரிசித்து வருகையில், திருவொற்றியூர் அடைந்த வான்மீகர், அத்தலத்தால் கவரப்பட்டு அங்கு தவம் புரியலானர். திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள மூலவரைத்தன்கையால் தொட்டுப் பூசிக்க இடம் வேண்டும் என அவர் இறைவனிடம் வேண்டினர், "நான்முகன், திருமால் ஆகியோரே இங்கு நான் அவிர்ப்பவித்துள்ள "படம்பக்கநாதர்" என்ற மூலவரைத் தொட்டு வழிபட வரம் பெற்றுள்ளனர். இத்தலத்திற்குத் தெற்கே நாம் சுயம்பு லிங்க உருவில் எழுந்தருளி உள்ளோம்" பாற்கடலிலுண்டான அமுதத்தால் தேவர்கள் இந்த லிங்கத்திற்குத் திருமஞ்சனம் செய்தனர். வான்மீக முனிவரும் நாள்தோறும் அமுதபுரிக்குச் சென்று மருந்தீசரை வழிபட்டு வந்தார். ஒரு நாள் சிவபெருமான் மாதொரு பாகனய்க் காட்சியளித்து, "அன்பனே! உன் உள்ளக் கிடங்கை நாம் அறிவோம். என்றும் எம்மை வழிபட்டுக் கொண்டிருப்பாய். இவ்

வுலகத்துடன் யாவரும் மறையும் நாளில் எம்மை நீ அடைவாய்," என்று திருவாய் மலர்ந்தார். அவ்வாறே வான்மீகர் திருவான்மியூரில் தங்கி ஈசனை வழிபட்டுக் கொண்டிருக்கிருர். இதுவே திருவொற்றியூர் புராணம் அளிக்கும் செய்தி.

பங்குனிமாதம் பௌர்ணமி அன்று சிவபெருமான் வான்மீகி முனிவருக்குக் காட்சியளித்தார். எனவே பங்குனி மாதத்தில் பௌர்ணமியைப் பத்தாம் நாளாகக் கொண்டு இங்கு விழா நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியை நினைவுறுத்தும் வண்ணம் பௌர்ணமி இரவில் தியாகராஜர் வான்மீகிக்குக் காட்டிய பதினெட்டு வகைத் திருநடனங்களும் கொண்டாடப்படுகின்றன.

—o—

## இரட்சசு ஜென்ம நாசப் படலம்

நான்முகனின் அம்சமாகத் தோன்றிய இரட்சசு என்பான் வானர உருவம் கொண்டவன். நான்முகனின் சத்தியஉலகத்தில் சஞ்சரித்து வருகையில், அங்குள்ள கலியாணதீர்த்தத்தில் அவன் நீராடினுன். அத்தீர்த்தத்தின் புனிதத்தைக் காக்கும் பொருட்டு அதில் எவரும் நீராடக் கூடாது என்ற தடையை பிரமன் விதித்து இருந்தார். அவ்வாறு மீறி நீராடும் ஆடவர்கள் பெண்ணுக மாறு மாறு சாபம் அளித்தார். இதனையறியாமல் நீரில் இறங்கிய இரட்சசு பெண்ணுருவம் அடைந்தான்.

இதனுல் வெட்கமும், வருத்தமும் அடைந்த இரட்சசு எல்லா உலகங்களிலும் அலைந்து, திரிந்து தீய செயல்களில் ஈடுபட்டான்; இதனையறிந்த பிரமனும் இரட்சசுவைப் பூவுலகிலுள்ள திருவான்மியூரில் அமைந்துள்ள ஜென்மநாசனி எனும் தீர்த்தத்தில் நீராடச் செய்யுமாறு நாரதரிடம் பணிந்தார். இரட்சசுவைத் தேடிப் பல உலகங்களிலும் அலைந்த நாரதர், அவனைச் சந்திரலோகத்தில் கண்டார்.

நாரதரின் விருப்பப்படியே திருவான்மியூரை அடைந்த இரட்சசு அங்குள்ள ஜென்ம நாசனியில் மூழ்கித் தனது பழைய உருவத்தை அடைந்தான். திருவான்மியூரில் அருள்பாலிக்கும் மருந்தீசரைப் போற்றித் துதித்தான், "மறைமுதல்வனே! உலகநாயகனே! திங்களையும், பாம்பையும் சடையில் தாங்கியவனே! மங்கை பாகனே! உம்பர் தம்பிரானே! சதாசிவா! உனது திருவடிகளைப் போற்றிப் பரவுகிறேன்."

அம்புயமலர்வா ழெுந்தை யாதியர் தலைவா போற்றி !
வம்பலர் இமயவல்லி வாமபாகத்தாய் போற்றி!
நம்பிடு மறிஞருள்ள நளினமீதுறைவாய் போற்றி!
எம்பரம்பரனே போற்றி! ஈசனே போற்றி! போற்றி!

பின்னர் தனது தந்தையின் உலகத்திற்குச் சென்ற இரட்சசு முன்போல மகிழ்வுடன் வாழலானான்.

பங்குனித் திருவிழாவின்போது ஆறும்நாள்காலையில்அருள் மிகு சந்திரசேகரர் இரட்சசுவிற்கு அருளிய நிகழ்ச்சி நினைவு கோரப்படுகிறது.

—⊣o⊢—

## பார்த்தசாரதி பாபநாசப் படலம்

வடமதுரையில் வாசுதேவருக்கும், தேவகிக்கும் மகனாய் அவதரித்து, ஆயர்பாடியில் நந்தகோபன், யசோதை ஆகியோரால் வளர்க்கப் பட்ட கண்ணபிரான் கம்சனை அழித்தார். பன்னிரு யோசனை தொலைவில் அமைக்கப்பட்ட துவாரகையில் அரசாட்சி புரிந்துவந்தார். அவரது மனைவியருள் ஜாம்பவதி மட்டும் மகப்பேறில்லாமல் வருத்தமுற்றாள். இக்குறையை நீக்கும்பொருட்டு உபமுன்னியு முனிவர் சிவதீட்சை செய்து வைத்தார். அதன் பின்னரே சாம்பன் முதலிய புத்திரர்கள் பிறந்தனர்.

பாரதப் போரில் பார்த்தனுக்குச் சாரதியாகக் கண்ணபிரான் விளங்கினார். எதிரில் உறவினர்களையும், ஆசான்களையும் கண்ட அருச்சுனன் பாசத்திற்கு அடிமையானான். கண்ணன் விசுவரூபம் எடுத்ததுடன், பகவத்கீதையையும் உபதேசித்தார். "எதிரே நிற்பவர் உறவினர்என்றும், ஆசான் என்றும் கலங்குவது அஞ்ஞானத்தின் விளைவேயாகும். பிறப்பு, இறப்பு, உறவு, நட்பு, பகை இவை அனைத்தும் உடலுக்குஉண்டேயன்றி ஆன்மாவிற்கு இல்லை. பிரம்மமயமான அதுஎன்றும் ஒரேநிலையிலுள்ளது ஆகாயம் பல இடங்களிலிருந்து பார்ப்போருக்கும் ஒரே மாதிரியாகக் காட்சியளிக்கிறது. ஜீவகோடிகள் யாவும் பிரம்மமேயாகும். நானும் பிரம்மம், நீயும்

பிரம்மம், நின் கை அம்பும் பிரம்மம்; பகைவரும் பிரம்மம், யுத்தமும் பிரம்மம்; வெற்றியும், தோல்வியும் பிரம்மம். இந்த உண்மையை அறியாதவர் அறிவீனத்தால் பேதம் பாராட்டிக்கருமங்களில் கட்டுண்டு அழிவர்; எனவே சஞ்சலத்தை விடுத்து உனது கடமையைச் செய். பாரதப்போரில் பாண்டவர் வெற்றி வாகை சூடினர்.

தனக்குச் சிவதீட்சை செய்து வைத்த உபமன்னியு முனிவரைக் கண்ணபிரான் ஒருநாள் சந்தித்தார் "உலகைக் காக்கும் பரம்பொருளே! உலக நன்மைக்காகவே தாங்கள் அவதாரம் எடுத்தீர்கள். உலகின் சுமையைக் குறைக்கும் பொருட்டே மகாபாரதப் போரும் தங்களால் துவங்கப்பட்டது. இருப்பினும் வஞ்சகச் செயல்கள் நிறைந்த அப்போரில் ஏற்பட்ட உயிர்ச்சேதத்தில் தங்களுக்கும் ஓரளவு பங்கு உண்டு. அதற்குப் பரிகாரமாகச் சுயம்பு லிங்கத் தலமான திருவான்மியூரிலுள்ள பாபநாசனி எனும் தீர்த்தத்தில் நீராடிச் சிவபெருமானை வழிபடுங்கள் எண்ணரிய பாவ மனைத்தையும்இம்மையிலேயேஒழித்திடக்கண்ணுதலாரின்சிவலிங்க வழிபாட்டைவிடச் சிறந்தது அவனியில் இல்லை. திருவான்மியூர் பாபநாசனியின் பெருமையைச் செப்புதல் அரிது" எனஉபமன்னியு முனிவர் மொழிந்தார்.

இவ்வரிய உபதேசத்திற்கேற்ப திருவான்மியூரை அடைந்த கண்ணபிரானும், அத்தலத்தின் தூய்மையையும், அமைதியையும் கண்டு உவந்தார். பாபநாசனியில் நீராடி, உருத்திராக்கம், திருநீறு ஆகியவற்றைப் பூண்டு, ஐந்தெழுத்தை ஓதி வழிபட்டார். அருகேயுள்ள அல்லிக்கேணிஎனும் தலத்தில் ஆசிரமம் அமைத்துத் தங்கிய கண்ணன், வான்மியூருக்கு நாள்தோறும் வந்துவழிபட்டார்.

"சத்தே சித்தே யானந்தந் தானுநின்ற தனிப் பொருளே

வித்தேயுலகம் விளங்குதற்கும் வேண்டுமவற்றை யளிப்பதற்கும்

தத்தேவுற்றுத் தளர்வுறுமித் தமியேன்றன்னை யாளுகநன்

முத்தேபவள முழுமணியே முதலேபோற்றி! போற்றியே!"

"தவழுஞ் சடையாய்! காலகால! என்மேல் கருணைகொண்டு அருள்வாய்," என்று கண்ணபிரான் துதிக்கவும் சிவபிரான் காட்சி யளித்தார்: "கண்ணு! நினது வழிபாடு எனக்கு நிறைவை அளித்தது. தீயவர்களை நீ அழித்தது உலகின் நன்மைக்கே என்றாலும் அது நலம்சேர் நெறியன்று. இதனால் உன்னைச் சூழ்ந்த தீவினை நீ பாபநாசனியில் முழ்கியபோதே அகன்றுவிட்டது."

நீ பார்த்தனுக்கு உபதேசித்த கீதை உலகினர்க்கு ஒரு ஞானப் பொக்கிஷம். நீ பார்த்ததுக்கு அருளிய பார்த்தசாரதிக் கோலத்துடனே தற்போது தங்கியுள்ள அல்லிக்கேணியில் கோயில் கொண்டு அன்பர்களுக்கு அருள்புரிவாய். நம்மிருவரும் ஒருவரே! நம்மிடையே எத்தகைய வேறுபாடும் இல்லை, அவ்வாறு வேறுபாடு கற்பிப்பவர் அறிவிலிகள் ஆவர்" என்று சிவபெருமான் அருளினார். அன்று முதல் கண்ணபிரான் திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோலத்தில் பக்தர்களுக்கு அருள்புரிகிறார். பங்குனித் திருவிழாவில் மூன்றாம் நாள் நள்ளிரவில் தியாகராஜர் பார்த்தசாரதிக்கு அருளிய செயலை "மூன்றாம் திருப்பூஷ்னி" என்னும் நிகழ்ச்சி மூலம் சிறப்பிக்கின்றனர்.

## சந்திரன் தோஷநாசப்படலம்

அத்திரி முனிவருக்கு மகனாகத் தோன்றிய சந்திரன் சிறு வயதிலிருந்தே அழகிய தோற்றத்தைப் பெற்றிருந்தான். உரிய பருவத்தை அடைந்ததும் அவனைக் கல்வி கற்பதற்காகத் தேவகுருவான பிரஹஸ்பதியிடம் அத்திரி முனிவர் அனுப்பினார். வியாழ பகவானும் சந்திரனைத் தன் மகன் போலவே பாவித்துக் கல்வி போதித்தார். இந்நிலையில் தேவேந்திரன், விருத்திராசுரனைக் கொன்றதால் பிரம்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பட்டான். இப்பாவத்திலிருந்து விடுபட அசுவமேத யாகம் செய்ய எண்ணிய இந்திரன், பிரஹஸ்பதியை அழைத்தான்.

பிரஹஸ்பதியும் சந்திரனைத் தன்மனைவி தாரையின் பாதுகாப்பில் வைத்துவிட்டுச் சில அறிவுரைகளையும் வழங்கினார். கணவன் இல்லாத வேளையில் கூந்தலுக்கு நறுமணச் சாந்து இடுவது, சிகையலங்காரம் செய்வது, உயர்ந்த ஆடைகள் அணிவது போன்றவற்றைச் செய்யக் கூடாது என்று பிரஹஸ்பதி கூறியிருந்தார். தாரை அவ்வறிவுரைகளைப் புறக்கணித்தாள். சந்திரனின் பேரெழிலில் ஈடுபட்டிருந்த தாரை, தான் கற்றவித்தைகளால் அவனை வசீகரப்படுத்தினாள். ஊழ்வினையின் பயனாகச் சந்திரனும் கூடா ஒழுக்கத்தில் ஈடுபட்டான்.

யாகம் முடிந்து ஆசிரமத்திற்குத் திரும்பிய தேவகுரு நிகழ்ந் தவற்றை அறிந்தார். நிரம்பக் கல்வி கற்றிருந்த போதிலும் தனது தீய நடத்தையால் தவறு இழைத்த சந்திரனுக்குக் காச நோய் தோன்று மாறு சாபமிட்டார். காச நோயினல் பீடிக்கப்பட்ட சந்திரன் நாளுக்கு நாள் மெலியத் தொடங்கினன். தனது தீய செயலுக்கு வெட்கித் தனது தந்தையையும், காண விரும்பாமல், யாது செய்வது என்பதை உணராமல் செல்லத் தொடங்கினன்.

தற்செயலாக வழியில் தென்பட்ட நாரதரை வணங்கிய சந்திரன், தனது நிலையை எடுத்துக் கூறினன். காமத்தின் தன் மையையும், அதன் வயப்பட்டு அல்லலுற்றவர்களின் வரலாறுகளை யும் நாரதர் அவனிடம் கூறினர்.

"காமமே பொய்யதனைச் சொற்றிடற்கு நிமித்தமெனக் கருதலாகும்
காமமே கொலையதனைப் புரிந்திடற்கு வாயிலெனக் கரைதலாகும்
காமமே களவதனையாடிடற்கு வாயிலெனக் கழறலாகும்
காமமே தீமையனைத்தினுக்குமொரு தாரகமாக் காணலாமே"

பிறர் நலம் காண்பதில் இன்பம் காணும் நாரதரிடம் இத்தீ தினுக்குரிய தீர்வைக் கூறுமாறு சந்திரன் வேண்டினன்.

"தெற்கே கீழைக் கடற்கரையோரத்திலுள்ள திருவான்மி யூரில் மகாதேவரின் முடியிலிருந்து தோன்றிய ஐந்து தீர்த்தங்கள் வளப்பம் பெற்றுள்ளன. இவற்றுள் காமநாசனி என்ற தீர்த்தத் தில் மூழ்கி எழுந்து, ஆகம முறைப்படித்திருநீறு உருத்திராக்கம் ஆகியவற்றைத் தரித்து ஈசனை மனதார வழிபட்டால் உனது பாபம் நெருப்பில் விழுந்த பஞ்சு போல் கரைந்து, விடும்" என நாரதர் சந்திரனுக்கு வழி காட்டினர்.

அவ்வாறே சந்திரனும் திருவான்மியூரை அடைந்து அங் குள்ள காமநாசனியில் நீராடி ஈசனைப் போற்றித் தொழுதான்.

"நறை மலர்க் கொன்றை வேய்ந்த நாதனே சரண நீலக்
கறையணி கண்டமுற்ற கடவுளே சரண நான்கு
மறையினும் தேடிக் காணு மகிபனே சரண நாயேன்
அறையுனிற் சரணந் தன்னிலண்டி னேனுளவேண்டும்"

"பத்தியா யடிய ரேத்தும் பண்பனே சரணம்! ஞானச்
சத்திய சத்தானந்த சங்கரா சரணம் மெங்கும்
நித்தியமாகி நின்ற நின்மலா சரண நின்பால்
இத்தினம் சரணம் சார்ந்தேன் எளியனையாள வேண்டும்"

சந்திரனின் மேல் கருணை கொண்ட சொக்கநாயகியோடுறை செம்மேனிச் சிவபெருமான், அவனுக்குக் காட்சியளித்துச்சாபவி மோசனம் அளித்தார். தனது மேனி பழைய நிலையடைய சந்திர னும் நன்றியுணர்வோடு அருகிலுள்ள சிவப்பதிகளையெல்லாம் தரிசித்த பின் அத்திரி முனிவர் இருக்குமிடத்தை அடைந்தான், பங்குனித் திருவிழாவின் நான்காம்நாளன்று நள்ளிரவில் நடை பெறும் நான்காம் பவனி உற்சவம் தியாகராஜப்பெருமான் சந்திர னுக்கு அருளிய சம்பவத்தை நினைவுறுத்துகிறது.

—|o|—

## சூரியன் பூசை புரிந்த படலம்

நாள்தோறும் தனது கதிர்களால் உலகிற்கு ஒளியையும், வெப்பத்தையும் கதிரவன் அளித்து வந்தான். உதயகிரியிலிருந்து கிழக்கே உதயமாகும்போது, மந்தேகம் எனும் தீவிலுள்ள எண் ணற்ற அரக்கர்கள், அவனுக்கு இடையூறு விளைவித்து வந்தனர். அரக்கர்களின் எதிர்ப்பால் தனது தொழிலைச் சரிவரச் செய்ய முடியாமல் ஆதவன் அல்லலுற்றான். மனம் வருந்திய கதிரவனைக் கடற்கரையோரத்திலுள்ள திருவான்மியூர் மருந்தீசரை வழிபடு மாறு ஒரு அசரீரி கட்டளையிட்டது. நாள் முழுவதும் உலகிற்கு ஒளி வழங்க வேண்டிய தன்னால் அத்தொழிலை விடுத்துத் திருவான் மியூர் செல்ல இயலாது என ஆதவன் வருந்தினான். அங்கு தோன்றிய நாரதரும்,"ஆதவா! வருத்தத்தை விடு. உன் பொருட்டு வழிபாடு செய்ய உன் தம்பி அசனியைத் திருவான்மியூருக்கு அனுப்பு" என்று அருளினார். அவ்வாறே கதிரவனும் தன் தம்பி அசனியை (இடி) அழைத்து, "கிழக்குக் கடற்கரையில் அமைந் துள்ள திருவான்மியூர் சென்று அங்குள்ள சுயம்பு மூர்த்தியான மருந்தீசரைப்பூமாலை சாத்தி வழிபட்டுச்சங்கங்களால் அபிஷேகம் செய்வாய். என் பெயரால் தீர்த்தமொன்றையும் உருவாக்கு," என மொழிந்தான். அவ்வாறே இடியும் தன் தமையன் பெயரால் சூரிய தீர்த்தத்தை உண்டாக்கி வழி பட்டான். அன்று முதல் அரக்கர் களின் வலிமை குன்ற, சூரியனும் தனது கடமைகளைத் தடை யின்றிச் செய்யலானான்.

ஓர் இரவில் திருவான்மியூர் சென்று மருந்தீசரைப் பூசிக்க ஆதவன் விரும்பினான். இவ்வகையில் மாலையில் மறையும் கதி

ரவன் இடரின்றி வழிபடுவதற்காக மருந்தீசர் மேற்கு நோக்கித் திரும்பியருளினார். இன்றும் அவரது சந்நிதி மேற்கு நோக்கியே அமைந்துள்ளது. கதிரவன் பெயரால் அமைக்கப் பெற்ற சூரிய தீர்த்தம் புனிதம் பெற்றதால் அதன் நீரால் இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. எண்ணற்ற அசுரர்களை ஒடுக்கும் ஆற்றல் பெற்ற அத் தீர்த்தத்தில் ஒரு முறை முழுகியவர்கள் சொர்க்கத்தில் ஒரு யுகம் வசிக்கும் பேறு பெறுவர், அவர்களுடைய விருப்பங்கள் நிறைவேறும், அத்தகையோரைத் தேவரும் கொண்டாடுவர். இதன் கரையில் தானம், மந்திரம், பிதுர்க்கடன், தர்ப்பணம், விரதம் ஆகியவற்றைச் செய்தால் பன்மடங்கு பலன் கிடைக்கும். இதன் நீர்த்திவலைகள் படுவதால் இதனருகே வளர்ந்துள்ள மரங்களுக்கே நற்கதி கிடைக்கும். நாள் தோறும் அதில் நீராடி வழி படுபவர் சுடர் வடிவாகி நிலைபெறுவர்.

"இத்தடத்துக் கூலமதி லிருந்தோங்குந் தருக்களின்
முத்தொளிர் நீர்படுதலினுன் மோக்கத்தை யுற்றிடுமேல்
நித்தமுமங்கதின் மூழ்கி நிலைவான் மியூருறைவார்
சுத்த நலமாட்சிய ராச்சோதி சொரூபரே ஆவர்"

ஆதவன் இரவு நேரத்தில் மருந்தீசரை வழிபடுவதால் சுவாமி மேற்கு நோக்கிக் கோலம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பங்குனித்திருவிழாவின் போது மூன்றாம் நாள் காலையில் அருள்மிகு சந்திரசேகரர் பவழக்கால்விமானத்தில் ஆரோகணித்துச் சூரியனுக்கு அருள்புரியும் காட்சி நடைபெறும்.

## இந்திரன் சாபம் தீர்த்த படலம்

நான்முகனை வேண்டிக் கடுந்தவம் புரிந்து அரிய சக்தி பெற்ற அகிதவுட்டிரன் எனும் அரக்கன் மண்ணுலகையும், விண்ணுலகையும் வென்றான், தேவேந்திரன் போரில் தோல்வியுற்றுக் கானகத்தில் ஓடி ஒளிந்தான். தங்கள் தலைவன் சென்ற இடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் தேவர்கள் பூவுலகில் நீதி நெறி வழுவாமல் ஆட்சி புரிந்து கொண்டிருந்த முசுகுந்தச் சக்கரவர்த்திகளிடம் தங்களுக்குத் தலைமை ஏற்குமாறு வேண்டி

னர். தவவலி மிக்க முசுகுந்தனும் அகிதவுட்டிரனைப் போரில் வென்று, தேவலோகத்தை அரக்கர்களிடமிருந்து விடுவித்தான், தேவர்களின் விருப்பத்தின்படி அம்மன்னனே தேவலோகத்தை ஆண்டு வந்தான். அகிதவுட்டிரனால் விரட்டப்பட்ட இந்திரன் இமயமலைச் சாரலுக்குச் சென்று, அங்கு தவமியற்றிக் கொண்டிருந்த பிருகு முனிவரிடம் தஞ்சம் அடைந்தான். முனிவரும் இந்திரனுக்குத் தனது குடிலில் இடமளித்து ஆதரவு காட்டினார். விதி வசத்தால் பிருகு முனிவரின் புத்திரியின் அழகில் மயங்கிய இந்திரன், அவளிடம் தகாத முறையில் நடந்து கொண்டான். இதனால் கடும் கோபமடைந்த பிருகு முனிவர், "பேயா! அறநெறிகளை அறியாத அரக்கர்கள் மங்கையரை வற்புறுத்திக் காதலிப்பர். அத்தகைய செயலைப் புரிந்த நீயும் அரக்கனாகக் கடவாய்" என்று சபித்தார். இந்திரனும், "கற்பக விருட்சத்தின் நிழலில், தேவர் அதிபதியாக வாழ்ந்த நான் தீ வினை வசப்பட்டு அடைக்கலம் அளித்த முனிவருக்கே துரோகம் இழைத்தேன். வானோர் நகைக்க இந்நிலையை அடைந்தேன். எனக்கு விடிவு காலம் என்று பிறக்குமோ?" என வருந்தியவனாய் அங்கும், இங்கும் அலைந்து திரிந்தான்.

கணவனின் பிரிவால் பெரிதும் துன்புற்ற சசிதேவி நான்முகனிடம் முறையிட்டாள். அல்லலுறும் அப்பாவையின் துயரம் வெகு விரைவில் இன்பமாக மாறும் என பிரமதேவன் உறுதியளித்தார் பின்னர் திரிலோக சஞ்சாரியான நாரதரை அழைத்து சாபத்தால் பீடிக்கப்பட்டு கானகங்களில் திரியும் இந்திரனுக்குச்சாப விமோசனம் அளிக்குமாறு கட்டளையிட்டார். நாரதரும் பல இடங்களில் தேடிய பின் இந்திரனைக்கண்டார். அரக்க உருவிலிருந்த இந்திரன் நாரதரைத் தாக்கும் எண்ணத்துடன் அவர் மீது பாய்ந்தான். தன் கையிலிருந்த கமண்டல நீரைத் தெளித்து நாரதர் அவனை அடக்கினார். இந்திரனை அழைத்துக்கொண்டு திருவான்மியூரை நோக்கி நாரதர் பயணமானார். திருவான்மியூரின் எல்லையை மிதிக்க அஞ்சிப் பின் வாங்கிய இந்திரனை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று ஜென்ம நாசனியில் மூழ்க வைத்தார்.

ஜென்ம நாசனியிலுள்ள நீர் பட்டதும் இந்திரனின் அரக்க உருவம் மாறி, முன்பை விட மிகவும் பொலிவாகத்தோன்றினன் ஆயினும் அவனுக்குத் தன் நினைவே இல்லை. நாரதர் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தவுடன் தன் நிலையை உணர்ந்த தேவேந்திரனும் அவருக்குத் தனது நன்றியைத் தெரிவித்தான். உலகம் உய்யும் பொருட்டு வன்னிமரத்தின் அடியில் மானும், மழுவும் கைகளிலேந்தி, உமையம்மையுடன் அவிர்பவித்துள்ள ஈசரைப் போற்றித் துதித்தான்.

"சுந்தர முகங்களைந்து தூயவன் புயங்களெட்டு
சுந்தமர் செவியிரண்டு நண்ணிய விழிகள் மூன்றுஞ்
சந்திரன் தவழுங்கங்கைச் சடைமுடி அழகுங்காட்டி
அந்தியின் மேனியோடும் அமர்ந்திடும் அமலபோற்றி"

"ஆதியே போற்றி! முக்கண்அமலனே போற்றி! ஞானச்
சோதியே போற்றி! நித்த சுத்தனே போற்றி! வேத
நீதியே! போற்றி! செல்வ நிமலனே போற்றி! மங்கைப்
பாதியே போற்றி! என்றன் பரமனே போற்றி போற்றி!

பின்னர் தேவலோகம் சென்று, முசுகுந்தனை வணங்கித் தனது அரசைத் திரும்பப் பெற்றுக் கொண்டான் இந்திரன் சாப விமோசனம் அடைந்த சம்பவம் பங்குனித் திருவிழாவின் ஆறாம் நாள் நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படுகிறது.

—o—

## பிரமன் திருவிழாச் செய் படலம்

ஒரு கற்பம் என்பது நான்முகன் மேற்கொள்ளும் படைப்பின் தொடக்கம் முதல் அந்தப் படைப்பு இறுதியடையும் காலம் ஆகும். இவ்வாறு ஒரு கற்பம் முடிந்து மறு கற்பம் தொடங்கும் காலத்தில் திருப்பாற்கடலில் உறையும் திருமாலின் திருநாபிக் கமலத்தி லிருந்து பிரமன் தோன்றுவார். ஒரு கற்பம் முடிவுறும் காலம் நெருங்கியதும், மறு கற்பத்தில் தாம் மேற்கொள்ளும் படைப்புத் தொழில் சிறப்பாக நடைபெறத் தான் செய்ய வேண்டியது என்ன என்பதை பிரமன் திருமாலிடம் வினவினார். சகல உயிரினங் களுக்கும் தந்தையாகவும், தாயாகவும் உள்ள சிவபெருமானை வழிபடுமாறு திருமால் அறிவுரை வழங்கினார். மலரவனும் திரு மாலிடம், "சிவபெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் எண்ணற்ற அளவில் உள்ளன. அவற்றுள் எங்கு வழிபட்டால் விரைவில் அருள் பிறக்கும்?" என வேண்டினார். "முன்னொரு காலத்தில் வேதங்கள் பூசித்து அருள் பெற்ற திருக்கழுக்குன்றத்துக்கும்

அம்மன் மயில் வடிவில் ஈசனை வழிபட்டு அருள் பெற்ற மயிலாப் பூருக்கும் இடையே, பாலாற்றின் வடக்கே, கடற்கரையோரம் அமைந்துள்ள திருவான்மியூர் என்ற பதி உள்ளது. அதன் பெயரைக் கேட்டவுடனேயே நன்மை உண்டாகும்.

"சிவபுர மண்ணிற் போந்து திருத்தலம் ஆயிற்றென்கோ?
நவமிகு கயிலைக்குன்ற நன்னில மாய தென்கோ?
அவனியில் அதன்பே ரேனும் அஞ்செவி கேட்கி லாரே
தவமுடைத் தேவ ரேனும் சவமெனச் சாற்ற லாமே"

என்று திருமால் மறு மொழி பகன்றார்.

திருவான்மியூரை அடைந்த நான்முகன் நிலத்தின் மீது உடல் முழுவதும் பட வணங்கி, அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி னார். உடலெங்கும் திருநீறு பூசி, உருத்திராக்கம் பூண்டு, பல காலம் கடுந்தவம் இயற்றினார். இதனால் மகிழ்ந்த சிவபிரான், பார்வதி சமேதராய், விடையேறி, தேவர், இருடிகள், பூதகணங்கள் சூழக் காட்சியளித்து "நீ விரும்பும் வரம் யாது" என்று கேட்டார் பிரமனும் "காணற்கு அரிய இக்காட்சியை நான் காண அருளினீர், இதைவிட வேறு பெருமை உண்டோ? நினது கழல்களையே போற் றும் நான் படைப்புத் தொழிலைச் செவ்வனே புரிய அருள்புரியுங் கள்,"என இறைஞ்சினார். பிரமதேவனுக்கு அவ்வாறே அருளியமுக் கண் முதல்வரும், "நான்முகனே! உன் பெயரால் இத்தலத்தில் ஒரு தீர்த்தத்தை உண்டுபண்ணி, நீரால் இங்கு எழுந்தருளியுள்ள சுயம்புலிங்கத்திற்கு அபிஷேகம் செய்க! ஆகமமுறைப்படி இங்கு நல்விழா ஒன்றும் நடக்க ஏற்பாடு செய்க!" என மொழிந்தார்.

நான்முகனும் பிரமதீர்த்தம் என்று ஒரு தடாகத்தை உண் டாக்கி, அதன் நீரால் ஈசருக்கு அபிஷேகம் செய்தார். பொன்னா லான நகைகளாலும், வாசனைப் பொருட்களாலும் மூர்த்தியை அலங்கரித்து, வில்வம், பலவித மலர்கள் ஆகியவற்றால் அபிஷே கம் செய்வித்தார். மருந்தீசருக்கு ஒரு அற்புத ஆலயமும், அதைச் சுற்றி மாடவீதிகளும், சிறந்த பண்புகளைப் பெற்ற சான்றோர்களின் குடியிருப்பும் உண்டாக்கினார். காமிக ஆகம முறைப்படி வழி பாடுகள் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்றன அதன் பின் மருந்தீசருக்குக்கோலாகலமாகத்திருவிழா நடைபெறுவதற்கு வான வர்களின் உதவி நாடப்பெற்றது. வாழை, கமுகு தோரணங்கள், பூப்பந்தல்கள் ஆகியவற்றால் எங்கும் அலங்கரிக்கப்பட்டன. மருந் தீசருக்குப் பட்டாடைகள், ஆபரணங்கள் ஆகியவை பூணப் பட்டன.

பங்குனி மாதத்தில், பௌர்ணமியன்று கொடியேற்றம் நடைபெற்றது. முதல் பத்து நாட்களுக்குக் காலையில் பஞ்ச மூர்த்திகள் பல்வேறு இசைக் கருவிகளுடன் வீதி உலாப்போந்து ஆலயத்தில் எழுந்தருளினர். இரவில் வேதங்கள், திருமுறைகள், பஜனைகள் முதலியவற்றுடன் மூர்த்திகள் உரிய வாகனங்களில் வீதிவலம் சென்றனர். குங்கிலியப் புகை, அடியார்களின் மகிழ்ச்சிக் குரல், இசைக் கருவிகளின் ஒலி இவை ஒன்ரூடொன்று கலந்தன. வெண்குடை நிழலில் உற்சவர் செல்லச் சுற்றிலும், ஆலவட்டம், மயிர்க்கவரி, சாந்தாற்றி, கொடிகள் முதலியன சுழன்றன. பலவிதமான தீவட்டிகள் ஒளியூட்டின. பேரிகை, யாழ், முரசு, குடமுழவு, கைப்படகம், எக்காளம், சங்கம், தண்ணுனம் தாளம் முதலியன முழங்கின. பூரண கும்பங்கள் வீதிகளில் வைக்கப்பட்டன. அந்தணர் கற்பூரத்தை ஏற்றிப் பூஜைகள் நடத்தினர்.

"மறைமுடிவின் விளையாடு நம்பெருமான்
இவண் வந்தான்! மழுமுன் னேந்திக்
கறைவிடமும் அமுதாக வுண்டபரன்
இவண் வந்தான்! கயிலை நீங்கித்
துறைகெழுநன் வான்மியூர் மருந்தீசன்
இவண் வந்தான்! சோதி ஞான
இறையவன் வந்தான்! வந்தானெச்
சின்னமெம்மருங்கும் எடுத்தங் கார்த்தார்"

ஆடம்பரங்களுடன் ஈசர் தேர்வீதிகளில் வலம் வந்து கோபுர வாயிலை அடைந்தார். ஆதிசைவர்கள் நிவேதனத்துடன் தீபாராதனை காட்டினர். எழில் மிக்க அரம்பையர் தாளத்திற்கு ஏற்ப நடனமாடி ஆலத்தி எடுத்து, சுப சோபனங்கள் கூறினர். இறைவன்மீது மிக்க பக்திகொண்டிருந்த அடியார்கள் சிவபிரானைப் போற்றித் துதித்தனர், "பச்சிலை ஒன்றில் பல நிதியம் தந்தருளும் பரமன் வந்தான்! பச்சை வண்ண மாலுக்கும், மலரவனுக்கும் செயல் வகுத்தருளும் பண்பன் வந்தான்! இச்சை வளர் சிவனடியார் எஞ்ஞான்றும் ஏத்திட இங்கு எளியன் வந்தான்! இச்சை மிகு சொக்கநாயகி கணவன் இலங்க எதிர் வந்தான்! ஐயனே! எளியவர்களுக்கு உனது பெருங்கருணையைச் சுரந்திடுக! களியுறு நற்செல்வம் பெற நல்லருள் புரிக! இறைவன் உலா வரும் இந்த நல்ல நேரத்தில் அம் மூர்த்தியைத் தரிசனம் செய்ய வாருங்கள்" என வேறு சிலர் அழைப்பு விடுத்தனர். இவ்வாறு அனேருவம்

இத்திருவிழாவைக் கண்டு களிக்கையில், நந்தியெம் பெருமான் முன் செல்ல, ஈசன் ஆலயத்தினுள் சென்று, தனது சிங்காதனத்திலிருந்து இறங்கி, அங்குள்ள சிங்காதனத்தில் அமர்ந்தார். ஆதி சைவர்கள் "எந்தையே! சிவ! சிவா! சிவசங்கர! மகாதேவ!" எனத் துதித்தனர்.

இங்ஙனம் பத்து நாட்களிலும் பலவகை வாகனம், விமானம், தேர் முதலியவற்றின் மேல் விழாக் கொண்டாடியபின் கொடி இறக்கப்பட்டது. விழா நடத்த உதவியவர்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. பின்னர் தெப்ப விழாவும் கொண்டாடப்பட்டது

இவ்வாறு நான்முகன் ஆண்டு விழாவை ஆரம்பித்ததுடன், மாத விழாக்களுக்கும் வழி வகுத்தார். ஒரு நாள் அவர் முன் சிவ பெருமான் தோன்றிச் சிறப்பாக விழா எடுத்துத்தம்மை வழிபட்ட நான்முகன் கோரும் வரத்தை அளிப்பதாகக் கூறினர். பிரமனும் சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, "கருணையின் வடிவான பெருமானே! நாட்டமுடன் இத்தலத்தை நாடி வந்து அங்கு விழாவை நடத்தும் அடியார்கள் மேன்மையுற்று உன் திருவடிகளை அடைய வேண்டும். அவ்விழா பொலிவுடன் நடைபெற உதவிய பெருமக்கள், அதில் பங்கேற்றுச் சிறப்பித்தவர்கள் ஆகியோர் முக்தி பெற வேண்டும்," இறைஞ்சினன். அவ்வாறே அருளிய பின் மகாதேவர் உமையம்மையுடன் மறைந்தார். நான்முகனும் சத்தியலோகம் சென்று படைப்புத் தொழிலைத் தொடர்ந்தார்.

பங்குனித்திருவிழாவின் ஏழாம் நாளன்று காலையில் அருள்மிகு சந்திரசேகரர் நான்முகனுக்கு அருளிய நிகழ்ச்சி வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

-0-

## வேதங்கள் பூசை புரி படலம்

அரியதவங்கள் பல புரிந்து, தான் பெற்ற வரங்களால் செருக்குற்ற சோமுகன் எனும் அவுணன் விண்ணுலகை வென்றான். அடுத்து சத்தியலோகம் சென்ற அரக்கன் நான்கு வேதங்களையும் கைப்பற்றி, அவற்றை ஆழ்கடலுக்குள் சேற்றில் புதைத்து வைத்தான். அரக்கன் பெற்றிருந்த வரரங்களின் வலிமையால்

எதிர்க்கச்சக்தியற்ற நான்முகன் திருமாலிடம் முறையிட்டார் இதனால் வெகுண்ட திருமால் மிகப் பெரிய மச்ச உருவெடுத்து சோமுகாசுரனை அழித்து வேதங்களை மீட்டார். பின் நற்றவம் நன்காற்றித் தன் பழைய உருவை அடைந்த திருமால் வைகுந்தம் ஏகினர்.

அரக்கன் கைப்பட்டதாலும், சேற்றில் புதைக்கப்பட்டிருந் ததாலும் தாம் தூய்மையை இழந்து விட்டதாக வருந்திய வேதங் கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள விரும்பின. தங்களைத் தூய்மைப்படுத்த ஏற்ற வழியை வேதங்கள் பிரமதேவனிடம் கேட் டன. நான்முகனும், "வேதங்களே! பூவுலகில் சிவபிரான் மருந் தீசன் என்ற திருநாமத்துடன் அருளாட்சி நடத்தும் திருவான்மியூர் என்ற பதிக்குச் சென்று வழி பட்டால் உங்களுடைய குறை நீங் கும்," என்று செப்பினர். அச் சொற்களைச் செவி மடுத்த வேதங் களும் நான்முகனுக்கு நன்றி தெரிவித்த பின், மானிட உருவம் தாங்கிப் பூவுலகில் எண்ணற்ற தலங்களில் வழிபட்டும், புனிதப் புனல்களில் நீராடியும் இன்புற்றுத் திருவான்மியூரை அடைந்தன

திருவான்மியூர் முழுதும் சிவமணம் வீசியது. அங்குள்ள அடியார்கள் தியானம், தவம், பூசை, ஜெபம், யாகம் முதலியவற் றில் இடைவிடாது ஈடுபட்டிருந்தனர்.

"சிந்தையில் தியானம் கூடிச் செறிதவம் உஞற்று வோர்கள்
பந்தியிலிருந்து தெய்வப்பர சிவபூசை செய்வோர்
அந்தியும் பகலு மாக அருஞ் செபம் ஆற்றுவோர்கள்
விந்தைநல்லியாகஞ் செய்வோர் மேவிடும் தவத்தர் நேர"

அப்பதிக்குச்சற்று தூரத்தில் சோலைகள் சூழ்ந்த ஒரு இடத்தையே இருப்பிடமாகக் கொண்டு நெடுந்தவம் செய்து ஈசனைப் போற்றி வேதங்கள் வழி பட்டன. "நீலகண்டனே ! சங்கரா ! சாம்பசிவா ! பொங்கு அரவமணிந்தாய்! புண்ணிய மேலாந்தருமமே! செய்யனே போற்றி ! சுத்த சிவனே போற்றி ! ஞான மெய்யனே போற்றி ! விண்ணோர் விமலனே போற்றி! சூலம் கையனே போற்றி! வானக் கங்கையாய் போற்றி!"

"எந்தையே போற்றி தேவ ரிறைவனே போற்றி மூவர்
தந்தையே போற்றி, மேலாந் தருமமே போற்றி யார்க்கு
முந்தையோய் போற்றி, சோதி முக்கணு போற்றி ஓங்கும்
அந்தழல் உருவா! போற்றி, அரகர போற்றி, போற்றி!"

தன்னை உள்ளன்போடு வழிபட்ட வேதங்களுக்குச் சிவ பெருமான் காட்சி கொடுத்து அவை விரும்பும் வரங்களை அளிப்பதாகக் கூறினர். வேதங்களும் "அத்தனே! சோமுகாசுரனல் தூக்கிச் செல்லப்பட்டதாலும், சேற்றில் அழுந்தியதாலும் நாங்கள் தூய்மையை இழந்தோம். எங்களைச் சூழ்ந்துள்ள இப்பாவத்தைப் போக்க வேண்டும். நாங்கள் பூசித்த இவ்வூர் வேதபுரி என்று வழங்கப்பட வேண்டும். அவ்வாறே நாங்கள் தங்கிய இடம் வேதச் சிரேணி என்ற பெயர் பெற வேண்டும்", என வேண்டிக் கொண்டன. ஈசனும் அவ்வரங்களைத் தந்து அருளினர். வேதங்களும் மன மகிழ்ச்சியுடன் சத்திய லோகம் சென்றன.

பங்குனிவிழாவின் எட்டாம்நாள் காலையில் அருள்மிகு சந்திரசேகரர் நான்கு மறைகளுக்கும் அருளிய சம்பவம் நினைவு கோரப்படுகிறது.

—◦—

# காமதேனு அருள்பெறு படலம்

காசி நகரில் அருளாட்சி புரியும் விசுவநாதரை ஒரு மண்டலம் பூஜை செய்து வழிபட வசிஷ்ட முனிவர் விருப்பம் கொண்டார். அமராவதி நகர் சென்ற வசிஷ்டர் இந்திரனிடம் தாம் காசியில் செய்யும் பூஜைக்குப்பால் தேவைப்படுவதால் தெய்வீகப் பசுவான காமதேனுவைச் சிறிது காலம் தமக்கு அளிக்குமாறு கேட்டுப் பெற்ருர். காமதேனுவின் பாலைக் கொண்டு அபிஷேகம் செய்து பூசித்து வருகையில், ஒரு நாள் அப்பசு கயிலைமலைச் சாரல் அருகே சென்றது. அங்குள்ள அழகிய காட்சிகள் மனதைக் கவர்ந்ததால் காமதேனு ஒரு நாள் அங்கே தங்கிவிட்டு, மறு நாள் காசி நகருக்குத்திரும்பியது. பாலில்லாமையால் அன்றைய பூஜையைச் சரிவர முடிக்க இயலாததால் கோபமுற்ற வசிஷ்டர் காமதேனுவைக் காட்டுப்பசுவாகுமாறு சபித்தார்.

சாபம் பெற்ற வருத்தத்துடன் வசிஷ்டரின் ஆசிரமத்தை விட்டு நீங்கிய காமதேனு, பல இடங்களில் அலைந்து திரிந்தது. இறுதியில் தென்னுட்டிலுள்ள திருவான்மியூரை அப்பசு அடைந்தவுடன் தன் பழைய நிலை பற்றிய நினைவு தோன்றியது. மேலும்

அதற்கு நல்லெண்ணமும், தெளிந்த அறிவும் ஏற்பட்டன. இவ்விடத்தில் ஏதோ ஒரு சிறப்பான அம்சம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், அங்குள்ள அனைத்துப் பகுதிகளையும் ஆராய்ந்த அப்பசுவின் கண்களில் ஒரு சிவலிங்கம் தென்பட்டது. மிக்க பரிவுடன் காமதேனு அந்த லிங்கத்திற்குப் பாலால் அபிஷேகம் செய்து வழிபட்டது.

திருவான்மியூருக்குச் சற்றுத் தொலைவிலுள்ள சைதை எனும் பகுதியைச்சதயூ எனும் மன்னன் ஆண்டு வந்தான் வன விலங்குகளால்பயிர்களுக்கு ஏற்படும் நாசத்தைக்கேள்வியுற்றஅம்மன்னன், வேட்டையாடப் புறப்பட்டான். வேட்டையின் போது தனது அம்புக்குத் தப்பிய வேங்கை ஒன்றைச் சதயூ துரத்த நேர்ந்தது. அசுர வேகத்தில் வந்த அந்த வேங்கையைக் காட்டுப் பசுவாகத் திரிந்து கொண்டிருந்த காமதேனு தன் கொம்புகளால் குத்திக் கொன்றது. இச்செய்தியை அறிந்து ஆச்சரியப்பட்ட மன்னனும் அப்பசுவைப் பிடித்து வருமாறு தன் வீரர்களை அனுப்பினான். தன்னைப் பிடிக்க வந்த அரசனின் வீரர்களை அப்பசு தன் கொம்புகளால் தாக்கி நமனுலகுக்கு அனுப்பியது. அவ்வாறு வீரர்களுடன் போராடுகையில் தற்செயலாக அப்பசுவின் குளம்பு அது பூசித்து வந்த லிங்கத்தின் மீது ஆழமாக அழுந்தி காயத்தை உண்டுபண்ணியது. தன்னையறியாமல் பட்ட போதிலும், பெருத்த தவறு செய்து விட்டதாக அப்பசு வருந்தியது. "ஐயோ! மாபெரும் பாவம் செய்திட்டேனே. கருணையின் வடிவமான மேனியன்றோ! இத்திருமேனி வண்ணப்பொலிவு மிக்கதாயிற்றே! ஞானப்பிழம்பான இந்த லிங்கத்திற்கு ஊறு செய்திட்டேனே! அருவுருவாகி அருள் பாலிக்கும் மேனிக்குத் தீங்கு விளைவித்தேன்! நின் அடியை இப்பாவி இனி தீண்டப் பெறுவேனோ! நின் அருள் எனக்குக் கிட்டுமோ?" என முறையிட்டது.

அப்போது சிவபெருமானின் அருளால் ஒரு அசரீரி உண்டாயிற்று, "அன்பே! துன்புற்று அஞ்சற்க! நீ அறிந்து செய்யாத குற்றத்தை நான் பொருட்படுத்தவில்லை. உன் குளம்படி கடம்ப மாலையணிந்த கந்தனின் பொன்னடி போலிருந்தது. முன்பு காஞ்சியில் காமாட்சி வழிபட்ட காலையில்அவளது கைவளைத் தழும்பை நான் ஏற்றது போலவே, இதனையும் நான் தாங்குகிறேன். நாள்தோறும் உன் மடியில் சொரியும் தூய பாலினால் எமக்கு அபிஷேகம் செய்தாய். அதனால் யாம் வெண்மை நிறம் பெற்றுப்பால் வண்ணரானோம். அப்பெயரே இந்த லிங்கத்திற்கு நிலைபெறும். உனக்குச்சாபவிமோசனமும்அளித்தோம். தேவர்களும் மூவர்களும் போற்ற, நீ வானுலகம் செல்வாய்," என அவ்வாக்கு உரைத்தது.

நின் சுரைப்பாலினுல் நித்தமும் ஆட்டினே
அன்னதொர் தன்மையின் அருட் சிவலிங்கம் அது
உன்னரும் வெண்மையின் ஒண்ணிற மேவினம்
பன்னுவர் யாவரும் பால் வண்ண் என்னவே"

இங்ஙனம் காமதேனு அருள் பெற்ற செய்தியை அறிந்த சதயூ மன்னன் திருவான்மியூர் மீது அளவற்ற பற்று கொண்டான். சதயூ தனது முடியைத்துறந்து, தனதுமைந்தனுக்குப்பட்டாபிஷேகம், செய்து வைத்தான். தன் மகனுக்குப் பக்கபலமாக இருக்குமாறு மந்திரிகளிடம் கூறியபின், அம்மன்னன் திருவான்மியூரை அடைந்து, இறை வழிபாட்டிலேயே தனது காலத்தைச் செலவிடலானுன். நான்முகன் முன்பு அமைத்த ஆலயமும், மாட வீதிகளும் பாழடைந்திருந்தன. சதயூவின் முயற்சியால் தூறுகள் அகற்றப்பட்டன. பாழடைந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டது. மண்டபங்களும், கோபுரங்களும் பொலிவுடன் விளங்கின; மாடவீதிகளும், சைவர்கள் குடியிருப்புக்களும் செப்பனிடப்பட்டன மருந்தீசர் மீது தீவிர பக்தி கொண்டிருந்த பக்தர்கள் குடியமர்த்தப் பட்டனர்; இறைவனின் அலங்காரத்திற்குப் பட்டாடைகளும், விலையுயர்ந்த அணிகலன்களும் அளிக்கப்பட்டன நித்திய பூஜைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள் ஆகியன செவ்வனே நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. சதயூ நாள்தோறும் ஈசனே ஆகம முறைப்படி வழிபட்டான். சிவனடியார்களுக்கும் தன்னுல் இயன்ற அளவு பணிவிடை செய்தான். முடிவில் மோட்சதாயினியில் மூழ்கிக்கயிலாய உலகிற்குச் சென்றுன்.

பங்குனிப் பெருவிழாவின் இரண்டாம் நாள் காலையில் அருள்மிகு சந்திரசேகரர் காமதேனுவுக்கு அருளிய நிகழ்ச்சி சிறப்பிக்கப்படுகிறது.

-0-

## யமன் பழிதீர் படலம்

வேத, ஆகமங்களே நன்கு கற்று, அவை கூறும் நெறிமுறைகளில் பிறழாத மிருகண்டு எனும் தவசி காசியில் வாழ்ந்து வந்தார்.

சிவபிரானின் அருளால் பதினாறு வயதுவரை மட்டும் உயிருடன் வாழக்கூடிய மார்க்கண்டேயர் எனும் மைந்தன் அவருக்குப் பிறந்தான். தனது குறுகிய ஆயுள் குறித்துவருந்திய பெற்றோரிடம்"தமது கரங்களைக் குவித்து வணங்குவோருக்குச் சுகங்களை அளிப்பவன் என்ற காரணத்தால் சிவபெருமானுக்குச் சங்கரன் என்ற பெயருண்டு. அத்தகைய பெருமானின் அடியார்கள் நமனைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. பச்சிலையும், நீரும் ஏந்திப் பரமன் திருவடி மீது ஒரு நாள் இடுவோர் மூவுலகையும் ஆளும் திறன் பெறுவர். மனம் ஒன்றுபட்டு ஈசனை வழிபடுவோர் எதற்கும் வருந்தத் தேவையில்லை" என்று ஆறுதல் மொழிகளைச் செப்பினர் மார்க்கண்டேயர். பின்னர் திருக்கடவூர் சென்று, கற்பனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட இறைவனை மலர்களால் வழிபட்டுத் தொழுதார், சிவ வழிபாட்டில் திளைத்திருந்த மார்க்கண்டேயரை அணுகிய இயமன் "உனக்கு ஆயுள் பதினாறு வயது மட்டுமே; சிவபூஜையை உடனே முடித்து விட்டு என் பின்னே வருவாய்." என்று வற்புறுத்தினான். "எந்தையின் திருவடியில் யான் இயற்றும் சிவபூஜையை விடுத்து வேறொன்றிலும் கவனம் செலுத்தேன்", என மார்க்கண்டேயர் பதிலளித்தார். "பாலனுகையால் பயமறியாது பதிலளித்தனை போலும்! உன் காலம் இன்றுடன் முடிவுற்றது. ஆலமுண்ட அரன்பால் செய்யும் பூஜை மறு பிறவியில் பயனளிக்குமே அன்றி இப்பிறவிக்கு நன்மை செய்யாது," என்று யமன் செப்பினான். சிவ பூஜையில் மூழ்கியிருந்த மார்க்கண்டேயர் மீது யமன் கால பாசத்தை வீசவே, முனிகுமாரரும் அபயக்குரல் கொடுத்தார் தேவதேவா! எநதையே! சிவசங்கரா! என்னை அருள்க"
"ஆலமணி மிடற்றில் வைத்து அமரரைக் காத்த ஐயா ஓலம் உபமன்னியுவினுக்குப் பாற்கடல் அளித்த குழகனே ஓலம் கங்கையை சடைநுதியில் வைத்தாய் ஓலம் சீதரனுக்குச் சங்காழி ஈந்த பெருமானே ஓலம்"

"ஆலமணி மிடற்றிடையிலமர்த்தி வானவர்ப்புரந்த வையலோலங்

கோலவுபமனியனமிழ் தப்பரவையுணச் செய்த குழகலோலங்

தாலமழியாவகை விண்கங்கை யொருசடை நுதியில்தரித்தாய்ஓலம்

சீலசிதரற்கன்று சங்காழியீந்த பெருந்திறலாயோலம்

"பிறை முடியாய் நினக்கு அபயம் பிஞ்ஞகனே நினக்கு அபயம்
பிறங்குகோடி

மறைமுதலே நினக்கு அபயம் மழுவுடையாய் நினக்கு அபயம்
வயங்குவேணிப்

பொறைமுடியாய் நினக்கபயம் புண்ணியனே நினக்கு அபயம்
புலவர் போற்றும்

கறைதபுநற் கடவூரிற் கண்ணுதனின் கழலடிக்கே அபயம் என்முன்

மார்க்கண்டேயர் அணைத்திருந்த சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்ட சிவபெருமான் இயமனைத் தனது காலால் உதைக்க, அவனும் கனகமலை போல் விழுந்தான். இறப்பு இன்றிச்சிரஞ்சீவி யாக வாழுமாறு மார்க்கண்டேயருக்கு ஈசர் வரமளித்தார். வான வர் வேண்டுகோளின்படி இயமனுக்கும் புனர் வாழ்வு அளித்த எம்பிரான், அவனைச் செருக்கின்றித் தனது பணிகளைப் புரியுமாறு கட்டளையிட்டார். ஆணவத்தின் வயப்பட்டுச் சிவனுக்கு அபவாதம் ஏற்படுத்தியதற்காகக் கழுவாய் தேடியலைந்த யமன் நாரதரைச் சந்தித்தான். "காலனே! தீராத பாவங்களையும் போக்கவல்ல வேத புரி எனப்படும் திருவான்மியூர் எனும் தலம் தெற்கேயுள்ளது. அண்டர்களும் அறிந்து சொலற்கரிய அத்தலத்தில் எழுந்தருளி யுள்ள பால்வண்ண நாதரை வழிபட்டால் உன் பாவங்கள் நீங்கி, நீ பரிசுத்தம் அடைவாய்" என நாரதர் அறிவுரை வழங்கினார்.

நாரதர் கூற்றை நன்றென ஏற்றுக் கொண்ட காலனும் திருவான்மியூருக்கு அருகிலுள்ள வேதச்சிரேணியைத் தான் தவம் செய்யச் சிறந்த இடமாகக் கொண்டான். அங்கு தன் தண்டத்தை நிறுவி, அதனையே லிங்கமாகக் கொண்டான்; தன் பெயரால் ஒரு தீர்த்தத்தை ஏற்படுத்தினான். பகற் பொழுதில் அங்கு பூசை புரிந்த யமன், இரவில் திருவான்மியூர் சென்று மருந்தீசரை வழிபட்டான். ஒரு நாள் சிவபெருமானும் மாதொருபாகனாய்க் காட்சியளித்து அவனுக்கு வேண்டும் வரத்தைக் கேட்டார். ஐயனே! நின் திரு வடியில் வழிபாடு செய்யும் அடியவர்க்கு என்னால் துன்பம் ஏற் படாது என்பதை உணர்ந்தேன். மார்க்கண்டேயருக்கு அளித்தது போல் வேறு எவருக்கும் தொல்லை தர மாட்டேன். வேதச் சிரேணி யில் யான் நிறுவிய தண்டத்தில் நீவிர் என்றும் விளங்க வேண்டும். இங்கு நின்னை வழி படுவோர் வறுமை நீங்கிப் பெருஞ்செல்வத் தோடும், நிறைந்த குடும்பத்துடனும் வாழ வேண்டும். யான் நிறு விய தீர்த்தத்தில் மூழ்கி நின்னை வணங்குபவர்களைக் காசம், வயிற்று உபாதை, குட்டம், வாதம், காமாலை, போன்ற நோய்கள் அணுகாமல் அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். இறை வனும் அவ்வாறே அருளினார்.

வேதச் சிரேணியில் அழகிய வேலைப்பாடமைந்த மண்டபங் களும், கோபுரமும் உள்ளடக்கிய ஆலயத்தை யமன் எழுப்பினான்.

ஆதிரை நாளில் விண்ணோரும், மண்ணோரும் மழுவிடைக்கொடி யேற்றி விழாவாற்றினார்கள். இயமன் தண்டத்தில் தான் நிறுவிய லிங்கத்தின் முன்நின்று துதிகள் பல செய்து பின் தன் உலகம் சென்றான்,

வேதச்சிரேணி தற்காலத்தில் வேளாச்சேரி என வழங்கப் படுகிறது. இயமன் ஸ்தாபித்து வழிபட்ட லிங்கம் தண்டீஸ்வரர் எனவும் பெயர்பெற்றுள்ளது, பங்குனித் திருவிழாவின் ஐந்தாம் நாள் காலையில் அருள்மிகு சந்திரசேகரர் இயமனுக்கு அருளிய சம்பவம் நினைவூட்டப்படுகிறது.

—x—x—

## இராமர் வரம் பெறு படலம்

தந்தையின் ஆணையைத் தலைமேல் ஏற்ற இராம பிரான் வனவாசம் புரியும் போது காசி போன்ற பல சிவத்தலங்களை வணங்கினார். தண்டகாரண்யத்தில் தங்கியிருக்கையில், மாரீசனின் சூதில் இராம, இலக்குமணர் மயங்கினர். கபட சந்நியாசியாகத் தோன்றிய தசமுகன் சீதையை அபகரித்துச் சென்றான். சீதையைத் தேடியவாறு தென்னாட்டில் சஞ்சரிக்கையில் தென்கயிலாயம் எனப்படும் காளத்தி, திருவேங்கடம், தணிகை, கூவம், பாசூர், ஒற்றியூர், முல்லைவாயில், மயிலை ஆகிய தலங்களில் இராமர் வழிபாடு செய்தார்.

திருவான்மியூரின் பெருமைகளை நன்குணர்ந்த இராமபிரான் அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடினார். மார்பில் உருத்திராக்கமும், மேனியில் திருநீறும் துலங்க, வளமிகு கோபுரத்தை வழிபட்ட பின் இராமர் ஈசனின் திருக்கோயிலை அடைந்தார். வாசமிகு தைலம், ஆவின் பால், வாசனைக் கலவை, தயிர், குங்கிலியம், கத்தூரி, சுவைமிகு கனி, தேன், கற்கண்டு, சர்க்கரை, நெய், போன்ற பொருட்களால் சிவபிரானுக்கு அபிஷேகம் செய்தார். வில்வம், பூமாலை முதலியவற்றைச் சாத்தினார். தீபம் காட்டப்பட்டது.

"சீறிய நரசிங்கத்தைச் சிதைத்த சம்பரனே போற்றி
வீறுமுக் குடுமி ஞாங்கர் விண்டுவைத் திரித்தாய் போற்றி

தேறுவா மனன்கங் காளஞ் செருக்கறக்கொண்டாய் போற்றி
நீறணியத்தா போற்றி நிமலனே போற்றி போற்றி"

என்று இராமபிரான் பாடிப் பணிந்தார். அப்போது விண்ணில் எழுந்த தெய்வ வாக்கு. "நின் வழிபாட்டால் நாம் மகிழ்ச்சியுற்றோம் அச்சத்தை விட்டொழிக! மேன்மைமிகு இராமா! தென் திசை நோக்கிச் சென்று தசமுகனை வென்று,பண்புமிகு சீதையோடு கோ சல நகர் செல்வாயாக'' என வாழ்த்தியது. அவ்வாறே இலங்கை சென்ற இராமனும் தசக்கிரீவனை வென்று, சீதாப் பிராட்டியுடன் அயோத்தி மாநகர் சென்று, இராம ராஜ்ஜியத்தை நிறுவினர்.

பங்குனி விழாவின் ஐந்தாம்நாளன்று அருள்மிகுதியாகராஜர் இராமபிரானுக்கு அருள்புரிந்த நிகழ்ச்சி ஐந்தாம்நாள் திருப்பவனி எனச் சிறப்பிக்கப்படுகிறது.

—x—

## மருந்தீசப் படலம்

சிவபெருமான் பார்வதராஜன் புதல்வியான பார்வதியைக் கயிலையில் திருமணம் செய்து கொண்டார். அந்த அரிய காட்சியைக் காண ஈரேழு உலகங்களிலும் இருந்து எண்ணற்றவர்கள் வந்திருந்தனர். அவர்களின் பாரத்தைத் தாங்காமல் வடபுலம் தாழ்ந்தது; தென்புலம் உயர்ந்தது. இந்நிலையைச் சமன் செய்ய அத்திருமணத்திற்கு வந்திருந்த குறுமுனியான அகத்தியரைத் தென் திசையிலுள்ள பொதிகை மலைக்குச் செல்லுமாறு ஈசன் பணித்தார். ஈசனின் கட்டளையைச் சிரமேற் கொண்ட அகத்தியரும் வேதமந்திரங்களை உச்சரித்தவாறும், வழியிலுள்ள புண்ணியப் பதிகளை வணங்கியவாறு, தென்திசை நோக்கிச் சென்று, திருவான்மியூரை அடைந்தார். திருவான்மியூரின் மகிமைகளை அறிந்து, அங்குள்ள பிரமதீர்த்தம், சூரிய தீர்த்தம் போன்றவற்றில் நீராடி, காலன். பிருங்கி முனிவர் ஆகியோர் ஏற்படுத்திய லிங்கங்களை வழிபட்டார். திருவான்மியூரிலுள்ள விண்ணை முட்டும்

கோபுரத்தை வணங்கி, ஆலயத்தில் நுழைந்து, விநாயகருக்கு நேர் வடக்காக எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தைத் துதித்தார். பக்திப் பெருக்கால் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக, இரு கரங்களையும் கூப்பி ஈசனைப் போற்றி வழிபட்டார்.

"சங்கர சதாசிவ நமோநம! சாம்பவ மனோகர நமோநம!
கங்கர மார்ப நமோநம! கயிலைநற்கிரியோய் நமோநம!
பொங்கர மார்ப நமோநம! புண்ணியரூப நமோநம!
இங்குனை அடைந்தேன் நமோநம! எளியனை ஆள்க நமோநம!
சூலப் படையோய் செய செய! சுருட்பூஞ்சடையோய் செய செய!
ஆலமிடற்றோய் செய செய! அரைத்தோ லுடையோய் செய செய!
கால காலனே செய செய! கருணைத் தலைவா செய செய!
வேலன் தந்தோய் செய செய! விரையார் கழலோய் செய செய!
கண்ணுத லோயே விசயீபவ! கபர்த்தநன் முடியோய் விசயீபவ!
பெண்ணொரு பாக விசயீபவ! பிறைமுடிப் பெரும விசயீபவ!
எண்ணுதற் கரியோய் விசயீபவ! எழில்விடைத்தேவே விசயீபவ!
சுண்ணவெண் பொடியோய் விசயீபவ! சுடர்மழு வுடையோய் விசயீபவ!"

இங்ஙனம் குறுமுனி பக்திப் பெருக்கால் செப்பிய மொழிகளுக்குச் செவிசாய்த்த ஈசரும், அவர் முன் தோன்றி, அவருக்கு யாது வரம் வேண்டும் என வினவினர். அகத்தியரும், "பரந்து வியாபித்துள்ள இவ்வுலகில் இயற்கையிலே உண்டாகும் ஔஷதிகளின் வகைகளையும், அவற்றின் தன்மைகளையும் பற்றித் தெரிவிக்க வேண்டும். மேலும் இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்பதை நான் உணரவும் வேண்டும்", என வேண்டினர். மருந்துகள் பற்றிய அறிவை அகத்தியர் பெறுமாறு அருளிய சிவபெருமான், மேலும் சில அறிவுரைகளை வழங்கினர். "மனிதர்கள் செய்துள்ள வினைகளுக்கேட்ப அவரவர்களுக்கு உடல் வாய்த்துள்ளது. இங்ஙனம் அவர்களுக்கு ஏற்படும் நோய்கள் 4448 ஆகும். இந்த நோய்களுக்குத் தீர்வாக மரம், செடி, கொடி புல் என்ற நான்கு தாவர வகைகளையும், அவற்றின் மேற்பட்டை, வேர், இலை, பழம், விதை, கட்டை, ரசம் ஆகிய பகுதிகளையும், அவற்றிற்குத் துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, இனிப்பு என்ற அறுசுவைகளும் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒன்றோடொன்று சேர்த்து மருந்துகளைச் செய்யலாம்.

மருத்துவனுக்கு அவசியமானது நேர்மை; மேலும் சித்த சுத்தி, காருண்யம், நல்லொழுக்கம், தெய்வ வழிபாடு, ஆண்மை முதலிய குணங்களையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும். தம்மிடம் வரும் நோயாளிகளின் நாடிகளின் நிலைமையை நன்குணர்ந்து, நூல்கள் கூறும் எட்டுவிதமான சோதனைகளால் நோயின் தன்மையை அறியும் திறனுடையவராக இருக்க வேண்டும். நோயாளியின் உடலின் நிலை, அவர் உட்கொள்ளும் உணவு, வயது, தூக்கம் இவற்றை ஆராய்ந்து வாதம், பித்தம், சிலேட்டுமம்போன்றவற்றை நோக்கி, இனிய மொழிகளைக் கூறி, சரியான ஔஷதிகளையளிக்க வேண்டும். இவையே நல்ல மருத்துவனுக்கான குணாதிசயங்கள்.

மணி, மந்திரம், மருந்து என்று மூன்று வழிகளையும் பயன்படுத்தி நோய்களைத் தீர்க்கலாம். மணி என்பது மூலரசம். அதனால் செய்யப்படும் வழிமுறைகளின் மூலம் எங்கும் சஞ்சரிக்கலாம்; மலை போன்ற செல்வங்களையும், அட்டமாசித்திகளையும் அடைய இது உதவும் பாதரசம் முதலிய அறுபத்து மூன்று ரசங்கள் இந்த மூலரசத்திற்கு உபரசங்களாக உள்ளன. இவை குளிகைக்கு ஆகா; மருந்துகளுக்கு ஆகும். இவற்றின் தன்மைகளையும், சிறப்பையும் முனிவர்களே அறிவர். சாதாரண மருத்துவர்களால் இவற்றை அறிதல் அரிது.

மந்திரங்களுள் பதி, பசு, பாசம் என்ற மூன்றையும் உள்ளடக்கிய பஞ்சாட்சரமே மேன்மை மிக்கது. சப்தகோடி மகாமந்திரங்களும் அதிலிருந்து உண்டாயின. இவ்வைந்தெழுத்து மந்திரத்தை நன்ருக உருவேற்றியவர்களை நினைத்தாலும், தரிசித்தாலு அனைத்துத் துன்பமும் பகலவனைக் கண்ட பனிபோல் மறையும்.

“மந்திரமே நம்மரிய மேனியாகு
மந்திரமே சிவசக்தி வடிவதாகு
மந்திரமே வெண்கயிலைப் படிவமாகு
மந்திரமே சிற்சபையின் நடனமாகு
மந்திரமே ஐந்து கிருத்தியமதாகு
மந்திரமே திருவருளா காரமாகு
மந்திரமே சருவவியா பகம தாகு
மந்திரமே மோக்கத்திற் கேது வாமால்

முன்பு திருப்பாற்கடல் கடையப்பட்ட போது அங்கு தோன்றிய அமுதம் கரைகளில் சிந்தியது. இதன் விளைவாக ஒன்

பது வகை மூலிகைகள் முளைத்தன. மூலிகைகள், பூண்டுகள் போன்றவற்றைக் கொண்டு மருந்து செய்யலாம். இவை பற்றிய பூரண அறிவை உனக்கு அளிக்கிறோம். உன் அறிவுத் திறத்தால் மேலும் பல புதிய மூலிகைகளைக் கண்டு பிடிப்பாய்"

"என்றலும் நற்பரசிவன் தாளிணைமலரில் பணிந்தெழுந்து
நன்று நானிராசியங்கண நனியோர்ந்தேன் இறைவ நின்னை
இன்று மருந்தீசன் என்னுவே வருமேயேத்தல் வேண்டும்
உன்றன் தரிசனம் கிடைத்தார்க் கொருநோயும் அடரலாகா

"ஈசா! என் மூலம் உலகினுக்கு மருந்தின் வகைகளை உபதேசித்த தாங்கள் மருந்தீசன் என்று வழங்கப்பட வேண்டும்" தங்களை உள்ளன்போடு வழிபடுபவர்கள் நோயற்று வாழவேண்டும் என அகத்தியர் இறைஞ்சினர். சிவபெருமானும் அவ்வாறேயருளியபின் மறைந்தார். அகத்திய முனிவரும் தமது சீடர்களுடன் திருவான்மியூரில் சில காலம் தங்கினர்.

—|o|—

## திருமணக் கோலம் காட்டிய படலம்

சிவபெருமான் பார்வதி திருமணத்தின் போது உயர்ந்திருந்த தென்பகுதியைச் செப்பனிடச் செல்லுமாறு ஈசன் அகத்தியருக்குக் கட்டளை இட்டார். "அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் ஈசனின் திருமணத்தைக் காணும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அடியேனும் அக்காட்சியைக் காண முடியாதது என் துர்ப்பாக்கியமே" என அகத்தியர் வருந்தினர். ஈசனும் முனிவருக்கு ஆறுதல் மொழிகளைக் கூறினர். "முனிவ! வருந்தற்க! நீ போகும் வழியில் எப்போதெல்லாம் என்னைக் காண விரும்புகிறாயோ, அப்போதெல்லாம் நாம் திருமணக் கோலத்தில் காட்சி கொடுப்போம். அவ்வாறு ஈசனின் திருமணக்காட்சியைத் திருவான்மியூரில் அகத்தியர் கண்டார்.

வன்னிமரத்தடியில் அகத்தியருக்கு அந்த அரிய காட்சிகிடைத்தது. ஆனகம், படகம், தாளம், துந்துபி, தடாரி, மல்லாரி, வீணை,

முரசம், பேரிகைகள் போன்ற வானுலக இசைக் கருவிகள் இசை கூட்டின. சித்தர், கந்தருவர், தேவர், கின்னரர், போகர், வித்தியா தரர், யோகர், வேதபண்டிதர், முனிவர், கருடன், நாரதர், தும்புரு ஆகியோர் ஈசரை வழிபட்டுத் துதித்தனர். ஊர்வசி, திலோத் தமை, அரம்பை, மேனகை ஆகிய நடனமாதரும், பிற பெண்டி ரும் பணிவிடைகள் செய்தனர். அடியார்கள் பலர். பொற்குடை, ஆலவட்டம், கவரி, தீப்பந்தம் போன்றவற்றை ஏந்தினர். வான வர் கற்பக மலர் மாரி பொழிந்தனர். தவ முனிவர்கள் வேதங்களை ஓதினர். கையில் பிரம்பேந்திய நந்திதேவர் அனைவரையும் ஒழுங்கு செய்தார்.

மயில் போன்ற உருவமுடைய உமையம்மை அன்ன நடை நடந்து வந்தாள். அம்மனின் அவயங்கள் சீரான தோற்றத்தை யளித்தன. பாசி போன்ற கூந்தல்; துடி போலும் இடை; வளைந்த கழுத்து; நிலோற்பல மலர் போன்ற கண்கள்; பளபளக்கும் செவ் வாய்; முத்துப் போன்ற பற்கள்; இவ்வாறு அழகின் அவதார மாகவே தோன்றினாள்.

கண்ணையும், கருத்தையும் கவரும் தோற்றத்துடன் சிவபெருமானும் தோன்றினார். கங்கை, ஊமத்தை, கொன்றை ஆகியன திருமுடியை அலங்கரித்தன. ஒளி வழங்கும் முக்கண்; அருள் ததும்பும் தூய முகம்; குண்டலங்கள் பொருந் திய செவிகள்; உலக மாதர் சுமங்கலிகளாக இருக்கும் பொருட்டு ஆலகால விடத்தை யுண்டதால் கறுத்த கண்டம்; மான், மழு, முச்சூலம், துடி ஏந்திய கைகள்; வரதம், அபயம் அளிக்கும் நிலை, முப்புரி நூலணிந்த மார்பு, மலர்கள் அணிந்த தோள்; புலித்தோல் அணிந்த இடை; திருநீறும், உருத்திராட்சமும் அணிந்த பக்தி நிலை இத்தகைய கோலங் கொண்ட பெருமான் தன்னை வணங்கிய வர்க்கு நற்கதியளிக்கும் திருவடிகளுடன், அரியணையில் அம்மை யுடன் அமர்ந்தார். எங்கும் இசையும், தோத்திரங்களும் நிரம்பின.

இவ்வாறு திருவான்மியூரில் திருமணக் காட்சியைக் கண்ட அகத்தியர் புளகாங்கிதமடைந்தார். மடக்கு, யமகம், பதுமபந்தம், அஷ்டநாகபந்தம், கோழத்திரி, சுழிகுளம், திரிபங்கி, காதை கரப்பு, மாத்திரைச் சுருக்கம், பிறிதுபடுபாட்டு, இரதபந்தம் முதலியவற் றால் ஈசனைப்பாடி அகத்தியர் வழிபட்டார்.

திருவிழாவின் ஒன்பதாம் நாளன்று மாலையில் அருள்மிகு சந்திரசேகரர் வன்னி மரத்தடியில் அகத்தியருக்கு காட்சியளித்த சம்பவம் நினைவுறுத்தப்படுகிறது.

# பிருங்கி தரிசனம் செய் படலம்

சிவஞானம், சிவனடியார் உள்ளம், சத்துவ குணம் இவற்றைப் போல் தூய வெண்மையான நிறத்தையுடைய கயிலைமலை இமயமலையின் சாரலில் உள்ளது. அங்கு சிவ பெருமான் உமையுடன் என்றும் வசித்து வருகிறார். அம்மலையின் ஒரு பகுதியில் பிருங்கி எனும் முனிவர் தவத்திற்காக ஒரு குடில் அமைத்திருந்தார். ஆகமங்கள், மறைகள், புராணங்கள், ஆகியவற்றை நன்கு கற்றுத் தெளிந்த அம்முனிவர். சிவபெருமானை நோக்கித் தவமியற்றி வந்தார் "குணமாகியும், குணமுடையவராகவும் நிற்கும் குணமில்லாதவர் சிவம் ஒன்றே; எனவே சிவத்தையன்றி வேறு எவரையும் வணங்கக் கூடாது", என்ற எண்ணம் அவர் மனதில் உதித்தது. இதன் விளைவாக அம்முனிவர் நாள்தோறும் கயிலைக்குச் சென்று சிவபிரானை மட்டும் வணங்கி விட்டு, உமையன்னையைச் சிறிதும் மதிக்காமல் வந்துவிடுவார். நாள்தோறும் பிருங்கி தன்னைப்புறக்கணித்துச்செல்லக் காரணம் என்ன என்பதை உமையம்மை அறிந்து கொள்ள விரும்பினார். "பிருங்கி சிறந்த ஞானி! அவன் செய்வது தவருக இருக்காது. என்னையும் உன்னையும் வெவ்வேருகக்கருதாமல் ஒருவராகவே அவன் கருதுவதால் என்னை வழிபடுவது உன்னையும் வழிபடுவதாகும் என அவன் நினைக்கிறான் போலும்" என்று "சிவபெருமான் மொழிந்தார். "அப்படியானால் கயிலையில் நான் இருக்க வேண்டாமே! தாங்கள் ஒருவரே போதும். தங்களுடைய திருமேனியில் யான் ஒன்றியிருக்க விருப்பம் கொண்டுள்ளேன். தனித்திருக்கும் போது என்னை மதியாத பிருங்கி, இப்போதாவது என்னை வணங்குகிறானா என்பதை அறியலாம்" என்று பார்வதி விரும்பினாள். ஒரு அற்புதத் திருவிளையாடலை நடத்த எண்ணிய சிவபெருமானும் உமையம்மை இடப்பாகத்தில் தோன்ற, மாதொரு பாகனைக் காட்சியளித்தார்.

மறுநாள் இறைவனை வழிபட வந்த பிருங்கி, அம்மையப்பராக ஈசன் காட்சியளிப்பதைக் கண்டார். அப்போதும் ஈசரை மட்டுமே வணங்கக் கருதியவராய், ஒரு வண்டின் உருவெடுத்து இருவருக்குமிடையே ஒருதுவாரத்தை ஏற்படுத்திச் சிவபெருமானை மட்டும் வலம் வரலானார். இதனால் வெகுண்ட சக்தி தேவி அம்முனிவரின் ஆற்றலான சக்தியனைத்தையும் கவர்ந்து கொண்டார். இதனால் சக்தி இழந்த முனிவர் தனது இரு கால்களால் நடக்க இயலாமல் திணறினார். அவருக்குக்கருணை புரியக் கருதிய ஈசனும், பிருங்கி முனிக்கு மூன்றாவது காலை அளித்தருளினார். அப்படியும் முனிவரால் சரிவர நடக்க முடியவில்லை. "முனிவா! நான் மூன்று

வதுகாலேஅளித்தும் நீ நடக்கச்சக்தியற்று இருக்கிருய் இதற்குக்கார ணம் நீ செய்த மாபெரும் பிழையே ஆகும். தேவியை அலட்சி யம் செய்து விட்டு என்னை மட்டும் வழி படுவது தவறு. நீ கார ணத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டு காரியத்தை அலட்சியப்படுத் துகிருய். இவ்வுலகில் காரணமும், காரியமும் ஒன்று சேர்ந்தே எச்செயலேயும் நடைபெறச் செய்கின்றன. காரியத்தைக் கொண்டு காரணத்தையறிய வேண்டுமேயன்றிக் காரியத்தை விடுத்து விட் டுக் காரணத்தை அறிய இயலாது. காரியமே காரணத்தை விட வலிமை மிக்கது. அதுவே நலம் அடைந்திடுவதற்கு ஆவன செய் வது. நாம் காரணம்; தேவி கா ரி ய ம். அன்னையை விடுத்து என்னை மட்டும் வழிபடுவது தவறு," என்று ஈசன் அறிவுறுத் திஞர் கல்வியறிவு பெற்று விட்டதாக எண்ணிச் செருக் கடைந்து பெரிய குற்றத்தை இழைத்து விட்டதற்காகப் பிருங்கி முனிவர் வருந்திஞர். ஈசனேயும், உமையையும் உள்ளன்போடு வணங்கி விட்டு வெளியேறிய அம்முனிவர், தாம்புரிந்த பிழைக்குப் பரிகாரம் தேட முற்பட்டார். பல திருத்தலங்களுக்குச் சென்று ஈசனைப் பூசிப்பதே சிறந்த கழுவாய் என்று உணரவும் செய்தார். தேவர்களின் குறைகளைப் போக்கியதும், திருமால், நான்முகன், ஆகியோர் விழா எடுத்துச் சிறப்புப் பெற்றதுமான திருவான்மியூரே தாம் வழிபடுவதற்கு ஏற்ற தலம் என்று முடிவு செய்த பின், அம் மையப்பரிடம் விடை பெற்றுக் கொண்டு பிருங்கி முனிவர் பூவு லகு சென்ருர். பூவுலகிலிருந்த பல புண்ணியப்பதிகளைத் தரிசித் தும், பல புண்ணியத்தீர்த்தங்களில் நீராடியும் தென்திசையிலுள்ள திருவான்மியூருக்கு மேற்கில் உள்ள ஒரு குன்றை பிருங்கி அடைந்தார்.

திருவான்மியூரின் மகிமைகளைச் சூதர் மூலம் கேட்டறிந்த நைமிசாரண்ய முனிவர்கள் அப்புண்ணிய தலத்தைத் தாங்களும் தரிசிக்க விரும்பிஞர்கள்.

"முனிவர்களே! நீங்கள் புரிந்த நல்வினைகளின் விளைவா கவே உங்களுக்கு இந்த உயர்ந்த எ ண் ண ம் உண்டாயிற்று. நீங்கள் திருவான்மியூர் சென்று மருந்தீசரைக் குறித்துத் தவம் புரியுங்கள். தென்திசை நோக்கிப் புறப்பட்ட பிருங்கி மாமுனிவர் உங்களைச் சந்தித்தவுடன் உங்களது விருப்பம் நிறைவேறும்" என்று சூதர் அருளிஞர். அவ்வாறே நைமிசாரண்ய முனிவர் களும் திருவான்மியூர் சென்று தவம் புரிந்து வந்தனர்.

நைமிசாரண்ய முனிவர்கள் திருவான்மியூருக்கு அருகே தவம் புரிகையில் பிருங்கி முனிவரைச் சந்தித்தனர். திருவான் மியூரின் தலச் சிறப்புக்களை அம்முனிவர்கள் மூலம் கேட்டறிந்த

பிருங்கி முனிவர் தான் தங்கியிருந்த சிறு குன்றில் ஒரு லிங்கத்தை ஏற்படுத்தி வழிபாடு செய்தார். அன்று முதல் அம்மலை பிருங்கி மலை என்றே வழங்கப்பட்டது.

பின்னர் பிருங்கி முனிவரும், நைமிசாரண்யத்து முனிவர்களும் பிருங்கி மலையிலிருந்து இழிந்து "தாயகம் வாய்ந்த தெய்வ வான்மியூர் தலத்தை" அடைந்தனர்.

வானைத் தாங்கும் கோபுரத்தை வணங்கிய பின் புண்ணியப் புனல்களில் நீராடினர். பின்னர் ஆகம முறைப்படிச் சிவச்சின்னங்களைத் தரித்துப் பஞ்சாட்சர மந்திரங்களை முழங்கியவாறு, கோயிலினுள் சென்றனர். சிரம் மேற் கரங்களை வைத்தவாறு, விநாயகரை வழிபட்டு, ஞானவள்ளலான திருவான்மியூர்ச் சிவக் கொழுந்தைப் போற்றினர்.

"திரிபுரங்களை அழித்துத் தவயோகிகட்கு வாழ்வளித்த
மருந்தீசனை உன்னு மனமென்ன மனமே!
மகாதேவனை உன்னு மனமென்ன மனமே!
சங்கரனைத் தாழாத தலையென்ன தலையே!
சதாசிவனைத் தாழாத தலையென்ன தலையே!

பிரமன், நாராயணன், தேவர்கள் ஆகியோர்கள் வேண்ட நஞ்சுண்டு அமுதளித்த,

மறைமுதல்வனைச் சாற்று வாயென்ன வாயே!
வான்மியூரனைச் சாற்று வாயென்ன வாயே!
காமன் மலர்களை எய்த போது அழல் உண்டாக்கிய
கண்ணுதலோனை நோக்காக் கண்ணென்ன கண்ணே!
கமாநாசனை நோக்காக் கண்ணென்ன கண்ணே!
மாவலியை அழுத்திய சங்காழிமால் அடங்குமாறு வந்த
கங்காளன் சீர்கேளாக் காதென்ன காதே!
கயிலையோன் சீர்கேளாக் காதென்ன காதே!
மார்க்கண்டர்க்காக இயமனை வீழ்த்திய
கடவுளினைப் பணியாத கையென்ன கையே!
அடியார்க்குத் திருவருளைப் பாலிக்கும்

ஜபம் முதன் ஆலயம் சூழா அடியென்ன அடியே!

அனந்த ஆலயம் சூழா அடியென்ன அடியே!

இவ்வாறு பலவாறு போற்றிய பின் முனிவர்கள் பிருங்கி மலையை அடைந்தனர். பல நாட்கள் பகலில் மலையில் தவம் புரிவதும், மாலையில் திருவான்மியூர்க் கோயிலில் வழிபடுவதுமாகக் காலம் கழித்த பின், பிருங்கி முனிவரும், நைமிசாரண்ய முனிவர்களும் கயிலை மலைக்குச் சென்றனர்.

பங்குனித் திருவிழாவின் நான்காம்நாள் காலையில் நடைபெறும் சந்திரசேகரர் விமான விழா எனும் நிகழ்ச்சியின்போது ஈசர் பிருங்கிக்கு நல்வழி காட்டிய சம்பவம் சித்தரிக்கப்படுகிறது. அம் முனிவர் தவம் புரிந்த பிருங்கிமலை இன்று பரங்கிமலை என வழங்கப்படுகிறது.

*x-o-x*

## நூற்பயன்

திருவான்மியூர்த் தலபுராணத்தைப் படிப்பவர், கேட்பவர் எழுதுபவர், எழுதச் செய்பவர், பிறரிடம் விளக்கிச் சொல்லுபவர், அரும்பதவுரைகளையும், உட்பொருளையும் எடுத்துக் கூறுபவர், மலர்கொண்டு பூசித்து வழிபடுபவர் ஆகிய அனைவரும் இப்பிறப்பில் பதினாறு பேறுகளையும் இன்பமுடன் அடைவர். இப்பிறவி முடிந்த பின் தேவர்கள் சூழ அழகிய சொக்க நாயகியம்மை இடப்பாகத்தில் அமர வீற்றிருக்கும் மருந்தீசரின் திருவடி நிழலில் இனிது வாழ்ந்திடுவர்.

புகழ் பெற்ற திருவான்மியூரிலுறையும் மருந்தீசர் வாழ்க! அள்ள அள்ளக் குறையாத அருளினையளிக்கும் சொக்கநாயகியம்மன் வாழ்க! பெருமானின் திருவடியில் அன்புகொண்ட அடியார்கள் வாழ்க! ஏற்றம் மிக்க ஆகமம், புராணம், இதிகாசம் போன்றவை யனைத்தும் வாழ்க! நீலகண்டமும், முக்கண்ணும் சிவந்த சடையும், பளிச்சிடும் திருநீறும், மானும், மழுவும் ஏந்திய மாதொரு பாகா! திருவான்மியூரில் உள்ள திருமன்றத்தில் திருநடனம் புரியும் நினது திருப்பாதங்களை வணங்கிடுவோம்.

திருவான்மியூர்ப் புராணத்ததனைப் படித்திடுவார் செவி யிற் கேட்பார்! மருவும்ஃதெழுதிடுவார் எழுதுவிப்பார் பிறர்மாட்டு வகுத்துச் சொல்வார்! பொருளுரைப் பார்தமைப் பணிந்து பொன் ஞுதி ஈந்திடுவார் பூரித்துள்ள! மருமலர் கொண்டெஞ்ஞான்றும் அருச்சித்துப்பூசித்து வணங்குவார் ஆகியோர் இம்மையில் பதிஞுறு பெரும் பேரும் அனைத்தினையும் எளிதிஞளும்! செம்மையுற அனுப வித்துப் பற்பலவாம் பதமுத்தி தேவ ரோடும்! அம்மையினின் மிகத் த்துச் சொக்க நாயகியம்மை யமரும் பாகத்! தெம்மருந்தீசன் துணைத் துய்த ாண் மலர்நிழல் எந்நாளும் இருந்து வாழ்வார்.!

போற்றிடுந்தற் ருவான்மியூ ருறைய மருந்தீசப் புனிதன் வாழ்க
சாற்றரிய கருணையுரு வான சொக்க நாயகியாந் தன்னை வாழ்க
ஆற்று பெரும் பூதிமணி யைம்பதத்தி லன்புகொளு மடியர் வாழ்க
ஏற்றிடுவே தாகமபுராணம் மிதிகாச முதலெவையும் வாழ்க

நீலமாமணிமிடறு முக்கண்ணும்செஞ்சடையும்நிறைவெண்ணீற்றுக்
கோலமா ருமைபாகு மணிவரதா பயமழுவுங் குலவு மானுந்
தாலமகிழ் திருவான்மி யூரதனி லேயொளிரத்கனித்த மன்றத்
தேலவே திருநடன நவிலவெடுத் திடுபாதமிறைஞ்சி வாழ்வாம்.



# 6

# ஆலய வரலாறு

## தெய்வ வழிபாடு

மனிதன் உலகில் தோன்றிய நாள் முதல் அவனது வாழ்வில் இறைவனுக்காக எடுக்கப்பட்ட ஆலயங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுவிட்டன. இயற்கைத் தாயின் வடிவங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆதவன், திங்கள் ஆகியவற்றிற்குப் பல்வேறு வடிவங்களை அமைத்து ஆலயங்களில் இடமளித்தான் மேலும் மக்களிடையே வாழ்ந்து, வியத்தகு சாதனைகளைப் புரிந்து அம்மனிதர்களின் வாழ்வைத் தெய்வ வாழ்வாக மாற்றிய மகான்களும் தெய்வங்களாகவே வழிபடப்பட்டனர். இந்திரன், கண்ணன், இராமன், புத்தர், மகாவீரர் போன்றோருக்கு இவ்வாறு கோயில்கள் தோன்றின. ஆதியில் உலகின் எல்லா பகுதிகளிலும் இவ்வாறே தெய்வ வழிபாடு எழுந்தது.

## ஆதாரங்கள்

இந்தியாவைப் பொறுத்தவரை,குறிப்பாகத் தென்னகத்தைப் பொறுத்தவரை, நமது சரித்திரத்தைத் தொடர்ச்சியாக எழுதுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. இக்கருத்தைச் சரித்திரப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் அழகாகக் கூறுகிறார். "தென்ன வரலாறு பல அறைகளையுடைய ஒரு பெரும் மாளிகை; அதன் அறைகளுள் சிலவற்றில் நல்ல வெளிச்சம் உள்ளது; வேறு சில அறைகள் சற்று இருட்டாக உள்ளன; எந்த அறையிலும் அதிலுள்ள பொருட்களைக் கூர்ந்து ஆராயுமளவுக்குப் போதிய ஒளியில்லை; "இவ்வாறே தமிழகத்திலுள்ள ஆலயங்களைப்பற்றிய முழுமையான வரலாற்றை எழுதுவதற்கும் தகுந்த ஆதாரங்கள் இல்லை. அவ்வப்பொழுது ஆலயங்கள் புதுப்பிக்கப்படும்போது அதன் பழைய சுவடுகளை அழித்துவிடுவதால் ஆலயங்களின் வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுத முடிவதில்லை. இதே காரணங்களால் திருவான்மியூர் மருந்தீசர் ஆலயத்தின் வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுத இயலாது. கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு அதன் வளர்ச்சியைக் குறிப்பிடலாம்.

—|o|—

## தலபுராணம் கூறும் வரலாறு

ஒரு கற்பம் முடிந்து மறு கற்பம் தொடங்கும் போது பள்ளி கொண்ட பெருமானின் நாபிக் கமலத்தில் தோன்றிய நான்முகன் படைக்கும் தொழிலை மறுபடியும் பெறும் பொருட்டுச் சிவபிரானைக் குறித்துத் தவம்புரிய எண்ணினார். சதுர்வேதங்கள் மலையாகத் தோன்றிய திருக்குகழுகுன்றத்திற்கும், மயிலுருவில் அம்மை ஈசனை வழிபட்ட மயிலைக்கும் இடையேயுள்ள திருவான்மியூரில் ஈசனை வழிபட்டுப் படைக்கும் சக்தியைப் பெற்றார் ஈசனின் ஆணையின் பேரில் அப்பதியில் பிரம்ம தீர்த்தம் எனும் ஒரு புனிதப் புனலை உருவாக்கி, மருந்தீசரைப் பிரம்மன் வழிபட்டான். பிரம்மதேவனே மருந்தீசருக்கு ஆலயத்தை எழுப்பி, அதனை சுற்றி மாட வீதிகளைக் கட்டுவித்தார். அங்குள்ள இல்லங்களில் அறிவிற் சிறந்தோரைக் குடியிருக்கச் செய்தார். பங்குனி மாதத்தில் பத்து நாட்களுக்கு விமரிசையாகத் திருவிழா கொண்டாடப்பட்டது. அவ்

விழாவில் வானவரும், முனிவரும் பங்கேற்றனர். காலப் போக்கில் நான்முகன் அமைத்த ஆலயம், மாட வீதிகள் ஆகியவை பாழடைந்து போயின. பிற்காலத்தில் சதயூ-பேட்டையை (சைதாப் பேட்டை) ஆண்ட சதயூ எனும் மன்னன், காமதேனு ஈசனைப் பூசித்த வரலாற்றை அறிந்து இத்தலம் மீது பெருவிருப்பு கொண்டான். சதயூ மன்னனே அந்த இடிபாடுகளை அப்புறப் படுத்தி ஒரு புதிய ஆலயத்தையும் மாட வீதிகளையும் ஏற்படுத் தினான். இறைவனுக்கான ஆடை ஆபரணங்கள், ஆலயத் திற்கான மானியம் ஆகியவற்றை அளித்ததுடன், திருவிழாக்களை யும் நடத்த ஏற்பாடு செய்தான்.

—X—

## தமிழகத்தில் ஆலய வளர்ச்சி

இறைவனுக்கு ஆலயம் கட்டுவதன் மூலம் மக்களுக்குப் பெருந்தொண்டு புரிவதாக மன்னர்கள் கருதினர். குடிமக்கள் வழிபடுவதற்காகவே மட்டுமின்றி, தனது வெற்றியின் அடையா ளச் சின்னமாகவும் பெரிய கோவில்களைக் கட்டிய மன்னர்கள் உண்டு. உயர்ந்த குறிக்கோளுக்காக உயிர் நீத்த தியாகிகளின் பூதவுடல் மீது எழுப்பப்பட்ட பள்ளிப்படை,நடுகற்கள் போன்றவை யும் வழிபாட்டுச் சின்னங்களாகவே இருந்தன. பூங்கோயில் தூங் கானை மாடம், குடிசைக் கோயில், கரக் கோயில், ஞாழற்கோவில் கொடிகுக் கோயில் போன்ற பலவகையான கோயில்கள் இருந்த செய்தியைத் திருநாவுக்கரசரின் பாடல் குறிப்பிடுகிறது.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமாள் சேரும்
பெருங்கோயில் எழுபதினெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழிற் சூழ் ஞாழற்கோவில்
கருப்பறியல் பொருப்பனைய கொடிகுக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக் கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"

## சங்ககாலம்

ஏசுநாதர் பிறந்த பின் மூன்று நூற்றாண்டுகள் வரை தமிழகத்தின் பொற்காலமான சங்க காலத்தில் கலை உன்னத வளர்ச்சி அடைந்தது. முக்கட் செல்வனான சிவன் திருமால், முருகன், பலராமன் ஆகியோருக்கு ஆலயங்கள் இருந்த தாகச் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. நக்கீரரின் திருமுரு காற்றுப்படையில் ஆறுமுகனுக்கு உகந்த அறுபடை வீடுகளின் பெற்றி விளக்கப்படுகிறது. சங்க காலத்தின் இறுதிப் பகுதியிம் வாழ்ந்த கோச்செங்கணான் எனும் சோழ மன்னன் "எண்தோளீ சர்க்கு எழுபது மாடக் கோயில்களை" எழுப்பினான். சேக்கி ழாரும், அப்பரும் இச்செயலைப் போற்றுகின்றனர்.

சங்க காலத்திலிருந்த ஆலயங்கள் மண், மரம்,ஓடு போன்ற அழியக்கூடிய பொருட்களால் கட்டப்பட்டதால் காலப் போக்கில் அவை இருந்த சுவடு கூட இல்லாமல் மறைந்து விட்டன சங்க காலத்தின் இறுதியில் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்த களப்பிரர் எனும் மரபினரால் பழைய கலைச் சின்னங்கள் அழிக் கப்பட்டன. களப்பிரரின் ஆட்சி தமிழகத்தில் இருண்டகாலமாகக் கருதப்படுகிறது. அக்காலத்தில் சமண சமயத்தின் கை ஓங்கியது எனவே ஏழாம் நூற்ருண்டிற்கு முன்னர் திருவான்மியூர் ஆலயம் பற்றிய செய்திகள் அறிய முடியவில்லே.

X-O-X

## பல்லவர் பாண்டியர், எழுச்சி

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பல்லவர், பாண்டியர் ஆகியோ ரின் முயற்சியால் களப்பிரர் ஆதிக்கம் வீழ்ச்சியுற்றது. தொண்டை நாட்டில் பல்லவர்களும்,தென்தமிழ்நாட்டில் பாண்டியர்களும்சைவ வைணவ மதங்களுக்கு உயிரூட்டினர். பல்லவர்கள் ஆட் சியின் போது கருங்கல்லாலும், பாறைகளாலும், கோயில்கள் எழுப் பப்பட்டன. இச்செய்தியைப் பல்லவன் முதலாம் மஹேந்திரவர் மனின் மண்டகப்பட்டு கல்வெட்டு தெரிவிக்கிறது. "செங்கலின்றி மரமின்றி, உலோகமின்றி, காரையின்றி பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய தெய்வங்களுக்கு விசித்திரசித்தன் இக்கோயிலை ஆக்கி னான். தமிழகத்தில் இன்று அழியாமலிருக்கும் ஆலயங்களில் மிகப் பழமையானவை பல்லவர்கள் காலத்தில் எழுந்தவையே.

எனவே ஏழாம் நூற்றுண்டிலிருந்தே தமிழக ஆலயங்களின் வளர்ச்சியை அறியமுடிகிறது. திருவான்மியூர் ஆலயம் பற்றிய சரித்திரச் சான்றுகளும் பல்லவர் காலத்திலிருந்தே தொடங்குகின்றன

x-o-x

## பல்லவர் காலம் (கி.பி. ஆறு முதல் பத்தாம் நூற்ருண்டுவரை

திருவான்மியூர் மருந்தீசர் ஆலயம் பல்லவர் காலத்தில் சீரும்சிறப்புமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். பல்லவர் காலத்தில் அக்கோயிலின் அமைப்புஎந் தவிதத்தில் அமைந்திருந்தது என்பதை அறிய ஆதாரங்கள் இல்லை. ஆயினும் பல்லவர் காலத்தில் சைவ சமய எழுச்சிக்கு வித்திட்ட திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவான்மியூருக்குவருகை தந்து ஈசனைப் போற்றித் துதித்துள்ளனர் இதன் மூலம் இக்கோயில் பல்லவர் காலத்தில் சிறந்த வழிபாடு தலமாக இருந்ததாக ஊகிக்கலாம்.

## திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் காலம்

இனி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் காலம் பற்றிய சான்றுகளைக் காணலாம். அப்போது சமண சமயம் தமிழகத்தில் வேரூன்றியிருந்ததால், அரசர்களும் சமண மதத்தில் பற்றுக் கொண்டிருந்ததில் வியப்பில்லை. திருநாவுக்கரசரின் சைவ சமயப்பற்று சமணர்களுடன் மோதலை ஏற்படுத்தியது. பல்லவ மன்னனான குணபரன் அப்பர் பெருமானைப் பற்பல சித்திரவதைகளுக்கு உட்படுத்தினான். சிவபெருமான் அருளால் அப்பர் பெருமான் அத்துன்பங்களிலிருந்து விடுபட்டதுடன் சமணர்களை வென்றார். அப்பரின் பெருமையை உணர்ந்த குணபரனும் சைவ சமயத்தைத் தழுவினான். குணபரன் என்பது பல்லவன் முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப் பெயராகும். அவனது ஆட்சிக்காலம் 600-630 ஆகும். இதுவே அப்பர் காலத்தைப் பற்றி அறிவதற்கான புறச்சான்று ஆகும்.

இதே காலத்தில் தென் தமிழ் நாட்டில் அரசாட்சி புரிந்து வந்த பாண்டிய மன்னனும் சமணச் சார்பு கொண்டிருந்தான். அவனைச் சைவ சமயத்தில் பற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும் என அவனது அரசியான மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையாரும் விரும்பினர். அவ்விருவரின் அழைப்பின் பேரில் திருஞானசம்பந்தர் பாண்டிய நாடு சென்றார். இறையருளால் பாண்டிய மன்னனைப் பிடித்திருந்த வயிற்றுவலியைப் போக்கிய ஞானசம்பந்தர், சமணரை அனல்வாதம், புனல் வாதம் ஆகியவற்றில் வென்றார். "கூன் பாண்டியன்" என்று அழைக்கப்பட்ட பாண்டிய மன்னனின் உள்ளக் கூனம் நீங்கியது. அம் மன்னனும் சைவ சமயத்தைப் பேணத் தொடங்கினான். இவ்வாறு ஞானசம்பந்தரால் சைவனாக்கப்பட்ட பாண்டியனே "நெல்வேலி நின்ற நெடுமாறன்" எனப்படும் பாண்டியன் மாறவர்மன் இராஜசிம்மன் (640-690). இவ்வாறு திருஞானசம்பந்தரும். திருநாவுக்கரசரும் சமகாலத்தவர் என்பதை அறியலாம். தல யாத்திரை புரிகையில் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துப் போற்றினர் திருமறைக்காடு முதலிய தலங்களுக்கு இருவரும் சென்ற செய்தியைத் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடுகிறது. கி பி ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மன் வாதாபி மீது போர்தொடுத்து அந்நகரை எரியூட்டினான். (கி பி 647) பல்லவர்களின் தானைத்தளபதியாகச் சென்ற பரஞ்சோதி, பிற்காலத்தில் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டுச் சிறுத்தொண்ட நாயனார் என்று அழைக்கப்பட்டார் அவர் திருஞான சம்பந்தரைச் சந்தித்த நிகழ்ச்சியைப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது எனவே, திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த செய்தி ஊர்ஜிதம்ஆகிறதுதங்கள் காலத்தில் சிறப்புடன்திகழ்ந்தசிவத்தலங்களுக்குசென்றுவழிபட்ட அப்பரும் சம்பந்தரும் திருவான்மியூருக்கு வந்து பதிகம்பாடியதால் ஏழாம் நூற்றுண்டில் திருவான்மியூர் ஒரு பெருமைக்குரிய தலமாகத் திகழ்ந்திருத்தல்வேண்டும் இவ்விருவரும் பாடிய பாடல்கள் திருவான்மியூரின் இயற்கைவளம், செல்வச்சிறப்பு, அவ்வூரிள்ள அடியார், பெண்டிர் ஆகியோரின் மாண்பு, திருவான்மியூர் ஈசரின் பெற்றி ஆகியவற்றை எடுத்தியம்புகின்றன "தென் பால் வையமெலாம் திகழும் திருவான்மியூர்" என்றும், "திண்டேர் வீதியதார் திருவான்மியூர்" என்றும் "பொருதுவார் கடல் எண்டிசை யுந்தரு வாரியால் திரிதரும் புகழ் செல்வமல்குந் திருவான்மியூர்" என்றும் தீதில் அந்தணர் ஓத்தொழியாத் திருவான்மியூர்" என்றும் சம்பந்தரின் பாடல்கள் குறிப்பிடுகின்றன

-o-

# சோழர் காலம் (கி.பி. 10 முதல் 14ம் நூற்றுண்டு வரை)

பல்லவ அரசின் இறுதிக் காலத்தில் பல்லவன் அபராஜிதனிடம் பணிபுரிந்த விஜயாலயன் என்பான் சோழ அரசை நிறுவினான், தமிழக ஆலய வரலாற்றில் பிற்காலச் சோழரின் காலம் ஒரு பொற்காலமாகும். எண்ணற்ற புதிய ஆலயங்கள் எழுந்தன பழைய ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. இசை, நடனம், ஓவியம் சிற்பம் ஆகிய கலைகளுக்கு அதிக அளவில் ஆதரவு அளிக்கப்பட்டது. லயங்கள் வழிபாடு தலங்களாக மட்டுமின்றி கலைக் கூடங்களாகவும் மாறின. ஆலயங்களில் வி ள க் கு எரிப்பதற்கும் வழிபாடு நடைபெறுவதற்கும் நிலம், ஆடு, பொன் போன்ற பொருட்கள் கொடையாக அளிக்கப்பட்டன. ஆலயங்களுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிய விவரங்கள் கல்வெட்டிலும் செப்பேட்டிலும் பொறிக்கப்பட்டன. மக்களின் பொதுவாழ்வில் சமயம் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றது.

தொண்டை மண்டலம் சோழரின் ஆட்சிக்கு உட்பட்டதால் அங்குள்ள கோயில்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டன திருவான்மியூர் ஆலயத்திலுள்ள திரிபுரசுந்தரியம்மனின் கருவறைச் சுவர்களில் சோழமன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன முதலாம் இராஜேந்திரன் (1012-44) இராஜாதிராஜன் (1018-54) இராஜேந்திர சோழ தேவர் (1051-63) ஆகிய மன்னர்களின் காலத்தில் எழுந்த எழு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. பரகேசரிவர்மன் உடையார் இராஜேந்திர தேவனின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம் "ஜெயங்கொண்ட சோழமண்டலத்தைச் சார்ந்த புலியூர்க் கோட்டத்திலுள்ள கோட்டூர் தேவதானமாகத் திருவான்மியூர் விளங்கியதாக அறியலாம்.

சென்னை நகரின் பிற பகுதிகளிலுள்ள, ஆலயங்களிலுள்ள சில கல்வெட்டுக்கள் திருவான்மியூர்உடைய நாயனாருக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு சோழர் ஆட்சிக்காலத்தில் திருவான்மியூர் மிகவும் புகழ் வாய்ந்த புண்ணிய ஸ்தலமாகத் திகழ்ந்திருந்தது.

சோழன் அநபாயனின் முதலமைச்சராகத் திகழ்ந்த அருள்மொழித்தேவர், சிவனடியார்களின் வாழ்க்கை வரலாற்றை அம் மன்னனுக்கு எடுத்துரைத்தார். சைவ சமயத்தில் பெரும் ஈடுபாடு

ஏற்பட்டதால் அநபாய சோழனும் திருத்தொண்டர்களின் வரலாற்றை ஒரு காப்பியமாக இயற்றுமாறு தனது அமைச்சருக்கு அன்புக் கட்டளையிட்டான். இதன் பயனாகத்" திருத்தொண்டர் புராணம்" என்ற சிறந்த நூல் தோன்றியது. அருள்மொழித் தேவரும் "சேக்கிழார்" எனச் சிறப்பிக்கப்பட்டார். பெரியபுராணத்தை அரங்கேற்றிய அநபாய சோழன் இரண்டாம் குலோத்துங்க சோழனேயாவான் (1133-1150) என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அப்பரும், சம்பந்தரும் திருவான்மியூர் ஈசரை வழிபட்ட நிகழ்ச்சியைத் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடுகிறது. கடலில் தோன்றும் ஓசையுடைய நீண்ட அலைகள் மோதும் கரையினையுடைய திருவான்மியூரிலுள்ள "மிக்குயர்ந்த கோபுரத்தைச்" சேக்கிழாரின் பாடல் குறிப்பிடுவதால் அவர் காலத்தில் அழகிய கோபுரத்தை ஆலயம் பெற்றிருந்ததாக அறியலாம்.

-OXO-

## விஜயநகர மன்னர்கள் காலம்

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் பிரபு தேவராயன் எனும் விஜயநகர மன்னன் காலத்தில் வாழ்ந்தவர் அருணகிரிநாதர். திருவண்ணாமலையில் தோன்றிய இப்பெருமான் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டார். முருகப்பெருமான் மீது திருப்புகழ் திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், ஆகிய நூல்களைப் பாடினார். மும்மூர்த்திகளும் தானாகி, அவர்கட்கும் மேலாகி எல்லாமுமாகி நின்ற தத்துவமே முருகன் என அவர் கருதினார். முருகனையே முழு முதற்கடவுளாகக் கண்ட அப்பெருமான், பல தலங்களுக்குச் சென்று அங்குள்ள முருகப் பெருமானை வழிபட்டுப் போற்றினார். திருவான்மியூருக்கும் வருகை தந்த அருணகிரிநாதர் திருவான்மியூர் மருவு முருகப் பெருமான் மீது அழகிய பாடலைப் பாடியுள்ளார். "மாகமுற மணிமாளிகை மாடமுயர் திருவான்மியூர்" என அப்பாடல் குறிப்பிடுவதால் அருணகிரிநாதர் காலத்திலும் திருவான்மியூர் ஒரு உன்னதமான இடத்தைப் பெற்றிருந்ததாக அறியலாம்.

—X—

## பிற்காலம்

பதினாறு பதினேழு நூற்றாண்டுகளில் சைவ சமய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியவர்களுள் அப்பைய தீட்சிதர் (1554-1626) குறிப்பிடத்தக்கவர். இப்பெருமான் ஆரணிக்கு அருகிலுள்ள அடைப்பாலம் எனும் ஊரில் அவதரித்தவர். பலதுறைகளில்தேர்ச்சி பெற்ற இவர்ஸ்ரீகண்டரின் சைவ பாஷ்யத்திற்குஉரை எழுதினார். இராமாயணம் மகாபாரதம் ஆகிய இரு காவியங்களையும் சுருக்கமாக எழுதினார். சிவபெருமான் மேல்தீவிர அன்பு கொண்டிருந்த அப்பைய தீட்ச்சிகர் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற கொள்கையைத் தான் எழுதிய இராமாயண, மகாபாரத உரைநடை நூல்களில் குறிப்பிடுகிறார். வேலூரில் ஆட்சி புரிந்த சின்ன பொம்மன் இவருக்குக் கனகாபிஷேகம்செய்வித்தான். விஜயநகர மன்னர்களும், தஞ்சை நாயக்க மன்னர்களும் இவருக்கு ஆதரவு அளித்தனர். சிறந்த ஞானியான அப்பைய தீட்சிதர் திருவான்மியூருக்கு அண்மையிலுள்ள வேதச் சிரேணி (வேளச்சேரி) யில் தங்கி யாகம் புரிந்தாராம். நாள்தோறும் வேதச் சிரேணியிலிருந்து திருவான்மியூர் வரை கால்நடையாகச் சென்று மருந்தீசரை வழிபட்டதாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது அப்பைய தீட்சிதர், அவரது மனைவியார் ஆகியோரின் திருவுருவங்கள் ஆலயத் தூணில் இடம் பெற்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

## பத்தொன்பது, இருபது நூற்றாண்டுகள்

முருகனடியார், திருப்புகழ் சுவாமிகள், முருகதாஸ சுவாமிகள் போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்ற வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839-1898) திருவான்மியூர் ஈசரை வழிபட்டு அவர்மீது பாடல்களைப் பாடியுள்ளார். அவை இன்னும் அச்சாகாமல் எழுத்துப் பிரதியாகவே உள்ளன. இராமேஸ்வரத்தில் பிறந்து பல தலங்கள் சென்று வழிபட்ட பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் (1850-1929) திருவான்மியூர் மருந்தீசரைப் புகழ்ந்து ஒரு பதிகம் பாடியுள்ளார்.

இவ்வாறு ஏழாம் நூற்றாண்டு முதல் இந்நூற்றாண்டுவரை திருவான்மியூர் சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கிவருவது தெளிவாக விளங்கும்.

# 7

# சிற்பங்கள்

கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன"

என்று திவாகர நிகண்டு சிற்பம் அமைக்கும் பொருள் பற்றிக் கூறுகிறது. காவியப் புலவர்கள் கற்பனையால் கவிதை வடிப்பது போலவே சிற்பக் கலைஞனும் சிற்பம் வடிக்கிறான். இயற்கை உருவங்களை மட்டுமின்றித் தெய்வம், அரக்கர் போன்ற உருவங்களையும் சிற்பி அமைக்கிறான். தமிழகத்தில் சமயத்தை அடிப்படையாகக் கொண்டே சிற்பக்கலை வளர்ந்ததால் தெய்வச் சிற்பங்களே அதிகமாக உள்ளன.

சிற்பங்களை முழு உருவச் சிற்பம் என்றும், புடைப்புச் சிற்பம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். முன்புறம், பின்புறம் முதலிய முழு உருவமும் தெரிய அமைவது முழு உருவச் சிற்பம். ஒரு புறம் வெளியில் தெரியும்படியாகவும், பின்புறம் சுவர்களில் படிந்திருப்பது போலவும் அமைந்திருப்பன புடைப்புச் சிற்பங்கள். திருவான்மியூர் மருந்தீசர் ஆலயத்தில் அமைந்துள்ள சிற்பங்கள் பற்றிய விவரங்களை இனி காணலாம்.

# தனிச்சிற்பங்கள்

## தெய்வீகச் சிற்பங்கள்

### விநாயகரும், முருகனும்:

இராஜகோபுரம், மகாமண்டபம் ஆகியவற்றின் முன்பு இரு புறங்களிலும் விநாயகர், முருகன் ஆகியோரின் உருவங்கள் தனியாகவோ, அல்லது சிறு சந்நிதிகளிலோ இடம் பெற்றிருப்பது வழக்கம். மருந்தீஸ்வரர் ஆலயத்தில் தூண்களில் இவ்விருவரும் சிறு சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு வாயிலிலுள்ள இராஜகோபுரத்தின் கீழ்ப் பகுதியில், வலது புறத்தில் விநாயகரின் உருவமும் இடது புறத்தில் முருகரின் உருவமும் உள்ளன. தியாகராஜ மண்டப முகப்பிலுள்ள இரு தூண்களில் இவ்வாறே விநாயகரும், முருகப் பெருமானும் இடம் பெற்றுள்ளனர். விநாயகர் மூஷிக வாகனத்தின் மீது அமர்ந்துள்ளார்; குமரக் கடவுள் மயில் மீது அமர்ந்த கோலத்தில் உள்ளார் தியாகராஜர் சந்நிதிக்கு முன்புள்ள கமல விநாயகரின் உருவத்திற்கு மேல், மூஷிக வாகனத்தில் அமர்ந்த கணபதியின் உருவம் சுவரில் பொறிக்கப் பட்டுள்ளது. இதே மண்டபத்திலுள்ள வேலேந்திய முருகரின் உருவம் சிறப்பாக உள்ளது. மயில் மீதமர்ந்தகோலத்திலுள்ளமுருகபெருமானைஅம்மன் சந்நிதியின் வெளி மண்டபத்திலும், முருகப் பெருமான் சந்நிதிக்கு வெளியே உள்ள தூணிலும் காணலாம். மூஷிக வாகனத்தில் அமர்ந்த விநாயகரை அம்மன் சந்நிதி மகாமண்டபத்திலும், முருகப் பெருமானின் சந்நிதிக்கு வெளியேயுள்ள தூண்களிலும் காணலாம்.

### சர்ப்பத்தின் மீது நடனமாடும் விக்னேஸ்வரர் :

படம் பிடித்தாடும் சர்ப்பத்தின் தலைமீது காலையூன்றிய வாறு விநாயகர் நடனமாடுவது அபூர்வமான காட்சியாகும். அம்மன் சந்நிதி வெளிமண்டபத்திலுள்ள தூணில் இத்தகைய ஒரு சிற்பம் அமைந்துள்ளது.

### பழனியாண்டவர் :

ஒரு கையில் கோலேந்தியும், மறு கையை இடுப்பில் ஊன்றியவாறும் காட்சியளிக்கும் பழனியாண்டவரைத் தியாகராஜ மண்

டபத்தில் காணலாம். இடையிலே கோவணமும், கழுத்திலே உருத்திராக்கமும் அணிந்த இப்பெருமானின் தோற்றம், அற்பப் பொருட்களின் மீதுள்ள பற்றைத் துறந்த ஞானியைப் போல உள்ளது. இப்பெருமான் பக்தர்களின் வழிபாட்டிற்கு உரியவராக இருக்கின்றார்.

## *ஆஞ்சநேயர் :*

தீவிர இராம பக்தரும், சிறந்த பலசாலியுமான ஆஞ்சநேயர் சைவ, வைணவ பேதங்களைக் கடந்து நிற்கிறார். இரு கரங்களையும் கூப்பியவாறு நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் இப்பெருமானின் உருவம், பழனியாண்டவருக்கு எதிரிலுள்ள ஒரு தூணில் இடம் பெற்றுள்ளது. இராமஜெயம் எனும் தாரக மந்திரத்தைக் காகிதத்தில் எழுதி மாலையாக அணிவித்து இப்பெருமானை வழிபடும் பக்தர்கள் ஏராளம். மேலும் அம்மன் சந்நிதிக்குப் பின்புறத்திலுள்ள 4 தூண்களில் வெவ்வேறு நிலையிலுள்ள ஆஞ்சநேயரின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மன் சந்நிதி வெளி மண்டபத் தூண் ஒன்றிலும் ஆஞ்சநேயரின் உருவம் உள்ளது.

## *சிவபெருமானின் திருக்கோலங்கள் :*

மானும், மழுவும் ஏந்திய கோலத்திலுள்ள சிவபெருமானின் திருவுருவங்கள் அம்மன் சந்நிதி வெளி மண்டபத்திலும், மகாமண்டபத்திலும் உள்ள தூண்களில் அமைந்துள்ளன.

## *மாதொரு பாகன் :*

ஆணுக்குப் பெண் சமம் என்பதை உணர்த்தவே பார்வதி தேவிக்கு இடப்பாகத்தில் சிவபெருமான் இடம் அளித்தார். இவ்வாறு இடப்புக்கத்தில் பார்வதி அமர, இருவரையும் சுற்றிப் பூத கணங்களும், முனிவர்களும் சூழ்ந்துள்ளனர். நந்திதேவர் உடுக்கையை ஒலிக்கிருர் அம்மன் சந்நிதி வெளிமண்டபத்தில் இந்த அற்புதக் காட்சியைக் காணலாம்.

இடப வாகனத்தில் அமர்ந்துள்ள ஈசனின் அருகே உமையம்மையும் அமர்ந்துள்ளார். இக்கோலத்தை அம்மன் சந்நிதி மண்டபத்தின் தூண்களிலும், முருகப் பெருமான் சந்நிதியிலுள்ள தூண்களிலும் காணலாம்.

## தென்முகக் கடவுள் :

கல்லால மரத்தினடியில் அமர்ந்த கோலத்தில் சனகாதி யருக்கு உபதேசம் செய்யும் தட்சிணாமூர்த்தியின் அழகிய தோற்றம் அம்மன் சந்நிதி வெளிமண்பத் தூணில் இடம் பெற்றுள்ளது.

## அம்பலவாணர் :

முயலகனின் உடலைத் தரையில் கிடத்தி, அவன் மீது நடனமாடும் நடராஜ மூர்த்தியின் அழகிய கோலம், அம்மன் சந்நிதி மகாமண்டபத் தூணில் அமைந்துள்ளது

## இலிங்கங்கள் :

ஒரு நாகம் தனது தலையை நீட்டி ஒரு இலிங்கத்திற்குக் குடைபிடிக்கும் காட்சியைத் தியாகராஜ மண்டபத்திலுள்ள ஒரு தூணில் காணலாம்; மற்றொரு தூணில் ஒரு அழகிய இலிங்கம் பொறிக்கப்பட்டுள்ளது.

## சரபேஸ்வரர்

இரணியனை மாய்த்தபின் நரசிம்மர் உக்கிரம் அதிகம் கொண்டு உலகோரை நடுங்கச்செய்தார். வானவரின் வேண்டுகோளின் பேரில் பறவை, மிருகம், மனிதன் ஆகிய மூன்று உயிரினங்களின் அம்சங்களும் நிறைந்த சரபேஸ்வரர் கோலத்தில் சிவபிரன் தோன்றி நரசிம்மரை அடக்கினர் இரு பறவைகளின் முகங்களுடன் தோன்றும் சரபரின் உருவம் அம்மன் சந்நிதி வெளி மண்டபத் தூணில் உள்ளது.

## அம்மனின் திருவுருவங்கள்

நின்ற, அமர்ந்த கோலங்களிலுள்ள தேவியின் திருவுருவங்களை அம்மன் சந்நிதியிலுள்ள தூண்களில் காணலாம். இரு கரங்களில் மலர் மொட்டுக்களை ஏந்தியவாறு தேவி காட்சியளிக்கிறார்.

## காளி

கையில் ஆயுதமேந்தியவாறு நடனமாடும் காளியின் தோற்றம் காண்போரை அச்சுறுத்துமாறு உள்ளது. இந்த அழகிய சிற்

பத்தை அம்மன் சந்நிதியிலுள்ள ஒரு தூணில் காணலாம். சிம்மத்தின் மீது தாண்டவமாடும் அன்னையின் உருவத்தை வெளிமண்டபத்தூணில் அமைத்துள்ளனர்.

## திருமாலின் திருவுருவங்கள்

சிவபெருமான் மூல மூர்த்தியாக எழுந்தருளியுள்ள இக்கோயிலில், திருமாலின் உருவங்களும், அவர் புரிந்த லீலைகளை விளக்கும் சிற்பங்களும் இடம் பெற்றிருப்பது இக்கோயிலைக் கட்டியவர்களின் பரந்த சமய நோக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

## நின்ற கோலத்தில் திருமால்

சங்கு, சக்கரம், கதை ஆகிய ஆயுதங்களை மூன்று கரங்களில் ஏந்தியவாறும், மற்றொரு கரத்தை அபயம் அளிக்கும் நிலையிலும் கொண்டுள்ள திருமாலின் அழகுமிகு தோற்றம் அம்மன் சந்நிதி வெளிமண்டபம், மகா மண்டபம், முருகன் சந்நிதி ஆகிய இடங்களிலுள்ள தூண்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஆதிசேஷன் குடைபிடிக்க, அமர்ந்த கோலத்திலும் விஷ்ணுவை ஒரு தூணில் அமைத்துள்ளனர்.

## கோவர்த்தன கிரிதாரி

தன்னை வழிபட மறந்த ஆயர்பாடி மக்கள் மீது கோபம் கொண்ட இந்திரன் கடுமையாக மழை பொழியச் செய்தான். மழையால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களைக் காக்கும் பொறுப்பைக் கண்ணபிரான் மேற்கொண்டார். கோவர்த்தன மலையைத் தமது சிறுவிரலால் தூக்கிக் குடைபோலப்பிடித்துக் கொண்டார். மக்களும் ஆநிரைகளும் இக்குடையின் கீழ் ஒதுங்கிக் கொண்டனர். இவ்வாறு ஆயர்பாடி மக்களைக் காத்த கோவர்த்தனகிரிதாரியின் சிற்பத்தை அம்மன் சந்நிதி வெளிமண்டபத் தூணில் அமைத்துள்ளனர்.

## காளியமர்த்தனர்

காளியமடுவை நஞ்சாக்கி, மக்களுக்கு அல்லல் அளித்த காளியன் எனும் சர்ப்பத்தை அடக்கி, அதன்மீது நடனமாடும் கண்ணனின் அற்புதத் தோற்றத்தை மற்றொரு தூணில் கண்டு களிக்கலாம்.

### குழலூதும் கண்ணன்

கண்ணனின் வேய்ங்குழல் நாதத்தைக் கேட்ட மக்கள் மட்டுமின்றி ஆநிரைகளும் கட்டுண்டன. குழலில் மதுர இசையை எழுப்பும் கண்ணனுக்கு அருகே ஆநிரைகள் நிற்கும் அற்புதக் காட்சி மற்றொரு தூணில் இடம் பெற்றுள்ளது.

### நரசிம்மர்

அடியவர்களுக்குக் கொடுந்துன்பம் அளித்து வந்த இரணியனை அழிக்கும் பொருட்டு மனித உடலும், சிம்மத்தின் முகமும் கொண்ட நரசிம்மராகத் திருமால் அவதாரம் எடுத்தார். இரணியனை வென்று அவனது உடலை மடியில் கிடத்தி, நகத்தால் உடலைக் கிழித்து அந்த அரக்கனை மாய்த்தார். இவ்வாறு உக்கிர அவதாரம் கொண்ட நரசிம்மரின் திருவுருவத்தை அம்மன் சந்நிதி மண்பத் தூண்களில் தரிசிக்கலாம்.

### மச்சாவதார மூர்த்தி

அம்மன் சந்நிதி வெளிமண்டபத் தூணில் மச்சாவதார மூர்த்தியின் உருவம் உள்ளது. கடலில் ஹயக்ரீவனுல் அமுத்தப்பட்ட வேதங்களை மீட்ட இம்மூர்த்தியின் உருவம் வணப்புமிக்கது.

## அடியார்களும், பிறரும்

### காமதேனு ஈசரை வழிபடும் காட்சி


கானகமாக இருந்த இப்பதியில் தோன்றிய சுயம்பு இலிங்கத்தைக்காமதேனு பால் சொரிந்து அபிஷேகம் செய்து பூஜித்தது. தல புராணத்தில் இடம் பெற்றுள்ள இச்சம்பவம் சிற்பவடிவில் மருந்தீசர் மகாமண்டபத்திலுள்ள தூண் ஒன்றில் அமைந்துள்ளது.




குதிரை வீரன்



வால்மீகி முனிவர்



தேவி



சர்ப்பத்தின் மீது நடனமாடு



இடபவாகனத்தில் சிவபெருமானும் உமையன்னையும்



தட்சிணாமூர்த்தி

## அடியார்கள் ஈசனை வழிபடுதல்

மருந்தீசர் சந்நிதியை அடுத்துள்ள மண்டபத்திலுள்ள இரு தூண்களில் இரு சிவனடியார்கள் ஒரு லிங்கத்தை வழிபடும் காட்சியும், மரத்தின் அடியிலுள்ள சிவலிங்கத்தை ஒரு முனிவர் பூஜிக்கும் காட்சியும் வடிக்கப்பட்டுள்ளன. இது போன்ற சிற்பம் அம்மன் சந்நிதி மண்டபத்தூணிலும் உள்ளது. அம்மன் சந்நிதி மண்டபத்திலும், சுவாமி சந்நிதி மண்டபத்திலும் உருத்திராக்கம் பூண்ட அடியாரும், அவரது மனைவியும் கைகூப்பியவாறு காட்சி யளிக்கின்றனர். இக்கோயிலில் திருப்பணி செய்த அடியார் ஒருவரை அச்சிற்பங்கள் குறிப்பிடுவதாக ஊகிக்க இடமுள்ளது.

## கண்ணப்ப நாயனார்

ஈசனின் கண்ணில் உதிரம் பெருக்கெடுப்பதைப் பச்சிலைகளால் நிறுத்த முயன்று தோல்வியுற்ற கண்ணப்பர், தனது கண் ஒன்றைப் பெயர்த்து அவ்விடத்தில் அப்பினார். பக்தரின் பெருமையை உணர்த்த விரும்பிய ஈசர், தனது இரண்டாவது கண்ணிலும் உதிரம் பெருகச் செய்தார். தனது மறு கண்ணையும் பெயர்த்தெடுக்குமுன், அடையாளம் தெரிவதத்காக தன் காலை ஈசனின் புண்ணுற்ற கண் மீது ஊன்றிக் கொண்டார். தனது இரண்டாவது கண்ணைப் பெயர்த்தெடுக்க முயற்சித்த கண்ணப்பரை ஈசன் தடுத்தார். இக்காட்சி தியாகராஜர் மண்டபத்தூண் ஒன்றில் தத்ரூபமாகக் காட்டப்பட்டுள்ளது. சிவலிங்கத்தில் ஈசனின் முகம் தெரிகிறது; புண்ணுற்ற கண் மீது காலை ஊன்றியவாறு தன் கண்ணை நோக்கி அம்பை கண்ணப்பர் எடுத்துச் செல்கிறார். இலிங்கத்திலிருந்து ஈசரின் கரம் வெளிப்பட்டு அடியாரின் கையைப் பற்றுவதாகச் சிற்பம் உள்ளது. மிகவும் அற்புதமாக வடிக்கப்பட்டுள்ள இச்சிற்பத்திலுள்ள கண்ணப்பரின் கால் ஒடிந்து விட்டதால், அதனைச் செப்பனிட வேண்டும்.

## மங்கையர்

முற்காலதித்ல் இசை, நாட்டியம் போன்ற கலைகளை ஊக்குவிப்பதில் ஆலயம் பெரும்பங்கு ஏற்றிருந்தது. அம்மன் ஆலய மண்டபத் தூண்களில் அழகிய நங்கையரின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன. சிகை அலங்காரம் செய்யும் மங்கை நடனமாடும் மங்கை மற்றும் பல்வேறு நிலைகளிலுள்ள மங்கையரின் உருவங்கள் பல தூண்களில் அமைக்கப்பட்டுள்ளன.

## குதிரை மீதமர்ந்த வீரர்கள்

குதிரை, சிம்மம் ஆகிய வாகனங்கள் மீது ஆயுதபாணிகளாக அமர்ந்துள்ள வீரர்களின் முழு உருவச் சிற்பங்கள் அம்மன் சந்நிதி முன் மண்டபத் தூண்களை அலங்கரிக்கின்றன. குதிரைகள் இரு கால்களை மேலே தூக்கியவாறு பாயும் நிலையில் உள்ளன; அவற்றின் கடிவாளம், கழுத்தில் அணியப்படும் கயிறு, ஆபரணங்கள் ஆகிய அனைத்தும் மிக நுண்ணியமாகச் செதுக்கப்பட்டுள்ளன. குதிரைகளின் காலடி அருகே ஆயுதமேந்திய சில வீரர்கள் நின்று கொண்டிருக்கின்றனர். இதுபோன்றபிரம்மாண்டமான சிற்பங்கள் விஜயநகர, நாயக்க மன்னர்கள் காலத்தில் மதுரை, திருவரங்கம் போன்ற ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தொண்டைநாடு விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்ததால் அவர்களது காலத்தில் இச்சிற்பங்கள் தோன்றியிருக்கலாம்; அல்லது அவர்களது கலைப் பாணியைப் பின்பற்றிப் பிற்காலத்தில் இத்தகைய சிற்பங்களை அமைத்திருக்கலாம்.

## ஆயுதமேந்திய உருவங்கள்

குதிரை மீது வீரர் ஒருவர்அமர்ந்திருக்க, குதிரையின் கடிவாளத்தை வேறொருவர் பிடித்தவாறு அமைந்துள்ள சிறிய சிற்பம் தியாகராஜ மண்டபத்தூணில் உள்ளது. பலவித ஆயுதங்களை ஏந்தியுள்ள வீரர்களை அம்மன் சந்நிதியிலுள்ள தூண்களில் காணலாம் நாகத்துடன் போராடும் வீரன், மகுடி ஊதிச்சர்ப்பத்தை அடக்கும் பிடாரன், இசைக்கருவியை மீட்டும் பாணன் ஆகிய உருவங்கள் வெளிமண்டபத் தூண்களில் உள்ளன. இருகரங்களிலும் ஆயுதமேந்திய மூன்று தலை உருவம், பாதி மிருக உடலும், பாதி மனித உடலுமுடைய உருவம், கையில் மலையேந்திய வீரன், பரசு என்ற ஆயுதத்தை ஏந்திய வீரன் போன்ற சிற்பங்களை அம்மன் சந்நிதி மண்டபத் தூண்களில் கண்டு களிக்கலாம்,

## பிற ஜீவராசிகள்

தியாகராஜ மண்டபம், மருந்தீசர் மண்டபம், முருகன் சந்நிதி, அம்மன் சந்நிதி ஆகியவற்றிலுள்ள தூண்களில் சகல ஜீவராசிகளும் அமைக்கப்பட்டுள்ளன. சிம்மம், ஆமை, குரங்கு, பசு, குதிரை, மான் போன்ற மிருகங்களை இத்தூண்களில் காணலாம்.

## மன்னரின் சிற்பம்

அம்மன் சந்நிதிக்கு வெளியே மண்ணில் புதைக்கப்பட்ட ஒரு

கற்சிலே உள்ளது. இது ஒரு அரசனின் சிற்பம் என்று கருது கின்றனர்

-O-

# தொடர்ச்சிற்பங்கள்

## திருப்பாற்கடலில் அமுதம் பிறந்த காட்சி

மந்திரமலையை மத்தாகவும், வாசுகி எனும் நாகத்தைக் கயிறாகவும் கொண்டு தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த காட்சியை, அம்மன் சந்நிதி மண்டபத்தின் மேற்பகுதியில் காணலாம். சர்ப்பத்தை ஒரு பக்கம் பிடித்துள்ள அசுரர்களின் முகங்கள் வானரங்களைப் போல் உள்ளன. பல முனிவர்களும் வானுலக வாசிகளும் இக்காட்சியைக் காண்கின்றனர். இத் தொடர்ச்சிற்பம் ஒரு அரிய படைப்பாகும்.

## அம்மனின் பலவகைத் திருக்கோலங்கள்

அம்மன் சந்நிதி வெளிமண்டபத்தின் மேல் பகுதியில் வட்ட வடிவான அமைப்பின் நடுவே தேவி அமர்ந்துள்ளார். அச்சக்கரத் தைச் சுற்றி அம்மனின் பதினாறு வகைத்திருக்கோலங்கள் இடம் பெற்றுள்ளன. அம்மனைச்சுற்றி மூன்று புறங்களில் தேவகணங் களும், மற்றொரு புறத்தில் விநாயகரும் உள்ளனர்.

## வழிபாடு புரியும் அடியார்கள்

இதே மண்டபத்தில் அமைந்துள்ள இரு தொடர்ச்சிற் பங்களில் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் அடியாரும், அவ ரைச் சுற்றியுள்ள சிவனடியார்களின் உருவங்களும் அமைந்துள் ளன. மற்றொரு தொடர்ச் சிற்பத்தில் நடமாடும் அப்ஸரஸ்களும், இசைக் கருவிகளை இசைக்கும் இசை வாணர்களும் உள்ளனர். தேவகணங்கள், இயக்கர்கள், கந்தர்வர்கள், முனிவர்கள் போன் றோர் இக்காட்சிகளைக் கண்டு களிக்கின்றனர். அம்மன் சந்நிதி

மகாமண்டபத்தின் மேற்பகுதியிலும் இது போன்ற காட்சிகள் அமைந்துள்ளன.

இவ்வாறு அம்மனின் சந்நிதி பல அழகிய சிற்பங்களைத் தாங்கியவாறு ஒரு கலைக் கூடமாகவே காட்சியளிக்கிறது.

# சுதையுருவங்கள்

ஆலயத்தின் மேற்கு, கிழக்கு ஆகிய வாயில்களை அலங்கரிக்கும் கோபுரங்களின் மீது அழகிய வண்ணத்தாலான சுதைச் சிற்பங்கள் உள்ளன. அவ்வாறே மூலவர், தியாகராஜர், முருகர் நடராஜர், அம்மன் ஆகிய சந்நிதிகளுக்கு மேலே அமைந்துள்ள விமானங்களிலும் பல சுதைச் சிற்பங்கள் உள்ளன. மேலும் மண்டபங்களின் முகப்பிலும் அழகிய சுதைச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

அம்மன் கோயிலின் முகப்பில் விநாயகர், திருமகள், மலைமகள், கலைமகள், சுப்பிரமணியர் ஆகியோரின் அழகிய திருவுருவங்கள் சுதையாலமைக்கப்பட்டுள்ளன; இருபுறமும் இரு சிங்கங்கள் உள்ளன; விநாயகர் மூஷிக வாகனத்தின் மீதும், முருகர் மயில் வாகனத்தின் மீதும் அமர்ந்துள்ளனர். முருகப் பெருமானின் சந்நிதிக்கு மேல் வள்ளி, தெய்வயானை சமேதராகக்காட்சியளிக்கும் சுப்பிரமணியரின் சிற்பமும், அவர்களைச் சுற்றி இருபுறமும் மயில்களும் உள்ளன விஜயகணபதியின் சந்நிதியின் மேற்புறம் விநாயகரின் பல்வேறு உருவங்கள் ளன. பாலகணபதி, தருண கணபதி, பிங்கள கணபதி, உஜ்ஜிஷ்ட கணபதி, விஜய கணபதி, விக்ன கணபதி, க்ஷிப்ர கணபதி, ஊர்த்துவ கணபதி, நிருத்த கணபதி, மஹா கணபதி, லட்சுமி கணபதி, ஹேரம்ப கணபதி, ஆகிய அழகிய வண்ண உருவங்களை இங்கு காணலாம். தியாகராஜர் சந்நிதியின் முகப்பில் விநாயகர், முருகர் ஆகியோர் சூழச் சிவபெருமான் காட்சியளிக்கிறார். மேற்குக் கோபுரத்தை அடுத்து, மகாமண்டபத்தின் முகப்

பில் இடப வாகனராக சிவபெருமான், உமையன்னையுடன் காட்சி யளிக்கிறார். இருபுறங்களிலும் விநாயகரும், சுப்பிரமணியரும் உள்ளனர்.

கிழக்கு வாயிலிலும், மேற்கு வாயிலிலும் அமைந்துள்ள இராஜ கோபுரங்கள் ஐந்து நிலைகளை உடையன. பல அழகிய சுதைச் சிற்பங்கள் அவற்றை அலங்கரிக்கின்றன. ஐந்து நிலை களிலும் இரு துவார பாலகர்கள் வாயிலின் இருபுறமும் உள்ளனர். கோபுரத்தின் ஒரு பகுதியில் தட்சிணாமூர்த்தியின் ஐந்து உருவங் களும் இடம் பெற்றுள்ளன. மற்றொரு பகுதியின் நான்முகன் காட்சியளிக்கிறார். தேவ கணங்கள், முருகன், சிவனடியார்கள், விநாயகர், ஊர்த்துவ தாண்டவர் ஆகிய சிற்பங்களும் இரு கோபு ரங்களுக்கும் அழகூட்டுகின்றன.


-:x O x:-

# உலோகத் திருமேனிகள்

திருவிழாக் காலங்களிலும், விசேட நாட்களிலும் இறை வனை வாகனங்களில் உலா எடுத்துச் செல்வது வழக்கம். மூல வரின் பிரதிநிதியான உற்சவரை இத்தகைய உலாக்களில் எடுத் துச் செல்வதுண்டு. பஞ்சலோகம், (ஐம்பொன்), செம்பு போன்ற உலோகங்களால் உருவாக்கப்பட்ட இந்த உற்சவர்கள் உருவத்தில் சிறியராகவும், பேரழகு மிக்கவராகவும் இருப்பர்.

அம்பலத்தில் இடம் பெற்றுள்ள நடராஜர், சிவகாமியன்னை ஆகியோரின் திருவுருவங்கள் பெரும் வனப்பு மிக்கன. பள்ளி யறையில் எழுந்தருளும் சுவாமி, அம்பாள், திரிபுரசுந்தரி அம் மனின் உற்சவரான சுக்கிரவார அம்மன் ஆகிய உருவங்கள் சிறப் பாக அமைக்கப்பட்டுள்ளன. தியாகராஜ மண்டபத்திலுள்ள தியா கராஜர், அம்மன் ஆகிய இரு உருவங்களும் எழில் மிக்கன.

இவை தவிர சுமார் இருபது ஐம்பொன் சிலைகள் சுவாமி சந்நிதியின் வடமேற்கு மூலையிலுள்ள மேடையில் வைத்துப் பூட்டப்பட்டுள்ளன. சண்டேசர், வான்மீகர், சுந்தரமூர்த்தி நாயனார், அதிபத்த நாயனார், திருநாவுக்கரசர், அஸ்திராயர், திருஞானசம்பந்தர், நான்முகன், மகாவிஷ்ணு, மகாலட்சுமி, கலியாணசுந்தரர், பாவை விளக்கு, பள்ளியறை ஸ்ரீபாதம், ரிஷபம், கணம்புல்ல நாயனார், இயற்பகை நாயனார், தில்லைவாழ் அந்தணர், போக சக்தி அம்மன் ஆகிய உருவங்கள் இவற்றுள் அடங்கும். பிரதோஷ நாயகர், அம்மன், சந்திரசேகரர், அம்மன், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, விநாயகர் ஆகிய மூர்த்திகள் பிரபையுடன் காட்சியளிக்கின்றனர். திரு. இராமன் செட்டியார் கட்டளையைச் சேர்ந்த நடராஜர், சிவகாமி ஆகியோரின் சிறிய உருவங்கள் கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளன.



# 8

# கல்வெட்டுக்கள்

## தோற்றம்

கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் பழக்கம் மிகப்பழங் காலம் தொட்டே நிலவி வருகிறது போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்காக நடுகற்கள் நடப்பட்டு, அவற்றில் அவ்வீரர்களின் வீரச்செயல்கள் குறிப்பிடப்பட்டன. இத்தகைய நடுகற்கள் ஏராள மாகக் கிடைத்துள்ளன மேலும் அகநானூறு, தொல்காப்பியம் ஆகிய நூல்களில் இதுபற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன. கல் வெட்டுக்கள், மங்கல வாசகம், சாசனம் எழுதப்பட்டகாலம்,சாசனச் செய்தி, கையெழுத்துக்கள், ஓம்படைக் கிளவி என்று ஐந்து பகுதி களாகப் பிரிக்கப்பட்டன.

## அமைப்பு

கல்வெட்டின் ஆரம்பத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீ (மங்களம் உண்டா கட்டும்) போன்ற மங்கள வாசகம் இடம் பெறும். சில கல்வெட்டுக் களில் கொடையளிக்கும் மன்னனின் முன்னோர் பற்றிய பரம் பரைக் கதைகள், புராணங்கள் போன்றவை இடம் பெறும். சோழ மன்னர் காலம் முதல் மெய் கீர்த்தி என்ற பகுதி சேர்க்கப்பட்டது. இதில் மன்னனின் வீரச் செயல்கள், வெற்றிகள் போன்றன குறிப் பிடப்பட்டன. அடுத்து எந்த ஆட்சியாண்டில் கல்வெட்டு எழுதப் பட்டது எனும் செய்தியும், அதற்கு ஈடான சக வருடம் அல்லது

கொல்லம் ஆண்டு குறிப்பிபடப்பட்டது; அதன்பின் கல் வெட்டு பொறித்ததன் நோக்கம் வெளியிடப்படும். கோயில்களுக்கு நிலம் தானமாக அளித்தல், விளக்கு எரிப்பதற்கு ஆநிரைகள் வழங்கல், நிலம் விற்றல் போன்ற செய்திகளே கல்வெட்டுக்களில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. கல்வெட்டு அளித்தவன், அதனை எழுதிய ஊர்க் கணக்கன், அதனைக் கல்லில் பொறித்த வன் ஆகியோரின் கையொப்பம் கல்வெட்டில் இடம்பெறும் இறுதிப் பகுதியில் அக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கொடை யைத் தொடர்ந்து அளிப்பதால் பெறும் நற்பலன்களையும், அதனை மீறுபவன் பெறும் தீமைகளையும் குறிப்பிடுவர். இக்கல்வெட்டுக் கள் மூலம் வரலாறு, அரசியல், சமுதாயம், சமயம், பொருளா தாரம் சம்பந்தப்பட்ட செய்திகளை அறியலாம்.

கல்வெட்டுக்கள் பெரும்பாலும் கோயிலின் உட்பகுதிகளில் எழுதப்பட்டன. கோயில்கள்ச் செப்பனிடப்படும்போது பழைய கல் வெட்டுக்களை அப்படியே பொறிக்க வேண்டியது அவசியம். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் பல கோயில்களைப் புதுப்பித்த செம்பியன் மாதேவி இதனை நன்கு உணர்ந்திருந்தார். அவர் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட கோயில்களில் பழைய கல்வெட்டுக்களைத் திரும் பப்பொறித்தனர்; அவ்வாறு செய்ய இயலாத இடத்தில் அவற்றை மறுபடி எழுதச் செய்தார் பிற்காலத்தில் ஆலயத்தைப் புதுப்பித் தோர் பலர் இந்த நெறிமுறைகளைக் கடைப்பிடிக்காததால் கோயில்கள் வரலாற்றைச் சரிவரத் தெரிந்து கொள்ள இயல வில்லை. மயிலை கபாலீஸ்வரர் கோயிலில் ஒரு கல்வெட்டு தலைகீழாகப் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

திருவான்மியூர் ஆலயத்தில் திரிபுரசுந்தரி அம்மனின் கரு வறையின் புறச் சுவர்களில் சோழ மன்னர்கள் இராஜேந்திர சோழ தேவன் (1051-63) இராஜேந்திர சோழன் (1012-46), முதலாம் இராஜாதிராஜன் (1044-52) போன்றோரின் கல்வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன 1017 முதல் 1061-ம் ஆண்டுவரையி லுள்ள நாற்பத்து நான்கு ஆண்டுகளில் பொறிக்கப்பட்ட கல்வெட் டுக்கள் படியெடுக்கப்படடுள்ளன. இப்பகுதி ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க்கோட்டத்தைச் சார்ந்திருந்தது. இங் குள்ள இறைவனின் திருநாமம் திருவான்மியூர் உடைய மகாதே வர் ஆகும். இறைவனுக்கு மாலை சூட்டிக் கொடுப்பவருக்குப் பணமும். கோயிலுக்காக ஆடுகளும், பூஜைக்காக நிலமும் அளிக் கப்பட்டன. 1061-ம் ஆண்டில் எழுதப்பட்ட இராஜேந்திர சோழ தேவனின் கல்வெட்டில் இவ்வூரைச்சேர்ந்த சிவபிரா மணர்கள் பற் றிய குறிப்பு உள்ளது. இராஜேந்திர சோழன் இக்கோயிலின் மீது அதிக அளவில் பற்றுடையவனாக இருந்தான். இறைவனுக்கு

மலர் அளிக்கவும், இறைவிக்கு விளக்கு ஏற்றவும், பொன், பொருள், ஆநிரை போன்றவற்றை அம்மன்னன் அளித்தானாம். தன்னுடைய ஆட்சி இறுதியில் தனக்கேற்பட்ட நோய் நீங்கும் பொருட்டு அம்மன்னன் இங்கு வழிபட்டதாகக் கூறுவர்.

சென்னை மாநகரிலுள்ள பிற ஆலயங்களில் உள்ள சில கல்வெட்டுக்களில் திருவான்மியூர் பற்றிய குறிப்புகள் உள்ளன. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், மயிலை கபாலீஸ்வரர் கோயில், மயிலை விருபாக்ஷீஸ்வரர் கோயில், வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயில் ஆகியவற்றிலுள்ள கல்வெட்டுக்கள் திருவான்மியூர் உடைய நாயனாருக்கு விளக்கு எரிப்பதற்கும், வழிபாடு செய்வதற்கும் பொன், காசு, ஆநிரைகள், நிலம் போன்றன கொடையாக வழங்கப்பட்ட செய்திகளைத் தெரிவிக்கின்றன. இவற்றின் முழு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

# திருவான்மியூர் ஆலயத்திலுள்ள கல்வெட்டுக்கள்

**(1) எண். 77 ஆண்டு 1909**

### இடம் :

திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் மேற்குப்புறச் சுவரின் வெளிப்புறம்

### காலம் :

சோழமன்னன் பரகேசரி வர்மன் எனப்படும் உடையார், ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவனின் (1011-43) பதினான்காம் ஆட்சியாண்டு.

### செய்தி :

ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்தின் உட்பிரிவான கோட்டூர் நாட்டிலுள்ள தேவதானமான திருவான்மியூரிலுள்ள மகாதேவர் ஆலயத்தில் விளக்கெரிப்பதற்காக ஆடுகளைக் கொடையளித்த செய்தி.

(2) எண். 78 ஆண்டு 1909

**இடம் :**

திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் மேற்குப்புறச் சுவரின் வெளிப்புறம். கல்வெட்டு சிதைந்துள்ளது.

**காலம் :**

இராஜகேசரிவர்மன் எனப்படும் உடையார் ஸ்ரீ இராஜாதி ராஜதேவரின் (1018-52) இருபத்தேழாம் ஆட்சியாண்டு.

**செய்தி :**

ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டத்தின் உட்பிரிவான கோட்டூர் நாட்டுத் தேவதானமான திருவான்மியூரிலுள்ள மகாதேவர் ஆலயத்திற்கு நிலதானம் அளித்த செய்தி.

(3) எண். 79 ஆண்டு 1909

**இடம்**

திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் கிழக்குச் சுவரின் வெளிப்புறத்தில் உள்ளது.

**காலம் :**

உடையார் ஸ்ரீஇராஜேந்திர சோழ தேவரின் முப்பத்து மூன்றாம் ஆட்சியாண்டு. கல்வெட்டு முழுமையாக இல்லை.

(4) எண் 80 ஆண்டு 1909

**இடம் :**

திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் கிழக்குச் சுவரின் வெளிப்புறம்.

**காலம் :**

பரகேசரிவர்மன் எனப்படும் உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவரின் (1050-63) பதினொன்றாம் ஆட்சியாண்டு.

**செய்தி :**

திருவான்மியூரைச் சேர்ந்த சிவபிராமணர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(5) எண் 81 ஆண்டு 1909

**இடம் :**

திரிபுரசுந்தரி ஆலயத்தின் கருவறையின் கிழக்குச் சுவரின் வெளிப்புறம்.

**காலம் :**

பரகேசரிவர்மன் எனப்படும் இராஜேந்திர சோழ தேவரின் (1011-43) ஆறாம் ஆட்சியாண்டு

**செய்தி :**

திருவான்மியூர் மகாதேவர் கோயிலில் மாலை தொடுப்பதற்காகக் கொடை அளித்த செய்தி

(6) எண் 82 ஆண்டு 1909

**இடம் :**

திரிபுரசுந்தரி கோயில் கருவறையின் கிழக்குச்சுவரின் வெளிப்பகுதி

**காலம் :**

பரகேசரிவர்மன் எனப்படும் உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவரின் (1011-43) காலம். கல்வெட்டு முழுமையாக இல்லை.

**செய்தி**

திருவான்மியூர் மகாதேவர் கோயிலில் வழிபாடு, காணிக்கை ஆகியவற்றிற்காகப் பொருளும், நெல்லும் தானமாக அளித்த செய்தி.

(7) எண் 83 ஆண்டு 1909

**இடம் :**

திரிபுரசுந்தரி கோயில் கருவறையின் கீழ்ப்பகுதி

**காலம் :**

பரகேசரிவர்மன் எனப்படும் இராஜேந்திர சோழ தேவனின் (1011-43) காலம். கல்வெட்டு சிதைந்துள்ளது.

**செய்தி :**

மன்னனின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் திருவான்மியூர் மகாதேவர் ஆலயத்தில் வழிபாடு நடைபெற நெல்லும், பொருளும் அளித்ததாகத் தெரிகிறது

-:x o x:-

# சென்னையின் பிற பகுதிகளிலுள்ள ஆலயங்களில் திருவான்மியூர் பற்றிய கல்வெட்டுக்கள்

## திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில்

(1) அமைந்துள்ள இடம் :

உட்சுற்றில் தரையிலுள்ள ஒரு கல்லில்

காலம் :

பதின்மூன்றாம் நூற்றாண்டு - ஒரு மன்னனின் முப்பதாம் ஆட்சியாண்டு

செய்தி :

ஒரு பகுதி மட்டுமே உள்ளது கோட்டூர் நாட்டில் திருவான் மியூர் உள்ளதாகக் குறிப்பு

(2) இடம் :

உட்சுற்றில் வடபுறம் தரையில் உள்ளது

காலம் :

பன்னிரெண்டாம் நூற்றாண்டு

பொருள் :

மிகவும் சிதைந்துள்ளது. திருவான்மியூரைச் சேர்ந்ததாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. பசு கொடையளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

(3) இடம் :

உட்சுற்றில் வடபுறம். தரையிலுள்ள ஒரு கல்லில் உள்ளது.

காலம் :

பதின்மூன்றாம் நூற்றாண்டு

செய்தி

கழுமலவூரர் என்பாரிடமிருந்து பரிசாகப் பெற்ற புதிய நற் காசுகளைக் கொண்டு திருவான்மியூர் ஆலயத்திற்கு வேண் டிய நிவந்தங்களைச் செய்ததைக் குறிக்கும்

(4) இடம் :

உட்சுற்றில் தென்புறம். ஒரு கல்லில் உள்ளது

காலம் :

பன்னிரெண்டு அல்லது பதின்மூன்றும் நூற்றாண்டுகள்

செய்தி :

திருவான்மியூர் உலகாளுடைய நாயனாருக்கு நுந்தா விளக்கு வைப்பதற்கு முப்பது பசுவும், ஒரு காளையும் அளித்தல்

(5) இடம் :

கருவறைக்கு எதிரிலுள்ள மண்டபத் தரை மீது உள்ள ஒரு கல்லில் உள்ளது

காலம் :

பன்னிரெண்டு அல்லது பதின்மூன்றும் நூற்றாண்டு

செய்தி :

திருவான்மியூர் உலகாளுடைய நாயனாருக்குப் பூஜைக்கும் திருப்பணிக்கும் கொடை அளிக்கப்பட்ட செய்தி

(6) இடம் :

கோயில் மண்டபம். கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது

செய்தி :

திருவான்மியூர் உடைய நாயனார்க்குப் பூசைக்கும் திருப் பணிக்குமாக நிலம் அளிக்கப்பட்ட குறிப்பு

காலம் :

பதின்மூன்றாம் நூற்றாண்டு

## மயிலை கபாலீஸ்வரர் கோயில்

(1) இடம் :

கற்பகாம்பாள் ஆலயத்தின் உட்சுற்றில் மேற்குச் சுவரில் உள்ளது

காலம் :

பதினைந்தாம் நூற்றாண்டு விசயநகர மன்னர் பிரதாப தேவ ராயர் காலம்

செய்தி :

திருவான்மியூர் உலகாளுடைய நாயனார்க்குக் கொடையளித்தல்

(2) இடம் :

கற்பகாம்பாள் ஆலய மேற்குச் சுவரின் உட்பக்கம்

காலம் :

பதின்மூன்றாம் நூற்றாண்டு

செய்தி :

மயிலையைச் சேர்ந்த தண்டிப்பிடிக்கோன் என்பவரிடமிருந்து 22 ஆடு பெற்றுத்திருவான்மியூர் உலகாளுடைய நாயனார்க்கு இரண்டு விளக்கு எரிய வைத்த செய்தி

(3) இடம் :

கற்பகாம்பாள் ஆலயக் கிழக்குச் சுவரில் (உட்புறம்)

காலம் :

பன்னிரெண்டாம் நூற்றாண்டு

செய்தி :

திருவான்மியூர் இடையன் மருது என்பான் அளித்த கொடை

## மயிலை விருபாட்சீஸ்வரர் கோயில்

(1) இடம் :

கருவறை வடக்குச் சுவரில் உள்ளது

காலம் :

பதினொன்றாம் நூற்றாண்டு வீரராஜேந்திர சோழன் காலம்

செய்தி :

உலகாளுடைய நாயனார்க்குக்குமாரந்தை தேவன் என்பான் இரண்டு மாடு கொடையளித்தல்

## மயிலை வாலீஸ்வரர் கோயில்

(2) இடம் :

கருவறையின் வடக்குச் சுவர்

காலம் :

பன்னிரெண்டாம் நூற்றாண்டு. இரண்டாம் இராஜராஜன் காலம்

செய்தி :

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து செம்பூற் கோட்டத்துப் பிறையூர்......யூரான ஜயங் கொண்ட சோழநல்லூர் நெய்தல் வாயிலுடையான் ஒற்றி வாமனதேவன் மலையப்பிராஜன் என் பான் புலியூர் கோட்ட...(ஆ) ளுடையார் திருவான்மியூருடையார் மருந்தாண்டாற்கு ஒரு நுந்தா விளக்கு வைப்பதற்காக 32 பசுக் களையும், காளை ஒன்றையும் கொடுத்த செய்தி

இடம் :

கருவறையின் தெற்குச் சுவரில் உள்ளது

காலம் :

பதினான்காம் நூற்றாண்டு. ஸ்ரீ பெருமா...? என்பவரின் நான்காம் ஆட்சியாண்டு

செய்தி :

புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டுக் கோட்டூர் நாட்டில் திருவான்மியூர் உள்ளது.

(3) இடம் :

கிழக்குச் சுவரின் அடிப்பகுதியில் உள்ளது

காலம் :

கோப்பெருஞ்சிங்கன் காலம். பதின்மூன்றாம் நூற்றாண்டு.

செய்தி :

திருவான்மியூர் உடையார் உலகாளுடைய நாயனாருக்கு விளக்கு வைப்பதற்காக மலிகிழான் வடுகநாதன் தில்லை நாயகன் மூன்று காசுகள் சிவ (பிராமணர்) களிடம் ஒப்படைத்தல்

(4) இடம் :

வெளிச்சுற்றின் வடக்குச் சுவரில் (வெளிப்புறம்) உள்ளது

காலம் :

கோப்பெருஞ்சிங்கன். பதின்மூன்றாம் நூற்றாண்டு

செய்தி :

உலகாளுடைய நாயனார் கோயிலுக்கு ஒற்றி அரசன்... ஒரு நுந்தா விளக்கு வைத்த செய்தி

## மயிலை காரணீஸ்வரர் கோயில்

(1) இடம் :

அர்த்த மண்டபத்தின் தெற்குச் சுவரில் உள்ளது

காலம் :

பன்னிரெண்டாம் நூற்றாண்டு

செய்தி :

புலியூர்க் கோட்டத்து (திருவான்மியூர்) உலகாளுடைய நாயனார்க்குக் குமாரந்தை தேவன் என்பான் ஒரு சந்தி விளக்கு வைத்தது பற்றிய குறிப்பு. இக்கல்வெட்டில் மற்றொரு கல்வெட்டும் காணப்படுகிறது.

2. இடம்

பொற்கொடியம்மன் ஆலயச் சுவரில் உள்ளது, கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது

காலம் :

பதினைந்து அல்லது பதினாறாம் நூற்றாண்டு

3. இடம் :

மகாமண்டப மேல் முகட்டின் மீது உள்ளது

காலம் :

விக்கிரம சோழ தேவர். பன்னிரண்டாம் நூற்றாண்டு

செய்தி

சிவபிராமணர் சிலர் திருவான்மியூருடையாருக்கு திருநுந்தா விளக்கு எரிப்பதற்குக் கொடையளித்த செய்தி

4. இடம் :

திருச்சுற்றின் வடக்குச் சுவரில் உள்ளது

காலம் :

மூன்றாம் குலோத்துங்கன். பன்னிரண்டு அல்லது பதின் மூன்றாம் நூற்றாண்டு

செய்தி :

ஆளவந்த பிள்ளையான அன்னதான நங்கை என்பாள் கோட்டூர் நாட்டுத் திருவான்மியூரிலுள்ள உலகாளுடைய நாயனார்க்கு நான்கு பசுக்களையும் நான்கு கன்றுகளையும் அளித்த செய்தி

5. இடம் :

கருவறையின் தெற்குச் சுவர்

காலம் :

பதின்மூன்றாம் நூற்றாண்டு

செய்தி :

கோட்டூர் நாட்டைச் சேர்ந்த திருவான்மியூர் இறைவர்க்கு நுந்தா விளக்கு ஒன்று எரிய வைப்பதற்காக (முப்) பத்திரண்டு பசுவும், ஒரு காளையும் அளித்தது

6. இடம் :

மகாமண்டபச் சுவரில் உள்ளது

காலம் :

பதினைந்து அல்லது பதினாறாம் நூற்றாண்டு

செய்தி :

தை மாதத்தில் நிலம் விற்ற செய்தி. திருவான்மியூர் உலகாளுடைய நாயனார் பற்றியகுறிப்பு உள்ளது.

## புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயில்

இடம் :

ஒரு கல்லில் உள்ளது

காலம் :

பதின்மூன்றாம் நூற்றாண்டு

செய்தி :

(ஜயங்கொண்ட) சோழ மண்டலத்துப் புலி(யூர்) நாட்டுத் (திருவான்)மியூரில் உள்ள உலகாளுடைய நாயனாருக்கு விளக்கு எரிப்பதற்காக .... சியான நீலங்கரைய(ன்) என்பான் கொடை அளித்த செய்தி

## வேளச்சேரி தண்டீஸ்வரர் கோயில்

எண் 303. படியெடுக்கப்பட்ட ஆண்டு 1911

இடம் :

மூலவரின் சந்நிதியின் வடபுறச் சுவர்

அரசர் :

மதுரையையும், பாண்டிய மன்னரின் தலையையும் கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றாம் குலோத்துங்க சோழ தேவரின் இருபத்தைந்தாவது ஆட்சியாண்டு

பொருள் :

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சார்ந்த குலோத்துங்க சோழ வளநாட்டில் அமைந்துள்ள திருவான்மியூரிலுள்ள திருநாவுக்கரசர் திருமடத்திற்காக சேதிராய தேவன் என்பவன் நிலத்தைக் கொடையளித்தல். அந்த நிலம் ஜீனசிந்தாமணிச் சதுர்வேதி மங்கலம் எனப்படும் வேளிச்சேரியில் அமைந்திருந்தது.

# 9

# இலக்கியம்

## தேவாரம்

பிற்காலத்தில் சைவ சமய இலக்கியங்களைப் பன்னிரு திருமுறைகளாகப் பகுத்தபோது, அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடிய தேவாரப் பதிகங்களை முதல் ஏழு திருமுறைகளுக்குள் அடக்கினர். சமகாலத்தைச் சேர்ந்த திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் எண்ணற்ற சிவத்தலங்களைத் தரிசித்து, அத்தலங்களில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மேல் பாடல்களைப் பாடியுள்ளனர். தொண்டை நாட்டு யாத்திரையின் போது திருவான்மியூருக்கு வருகை தந்த திருஞானசம்பந்தர், இரண்டு பதிகங்களை ஈசருக்குக் காணிக்கையாக அளித்துள்ளார். பத்து பாடல்களின் தொகுதியே பதிகம் எனப்படும்; சில சமயங்களில் பதினோரு பாடல்களும் இடம் பெறுவதுண்டு.

# திருஞான சம்பந்தர் பதிகம்

## இரண்டாம் திருமுறை    பண் : இந்தளம்

### வினாவுரைப்பதிகம்

1. கரையு லாங்கட லிற்பொலி சங்கம்வெள் ளிப்பிவன்
திரையு லாங்கழி மீனுகளுந்திரு வான்மியூர்
உரையு லாம்பொருளாயுல காளுடையீர் சொலீர்
வரையு லாமடமாதுட னாகிய மாண்பதே.

இப்பாடலில் சிவபெருமானை முன்னிலைப்படுத்தித் திருஞானசம்பந்தர் அவரிடம் ஒரு வினாவிடுக்கிறார். அவ்வினா பின்வருமாறு உள்ளது; "கடலில் விளங்கும் சங்குகளையும் வெள்ளைச்சிப்பிகளையும் கரையில் வந்து விழுமாறு வலிமையான அலைகள்வீசுகின்றன. அந்த அலைகளையுடைய கழிகளில் மீன்கள் பிறழ்கின்றன. இத்தகைய வளமிக்க திருவான்மியூரில் எழுந்தருளியுள்ள ஈசரே! சொற்பொருளாகவும், எல்லா உலகங் களையும் ஆள்பவராகவும் உள்ளீரே! நீர் இங்கு மலைமங்கையு டன் இருக்கும் மாண்பு யாது என மொழிவீராக!" இவ்வினாவிற் கான விடையை ஞானசம்பந்தரே இப்பாடலில் தெரிவித்துள்ளார். அந்தவிடை, "உரையுலாம் பொருளாய் உலகாளுடையீர்" என்ற சொற்றொடரில் அமைந்துள்ளது. இத்தொடரிலுள்ள உரை என்ற வார்த்தை சொல் என்று பொருள் படும். உமையைச் சொல்லாகவும், சிவபெருமானைப் பொருளாகவும் கருதலாம். சொல்லை அதன் பொருளினின்றுபிரிக்க இயலாது. அதுபோலவே சக்தியினின்றும் சிவனைப் பிரித்தல் இயலாது. "சக்தி இல்லை யேல் சிவனில்லை; சிவனில்லாமல் சக்தியில்லை". திருநாவுக் கரசரும், "சொல்லும் பொருளெலாம் ஆனார்தானே" என்று இயம்புகிறார். சுந்தரமூர்த்தி நாயனாரும் "சொல்லை நம்பிப் பொருளாய் நின்ற நம்பி" என்று இக்கருத்தையே குறிப்பிடுகிறார். இவ்வாறு வினாவும், அதற்குரிய விடையும் இப்பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாடலிலும் அமைந்துள்ளதால் இப்பதிகம் வினாவுரைப் பதிகம் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

2. சந்து யர்ந்தெழு காரகில் தண்புனல் கொண்டுதம்
சிந்தை செய்தடி யார் பர வுந்திரு வான்மியூர்ச்
சுந்தரக் கழன் மேற்சிலம் பார்க்கவல் லீர்சொலீர்
அந்தி யின்னொளி யின்னிற மாக்கிய வண்ணமே.

திருவான்மியூரில் அடியார்கள் சந்தனம், புகைத்தற்குரிய அகில், குளிர்ச்சி பொருந்திய அபிஷேக தீர்த்தம் ஆகியவற்றைக் கொண்டு, தங்களது சிந்தையைச் செலுத்தி வழிபாடு செய்கின்றனர். மாலையில் அந்திப் பொழுதிலுள்ள நிறத்தைத் தன்னுடலில் கொண்டு அழகுடன் திகழும் சிவபெருமானே! நீர் சுந்தரக் கழலும் அழகிய சிலம்பும் ஏன் அணிந்தீர் ? இது வினா.

தன்னுடைய திரு அடிகளைத் துதிக்கும் அடியார்களுக்கு அவர் அருள் புரிவார் என்பதைக் குறிக்கவே கால்களில் மெல்லிய ஓசை எழும்பும் சிலம்பு, கழல் ஆகியவற்றை அணிந்துள்ளார். இதுவே விடையாகும். இக்கருத்தைச் சம்பந்தரின் பூந்தராய்ப்பதிகம் "தொண்டர் வந்தடி போற்றிச் செய் தொல் கழலீர் சொலீர்" என்று குறிப்பிடுகிறது.

3. கான யங்கிய தண்கழி சூழ் கடலின் புறம்
தேன யங்கிய பைம்பொழில் சூழ் திருவான்மியூர்த்
தோன யங்கம ராடையி னீரடி கேள்சொலீர்
ஆனையங் கவ்வுரி போர்த்தன லாட வுகந்ததே"

கானகத்திலுள்ள பள்ளமான கழியும். சூழ்ந்த கடலின் புறத்தில் தேன் சொரிந்த பசுஞ்சோலையும் உடைய திருவான்மியூரில் தோலை ஆடையாக உடுத்து அமர்ந்த ஈசரே! புலித்தோலும், பட்டாடையும் உடுத்தாமல் யானையின் தோலைப் போர்த்திக் கொண்டது என்ன காரணமாக?

இங்கு தோல் புலித்தோலையும், துகில் பட்டாடையையும் குறிக்கின்றன. புலித்தோல் சிவபெருமானின் பாகத்திற்கும் (ஆண்), பட்டாடை உமையம்மையின் பாகத்திற்கும் (பெண்) உரியன. இவை அம்மையப்பராதலைக் குறிப்பிடுகின்றன. இக்கோலத்தையே "தொன்மைக் கோலம்" என மாணிக்க வாசகர் சுட்டிக் காட்டுகிறார். "தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்"

குழையும் சுருள்தோடும்" என்ற திருவாசகம் பகுதி அவரது அர்த்தநாரி உருவத்தைக் குறிக்கிறது. இத்தொன்மைக் கோலத்தை விடுத்த ஈசர் யானையின் தோலை அணிந்தார்.

வினைகள் தாமே தமக்கேற்ற பயனைத் தரும் எனத்தாருக வன முனிவர்கள் நம்பியவராய் ஈசனை வழிபட மறந்தனர். பிட்சாடனர் கோலம் கொண்ட சிவபெருமானும், மோகினி உருவம் கொண்ட திருமாலும் அவர்களது ஆணவத்தை அடக்கினர். இதனால் கோபமுற்ற முனிவர்கள் பெரிய யானை ஒன்றைச் சிவபெருமான் மீது ஏவினர். சிவபிரான் அந்த யானையைக் கொன்று, அதன் தோலை ஆடையாக அணிந்தார். இவ்வாறு ஈசன் தொன்மைக் கோலத்தை விடுத்து, யானையை ஆடையாக அணிந்தது முனிவர்களை நல்வழிப்படுத்துவதற்கேயாகும். மேற்கண்ட பாடலில் வரும் "அடிகேள்" என்ற சொல் முனிவர்கள் சரணடைந்ததையே எடுத்துக் காட்டுகிறது. சிவபெருமானின் தூய்மையை மறுத்த முனிவர்கள், பின்னர் அவரை ஏற்றுக் கொண்டனர்.

4. மஞ்சு லாவிய மாடம திற்பொலி மாளிகைச்
செஞ்சொ லாளர்கள் தாம்பயி லுந்திரு வான்மியூர்த்
துஞ்சு வஞ்சிரு ளாட லுகக்கவல் லீர்சொலீர்
வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்னருள் வைத்ததே"

(மஞ்சு-மேகம் வஞ்சு-வஞ்சம்)

திருவான்மியூரிலுள்ள மாட மாளிகைகள் மேகம் தங்குமளவு உயர்ந்திருந்தன; அங்குள்ள மதில்கள் செம்மையான உறுதியும், அழகிய வேலைப்பாடும் உடையன. செம்மையான மொழியில் வல்லவர்கள் அங்கு இருந்தனர். அனைவரும் உறங்கும் காரிருள் வேளையில் இடுகாட்டில் நடனம் ஆடும் திருவான்மியூர் ஈசரே கருமை நிறைந்த நஞ்சையுண்டு, வானவர்க்கு அருளியது எக்காரணம் கொண்டு?

பக்குவப்பட்ட உயிர்கள் மறுபிறவி எடுப்பதைத் தடுக்கவே இறைவன் யுகமுடிவில் இடுகாட்டில் நடனமாடுவார். இதனையே "நள்ளிருளில் நட்டம் பயிலும் நாதனே" என மாணிக்கவாசகர் இயம்புகிறார். பாற்கடலில் எழுந்த நஞ்சு பிறரை அழிக்கா

மலிருச்கவே இறைவன் அதனை உண்டார். பின்னர் தோன்றிய அமுதை வானவர்க்கு அளித்தார். இதனையே "இன்னருள் வைத்ததே" என்ற தொடர் குறிக்கிறது.

5. மண்ணி னிற்புகழ் பெற்றவர் மங்கையர் தாம்பயில்
திண்ணெ னப்புரி சைத்தொழி லார்திரு வான்மியூர்த்
துண்ணெ னத்திரி யுஞ்சரி தைத்தொழி லீர்சொலீர்
விண்ணி னிற்பிறை செஞ்சடை வைத்த வியப்பதே"

(திண்ணெனர்-உறுதிப்பாடு. புரிசை-மதில் தொழில்-வேலைப்பாடு திரியுஞ்சரிதைத் தொழில்-பிட்சை யெடுத்தல். ஆர்தல்-நிறைத்தல்)

இக்கேள்விக்கு விடை "பிறை" என்ற சொல்லில் உள்ளது. தேய்ந்து போகுமாறு சாபம் பெற்ற சந்திரன் அவ்வாறு தேய்ந்து இறுதிநிலையையடைந்தான். இவனைச் சிவபெருமான் தன் தலையில் சூடிக்கொண்டார். சிவபெருமான் அருளால் பிறை வளர்ந்து முழு மதி ஆயிற்று.

திருவான்மியூரிலுள்ள மாதர் கற்பு நெறி, சிவபக்தி போன்ற குணங்களால் உலகப் புகழ் பெற்றிருந்தனர். அவ்வூரிலுள்ள மதில்கள் திண்மையும், அழகிய வேலைப்பாடும் உடையன. கையில் ஓட்டை ஏந்திப் பிட்சை எடுத்த வான்மியூர் ஈசரே! விண்ணிலுள்ள பிறைமதியைச் செஞ்சடையில் சூடியது ஏனோ?

6. போது லாவிய தண்பொழில் சூழ்புரி சைப்புறம்
தீதி லந்தண ரோத்தொழி யாத்திரு வான்மியூர்ச்
சூது லாவிய கொங்கையொர் பங்குடை யீர்சொலீர்
மூதெ யில்லொரு மூன்றெரி யூட்டிய மொய்ம்பதே

(போது-பூக்கும் பருவத்து. புரிசைப்புறம்-மதிற்புறம் கொங்கை-உமாதேவி. மொய்ம்பு-வலிமை)

பூக்கும் பருவத்திலுள்ள பூக்கள் நிரம்பிய குளிர்ச் சோலைகள் சூழ்ந்த திருவான்மியூரின் அழகிய மதில்கள் சூழ்ந்த பகுதிகளில் மாசற்ற அந்தணர் வேத ஒலி எழுப்புகின்றனர். பகடைக் கருவி போன்ற முலையையுடைய உமைக்கு உடலில் ஒரு பகு

தியை அளித்த வான்மியூர் ஈசரே! பறக்கும் தன்மையுடைய மூன்று கோட்டைகளையுடைய திரிபுரங்களை எரியூட்டியது எக்காரணம் கொண்டு?

ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நினைத்த மாத்திரத்தில் பறந்து செல்லக் கூடிய மூன்று கோட்டைகளைப் பெற்ற தாருகாட்சன் கமலாட்சன், வித்யுமான்லி என்ற மூன்று அவுணர்களை ஏன் அழித்தீர் என்பது கேள்வி. இதற்குவிடை அழித்தது நல்லவர்களைக் காப்பதற்காகவே என்பது "மொய்ம்படதே'' என்ற சொல் இதனையேகுறிக்கிறது.

7. வண்டி ரைத்த தடம் பொழி லின்னிழற் கானல்வாய்த்
தெண்டி ரைக்கட லோதமல் குந்திரு வான்மியூர்த்
தொண்டி ரைத்தெழுந் தேத்திய தொல்கழ லீர்சொலீர்
பண்டி ருக்கொரு நால்வர்க்கு நீருரை செய்ததே

(இரைத்தல்-ஒலித்தல், திரை-அலை, ஓதம்-நீர்

தொண்டு-தொண்டர் இரைத்து-சிவபெருமானின் திருநாமத்தை ஓதி பண்டு-கல்லால மரத்தடியில் ஓதித்ய அன்று. திருவான்மியூரில் வண்டுகள் இசை பாடும் அகன்ற சோலைகளும், அகன்ற கானலும் உள்ளன. அதனையடுத்து மெல்ல ஓசையிடும் அலைகளையுடைய கடல் உள்ளது. தொண்டர்கள் நினது திருநாமத்தை இடைவிடாது உச்சரிக்கிறார்கள் தொன்மையான கழலையுடைய வான்மியூர் ஈசனே! அன்று கல்லால மரத்தடியில் நான்கு முனிவர்களுக்கு (சனகாதியர்) தட்சிணாமூர்த்தியாய் உபதேசம் செய்தது எதனால்? (அனைவரும் சிவபெருமானின் திருவடிகளை வழிபட்டு உய்ய வேண்டும் என்பது ஏத்திய தொல்கழல் என்ற தொடர் உணர்த்தும் கருத்து)

8. தக்கில் வந்த தசக்கிரி வன்றலை பத்திறத்
திக்கில் வந்தல றவ்வடர்த் தீர்திரு வான்மியூர்த்
தொக்க மாதொடும் வீற்றிருந் தீரரு ளென்சொலீர்
பக்க மேபல பாரிடம் பேய்கள் பயின்றதே

(தகு இல் - தகுதியற்ற நெறியில். கிரீவம் - கழுத்து பவ பாரிடம்-பூதகணங்கள்) இதில் இரண்டுமுறை விளித்ததைக் காணலாம்.

தகுதிகள் ஏதுமின்றிக் கயிலையை அசைக்க முயன்ற தசக்கிரீவனான இராவணன் அலறுமாறு அவனது பத்துத்தலைகளையும் நெரித்த, திருவான்மியூரில் உமையம்மையாரோடு வீற்றிருந்தருள்பவரே! உம் அருகில் பல பூத கணங்கள் சூழ்ந்து இருப்பது ஏன்?

9. பொருது வார்கட லெண்டிசை யுந்தரு வாரியால்
திரித ரும்புகழ் செல்வமல் குந்திரு வான்மியூர்ச்
சுருதி யாரிரு வர்க்கு மறிவரி யீர்சொலீர்
எருது மேல்கொ டுழன்றுகந் தில்பலி யேற்றதே.

(பொருது-அலைகள் மோதி. வார்-நீளும். வாரி-வருவாய் சுருதியார். வேதங்களில் கூறப்பட்ட அறியும் அயனும்)

அலைகள் மோதும் கடலின் மூலம் எட்டுத்திசைகளிலிருந்தும் வளங்கள் சேர்வதால் புகழும் செல்வமும் நிறைந்து விளங்கும் திருவான்மியூரில் வேதங்களில் கூறப்படும் திருமால், நான்முகன், ஆகியோர்கள் காண்பதற்கு அரிதாக விளங்கும் ஈசரே! எருதின் மீது ஏறி, இல்லங்கள் தோறும் சென்று பலி ஏற்பது ஏன் ?

10. மைத ழைத்தெழு சோலையின் மாலைசேர் வண்டினம்
செய்த வத்தொழி லாரிசை சேர்திரு வான்மியூர்
மெய்த வப்பொடி பூசிய மேனியி னீர்சொலீர்
கைத வச்சமண் சாக்கியர் கட்டுரைக் கின்றதே

(மை-கரிய மேகம். மெய்தவப் பொடி-திருநீறு, கைதவம்-வஞ்சகம்)

மேகம் வரை வளர்ந்த சோலையில் மாலைப் பொழுதில் வண்டுகள் இசை பாடும்; தவம் செய்யும் தொழிலையுடைய அந்தணர் வேதங்களை ஓதுகின்றனர். இத்தகைய தன்மையுடைய திருவான்மியூரில், தவக்கோலத்தின் குறியான திருநீற்றை மேனியின் பூசிய ஈசனே! வஞ்சக எண்ணமுடைய சமணரும் பௌத்தர்களும் கட்டிக் கூறும் பொய்யுரைகள் என்ன பலனைத் தரவல்லன? திருநீறு அபிஷேகம் செய்யப்படுவதால் இறைவர் பால்வண்ணராக விளங்கிய சம்பவம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

11. மாதொர் கூறுடை நற்றவ னைத்திரு வான்மியூர்
ஆதி யெம்பெரு மானருள் செய்ய வினாவுரை
ஓதி யன்றெழு காழியுண் ஞானசம் பந்தன்சொல்
நீதி யானினை வார்நெடு வானுல காள்வரே

(நீதி - சைவ சமய நீதி)

உமையொருபாகனாக விளங்கும் நல்ல தவத்தானை, திரு வான்மியூரில் குடி கொண்ட ஆதி எம்பெருமானை அருள்புரியு மாறு வேண்டுகிறது இந்த வினாவுரை. சீர்காழிப் பதியில் தோன் றிய ஞானசம்பந்தர் மேற்கூறிய பாடல்களில் விளம்பிய கருத் தினை ஏற்றுச்சைவ விதிகளைப் போற்றுவார்கள் இறைவனின் திருவடிகளை அடைவார்.

திருவான்மியூர் ஈசனின் குணங்களைப் போற்றி, உள்ளன் போடு வழிபடுகிறவர்களுக்கு வீடுபேறு கிடைப்பது உறுதி என்று ஞானசம்பந்தர் கூறுகிறார்.

# சம்பந்தர் திருப்பதிகங்கள்

## மூன்றாவது திருமுறை

பண் : காந்தார பஞ்சமம் - திருச்சிற்றம்பலம்

1. விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழா யுமைநங்கையொர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூருறையும்
அரையா வுன்னையல்லா லடையாதென தாதரவே"

(விரை-மணம்-உரைஆர் (அடியவர்) பேச்சில் பொருந்திய அரையன்-அரசன்)

வாசனை பொருந்திய கொன்றை மலர் மாலையைத் தலையில் சூடியவனே! பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டதால் நீல நிறமான கழுத்தை உடையவனே! அடியார்கள் உரைக்கும் புகழ் மொழிகளை ஏற்பவனே! உமை எனும் நங்கைக்கு உடலில் ஒரு பகுதியை அளித்தவனே! அலைமோதும் கடலால் சூழப்பெற்ற திருவான்மியூரில் உறையும் அரசே,! உன்னையல்லாமல் எனது ஆசை வேறொன்றையும் அடையாது

2. இடியா ரேறுடையா யிமையோர்தம் மணிமுடியாய்
கொடியார் மாமதியோ டரவம்மலர்க் கொன்றையினாய்
செடியார் மாதவிசூழ் திருவான்மி யூருறையும்
அடிகே ளுன்னையல்லா லடையாதென தாதரவே

(இடி ஆர் ஏறு-இடி போல முழங்கும் ஏறு. ஆர்த்தல்-ஒலித்தல். கொடி-ஒழுங்கு. செடிஆர்மாதவி-செடிகளோடு கூடிய மாதவி போன்ற தருக்கள்.)

இடிபோல முழுங்கும் காளையை வாகனமாக உடையவனே! தேவர்களின் மணிமுடியாக விளங்கி அவர்களுக்குத்தலைவன் போன்றவனே! பிறைமதி, பாம்பு, அழகிய கொன்றை மலர் ஆகியவற்றை அணிந்தவனே! பலவகைச் செடிகளோடு சூழும் மாதவி முதலிய தருக்கள் சூழ்ந்த திருவான்மியூரில் உறையும் அடிகளே! உண்னையல்லால் எனக்கு ஆதரவு ஏது?

3. கையார் வெண்மழுவா கனல் போற்றிரு மேனியனே
மையா ரொண்கணல்லா ளுமையாள் வளர் மார்பினனே
செய்யார் செங்கயல்பாய் திருவான் மியூருறையும்
ஐயா வுன்னையல்லா லடையாதென தாதரவே

கையில் வெண்மழு ஏந்தியவனே! கனலைப் போன்ற செம்மையான மேனியுடையவனே! கரிய நிறமுடைய உமையம்மைக்கு மார்பில் இடம் அளித்திருப்பவனே! செங்கயல் மீன்கள் பாயும் கடற்கரையிலுள்ள திருவான்மியூரில் உறைபவனே! உன்னையல்லால் எனக்கு வேறு ஆதரவு இல்லை.

4. பொன்போ லுஞ்சடைமேற் புனல் தாங்கிய புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடையேறிய வேதியனே

தென்பால் வையமெலாந் திகழுந்திரு வான்மிதன்னில்
அன்பா வுன்னையல்லா லடையாதென தாதரவே
(புனல்-கங்கை நீர், தென்பால் - தமிழகம்)

பொன்போன்ற நிறமுடைய சடையில் புனித கங்கை நீரைத் தாங்கிய புண்ணியனே! மின்னல் போன்ற முப்புரிநூலோடு வேதியன் போலத் தோன்றியவனே! தென்பகுதியிலுள்ள தமிழ் நாட்டிலுள்ள போதிலும் உலகமெங்கும் புகழுடன் விளங்கும் திருவான்மியூரிலுள்ள அந்தனே! உன்னையன்றி வேறு எவர் எமக்கு ஆதரவு?

5. கண்ணா ருந்நுதலாய் கதிர்சூழொளி மேனியின் மேல்
எண்ணார் வெண்பொடிநீ றணிவாயெழில் வார் பொழில்சூழ்
திண்ணார் வண்புரிசைத் திருவான்மி யூருறையும்
அண்ணா வுன்னையல்லா லடையாதென தாதரவே
(என் ஆர்-பாராட்டுவதற்குரிய, அண்ணா-தந்தையே)

முக்கண் உடையவனே! சூரியனின் கதிர்கள் போல் ஒளிமிக்க மேனியில் வெண்மையான திருநீறு பூசியவனே! எழில்மிக்க சோலைகளாலும், அழகிய வேலைப்பாடு உடைய திண்மையான மதில்களாலும் சூழப்பெற்ற திருவான்மியூரில் உறையும் எந் தையே! உன்னையன்றி எனக்கு ஆதரவு ஏது?

6. நீதீ நின்னையல்லா னெறியாது நினைந்தறியேன்
ஓதீ நான்மறைகண் மறையோன்றலை யொன்றினையும்
சேதீ சேதமில்லாத் திருவான்மி யூருறையும்
ஆதீ யுன்னையல்லா லடையாதென தாதரவே
(நீதீ-நீதி வடிவானவனே)

நீதியின் வடிவாக உள்ளவனே! உன்னையே நினைப்ப தன்றி உன்னை வழிபடுதற்குரிய முறை எதனையும் நினைந்தறி யேன். நான்கு மறைகளையும் ஓதியுணர்ந்தவனே! பிரம்மதேவ னின் தலை ஒன்றைச் சேதித்தவனே! அழிவு எதுவும் ஏற்படாத திருவான்மியூரில் உறையும் முதல்வனே! உன்னையன்றி எனக்கு ஆதரவு அளிப்பவர் யார்?

7. வானார் மாமதிசேர் சடையாய்வரை போலவரும்

கானா ரானையின்றோ லுரித்தாய்கறை மாமிடற்றாய்

தேனார் சோலைகள்சூழ் திருவான்மி யூருறையும்

ஆனா யுன்னையல்லா லடையாதென தாதரவே

கான் ஆர் ஆனை-காட்டிலுள்ள-ஆனை ஆனாய்-இடப வாக னத்தை உடையோனே! தேன்-வண்டு).

வான்மதியுடைய சடையை உடையாய்! மலை போல் தோன்றிய காட்டு யானையின் தோலை உரித்தாய்! (இங்கு கயமுக அரக்கனை அழித்த சம்பவம் குறிப்பிடப்படுகிறது). நஞ்சுண்ட தால் கருத்த நிறத்தையுடைய கழுத்தைப் பெற்றாய். வண்டுகள் மொய்க்கும் சோலைகளுடைய திருவான்மியூரில் உறையும் இடப வாகனனே! உன்னையன்றி எனக்கு ஆதரவளிப்பவர் எவரு மில்லை.

8 ..............................................................................

9. பொறிவாய் நாகணையா னொடுபூமிசை மேயவனும்

நெறியார் நீளகழன்மேன் முடிகாண்பரி தாயவனே

செறிவார் மாமதில்சூழ் திருவான் மியூருறையும்

அறிவே யுன்னையல்லா லடையாதென தாதரவே

(பொறிவாய் நாகணையான்-புள்ளிகளையுடைய நாகத்தைப் படுக்கையாக உடைய திருமால். நீள்கழல்-பாதாளம் வரை சென்ற திருவடிகள்)

புள்ளிகள் பொருந்திய அரவத்தின் மீது பள்ளி கொண்ட திருமாலும், தாமரை மலரில் உறையும் நான்முகனும் பாதாளம் வரை பரவிய நின் கழல்களையும், வானத்தைக் கடந்த திருமுடி யையும் காண இயலாமல் தவிக்கச் செய்தவனே! அழகிய வலிமை யுடைய மாமதில்கள் சூழ்ந்த திருவான்மியூரில் உறையும் பெரு மானே! உன்னையன்றி எனக்கு ஆதரவு இல்லை.

10. குண்டாடுஞ் சமணர் கொடுஞ் சாக்கிய ரென்றிவர்கள்

கண்டார் காரணங்கள் கருதாதவர் பேச நின்றாய்

திண்டேர் வீதியதார் திருவான்மியூருறையும்

அண்டா வுன்னையல்லா லடையாதென தாதரவே

விதண்டை மொழிகளைப் பேசும் சமணர்களும், கொடிய பௌத்தர்களும் சிலவற்றை அறிந்தும் அதன் காரணங்களை அறியாதவராவர்; அவர்களும் சில பேசுமாறு செய்தருள்பவனே! திண்மையான தேரோடும் வீதிகளையுடைய திருவான்மியூரில் உறையும் இறைவனே! என் ஆசை உன்னையன்றிப் பிறபொருளை அடையாது.

11. கன்றா ருங்கமுகின் வயல் சூழ்தரு காழிதனில்
நன்றான புகழான் மிகுஞானசம் பந்தனுரை
சென்றார் தம்மிடர்தீர் திருவான்மி யூரதன்மேல்
குன்றா தேத்தவல்லார் கொடுவல்வினை போயறுமே

(கன்று - இளஞ்செடி)

சிறு செடிகளும், கமுகு மரங்களும் வயல்களும் சூழ்ந்த சீர் காழிப்பதியில் தோன்றிய ஞான சம்பந்தர், சென்று வழிபடுவோரின் இன்னல்களையும் திருவான்மியூர் ஈசன் மீது பாடிய இத்திருப்பதிகப் பாடல் உரையை முழுமையாக ஓதி வழிபடுபவர்களின் கொடுவினைகள் நீங்கும்.

# திருநாவுக்கரசர் பதிகம்

## ஐந்தாம் திருமுறை

1. விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர் செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே

மணம் நிறைந்த மலர்களைக் கொண்டு விரைந்து சென்று, உலகிற்கு நாயகனும், வண்டுகள் மொய்க்கும் சோலைகளையுடையவனுமான வான்மியூர் ஈசனின் திருவடிகளைச் சரணடைந்தவர்கள் முன்பு செய்த பாவங்கள் எல்லாம் நீங்கும்.

2. பொருளும் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளும் மாந்தரை மாற்றி மயக்கறுத்(து)
அருளு மாவல்ல ஆதியாய் என்றலும்
மருள றுத்திடும் வான்மியூ ரீசனே

பொருட்செல்வத்தையும், சுற்றத்தினரையும், பொய்மையாகிய குணங்களையும் விடுத்து, உலக வாழ்விலே மயங்கி நிற்கும் மாந்தர்களை அறியாமையாகிய மயக்கத்திலிருந்து விடுவித்து அருள்புரியவல்ல மருந்தீசரை ஆதியாய் என்று போற்றி வணங்குவீராயின், அவர் உங்கள் மயக்கத்தை மாற்றி விடுவார்.

3. மந்த மாகிய சிந்தை மயக்கறுத்(து)
அந்த மில்குணத் தானை யடைந்து நின்(று)
எந்தை! ஈசன் என்றேத்திட வல்லீரேல்
வந்து நின்றிடும் வான்மியூ ரீசனே

மந்தமாகிய அறியாமையால் ஏற்படும் மன மயக்கத்தை விடுத்து முடிவில்லா குணங்களையுடைய பெருமானை அடைந்த 'எம் தந்தையே! ஈசனே' என்று போற்றி ஒழுகினால் திருவான்மியூர் ஈசன் அவர் முன்பு காட்சியளித்து அருள் புரிவார்.

4. உள்ளம் உள்கலந் தேத்தவல் லார்க்கலால்
கள்ளம் உள்ளவ ழிக்கசி வானலன்
வெள்ள மும்அர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே!

கங்கை நீரையும், அரவத்தையும் தனது பரந்த சடையில் கொண்டுள்ள வுள்ளலாகிய வான்மியூர் ஈசன் தன்னை உள்ளன்போடு வழிபடுபவர்க்கு மட்டுமே அருள் புரிவார்; கள்ள உள்ளம் உடையோருக்கு என்றும் அருள் புரிய மாட்டார்.

5. படங்கொள் பாம்பரைப் பான்மதி சூடியை
வடங்கொள் மென்முலை மாதொரு கூறனைத்
தொடர்ந்து நின்று தொழுதெழு வார்வினை
மடங்க நின்றிடும் வான்மியூ ரீசனே

படமெடுக்கவல்ல பாம்பையும், வெண்ணிற மதியையும் சூடியவனும், மாலைகள் சூடிய உமையம்மைக்கு இடப் பாகத்தை அளித்தவனுமான திருவான்மியூர் ஈசனை விடாமல் தொடர்ந்து வழிபடுவார்களின் தீவினைகள் அகன்று விடும்,

6. நெஞ்சி லைவர் நினைக்க நினைக்குறார்
பஞ்சின் மெல்லடி யாளுமை பங்கவென்(று)
அஞ்சி நாண்மலர் தூவி அழுதிரேல்
வஞ்சம் தீர்த்திடும் வான்மியூ ரீசனே

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும் நெஞ்சில் உள்ளன்போடு ஈசனை நினைப்பதற்குத் தடையாக இருக்கும். அவ்வாறு அன்றி, பஞ்சினைவிட மென்மையான அடிகளுடைய உமைக்கு இடப்பாகத்தை அளித்த வான்மியூர் ஈசனை பயபக்தியுடன் நறுமலர் தூவி வழிபட்டவரின் துன்பங்களை அவர் போக்கிடுவார்.

7. நுணங்கு நூலயன் மாலும் அறிகிலாக்
குணங்கள் தான்பர விக்குறைந் துக்கவர்
சுணங்கு பூண்முலைத் தூ மொழி யாரவர்
வணங்க நின்றிடும் வான்மியூ ரீசனே

நுண்ணிய நூல் பல உணர்ந்த நான்முகனும், திருமாலும் அறிய இயலாத சிவனாரின் குணங்களைப் போற்றிச் செருக்கொழித்து வழிபாடு செய்பவர் முன், சுணங்கு படர்ந்த முலையையும், தூய மொழிகளையும் உடைய உமையம்மையோடு, காட்சியளித்து அருளுவான், வான்மியூர் ஈசன்.

8. ஆதி யும்மர னாயயன் மாலுமாய்ப்
பாதி பெண்ணுரு வாய பரமனென் (று)
ஓதி யுள்குழைந் தேத்தவல் லாரவர்
வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே.

முதல் மூர்த்தியாகவும், நான்முகனாகவும், திருமாலாகவும் பாதி பெண்ணுருவான அர்த்தநாரியாகவும் உள்ள பரமனின் திரு நாமங்களை ஓதி உள்ளம் குழைய வழிபடுவோர்களின் துன்பங் களை வான்மியூர் ஈசன்தீர்த்து வைப்பார்.

9. ஒட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயில்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூ ரீசனே.

ஒட்டை மாடமாகிய மனித உடலிலுள்ள ஒன்பது வாயில் களும் இடுகாட்டில் வெந்து எரிந்து சாம்பலாவதற்கு முன்னர் திருவான்மியூர் ஈசனின் திருவடிகளை வணங்கி, புதுமலர் தூவி வலம் வந்தால் அவர்களின் வாட்டம் தீர்ந்திடும்.

10. பார மாக மலையெடுத் தான்றனைச்
சீர மாகத் திருவிர லூன்றினான்
ஆர்வ மாக அழைத்தவன் ஏத்தலும்
வார மாயினன் வான்மியூ ரீசனே.

பாரமாகத் திருக்கயிலை மலையைத் தூக்கிய இரா வணனைச் சிதையுமாறு தன் விரலை ஊன்றி அழுத்தி பின், ஆர்வம் பெருகி அம்மன்னன் அழைத்தபோது அன்பு காட்டிய வனும் வான்மியூர் ஈசனேயாவார்.

# திருத்தொண்டர் புராணம்

## திருஞானசம்பந்தர் புராணம்

1. திருத்தொண்ட ரங்குள்ளோர் விடைகொள்ளச் சிவநேசர்
வருத்தமகன் றிடமதுர மொழியருளி விடைகொடுத்து

நிருத்தருறை பிறபதிகள் வணங்கிப்போய் நிறைகாதல்
அருத்தியொடு திருவான்மியூர் பணிய வணைவுற்றார்
(3018)

மயிலையிலுள்ள திருத்தொண்டர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, சிவநேசரின் பிரிவுத் துயர் நீங்குமாறு சில அன்பு மொழிகளையும் கூறியபின், அருள் கூத்து நடத்தும் ஈசன் எழுந் தருளியுள்ள வேறு சில பதிகளையும் தரிசித்தார் அதன்பின் அன்புக் காதல் நிரம்ப, திருவான்மியூரிலுள்ள இறைவனை வழி படப் புறப்பட்டார்.

(அருத்தி-அன்பு. நிருத்தர்-ஐந்து தொழில் அருட்கூத்து இயற்றும் ஈசர்.)

2. திருவான்மி யூர்மன்னுந் திருத்தொண்டர் சிறப்பெதிர
வருவார்மங் கலவணிகண் மறுகுநிரைத் தெதிர்கொள்ள
அருகாக விழிந்தருளி யவர்வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயின்மணித் தடநெடுங்கோ புரஞ்சார்ந்தார்
(3019)

திருவான்மியூரில் நிலைபெற்று வாழும் அடியார்கள் மங் கலம் பொருந்திய அணி வகைகளைத் தெருவில் வரிசையாகச் சுமந்து எதிர் கொண்டு வரவேற்றனர். சம்பந்தரும் அன்புடன் சிவிகையிலிருந்து இறங்கி அவர்களை வணங்கினர். பின்னர் அன்பு தந்து ஆட்கொள்ளும் இறைவனின் திருக்கோயிலின் அழ கிய, பெரிய, நீண்ட கோபுரத்தைச் சார்ந்தருளினார்.

(மன்னும் - நிலை பெற்று வாழும் இழிந்தருள் - சிவிகையினின்று இறங்கி)

3. மிக்குயர்ந்த கோபுரத்தை வணங்கிவியன் திருமுன்றில்
புக்கருளிக் கோயிலினைப் புடைவலங்கொண்
டுள்ளணைந்து
கொக்கிறகு மதிக்கொழுந்துங் குளிர்புனலு மொளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார்
(3020)

மிகவும் உயர்ந்த ஆலய கோபுரத்தை வணங்கிய பின் ஆலயத்தின் உள்ளே சென்று வலமாக உட்புறம் வந்தனர். கொக்கிறகு, பிறைச்சந்திரன், குளிர்ந்த கங்கை ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு, அந்தி மாலையில் சிவந்த நிறம் போன்ற சடையினையுடைய சிவபெருமானின் திருவடிகளை வணங்கினர். [கொக்கிறகு-ஈசர் உகந்து சூடும் இனமலர். மதிக் கொழுந்து. சந்திரன், (பிறையின் வளர்ச்சி தொடங்குவதால் கொழுந்து என்றார்) குளிர்புனல்-கங்கை. செக்கர்-அந்தி மாலையில் காணும் செவ்வானம் ]

4 தாழ்ந்துபல முறைபணிந்து தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி மருந்தான பெருந்தகையைச்
சூழ்ந்தவிசைத் திருப்பதிகச் சொன்மாலை வினாவுரையால்
வீழ்ந்த பெருங் காதலுடன் சாத்திமிக வின்புற்றார்.
(3021)

இறைவனைத் தாழ்ந்து பலமுறை வணங்கியபி, சிவபிரான் முன் நல்வாழ்வு பெற்ற மகிழ்ச்சி நிரம்பப்பிறவிப் பிணிக்கு நல் மருத்துவனான இறைவனுக்கு உகந்த சிறந்த பண்ணினால் அமைந்த சொல்மாலையை மிகுந்த விருப்பத்துடன் சாத்தி வழிபட்டார் [இப்பதிகம் இறைவனிடம் வினா எழுப்பும் பாணியில் அமைந்துள்ளதால் வினாவுரை என்று குறிப்பிடுகிறார் ]

5. பரவிவரு மானந்த நிறைந்த துளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கண் மிசைவிளங்கப் புறத்துணேவுற்
றரவநெடுந் திரைவேலை யணிவான்மி யூரதனுட்
சிரபுரத்துப் புரவலனார் சிலநாளங் கினிதமர்ந்தார்
(3022)

கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வந்தது; திருமேனி எங்கும் புளகாங்கிதத்தால் மயிர்க் கூச்செறிந்தது; அலைகள் மோதும் கடற்கரையின் அருகே அமைந்த திருவான்மியூரில், சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தர் சில காலம் தங்கியிருந்தார்.

மிசை-திருமேனி. ஆனந்தம் உள்ளேயும், புளகங்கள் உடலின் மீதும் விளங்கியதை இப்பாடல் அழகாகக் குறிப்பிடுகிறது. அரவம்-கடலில் எழும் மாறாதவோசை.

நெடுந்திரை-அலைகள் நீண்டும், ஒன்றன் மேலொன்றுமாக இடைவிடாது வருதல்-சிரபுரத்துப் புரவலர்-சீர்காழியில் பிறந்த சம்பந்தர் இங்கு தலைவர் எனக் குறிப்பிடுகிறார்.

6. அங்கணமர் வாருலகா ளுடையாரை யருந்தமிழின்
பொங்குமிசைப் பதிகங்கள் பலபோற்றிப் போந்தருளிக்
கங்கையணி மணிமுடியார் பதிபலவுங் கலந்திறைஞ்சிச்
செங்கண் விடைக் கொடியார்த மிடைச் சுரத்தைச்
சேர்வுற்றார் (3023)

அப்பதியில் தங்கியிருக்கையில் சம்பந்தர் உலகங்களுக்கெல்லாம் தலைவனான சிவபெருமானை அரிய தமிழில் மேன் மேலும் வளரும் இசை நிரம்பிய திருப்பதிகங்கள் பலவற்றால் துதி செய்து வழிபட்ட பின்னர், கங்கையை மணிமுடியில் அணிந்த ஈசர் எழுந்தருளியுள்ள பல தலங்களுக்குச் சென்று வழிபட்டார். பின்னர் சிவந்த கண்களையுடைய சிவபிரான் குடி கொண்டுள்ள திருவிடைச்சுரம் எனும் பதியை அடைந்தார்.

# திருநாவுக்கரசர் புராணம்

திருவான்மி யூர்மருந்தைச் சேர்ந்துபணிந் தன்பினோடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி யம்மருங்கு பிறப்பறுத்துத்
தருவார்தங் கோயில்பல சார்ந்திறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாருரு மலர்ச்-சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார்.

திருவான்மியூரிலுள்ள மருந்தீசரை உள்ளன்போடு துதித்துப் பெருவாய்மையுடைய தமிழ்ப் பாடல்களை அவர் மீது பாடிய பின், பிறவி நோயைத் தீர்க்க வல்ல சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோயில்களை அடைந்து வழிபட்டார். பின்னர் தமிழ் வேந்தர் எனப்படும் அப்பர், வாசனை நிறைந்த மலர்ச் சோலைகள் நிறைந்த மயிலாப்பூர் எனும் தலத்தை அடைந்தார். (மருவாரும்-வாசனை நியைந்த மலர்ச்சோலைகள் நிறைந்த பெருவாய்மைத் தமிழ் பெரிய வாய்மையானது; ஞானத்தில் முடிந்த உண்மை.)

# அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

குசமாகி ஆருமலை; மறைமாநுண் நூ லினிடை ;
குடிலான ஆல் வயிறு ; குழையூடே
குறிபோடும் மீனவிழி ; மதிமாமு காருமலர்
குழல்கார தானகுண மிலிமாதர் ;

புசவாசையால், மன்து உனைநாடி டாதபடி
புலையேன் உலாவிமிகு புணர்வாகிப்,
புகழான பூமிமிசை மடிவா யிராதவகை
பொலிவான பாதமலர் அருள்வாயே !

நிசநார ணாததிரு மருகா ! உலாசமிகு
நிகழ்போத ! மானபர முருகோனே
நிதிஞான போதமரன் இருகாதி லேயுதவும்
நிபுணா ! நிசாசரர்கள் குலகாலா ;

திசைமாமு கனாழியரி மகவான்மு னோர்கள் பணி
சிவநாத ராலமயில் அமுதேசர்
திகழ்ால ! மாகமுற மணிமாளிகை மாடமூயர்
திருவான்மி யூர்மருவு பெருமானே !

திருச்சிற்றம்பலம்.

# வண்ணச்சரபம்

(1839-98)

# தண்டபாணி சுவாமிகள்

நெல்லை மாவட்டத்தில் செந்தில் நாயகம் பிள்ளைக்கும், பேய்ச்சிமுத்து அம்மையாருக்கும் மகனாகச் சங்கரலிங்கம் அவதரித் தார். இவருக்குச் சிறு வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன்

இருந்தது. சீதாராம நாயக்சர் என்பவர் மூலம் வேல் வழிபாட்டு முறையை அறிந்த சங்கரலிங்கம், உலகியலில் உள்ள ஈடுபாட்டைத் துறந்தார். பதின்மூன்றாம் வயதிலேயே அவருக்கு முருக தாசர் என்ற பெயர் கிடைத்தது காவியுடையும், கௌபீனமும் அணிந்தவராய், வள்ளியூர் மலையில் வழிபாடு புரிந்து வந்தார். முருகன் தனக்குக் காட்சியளிக்காமையால் திருமலையிலிருந்து கீழே உருண்டு விழுந்தார்; அப்போதும் அவருக்குச் சிறு காயமே ஏற்பட்டது. இறுதிக்காலத்தில் விழுப்புரத்தை அடுத்துள்ள திருவாமத்தூரில் மடம் அமைத்துச் சமூக சேவை செய்து வந்தார். மிருகங்களைப் பலியிடுவதைத் தடுத்தார்; அந்தணர் ஒருவருக்குக் கண் பார்வையையும் அளித்தார்; மகப்பேறு வேண்டிய பெண்ணுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்க அருளினார். இறுதியில் திருவாமத்தூரில் சமாதியடைந்தார். அவர் எண்ணற்ற பாடல்களைஇயற்றியுள்ளார். திருப்புகழ்ச்சந்தம் அமையப்பாடல்கள்பாடியதால் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும் பெயர் பெற்றார். பழனி, கந்தகோட்டம் போன்ற தலங்களில் குடிகொண்டுள்ள முருகப் பெருமான் மீது அந்தாதி, பிள்ளைக்கவி, மாலை, கலம்பகம், அலங்காரம், வகுப்பு பஞ்சகம், சதகம் போன்ற சிற்றிலக்கியங்களைப் பாடினார். திருவரங்கப்பெருமான் மீது "திருவரங்கத்திருவாயிரம்" என்ற நூலையும் தில்லை அம்பலவாணர்மீது 'தில்லைத்திருவாயிரம்' என்ற நூலும் இயற்றினார். புலவர் புராணம். அருணகிரிப் புராணம், மற்றும் சில இலக்கண நூல்களையும் இவர் இயற்றினார்.

# வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பனைஓலையில் எழுதிய திருவான்மியூர்ச் சிவபெருமான் பதிகம்

## காப்பு - வெண்பா

திருவான்மியூர்ச் சிவனே சீதரனும் போற்றும்
ஒருவா ! புலித்தோல் உடையாய்-மருவார்

கடுக்கை யணிவானே! நின் கண்ணருளால் என்றன்
இடுக்க ணெலாம் தீர்த்தருளின்றே"

## நூல் - கொச்சகக் கலிப்பா

### 1

அங்கமுற்றும் வெண்ணீறு அணியும் உனது அடியார்பால்
வெங்கலிநோய் மருவிலுன்றன் வியன்புகழுக்கோர் இழிவன்றோ?
பங்கமில் சீர்தென்னளகைப் பதியுடையான் உயிர்போல்வாய்
செங்கண் விடைப்பரி யூர்வாய் திருவான்மியூர்ச் சிவனே.

### 2

மென்வலத் தோட்புலவர்தம் வாழ்வினையும் மதியார்தாம்
எவ்வ முறக்காணிலும் சற்றுமிரங்காதல் முறைதானோ ?
பெறவிடம் உண்டோனே பரமாய பண்ணவனே !
செவ்வரிக் கண் உமை பங்கா ! திருவான்மியூர்ச் சிவனே.

### 3

இருக்கு முதலாய மறை ஈரிரண்டும் ஏத்தரிதாய்ப்
பெருக்கும் உன்றன் புகழ்சிறிது பேசும்நலம் பெறுவேனா
மருக்கம் பூங்கொன்றை யணிவார் சடையில்
திருக் கொழியத் தடுத்தாள்வாய் ! திருவான்மியூர்ச்சிவனே.

### 4

நாவேறுமவன் கேள்வன் நடுத்தலையில் பலிகொள்வாய்
மாவேறப் புனைவார்க்கும் பரிசளித்த விதம் யாதோ
தாவேறும் வல்லவுணர் தமக்கும் அருள்வோனே!
சேவேறும் பெருமானே திருவான்மியூர்ச் சிவனே.

**5**

புத்தர் முதற்பகர்கின்ற புலைச் சமயத்தினர் முன்னென
சித்தமொல்கித் தளராமற் திருவருள் வாழ்வடையேனோ
மத்தமெருக் காத்தும்மை வன்னிமுதற் சென்னியிற்கொள்
சித்தனே! ஈடில்புகழ்த் திருவான்மியூர்ச் சிவனே.

**6**

புணராமுலை மின்னார் பொய்ப்போக மயல் கொண்டு
நாணாமல் திரிவேற்கு நலம்சிறிது ஈந்தருள்வாயோ
ஆணாதி ஒருனேறு ஆகியொன்றும் ஆகானே !
சேணாடர் பணிகொள்ளும் திருவான்மியூர்ச் சிவனே !

**7**

கரியவனும் காணாநின் கழலடிபாடிக் கசிந்துருகாது
உரியவினனம் போகத்தூடு உழல்வோனும் உய்வேனோ?
கிரியினை யில்லெனக் கொண்டு கிளர் ஒளிப் புன்னகை தன்னால்
திரிபுரம் தீயெழச் செய்தாய்-திருவான்மியூர்ச் சிவனே !

**8**

மிக்கபுகழ்ப் பார்த்தனது வில்லடிக்கு விறல்வாளி
அக்கணத் தன்று அருள் செய்தாய்! அடியேனுக் கிரங்காயோ?
முக்கண்ணுடைய பெம்மானே! மூவருக்கும் முதலானாய் !
திக்கடங்க உணர்கீலத் திருவான்மியூர்ச் சிவனே !

**9**

அத்திமுகத்தினன் செவ்வேள் ஆகும் இருவரைப் பெற்றாய்
நத்தி யுனைப் போற்றிசைக்கும் நாயடியெற்கு இரங்காயோ?
பத்திவலைப் பாடல் கூறிப் பணிந்தானுக்கு அருள் செய்தாய் !
சித்தியோடு முத்தி நல்கும் திருவான்மியூர்ச் சிவனே !

## 10

நால்வர்களுக்கு அருள்செய்த நலம்கேட்டு நண்ணியுன்றன்
பால்வரும் என்றனக்கான பரிசின்னே தரவேண்டும்
கோல்வனப்புக் கண்ணாளைக்குல விடைமேற் கூடவைத்தாய்
சேல்வள நீர்வயல் காட்டும் திருவான்மியூர்ச் சிவனே.

## 11

செல்வமலிதருபான்மைத் திருவான்மியூர்ச் சிவன்பால்
நல்வரம் பெற்றுய்வ தெண்ணீ நறுந்த மிழ்த் தென்மயமெனும்
நல்வரைப் பால் சுவிர்கின்ற கழைவனத்தோன் கழறுமிவை
சொல்லதனிற் துணிவுற்றோர் துயர்சிறிதும் தோயாரே !



# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்



தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் அனைத்துச் செயல்களும் கின்றன. "நம்பின பேருக்கு நடராஜர், நம்பாத பேருக்கு யமராஜர்' நிகழ் என்பது நாட்டுப் பழமொழி. "என் செயலால் ஆவதொன்றில்லை, இனித் தெய்வமே நின் செயலென்று அறிந்தேன்" எனும் வாக்கை, வாழ்க்கையில் முழுமையாகக் கடைப்பிடித்தவர் பாம்பன் சுவாமிகள். குமரனே அனைத்துமென இப்பூவுலகிற்குஉணர்த்திய அப்பெருமானின் வாழ்வில் உண்டான பல சோதனைக் கட்டங்களில் முருகப்பெருமான் துணைபுரிந்தாராம்.

இராமேஸ்வரத்தையடுத்த பாம்பனில் சாத்தப்பா பிள்ளைக்கும் செங்கமலத் தாயாருக்கும் அப்பாவு என்ற பெயருடன் அவதரித்த இப்பெருமான், இல்லற வாழ்வில் ஈடுபட்டுப் பின்னர் துறவறத்தை நாடினார். பல தலங்களுக்கு யாத்திரை புரிந்து தனது இறுதி நாட்களைச் சென்னை தங்கசாலைக்கு

அருகேயுள்ள நம்புலய்யர் தெருவில் கழித்தார். இறுதியில் திருவான்மியூர் கலாக்ஷேத்திரத்திற்கு அருகே சமாதியடைந்தார். அவரது சமாதி மீது முருகன் கோயில் அமைந்துள்ளது. வெள்ளிக்கிழமைகளிலும், பௌர்ணமியன்றும் ஏராளமான பக்தர்கள் இங்கு வழிபாடு செய்கின்றனர். இங்கு நடைபெறும் மயூரவாகன சேவை சிறப்பு வாய்ந்தது.

சுவாமிகள் பாடியுள்ள 6666 பாடல்களை ஆறு மண்டலங்களாக வகைப்படுத்தியுள்ளனர்; 1) சுவாமிகளின் பாடல் (2) திருவலங்கத் திரட்டு (3) காசி யாத்திரை, பரிபூரணானந்த போதம் தகராலய ரகசியம் (4) சிறு நூற்றிரட்டு, சேந்தன் செந்தமிழ், பத்துப்பிரபந்தம், செக்கர்வேள் செம்மாப்பு (5) திருப்பா (6) ஸ்ரீமத் குமாரசுவாமியம்

அவர் பாடிய பாடல்களுள் பஞ்சாமிர்த வண்ணம் மற்றும் பால், தயிர், நெய், சருக்கரை, தேன் ஆகிய வண்ணங்களை முருகனே நேரில் கேட்டு மகிழ்ந்ததாகவும், அவற்றைப் பக்தியுடன் படிப்பவர்கள் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்த பயனைப் பெறுவதாகவும் நம்பப்படுகிறது.

தனக்கு ஏற்பட்ட இன்னல் நீங்குவதற்காக, அவர் பாடிய சண்முகக் கவசம், மனித உடல், உயிர், ஆன்மா ஆகியவற்றிக்குக் கவசம் போன்றது. தமிழ் எழுத்துக்களான உயிர், மெய் ஆகியவற்றில் தொடங்குமாறு, முப்பது பாடல்களால் அமைக்கப்பட்ட இந்நூல், சுவாமிகளின் தமிழ்ப்பற்றை விளக்கும். அவர் தனித் தமிழில் "சேந்தன் செந்தமிழ்","செவியறியுறூஉ" ஆகிய நூல்களை இயற்றினார். அவரது 'பல் சந்தப் பரிமளம்' என்ற யாப்பிலக்கண நூல், இலக்கண, இலக்கிய நிலைகளில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

சுவாமிகளின் தோத்திரப் பாடல்களுள் 5000 பாடல்கள் ஆறுமுகச் சிவத்திற்கும், சாத்திர நூல்கள் ஐம்முகச் சிவத்திற்கும் அமைகின்றன. பிரப்பன் வலசையில், தவம் புரிந்தபோது அவர் பெற்ற உபதேசத்தைத் 'தகராலய இரகசியம்' எனும் நூலில் வெளியிட்டார். பின்னர் அந்நூலுக்குச் 'சதானந்த சாகரம்' எனும் உரையையும் எழுதினார். காசி யாத்திரை புரிந்தபின் சிறந்த தத்துவக் கருவூலமான "காசி யாத்திரை" எனும் நூலை இயற்றினார். விதண்டாவாதம் புரிந்த சில வைணவர்களை வென்ற பின் அவர்

எழுதிய "சைவ சமயச் சரபம்" எனும்நூல் தகர்க்க முடியாத சைவக் கோட்டையாகும். மூல நூலோடு முரண்படாமல், கந்த புராணத்தை எழுத விரும்பிய சுவாமிகள் "ஸ்ரீமத் குமாரசுவாமியம்"எனும் நூலை இயற்றினார். தான் கண்ட மயில்வாகனக் காட்சியை'அசோக சால வாசம்' எனும் எட்டுப் பதிகங்களில் வெளியிட்டார். தனக்கு, ஏற்பட்ட 'வெப்புநோய் நீங்குமாறு அவர் பாடிய 'குமாரஸ்தவமும், 'குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி' என்ற பாடற் தொகுப்பும் 'சிறந்த பக்தி இலக்கியங்களாகும். இவ்வாறு எண்ணற்ற இலக்கியங் களைப் படைத்துள்ள பாம்பன் சுவாமிகள் திருவான்மியூர் மருந் தீசர் ஆலயத்தின் மீது ஒரு பதிகம் பாடியுள்ளார்.

# ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அருளிய எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

## 1

(சந்தக் குறிப்பு தான தான தான தான, தான தான தானனா)

சீரு லாவு நீடு மாட வீதி யாதி தேவர்வாழ்
ஏரு லாவும் வேத பீட மேய்வி லாச வான்மியூர்
நாரு லாவு ஞான வேலி னாத னாத பாதமே
பாரு லாவு ஞான நூலர் பாடும் வீடு மாகுமே

## 2

கோட றாத சோலை தாழை கூடு நீழ னாறுநீர்
ஏட றாத வாரி சாதி யேய்த டாக வான்மியூர்
மாட றாத மாம யூர மூரு மாதி பாதமே
பாட றாத ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

## 3

தேச றாத மீனு லாவு சீத வாரி நாளுநீர்
வீச லார்வி லாச வூர்வி வேகர் வாழும் வான்மியூர்
வாச வேலி னான்வி பூதி மாண றாத பாதமே
பாச நூறு ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

## 4

கூடு நாரை மீனு வாரு கோலம் வான்மண் மேடுவால்
நீடு ஞாளி பூஞை சேன மோர்நி லாவும் வான்மியூர்
நாடு வேல னாம யூர நாத னாத பாதமே
பாடு மோகை ஞான நூலர் பாடும்வீடு மாகுமே.

## 5

பூவு லாம்வி ணாடு மேரு பூத மேகி னாலுமே
ஓவு றாதெ நாளு மாத ரோதி சாரும் வான்மியூர்
மேவு நீன்ம யூர மூரும் வேல னாத பாதமே
பாவு தார ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

## 6

நாவல் வாழை தாளி பூக நாளி கேர மேயவூர்
தாவ ணார வாவி வாழ்ச காயபூதி வான்மியூர்ப்
பூவன் மேனி வேல னீத போத னாத பாதமே
பாவ னாவர் ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

## 7

பூணி கோக டாமை யாடு பூழி மூச வேகுமூர்
ஏணி லாவு வேத கீத வேர்கு லாவும் வான்மியூர்
வாணி லாவு ஞான வேலன் வாச நாத பாதமே
பாணி மேய ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

**8**

பேழு ஞவெ ஞமை யூக மேபல் காய்கள் பீறலாற்
கூழு லாய சூழன் மேவு கோல நீடும் வான்மியூர்
வாழு மாம யூர மூரு மாகவாதி பாதமே
பாழு றாத ஞான நூலர் பாடும் வீடு மாகுமே.

**9**

பாலி றாந லால நீள்ப லாவி ளாப ராய்களோர்
பாலி றாம தூக மாவொர் பால ளாவும் வான்மியூர்
பாலின் மேனி நாதர் சேய்கு கேச ஞத பாதமே
பாலி னேய மானு நூலர் பாடும் வீடு மாகுமே.

**10**

கூன னாகு மீன மூரல் கூடு பாநல் வான்மியூர்
ஞான வேல னார லோதி நாம னாடு தேவனாம்
மான வான்ம யூர மேறு மாக சோதி பாதமே
பான ருவி னோதி நூலர் பாடும் வீடு மாகுமே.

# அருட்கவி சேதுராமன் (ஸ்ரீ சாதுராம் ஸ்வாமிகள்)

ஸா. வேங்கடசுப்பையர், திருமதி தர்மாம்பாள் தம்பதியருக்கு 3-2-1937 அன்று சென்னை ஜார்ஜ் டவுனில் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சேதுராமன் என்று பெயரிட்டனர். தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் தாலுக்காவில் அமைந்துள்ள நடாகுடி கிராமமே இவர்களுக்குச் சொந்த கிராமம். சிறு வயதிலேயே சமய நூல்களில் சேதுராமனுக்கு ஈடுபாடு ஏற்பட்டது.

'வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள்' என்பவர் 1944 முதல் 1950 வரை சேதுராமனுக்குத் திருப்புகழைக்கற்பித்தார் வள்ளிமலை சுவாமிகளோ தனது 38 வது வயதில்தான் எழுத்தறிவு பெற்றார். ஆயினும் சொல் பிரித்துப் படிப்பதற்கே கடினமான திருப்புகழ்ப்பாடல்களை, எளியவர்களும் தம்மைப் பின்பற்றி வந்து பாடச்செய்ய அவரால் முடிந்தது. புரட்சிக் கருத்துக்களையுடைய வரான வள்ளிமலை சுவாமிகள், திருப்புகழ் பாடுவதில் புதிய மரபுகளையும், வழிகளையும் வகுத்தார். அருணகிரிநாதர் பாடிய பாடல்களைப் பன்னிரெண்டு திரட்டுக்களாகத் தொகுத்தருளினர்.

சேதுராமனும், அவரது சகோதரரான ஸு. வே. சுப்பிரமணியம். அவர்களும் வள்ளிமலை சுவாமிகளின் சீடர்களாக விளங்கினர். இவ்விருவரையும் "திருப்புகழ் சகோதரர்கள்" என்று காஞ்சி காமகோடி பீட பரமாச்சாரியார் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளினார். ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் ஸச்சிதானந்த ஸ்வாமிகள் தொகுத்தளித்த "திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறையை இசையுடன் பாடிப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டு திரு. சேதுராமன் செயல்பட்டு வருகிறார்.

திரு. சேதுராமன் சென்னை புனித கேபரியல் உயர் நிலையப் பள்ளியில்பயின்று வந்தபோது திருப்புகழ்ப்பாடல்களைப் பாடுவதிலும், தலயாத்திரை புரிவதிலும் பெரு நாட்டம் உடையவராயிருந்தார். 1943 டிசம்பர் திங்களில் இவ்வாறு தலயாத்திரை புரிகையில் பல தெய்வீக நிகழ்ச்சிகள் அவரது கனவில் தோன்றின 9-1-1952 அன்று தன் பெற்றோர்களுக்கும் தெரியாமல் காஞ்சீபுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய தலங்களுக்குச் சென்று வழிபட்ட பின்னர் சேதுராமன் மாமல்லபுரத்தில் பள்ளி கொண்டுள்ள திருமாலை வணங்கினார் (19-1-1952). அன்று இரவு ஒரு சத்திரத்தில் தங்கியபோது அவரது கனவில் தோன்றிய வள்ளிமலை சுவாமிகள் "நீ நாளைக் காலை திருப்போரூருக்குச் செல்வாய். அங்கு ஒரு முதியவர் வருவார். நீ உனது இல்லத்திற்குச்செல். நீ வீட்டிலிருந்து கிளம்பியது ஒருபால் நன்மைத்து, ஒருபால் தீமைத்து," என்று இயம்பினாராம். மறுநாள் (20-1-52) திருப்போரூர் முருகன் சந்நிதியில் சேதுராமனைச் சந்தித்த ஒரு முதியவர் அவருக்கு

சுவாமி தரிசனம் செய்வித்து, ஒரு சிறு காகிதத்தையும் கையில் கொடுத்தார். சேதுராமனைச் சென்னை சிந்தாதிரிப் பேட்டையிலுள்ள அவரது இல்லத்தில் சேர்த்தபின் முதியவர் மாய மாய் மறைந்தார். முதியவர் அளித்த காகிதத் துண்டில் "ஹர ஹர ஹரா" எனும்சொற்கள் நூற்றெட்டு முறை எழுதப்பட்டிருந் தன.

அருணகிரிநாதரை விராலிமலைக்குச் செல்லுமாறு அருளி யது போலவே தன்னையும் திருப்போரூருக்கு அனுப்பிய முரு கனின் திருவருளை எண்ணி சேதுராமன் மகிழ்ந்தார். இவ்வாறு 20-1-52 அன்று திருப்போரூரில் திருவருள் பெற்றபின் அருட் கவி சேதுராமன் என வழங்கப்பட்டார். அப்போது அவருக்குப் பதினைந்து வயது இருக்கும். அவருக்குத் திருவருள் தந்த மூல நூல் திருமுருகன் ஹர ஹரே ஹாரக் கும்மி (108) எனப்படும். அந்த ஆண்டு பள்ளி இறுதித்தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னர் திருப்போரூர் சப் ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்திலும், சென்னை பிருத்வி காப்பீட்டுக் கழகம், ஆயுள் காப்பீட்டுக்கழகம்(எல் ஐ.சி) ஆகியவற்றிலும் சிலகாலம் பணிபுரிந்தார்.

இதன் பின்னர் பல தலங்களுக்குச் சென்று, அங்கு எழுந் தருளியுள்ள இறைவன் மீது பல பாடல்களைப் பாடினார். முத லில் முருகன் பேரில் சந்தபாடல்களை மட்டுமே பாடி வந்த அருட்கவியார், பின்னர் பிற தெய்வங்களின் மீது பதிகங்களைப் பாடத்துவங்கினார். 15-2-1969 அன்று தமது 32-வது வயதில் வடதிருமுல்லைவாயிலிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்தில் துற வறம் பூண்டு "அருட்கவி ஸ்ரீ ஸாதுராம் சுவாமிகள்" என்ற திரு நாமம் பெற்றார். சந்நியாசினி மோனாம்பிகை அம்மையார், ஸ்ரீ ஸாது பார்த்த சாரதி (ஸ்வாமி அண்வாநந்தா) ஆகிய இருவரும் அவருக்குத் துறவறம் அளித்தனர். தற்போது தவத்திரு சாதுராம் சுவாமிகள் நங்கைநல்லூரிலுள்ள ஸ்ரீ பொங்கி மடாலயத்தில் தங் கியுள்ளார். திருப்புகழை இசையுடன் கற்பித்தல், அருணகிரிநாதர் வள்ளிமலை சுவாமிகள் ஆகியோரின் சிலாவுருவங்களைத் திருப் புகழ் பாடல்பெற்ற தலங்களில் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு செய்தல், திருப்புகழ் மன்றங்கள் சபைகள், போன்றன ஏற்படுத்தல் இந்துசமயக் கருத்துக்களைப் பரப்புதல் போன்ற சமயத்தொண்டுகளை சுவாமிகள்தற்போது புரிந்து வருகிறார்.

யாப்பிலக்கணம், பன்னூற் பயிற்சி, மரபு ஞானம் இவற்றில் எதையும் கற்றிராத நிலையில், பள்ளி இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்த போதே மடை திறந்த வெள்ளம்போல், புலவர் களாலும் எளிதில் பாடவியலாத சந்தக் கவிகளைக், காகிதத்தில் எழுதாமல், நின்ற நிலையிலே, தயக்கமோ, தடங்கலோ இன்றி ராகமும், தாளமும் ஒத்துவர இலக்கண, இலக்கிய நயங்களோடு அருட்கவியார் பாடினார். இது இறைவன் அவருக்களித்த வரப் பிரசாதம் ஆகும். தம்மை மறந்த நிலையில் இன்றும் பாடல்களைப் பாடுவதுடன், கைக்குறிப்பு எதுவும் இன்றி, பல்வேறு தலைப்புக் களில் சொற்பொழிவு ஆற்றும் ஆற்றலையும் பெற்றுள்ளார். சுமார் 15000 க்கும் மேற்பட்ட பாடல்களை அவர் பாடியுள்ளார். அப்பர், சம்பந்தர் அக்காலத்தில் எண்ணற்ற பாடல்களை எவ்வாறு பாடி யிருக்கக்கூடும் என்று பலர் சந்தேகிக்கின்றனர், அவ்வாறு அவர் களால் பாடியிருக்கமுடியும் என்ற உண்மையைச் செயல்முறையில் அருட்கவி அவர்கள் காட்டியுள்ளார்.

# திருவான்மியூர் அருட்புகழ்

(அருட்கவி சேதுராமன் அவர்களின் அருள்வாக்கில் 29-5-55ல் ஸ்ரீ மருந்தீசர் சந்நிதியில் எழுந்தவை

காரிகா மாரிகா லாரிகோ வேறிகா பாலிதேர்ப்
பாரிபா மாரியாழ் சூரிசா தாரிபாற் பற்றினான்
வாரிபால் மாகரை யோரமாய்ச் சங்கமூர் வான்மியூர்
நாரிபா கன்கழல் நாடுவார் தீவினை நாசமே

(காரி-மேகத்தைச் சடையில் கொண்டவன். காம அரி, கால அரி-மன்மதனுக்கும், யமனுக்கும் பகைவன் கோ-பசு தேர்ப்பாரி-(பார்) பூமியாகிய தேரினன், நாரி-பெண்)

## 2

காடவர் கோன்கழற் சிங்கர்கா ளத்தியார் கண்ணப்பர்
ஆடவர் கோன்குலச்சிறைதிரு மங்கையர்க் கரசியார்
கூடலர் கோனிவர் கும்பிட்டு வழிபடும் கொள்கையான்
மாடகூ டங்கள்சேர் வான்மியூர் வாணனை மறவலே.

(கூடலர்- மதுரை மக்கள். கோன்-நெடுமாற பாண்டியன்)

## 3

காசிசீ காழிகா ஞூர்கச்சி புக்கொளி யூரவி
நாசிநா கைநணா நல்லம்வல் லம்நனி பள்ளியான்
வாசியா மாறுகோ மாயுவை வைத்தவன் வான்மியூர்
மாசிலா மாமணி யீசனை வாழ்த்துதல் வண்மையே

(வாசி-குதிரை. கோமாயு-நரி)

## 4

காளிகை யாளிமா வாகனி கூளிகள் காணப்பூ
வாளிகைக் கொண்டமா ரோனைவெல் வாளைவென் றாடினான்
மாளிகை சூளிகை மாமதில் சூழ்திரு வான்மியூ
ராளிகைம் மாவுரி போர்த்தவற் கன்பர்க்கா ளாவதே.

(காளிகை-காளி. யாளிமா வாகனி-காளி. கூளி-பேய். பூவாளி-மலர்ப் பாணம். மாரோனை-மன்மதனை)

## 5

காமனைக் காய்ந்தவன் காளகண் டன்முக்கட் காரணன்
பூமனைத் தண்டனை செய்தவன் பொற்சடைப் பொற்பினான்
மாமனைத் தண்டித்தாட் டுத்தலை வைத்தவன் வான்மியூர்ச்
சோமனைச் சூடிதன் தொண்டுகொள் ளாவிடிற் றுன்பமே,

(பூமன - பிரமன்)

## 6

கீளுலாம் கோவணம் கீழரைக் கேயசைத் திட்டவன்
கோளுலாம் வேணிமேற் கோளராக் கூவிளம் கொண்டவன்
வாளுலாம் நீள்விழி மாதராள் பங்கினான் வான்மியூர்த்
தேளுலாம் செஞ்சடைத் தேசிகன் சேவடி சேர்மினே.

(கோள்-ஒளி. தேளுலாம் செஞ்சடை : சிவபிரான் சடையில் தேளும் உண்டு "பொற்கடுக்கை ஏடவாம்"-திருப்புகழ்-1251. கபாலமாலா பரணம் ஸர்ப்ப வ்ருச்சிக பூஷணம்"- அகோரமூர்த்தி ரூபத்யானச்லோகம்)

## 7

காத்தருள் கண்ணன்மால் காமன்கா மன்றொழும் காலினான்
பூத்தருள் புன்னகைப் புட்குரற் செய்யவாய் புந்தியான்
மாத்தருத் தண்டலை வண்டறை பொய்கைசூழ் வான்மியூர்
ஏத்தலார்க் கில்லையின் பம்உண்டெந் நாளுமில்லாமையே

(மால்-திருமால். காமன்-இந்திரன், காமன்-மன்மதன்.
செய்யவாய்-பார்வதி. (அன்மொழித் தொகை)

## 8

காட்டுவான் கையடை யாளம்கல் லாலின்கீழ் நால்வருக்
கூட்டுவான் மெய்யுபதேசங்கள் உண்மையாய் ஓதினான்
வாட்டுவான் மெய்யடி யாரையே வஞ்சனாய் வான்மியூர்
வேட்டுவான் கங்கைவாழ் வேணியான் பேணினான் மெய்ம்மையே

## 9

காதலாற் பாடுவார் கணகள்நீர் தேக்குவார் கண்ணியர்
வேதமே யோதுவார் விண்ணவர் மண்ணவர் வேண்டவே
வாதவூரார்க்கருள் செய்தவன் வாழ்திரு வான்மியூர்
ஓதவல்லார்கள் தம் ஊழொடு தொல்வினை யோயுமே.

## 10

காணரி தாகவோர் காலரிக் குன்றமாய்க் கண்டவன்
பேணரி தாயவன் பிஞ்ஞகன் பித்தன்பேழ் வாயணி
வாணன்மை வார்குழல் மங்கைநல் லாள்பணி வான்மியூர்
வாணனை வந்தனை செய்பவர் சிந்தனை மன்னுமே

(அரி-நெருப்பு. பேழ்வாய்-பாம்பு)

## 11

காற்றனல் மண்புனல் விண்ணிவை ஐந்துமாய்க் காண்பவன்
ஏற்றவன் ஏற்பவன் என்பவர் தங்களுக் கேற்றவன்
மாற்றலர் முப்புரம் சுட்டவன் வாழ்திரு வான்மியூர்ப்
போற்றலும் சாற்றலும் புண்ணியம் நண்ணிய செய்கையே.

(ஏற்றவன்-இடப வாகனத்தன். ஏற்பவன்-பிச்சை எடுப்பவன் ஏற்றவன்-உரியவன்)

## 12

காலனை யன்றுதை காலினான் கஞ்சுகிக் காதினான்
வேலனை யீன்றவள் சுந்தர நாயகி வேட்டணை
வாலனாம் மாதிவான் மீகர்பூ சித்தவூர் வான்மியூர்ப்
பால்வண ணன்மருந் தீசன்பா தங்களைப் பற்றுமே

(கஞ்சுகி-பாம்பு. சுந்தர நாயகி-அம்மை திருநாமம். பால்வண்ணர், மருந்தீசர்-இறைவன் திருநாமங்கள்.)



# திருவான்மியூர்த் தலபுராணத்திலுள்ள துதிப்பாடல்கள்

சிவமயம், திருச்சிற்றம்பலம், திருவான்மியூர்ப் புராணம்

கடவுள் வாழ்த்து,

### திருமுடிவிநாயகர்

ஒருமுடிவின்னமுமறியாதுயர்மறைகள்புகழனந்தமோதிநிற்க
விருமுடிவின்மௌலியனுமெழிற்சரோருகத்தேவுமேத்திவாழ்த்த
வருமுடிவில்லுவமணிபுமிறைமகனுப்பிரணவத்திருகமான
திருமுடிவிநாயகனிருபோதுமுப்போதுஞ்சிந்தித்துய்வாம்

### நடேசர்

சஞ்சிதமாதியசஞ்சலத்துழலுமானவரின்சழக்கறுக்கு
மஞ்சிதமாஞ்சிவகாமியம்மைநிதமருங்கிருந்துமனங்களிப்பச்
சிஞ்சிதமேவியசிற்றம்பலத்துப்பேரானந்தத்திருநடஞ்செய்
குஞ்சிதபாதத்தழகைக்கண்குளிரத்தரிசித்துக் கொள்ளுவாமால்

### மருந்தீசர்

முருந்தீசவிநயவிளர்நகையுமையாமெய்பொருட்குமுதல்விகூந்த
லிருந்தீசந்ததமிசைக்குநயமனைத்துஞ்செவியாரவின்பங்கொண்டு
பெருந்தீசவிதாமதிமுக்கணனுகியாவரையும்பெட்பினுளு
மருந்தீசன்மலரடியைமுடிபுனைந்துகொடியவினைமாசுதீர்வாம்.

### சொக்கநாயகியம்மை

மிக்கவாகமமறையின் பொருளுணருமடியர்மனமேவியென்றுந்
தக்கவாறுடனிருந்துமலமொழியுங்காறுமருட்சத்தியான
நக்கனுர்புடைமருவியைந்தொழிற்குங்காரணமாய்நண்ணிவாழுஞ்
சொக்கநாயகியம்மைசெஞ்சரணநெஞ்சாரத்துதித்துவாழ்வாம்

## பால்வண்ணர்

மால்வண்ணமாலயனுதியவமரர்முனிவரர்கண்மயங்கிவேத
நூல்வண்ணமேயுணராதாகமத்தின்வழியேத்துநோன்மைக்காகச்
சேல்வண்ணவிழியுமையாளோடமர்ந்துநாளுஞ்சீர்த்திமல்கும்
பால்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமேனியனைம்பரவுவாமால்

## திரிபுரசுந்தரி

அரிபுரமோடயனரியாதியர்புரமுமதிக்கேமென்றரியவெண்மைக்
கிரிபுரமேதருகவெனவொருகணத்துமுன்னயந்துகிளக்கஞானப்
பரிபுரவொண்சீறடியைப்பன்னுமவர்க்களித்தருளும்பண்புவாய்ந்த
திரிபுரசுந்தரிததாளைத்தரிதாளவெஞ்சிரசுசிறக்குமாமால்

## தட்சிணாமூர்த்தி

பொருந்தியநால்வருக்கன்றுகயிலைதனிலுரைத்தவகை
போதாவென்றே
யருந்தகையவத்துவிதப்பதிபசுபாசத்துண்மையருமையாகத்
திருந்தியநற்பெருந்துறையின் மணிவாசகர்க்குமுனந்தெரித்துவேதக்
குருந்தடியிலெழுந்தருளுங்குருவடியைமுடிதிருந்தக்கொண்டு
வாழ்வாம்,

## விநாயகர்

தேம்படிந்துளருந்திங்கட்சேகரற்சேர்ந்துவிண்ணிற்
றும்படிந்தென்றும்விண்மீன்றங்கிவாழ்தகைமைமானுங்
கூம்படிக்கோட்டைச்சூழ்ந்தபொறிமுகங்கொளுமுன்னோனை
நாம்படிந்துய்வாமென்றுநலமெலாநண்ணப்பெற்றே

## அறுமுகக்கடவுள்

மகமாறுடையவிமயவர்கண்மகிழுமுலகையழற்கீந்த
வகமாறுடையவசுரர்களையணிவேலதனுக்கிரையாக்கிச்
சுகமாறுடையகுஞ்சரியின்றுணைத்தோடமுவிமணந்திட்ட
முகமாறுடையபெருமான்றன்முளரித்தாளைமுன்னுதுமே

## வயிரவர்

ஏமநிறத்திசைமுகவனைந்தலையிலொன்றுபறித்தினிதங்கேந்தி
வீமமுறவொருகோடிவிண்டுவின்செந்நீரேற்றுவிபுதர்வேண்ட
வாமனன்வெண்கங்காளம்வாங்கியவற்செருக்கொழித்துவாகை
பூண்ட
காமரணிவயிரவநங்கடவுளிருபாதமலர்கருத்துட்கொள்வாம்,

## நந்திதேவர்

முந்தியவல்வினைநமுவவிமையவர்வெண்கயிலைதிருமுன்னஞ்
சார்ந்து
வந்திசெயமிடைதலிறலவரவர்தமுறைமையினைவகையிற்சூழ்ந்து
பந்தியுறக்கொளுவித்துப்பயனிரப்பவேத்திண்திண்படையைத்
தாங்கு
நந்திதிருத்தாள் [illegible] லர்கணஞ்சிரத்துக்கணிகலனாநாடுவாமால்.

## தமிழாசிரியர் - அகத்தியர்

சகத்தினைவளைதருகடலுமுந்தளவுறச்சமைத்துமாந்தியே
யிகத்தினிவரனருளின்பொருங்கடியவரென்றுமேத்துவான்
மகத்துவமுளவொருதமிழ்ப்பயிர்நிலத்தலைவளர்த்ததென்மலை
யகத்தியமுனிவரரடியிணை முடிவயினமைத்திட்டாமரோ.

## ஆளுடையபிள்ளையார் - சம்பந்தர்

அரசமயத்தவர்நோன்சமண்பூடொழித்தன்றுகண்ணன்
றரசமயத்தென த்தன்னுருத்தந்துதமிழையொன்றி
முரசமயத்தரளச்சிவிகைப்பொலிமுதியஞானப்
பரசமயக்கோளரிப்பிள்ளையார் பதம்பற்றுதுமே

## ஆளுடையநம்பி-சுந்தரர்

கந்தரத்திற்கடுவடக்கிககடவுளரைக்காத்தாண்டகருணைத்தேவை
மந்தரத்தினிகர்மாடநிரைவீதியாரூரின்மங்குற்போதி
லந்தரநேரிடைப்பரவைபாலனுப்பியூடறணிந்தமர்ந்தவெங்கள்
சுந்தரமூர்த்தியின்மணநற்கோலமதைதமனமாரத்தொகுத்துட்
கொள்வாம்

## ஆளுடைய வடிமை - மாணிக்கவாசகர்

ஆணிப்பொனம்பலத்திலானந்தத்தாண்டவஞ்செயரனார்நீள்செய்
வேணியிற்சென்னியின் மண்ணைப்பிட்டுக்காச்சுமப்பித்து
மீனவன்றன்
பாணிப்பிரம்புகொடுவடிப்பித்தும்பரனருளைப்பரவுவித்த
மாணிக்கவாசகனாரடியவருக்கடிமைகளைமகிழ்ந்துவாழ்வாம்

## சண்டேசுரர்

தந்தையேயாதியதமர்களாயினுஞ்சங்கரன்றன்னை
நிந்தையேசெய்திடிற்றடிந்தவாதம்மினநீங்குகபாவப்
பந்தமேயில்லைபுண்ணியமாகுமிப்பாரினிலென்றுச்
சிந்தையேதந்தசண்டேசர்வண்பூங்கழற்சோறுவாமரோ

## அறுபத்து மூவர்

மின்போலொளிருஞ்சடைப்பெருமான்விழியின்மணியுந்திருநீறு
மன்பாற்போற்றியனவரதமஞ்சக்கரத்தைக்கொண்டாடிப்
பொன்பாற்பெண்பாற்புவியின்பாற்போந்தபாசப்புரையொழித்த
வொன்பானேழுமுனிவரையுமுரைப்பாம்வினையைக்கரைப்பாமே

## திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மர்

என்பதிபாம்பணிபூண்டுசிவைகளிக்கமன்றினடமியற்றும்பெம்மான்
றன்பதியாதியபணிந்துமனங்கசியவுடல்சூழையத்தனித்தமோன
வன்பதிகமாநிலவவருண்மயமாந்திருவிசைப்பாவருளுந்தெய்வ
வொன்பதின்மரொண்கமலச்செஞ்சரணெஞ்சரணத்தொளிருமா
மால்.

## சந்தானகுரவர்

இந்தானனவம்மைபாகர்வேதாகமத்தினியைந்தஞான
முந்தானசுத்தாத்துவிதவுண்மைதமிழ்மொழியிலுலகமோங்கத்
தந்தானசிவபோகத்தேதிளைக்கும்பெருஞ்செல்வஞ்சார்ந்த
வெங்கள்
சந்தானகுரவர்திருத்தாள்கடமைநங்கடமைதலைக்குக்கொள்வாம்

## சேக்கிழார்

இருண்மலமொழிவித்தெம்பெருமானேடிரண்டறக்கலப்புவித்
தொளிருஞ்
தெருண்மிகுஞானத்தொண்டர்தஞ்சரிதைசெவ்வியவொளிதிகழ்
கனகப்
பொருண்மலிமன்றத்திறைதருமொழியாற்புகல் வித்தபுண் ணியனாம
வருண்மொழித்தேவரழகியகமலவமலவொண்ணடியடைக்கலமே

அவளுடையவரசு-அப்பர்

அழஞறுநீற்றறையிற்றென்றலுறச்செய்த தன்மீதமர்ந்துநின்றுஞ்
சுழலாருங்கருங்கடல்வாய்க்கன்மிதப்பக்கடந்துவளத்துறையிற்
சேர்ந்துந்

தொழவாருமாலமதையமுதமெனவுட் கொண்டுந்துளங்கிவாய்ந்த
வுழவாரப்படையேந்தும்வாகீசப்பெருந்தகையையுள் ளங்கொள்வாம்

திராவிடமகாபாடிய முனிவரர்

பித்தாந்தப்புறச்சமயப்பிணக்கறுத்துப்பேருவகை
பிறங்கிமல்க

முத்தாந்தமீதெனவேமெய்கண்டார்சாத்திரத்துமுடித்துக்காட்டி
நித்தாதமியாவருக்குமூட்டுவிப்பான் றுறைசைவயினிலைத்த
வெங்கள்

சித்தாந்தபானுவெனுஞ்சிவஞானமுனிவரர்தாள் சிந்தைசெய்வாம்.

# தலபுராணம் கூறும் திருக்கோயில் அமைப்பு

## மண்டபம்

அண்டர்நா யகனா ராகு மருமருந் தீச னார்தாங்
செண்டையங் கண்ணியோடு கிளர்மணி மாடவீதி
கண்டிடும் விழாக்க டோறுங் கணப்பொழு தெய்ப்புநீங்க
மண்டபந் துறுமி யோங்கி மலிவன நியமமுற்றும்.

## திருமதில்

அரியயர்க் கரிய வெங்க ளருமருந் தீச னாரும்
பெரிதுவந் தருளுஞ் சொக்க நாயகப் பிராட்டி யாரும்
பரிவொடு வாழுங் கோயிற் பருமதில் வளரும் பொன்னங்
கிரிமுடி காண்பானீண்ட கீண்முதற் றிசையி னம்மா.

## திருக்கோபுரம்

வாபரத் துழைமே னின்று வானமே நிவந்து தாவுங்
கோபுரக் காட்சி தன்னை யாவரே குணிக்கற் பாலார்
மாபலத் திருவர் நாப்பண் வன்னியி னுருவ மாகித்
தாபிதச் சோண சைலந் தானுயாத் தயங்குமாதோ.

## விடைக்கம்பம்

கருணையின் படிவமான கண்ணுதல் பாதங் காண்பான்
வருபவர் தங்கட்கெல்லாம் வழங்குநன் விடைக டம்மைத்
தருமொரு விடையைத் தாங்கிச் சந்நிதி முன்ன ரென்று
முருவவார் கொடியொன் றோங்குமுயர்க கனத்தைக் கீண்டே.

## திருவிமானம்

வெள்ளியங் கிரியின் ஞாங்கர் மிக்கொளி சுடரக் காலு
மொள்ளிய சிகரம் பொன்னா லுரைதர வோங்கிற்றென்னா
விள்ளருங் கலசப் பத்தி விரிசுடர் விட்டு நீட
மள்ளலுற் றுயர்வி மான மலிந்திடும் விசும்பளாவி.

## யாகசாலை

மண்டபஞ் சினக ரத்து ணிரலுற மலிந்து நிற்கு
முண்டிடற் கமுத மைக்கு முயர்மடைப்பள்ளி யோங்குங்
குண்டமுற் றவிரு மியாக சாலைகள் குலவ நீடு
மண்டரும் வேட்கை கொள்ளு மழகமர் தடமுமுண்டால்

## திருக்கோயில்

வேதிய ரான வாதி சைவர்கள் விரும்பி வேதத்
தோதுமா கமங்க ளுண்மை யுணர்ந்தருச் சித்துப்போற்ற
மேதகு மக்கட் கெல்லா மிக்கருள் பொழிந்து காக்கு
நாதனாம் வான்மி யூரனாளும் வீற் றிருக்குங் கோயில்

# ம.ப. பெரியசாமித் தூரன்

## மருந்தீசர்

இராகம் : வி கல்யாணி தாளம் : மிஸ்ரசாபு

### பல்லவி


மருத்தீஸ்வரனே — சிவசங்கரனே — ஹரனே
வந்தடைந்தேன்—உன்றன் பாதமலர் கதியென—
(மருந்தீஸ்வரனே)

### அனுபல்லவி

மருந்தாய் உயர் வான்மியூர் வளர்த்தாய்
வந்தநல் அடியவர் பிணியெலாம் களைந்தாய் -
(மருந்தீஸ் வரனே)

### சரணம்

விரும்பிய தனைத்துமே வழங்கிடும் காமதேனு
வெண்வெதுனே யென்றால் வேறென்ன புகழுண்டு
கரும்பெனமொழி சொலும் திரிபுரசுந்தரித் தாய்
கண்டுமகிழத் தேவா முனிவர்கள் போற்றிநிற்கும்
மருந்தீஸ்வரனே



# திரிபுரசுந்தரி

இராகம் : சுத்த சாவேரி　　　　தாளம் : கண்டசாபு

## பல்லவி

தாயே திரிபுரசுந்தரி உமாமகேஸ்வரி
சாமள சௌந்தரி தாளினை மலரே சரணம்-தாயே

## அனுபல்லவி

தேமரத புகழ் மேவும் திருவான்மியூர் வளர்
தேனார் மொழிவல்லி ஜெகமெல்லாம் படைத்த (தாயே)

## சரணம்

காமதேனு வணங்கும் கருணா ரூபினி
கண்ணொளியால் அருள்காட்டும் தயாபரி
சாமகான மகிழ் சதாசிவ பரமெனும்
தனி மருந்துடையாய் பிணியெல்லாம் களைவாய் தாயே.

# திருப்பணிகள்

புதிதாக ஆலயங்கள் எழுப்புவதை விடப் பழமையான கோயில்களைப் புதுப்பிப்பது சிறந்த பணி என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை. சோழர்கள் காலத்திலேயே இப்பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. செம்பியன் மாதேவி குந்தவி போன்ற பெண்டிரும் இத்தொழிலில் ஊக்கத்துடன் ஈடுபட்ட உண்மையைச் சாசனங்கள் மூலம் அறியலாம். தென்காசி விசுவநாதர் ஆலயத்தில் பராக்கிரம பாண்டியன் பொறித்து வைத்த சாசனச் செய்யுள் படித்து இன்புறத் தக்கது.

ஆராயினும் இத்தென்காசி மேவு பொன் ஆலயத்து

வாராததோர் குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்து அதனை

நேராகவே திருத்திப் புரப்பார் தமை நீதியுடன்

பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே.

எதிர்காலத்தில் கோயிலுக்கு ஏதாவது பழுது நேர்ந்தால் அதை நிவர்த்தி செய்பவருக்குத் தலைவணங்குவதாக மன்னன் குறித்துள்ளான். இப்பாடல் கோயிலைச் செப்பனிட்டுப் புதுப்பிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஆலயங்களைப் புதுப்பித்து, நித்திய வழிபாடுகள் நடைபெறச்செய்பவர்கள் அடையும் நற்கதியைச் சிவபுராணம் விளக்குகிறது.

## நகரத்தார் பணி

மிகவும் சிதிலமடைந்த ஆலயங்களைச் செப்பனிட்டு வழிபாடு நடைபெறச் செய்த பெருமை நகரத்தார் எனப்படும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுக்கே உரியது இறைவழிபாட்டிலும், ஆலயத்திருப்பயிணியிலும் டெரிதும் பங்கேற்ற அக்குலத்தினருக்கே உரிய ஒன்பது கோயில்கள் காரைக்குடியைச் சுற்றிலும் அமைந்துள்ளன. தங்களுடைய செல்வத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கோயில் திருப்பணிக்கென்றே ஒதுக்கி வைப்பது

அவர்களது வழக்கம் "சிறப்பான பல கோயில்களை வாழ வைத்தவர்கள் நகரத்தாரே" என்று டாக்டர் பிலிப் சிகெல்மேன் எனும் மேனாட்டவர் கூறியுள்ளார்.

பல நூற்றாண்டுகளாக உயர்ந்த வழிபாடு தலமாக விளங்கிய மருந்தீசர் ஆலயம் சென்ற நூற்றாண்டின் இறுதியில் மிகவும் பழுதடைந்திருந்தது. திரு. இராமன் செட்டியார் குடும்பத்தினர் திருப்பணியைத் தொடங்கி 1913-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தினர்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருவான்மியூர் ஆலயம் சிறப்பாக விளங்கி இருந்த நிலையினைப்பற்றி 1960-ம் ஆண்டு திருவான்மியூர் தேவஸ்தானத்தினரால் வெளியிடப்பட்ட தலவரலாற்று நூலில், மயிலையில் வசிக்கும் காஞ்சி திருநாவுக்கரசனார் என்பவரின் கட்டுரை மூலம் அறியலாம். அதிலிருந்து ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது

"திருவான்மியூரின் வளத்தை நாயன்மார்கள் பலவாறு சிறப்பித்துள்ளார்களென்றால் அப்படித்தானே இருந்திருக்கவேண்டும். அங்ஙனம் இருந்திருக்குமா என்று மக்களில் சிலர் ஐயுறக்கூடும். ஆனால் சற்று ஆழ்ந்து சிந்தித்துத்தெளிந்தால் அவை முற்றிலும் உண்மை என்பது புலனாகாமற்போகாது. எப்படி எனில் இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் இவ்வூர் எப்படியிருந்ததென்பதை நான் அறிவேன் என்னையொத்த வயதினரும் இதை ஆமோதிப்பார்கள். குடிவளம் மிகக் கொண்டதாய் கோயில் சுத்தமாகவும், சிவகங்கையெனும் திருக்குளம், புறத்தே தெப்பக்குளமும், மண்டபங்கள் பலவும் நல்லதொரு முறையில் அழகாக அமைந்திருந்ததோடு, கோயில் வழிபாடுகள் தினந்தோறும் முறைப்படிச் செம்மையாய், உரிய காலத்தில் நடத்தப்பட்டும், பஞ்ச பருவ உற்சவாதிகள், வாகனங்கள், பங்குனிப் பெருவிழா, தியாகேசர் திருநடனம், முதலியன நடத்தப்பட்டும், பொறுப்பேற்று நடத்தின உத்தம குணம் படைத்த நிர்வாகிகள் கொண்டதாகவும் விளங்கிற்று. மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து தரிசித்துப் பயனடைந்து வந்தார்கள் என்றால் இப்போதுள்ளவர்களுக்கு அது வியப்பாகத் தானே தோன்றும். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள்ளே இத்துணை மாறுதல்கள் ஏற்படும் போது தேவார ஆசிரியர்கள் காலமான ஆயிரக்கணக்கான

வருடக்கால இடையீட்டில் அவர்கள் பாடினது போலவே ஏன் இருந்திராது என்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது. நான் கண்ட அக்காலத்தில் போக்குவரத்துச் சாதனங்கள் இப்போதுள்ள நிலையில் இல்லாதிருந்துங்கூட, மயிலையில் பெருவிழா முடிந்த வுடன் அடுத்து வரும் திருவான்மியூர்ப் பெருவிழாவிற்கு மக்கள் திரள், திரளாகத் திரண்டு நடந்தே வருவார்கள் (அப்போது நடந்து செல்வது சாதாரணமாகவும், மக்களுக்கு எளிதாகவும் இருந்தது). மாட்டு வண்டியும், குதிரை வண்டியும் உண்டு. மக்கள் முன்னி ரவில் வந்து காத்திருந்து, வீதியில் கூட்டம், கூட்டமாய்ப்படுத் துறங்கி, நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் தியாகராஜப் பெரு மானின் பதினெட்டு திருநடனத்தையும் கண்டு உய்த்தார்கள். வேடிக்கை பார்ப்பதற்கல்ல, பொழுது போக்கவல்ல, பக்தி சிரத்தை யோடு தரிசித்துப் பயன் பெறவே வந்தார்கள் வெளியூர்களி லிருந்து மக்கள் தங்கள் உற்றார் உறவினர் வீடுகளில் முன்ன தாகவே இதற்கென வந்திருந்து தரிசித்துப் பேறு பெற்றார்கள்.

இதுபோன்றே சென்னையின் வடகோடியிலுள்ள திருவொற் றியூர் தியாகராஜப் பெருமானின் திருநடனத்தையும், பவனியை யும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் சென்று தரிசித்தார்கள். ஆடுந் தியாகர், என்றும் அசையுந்தியாகர் என்றும் பேசப்படும் இந்த இரண்டு தியாகராஜர் திருநடனத்தையும் மக்கள்கண்டு உள்ளத் துடிப்புக் கொண்டு வருடவாரியில் இப்பெருவிழா எப்போது வருமென்று காத்திருப்பார்கள். பிரம்மதாளம், சின்னம், தாரையின் ஓசையுடன் திருநடனக் காட்சியை இலட்சக்கணக்கான மக்களி டையேகாணப்பெறுவது கண்கொள்ளாக் காட்சியாகவே எப்போதும் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டேயிருக்கும் ஈது சிவலோகம் என்றே மக்கள் பரவசமடைவார்கள். அத்தகைய மனப்பான்மையுடைய மக்கள் பெரும்பான்மையோர் அப்போதிருந்தனர் என்பது நான் கண்கூடாகக் கண்ட உண்மை."

அண்மைக் காலத்தில் இக்கோயிலில் பல திருப்பணிகள் நடைபெற்றன 1961-ஆம் ஆண்டு ஆலயத்தின் சில பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1969-ல் திருக் குளம் செப்பனிடப்பட்டது. 1978-79 ஆண்டுகளில் சுவாமி அம்மன் சந்நிதிகளின் மேல்தளங்களும், விமானங்களும் புதுப்பிக் கப்பட்டன. பிரகாரத்தைச் சுற்றி வலம் வருவதற்கான தள

வரிசையும் போடப்பட்டது. 1979 தை மாதத்தில் குடமுழுக்கு நடைபெற்றது. இத்திருப்பணிகள் சுமார்ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்றன.

'கோபுர தரிசனம் கோடி பாப விமோசனம்' என்று கூறுவர் கோபுரத்தைக் கண்டவுடன் கை கூப்பி வணங்க வேண்டும் என்று சமய நூல்கள் செப்புகின்றன. சிவாலயத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளனர் : கோபுரம் ஸ்தூல லிங்கம் எனவும் பலிபீடம் பாத்திர லிங்கம் என்றும், கருவறையிலுள்ள மூலஸ்தானத்தை பரார்த்தலிங்கம் என்றும் வழங்குவர். வெகுதொலைவிலிருந்து பார்க்கும்போது கோயில் உள்ள இடத்தைக் காட்டவே கோபுரங்கள் அமைக்கப்பட்டன.

திருவான்மியூர் ஆலயத்தின் முகப்பில் கோபுரம் இல்லாதது ஒரு பெரிய குறையாகவே இருந்தது. 1964-65 ஆண்டுகளில் கோபுரம் அமைக்க முயற்சி ஏற்பட்டது அப்போது தொடங்கப்பட்ட கோபுரம் முடிக்கப்படாமல் அரைகுறையாக நிற்கிறது. ஆலயத்தின் வாயிலுக்குச் சற்றுத் தள்ளி இக்கோபுரம் அமைக்கப்பட்டதால் அதனுடன் வெளிப் பிரகாரத்தை இணைக்க முடியவில்லை முற்றுப்பெறாத நிலையிலுள்ள இக் கோபுரத்தைக் கட்டி முடித்து அத்துடன் வெளிப்பிரகாரத்தை இணைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் ஆலயத் திருப்பணிக்குழுவினரின் பெருமுயற்சியாலும், காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள் ஆசியுடனும், பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் கிழக்குவாயிலில் அழகிய ஐந்து நிலைக் கோபுரம் அமைக்கப்பட்டது இத்திருப்பணிகள் சுமார் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்றன இதற்கான கும்பாபிஷேகம் 1984-ஆம் ஆண்டு நடைபெற்றது.

இது முடிந்து ஒரு ஆண்டு முடிவதற்குள் மேற்கு வாயிலின் மீது அற்புதமான ஐந்து நிலைக் கோபுரம் எழுப்பப்பட்டது இத்துடன் விஜய கணபதியின் புதிய சந்நிதி ஏற்பட்டது. 1985 ஆம் ஆண்டு இதற்கான கும்பாபிஷேகம் அருள்மிகு ஜயேந்திரசரஸ்வதி ஸ்வாமி (காஞ்சி) தலைமையில் நடைபெற்றது இதற்கான செலவு சுமார் ஐந்து இலட்ச ரூபாய் ஆகும். தற்போது இக்கோயில் இரண்டு இராஜகோபுரங்களுடன் பொலிவுற்று விளங்குகிறது.

## எஞ்சியுள்ள திருப்பணிகள்

கிழக்கு வாயிலுக்கெதிரே கட்டி முடிக்காமல் விடப்பட்டுள்ள கோபுரத்தை முழுமையாகக் கட்டி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அத்திருப்பணி சிறப்பாக நடைபெறவேண்டும்.

கிழக்கு வாயிலுக்கு அருகிலுள்ள சித்திரைக் குளமும், அதன் படிகளும் பெரிதும் பழுதடைந்திருப்பதால் அவற்றைச் செப்பனிட வேண்டியது அவசியமாகும். தெப்பக் குளத்தின் உட்புறத்தைச் சுத்தம் செய்யவேண்டும். வாகன மண்டபமும், மடைப்பள்ளியும் இதனையடுத்துள்ள பகுதிகளும் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. தலவிருட்சத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நந்தவனம் அமைக்கலாம். வெளிப்பிரகாரத்தைச் சுற்றி வருவதற்காகப் போடப்பட்டுள்ள தளவரிசைகளையும் சீராக்கவேண்டும். இத்திருப்பணிகள் நடைபெற்று, திருக்கோயில், சீரும் சிறப்புடன் விளங்க மருந்தீசர் அருள்புரிவாராக! பொதுமக்களும் இப்பணிகளில் பூரண ஒத்துழைப்பை அளிக்கவேண்டும்.

# 11

# கோயிலால் விளைந்த நன்மைகள்

தமிழக மக்களின் வாழ்வில் ஆலயங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. ஆகம அடிப்படையில் அமைந்த அந்த வழிபாட்டுக் கூடங்களில் தெய்வீகமும், மூர்த்தி சந்நித்யமும் நிறைந்துள்ளன. மக்களிடையே தெய்வ பக்தியை வளர்க்கும் பண்ணைகளாகவும், இலக்கியம், இசை, நடனம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளை ஓங்கச் செய்யும் களன்களாகவும் இவை

திகழ்கின்றன. திருவான்மியூர் மருந்தீசர் ஆலயமும் இதற்கு எந்த விதத்திலும் விதிவிலக்கு அன்று.

## சமய வளர்ச்சி

எண்ணற்ற ஆலயங்கள் எழுந்துள்ள போதிலும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்புப் பெற்ற ஆலயங் களையே உயர்ந்ததெனக் கருதுகின்றனர். திருவான்மியூர் மருந் தீசர் ஆலயமும் இத்தகைய சிறப்பைப் பெற்றுள்ளது.

சிவலிங்கத்தை வழிபடுவதால் மும்மூர்த்திகளையும் பூசித்த பலனைப் பெறலாம் என்று வேதங்கள் கூறுகின்றன. நான்முகனைக் குறிக்கும் லிங்கத்தின் அடிப்பகுதி பூமியில் மறைந்து நிற்கும். விஷ்ணுவைக் குறிக்கும் இடைப் பகுதி அபிஷேக நீரைத் தாங்கி விரிந்து நிற்கும்; நெருப்புக்கு அதிபதியான சிவபாகம் (மேற்பகுதி) மேலோங்கி ஜோதி போல் ஒளிவிடும். திருவான்மியூரிலுள்ள சிவ லிங்கம் தானாகவே தோன்றிய சுயம்புலிங்கமாகும். இங்குள்ள தீர்த் தங்கள் சிவபெருமானின் சடையிலிருந்து தோன்றியவை. இத்தீர்த்தங்களில் நீராடிய வானவர்கள், முனிவர், மானுடர் போன் றோர் நற்கதி பெற்றுள்ளனர். மேலும் அப்பர், சம்பந்தர் ஆகி யோர் இத்தலத்தின் மீது பதிகம் பாடியுள்ளனர். இத்தகைய சிறப் புகளை இத்தலம் பெற்றிருந்ததால் பிற்காலத்தில் தோன்றிய சான்றோர்கள், மன்னர்கள், மக்கள் ஆகியோர் இக்கோயிலின் மீது பற்றுக்கொண்டு இதன் வளர்ச்சிக்கு உதவினர். இவ்வாறு சைவ சமய வளர்ச்சியில் இக்கோயில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

## இலக்கிய வளர்ச்சி

தமிழில் எழுந்த இலக்கியங்களுள் பெரும்பான்மையானவை சமய சார்புடையனவே ஆகும். கி.பி. பதினாறாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை ஆலயங்களுடன் தொடர்புடைய தலபுராணங்கள் அதிக அளவில் எழுந்தன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் எழுந்த தேவாரப்பாடல்கள் முதல் தற்காலத்தில் இயற்றப்பட்ட தனிப்பாடல்கள்வரை எண்ணற்ற

இலக்கியப் பாடல்கள் திருவான்மியூர் ஆலயத்தின் சிறப்பைப் போற்றுகின்றன. இவ்வாறு இலக்கிய வளர்ச்சிக்கு இக்கோயில் தொண்டாற்றியுள்ளது.

## கலைகளின் வளர்ச்சி

### சிற்பம்

திருவான்மியூர் மருந்தீசர் ஆலயத்திலுள்ள மூர்த்திகளின் உருவங்கள்மிகவும் வனப்புடன் அமைந்துள்ளன. மேலும் ஆலய மண்டபத்தூண்களில் எண்ணற்ற சிறிய சிற்பங்கள் உள்ளன இவ்வாறு சிற்பக் கலையின் வளர்ச்சிக்கு இக்கோயில் உதவியுள்ளது

### இசை

தேவாரப் பாடல்கள் அழகிய பண்களில் அமைத்து இசையுடன் பாடப்பெற்றன. அருணகிரிநாதரின் பாடலும், பாம்பன்சுவாமிகளின் பாடல்களும் அழகிய சந்த நயத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. பூஜா காலங்களில் மேளம், நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகளை ஒலிக்கும் இசைக்குழுவும், தேவாரப் பாடல்களை இசையுடன்பாடும் ஓதுவாரும் இன்று இக்கோயிலில் பணிபுரிகின்றனர். இசையின்வளர்ச்சியிலும் இக்கோயில் பெரும்பங்கு ஏற்றுள்ளது

### கல்வெட்டு

அம்மன் சந்நிதியின் புறச் சுவரிலுள்ள கல்வெட்டுக்கள் சோழர் காலத்தில் வழக்கத்திலிருந்த தமிழ் எழுத்துக்களின் அமைப்புப் பற்றி அறிய உதவுகின்றன

### சமுதாயம்

திருவான்மியூர் ஆலயம் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. தங்களது மனக் குறைகளைப் போக்கிக்கொ

கொள்ளவும், மன நிம்மதியை நாடியும் எண்ணற்ற மக்கள் இங்கு வழிபட்டுள்ளனர் மக்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் பழகவும் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளவும் இக்கோயில் உதவுகிறது. இங்கு நடைபெறும் திருவிழாக்களிலும், சிறப்பு வழிபாடுகளிலும், பண்டிகைகளிலும் மக்கள் பங்கேற்று மகிழ்வுறுகின்றனர். இவ்வாறு மக்கள் ஒன்று கூடித் தங்களது தனிப்பட்ட கவலைகளை மறந்து மனநிம்மதியுடன் சிறிது நேரத்தைக் கழிக்க இக்கோயில் வழி செய்கிறது.

திருவான்மியூரில் இறைவன் அகத்தியருக்குத் தன் திருமணக் கோலத்தைக் காட்டினார் இதற்கேற்ப இன்றும் குறைந்த செலவில் பல திருமணங்கள் இங்கு நடைபெறுகின்றன தியாகராஜர் மண்டபத்தில் நடைபெறும் இன்னிசை, இலக்கிய நிகழ்ச்சிகளையும், அம்மன் சந்நிதி வெளி மண்டபத்தில் நடைபெறும் சுக்கிரவார அம்மன் பூஜையையும் கண்டு களிக்கப் பலர் கூடுகின்றனர்.

மக்களின் ஒத்துழைப்பின்றி எந்த நல்ல காரியமும் நடைபெறுவது கடினம். விழாக்களிலும், பூஜைகளிலும் உபயதாரர்கள் பங்கேற்றுத் தங்களால் இயன்ற அளவு இறைவனின் திருப்பணியில் உதவுகின்றனர், தனிப்பட்ட நபர்களின் முயற்சியால் நடைபெறும் 108 திருவிளக்குப் பூஜை, திருப்புகழ் பஜனை, வெள்ளிக் கிழமை சுக்கிரவார அம்மன் உலா போன்ற நிகழ்ச்சிகள் மக்கள். ஆலயத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டிற்கு உதாரணங்களாகும். மக்களின் பொருளுதவியாலும், ஒத்துழைப்பாலும் ஆலயத்தின் பல பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன. இரு இராஜ கோபுரங்கள் தோன்றின. கடந்த பத்து ஆண்டுகளுக்குள் மூன்று கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன.

## பொருளாதாரம்

திருவிழாக்களும், பண்டிகைகளும், இங்கு கொண்டாடப் படுவதால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. பந்தல், தோரணங்கள் அமைப்போர், மலர், தேங்காய், கற்பூரம் போன்ற பொருட்களை விற்பவர்கள், திருப்பணிகளில் பங்கு பெறும் வேலையாட்கள் ஆகியோர் பிழைக்கக் கோயில் திருவிழாக்கள் வழிவகுக்கின்றன, பெருந்திருவிழாவின் போது ஆலயத்திற்கு

வரும் வழியெல்லாம் பல்வகையான பொருட்களில் வணிகம் செய்யும் சிறு வியாபாரிகள் குழுமியிருப்பர். திருவிழாவால் இவர்களுக்கும் பிழைப்பதற்கு ஒருவழி பிறக்கிறது.

மக்களின் பிணிகளைத் தீர்க்கும் மருந்தீசராகவே இக் கோயிலில் ஈசர் எழுந்தருளியுள்ளார். வைத்தியர்களால் குணம் காண இயலாதவர்கள் ஈசரை உள்ளன்போடு வழிபட்டுப் பிணி நீங்கிச் செல்கின்றனர். சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரன் தனது ஆட்சியின் இறுதியில் மருந்தீசரை வழிபட்டுத் தனக்கு ஏற்பட்டிருந்த நோய் நீங்கப் பெற்றதாகக் கூறப்படுகிறது.

# 12

# பூஜை; அபிஷேக முறைகள்; திருவிழாக்கள்

## பூஜை

இக்கோயிலில் காமிக ஆகமப்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு நான்கு கால பூஜை நிகழ்கின்றன. காலை 7-30 முதல் 8-30 வரையில் காலசந்தியும், பகல் 10-30 முதல் 11-30 வரை உச்சி காலமும், மாலை 5-00 முதல் 6-00 மணிவரை சாயரட்சையும், இரவு 8-30 முதல் 9-00 வரை அர்த்த ஜாமமும் நடைபெறுகின்றன. ஆலயம் காலை 6-00 முதல் 11 - 30 வரையிலும் மாலை 4 - 00 முதல் 9 - 00 வரையிலும் திறந்திருக்கும்.

இங்கு பூஜைகள் நடத்தும் ஆதி சைவ அந்தணர்களுக்குள் அர்ச்சகர்கள் ஒரு முறை அமுலில் உள்ளது. காசியப்ப கோத்திரத்தைச் சார்ந்த அர்ச்சகர்கள் இருபது நாட்களுக்கும், பாரத்வாஜ கோத்திரத்தைச்சேர்ந்த அர்ச்சகர்கள் அடுத்த 20நாட்க

ளுக்கும், பூஜைகள் நடத்துவது என்ற முறை உள்ளது.

## அபிஷேக முறைகள்

அருள்மிகு மருந்தீஸ்வர சுவாமிக்குச்சிரசில் (தலை உச்சியில்) பால் அபிஷேகம் மட்டும் செய்து வரப்படுகிறது. மற்ற அபிஷேகங்கள் (பஞ்சாமிர்தம், தயிர், தேன் அபிஷேகங்கள் போன்றவை) ஆவுடையாருக்கே செய்து வரப்படுகின்றன.

அருள்மிகு மருந்தீஸ்வரருக்குத்தினசரி நான்கு வேளை அபிஷேகம் செய்து வரப்படுகிறது.

அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மனுக்கு அர்த்த ஜாமம் நீங்கலாக மூன்று வேளை அபிஷேகம் தினசரி செய்து வரப்படுகிறது.

அருள்மிகு விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோருக்குக்காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளிலும் அபிஷேகம் செய்து வரப்படுகிறது.

108 லிங்கங்கள், 63 நாயன்மார்கள் மற்றும் இதர பிரதான மூலவர்களுக்கு (காலையில் மட்டும்) ஒருமுறை அபிஷேகம் செய்து வரப்படுகிறது.

அருள்மிகு தியாகராஜ சுவாமிக்குப் பௌர்ணமி அன்று உச்சிகால அபிஷேகம் மட்டும் செய்து வரப்படுகிறது: (அமாவாசை அன்றும் கார்த்திகை சோம வாரங்களிலும் விசேஷ அபிஷேகங்கள் நடைபெற்று வந்தன.

அருள்மிகு நடராஜருக்கு ஆண்டில் ஆறு திருநட்சத்திரங்களில் அபிஷேகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

# திருவிழாக்களும் பண்டிகைகளும்

அனைத்து ஆலயங்களிலும் குறிப்பிட்ட தினங்களில் விழாக்கள் நடைபெறுகின்றன. திருவான்மியூரில் ஆலயத்தை ஏற்படுத்திய நான்முகனும், பின்னர் அதைப் புதுப்பித்த சதயு மன்னனும் கோலாகலமாக விழா எடுத்த செய்திகளைத் தலபுராணம் விளம்புகிறது.

கடற்கரையோரமாக அமைந்துள்ள ஆலயங்களில் பொதுவாகப் பௌர்ணமி தினத்தைக் கணக்கிட்டே விழாக்கள் நடைபெறுகின்றன. இத்தகைய ஆலயங்களில் நட்சத்திரக் கணக்குகளை ஏற்றுக் கொள்வது குறைவு திருவான்மியூரும் கடற்கரைக் கோயிலாக இருப்பதால் மருந்தீசர், தியாகர் ஆகியோருக்கு விண்மீனில் நடைபெற வேண்டிய திருவிழாக்கள் ஆகம விதிப்படி முழுமதி திதியில் நடைபெறுகின்றன. பங்குனிப் பெருவிழாவின் போதும் பௌர்ணமியைப் பத்தாம் நாளாகக் கணக்கிட்டு அதற்கேற்ப துவஜரோஹணம் (கொடியேற்றம்) நடைபெறுகிறது. இவ்வாறு பௌர்ணமியைக் கணக்கிட்டே இங்கு விழாக்கள் நடைபெறுவதால் சில சமயங்களில் பிற கோயில் விழாக்களுடன் அவை மாறுபடுகின்றன. இனி இங்கு நிகழும் திருவிழாக்களைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

## பிரதோஷம்

அமுதம் பெறும் பொருட்டுப் பாற்கடலை வானவரும், அசுரர்களும் கடைந்தபோதுஆலகாலவிஷம் தோன்றி அனைவருக்கும் துன்பத்தை உண்டாக்கியது. அதனைச் சிவபெருமான் தனது கண்டத்தில் அடக்கி நீலகண்டரானார். இவ்விஷம் பிறர்க்குத் துன்பம் அளிக்காமல் இருக்கும் பொருட்டுச் சிவபெருமான் சில காலம்மௌனமாக இருந்தார்; அந்நாள் ஏகாதசியாகும்; அன்றுவானவர்கள் உபவாசமிருந்து ஈசனை வழிபட்டனர். துவாதசியான மறுநாளன்று வானவர் தங்களது விரதத்தை முடித்துக் கொண்டனர். இதுவரையில் துன்பமடைந்திருந்த உயிர்கள் இன்பமுறு

மாறு, உமாதேவியருக்கு முன்னர் சிவபெருமான் தமது கையில் தமருகமேந்தி, இடப தேவரின் இருகொம்புகளுக்கிடையே திரு நிருத்தம் செய்தருளினார். இதுவே பிரதோஷ காலமாகும். ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை இவ்விரண்டு காலங்களிலும் வரும் திரயோதசி திதியில், சூரியன் மறைவதற்கு முன்பு உள்ள மூன்றே முக்கால் நாழிகையும், சூரியன் மறைந்தபின் உள்ள மூன்றே முக்கால் நாழிகையும் சேர்ந்த காலம் (பிற்பகல் $4\frac{1}{2}$ மணி முதல் 7 மணி வரை) பிரதோஷ காலமாகும்

திருவான்மியூர் மருந்தீசர் ஆலயத்தில் பிரதோஷ வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. ஆலயத்தின் சார்பில் நடைபெறும் இந்த வழிபாடு மாலை 5-00 மணியளவில் துவங்கும். அருள்மிகு பிரதோஷ நாயனாருக்கு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெற்ற பின் அத்திருவுருவம் ஆலயத்தைச் சுற்றி எடுத்துச் செல்லப்படும். இந்த வழிபாட்டில் அன்பர்கள் அதிக அளவில் பங்கேற்கின்றனர்.

## கிருத்திகை

மாதந்தோறும் கிருத்திகை நாளன்று திருவான்மியூர் திருக்கோயிலின் சார்பில் சிறப்பு வழிபாடு நடைபெறும். அன்று முருகப் பெருமானின் திருவுலா நிகழும்.

## சுக்கிரவார அம்மன் உலா

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திரிபுரசுந்தரி அம்மனின் உற்சவரான சுக்கிரவார அம்மன் உட்பிரகாரத் திருவிழாவை வெள்ளிக்கிழமை திருவிழாக் குழுவினர் நடத்துகின்றனர். அன்று அம்மனின் திருவுருவத்தை மும்முறை வலம் வரச்செய்து, ஊஞ்சலில் ஆட்டிய பின்னர் தீபாராதனை செய்து வழிபடுகின்றனர்.

சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, பங்குனித் திருவிழா ஆகியவற்றின்போது இன்னிசைக் கச்சேரிகளும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன.

## பங்குனி பிரம்மோற்சவம்

பங்குனியில் நடைபெறும் பிரம்மோற்சவமே இங்கு நடைபெறும் பெருவிழாவாகும். இத்திருவிழாவில் ஏழாம் நாள் தேர்த்

திருவிழாவும், ஒன்பதாம் நாள் வன்னிமர சேவையும், 10-வது நாள் வான்மீகி முனிவருக்காக இறைவன் ஆடிய திருநடனமும் பதினோராம் நாள் தெப்பமும் நடைபெறும். வான்மீகி முனிவர், நீண்ட காலம் தவமிருந்து இறைவனின் நடனக் காட்சியைக் கண்டார். அகத்தியர் ஈசனைத் திருமணக் கோலத்தில் கண்டார். இந்த இரு நிகழ்ச்சிகளும் பெரு விழாவின் போது சிறப்பிக்கப் படுகின்றன. இவ்விழாவில் ஏராளமான மக்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். திருவிழாவின் கடைசி இரு நாட்களின் போது ஆலயத்திற்கு வரும் வழியெங்கும் எண்ணற்ற சிறு கடைகள் அமைக்கப்படும். மக்களை மகிழ்விப்பதற்குக் கேளிக்கைகள் நடைபெறும். இவ்வாறு மிகவும் கோலாகலமாக நடைபெற்று வந்த இவ்விழா சென்ற நான்கு ஆண்டுகளாகத் தவிர்க்க இயலாத சில காரணங்களால் தடைப்பட்டிருந்தது. இந்த ஆண்டு (1988) இவ்விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

## பிரம்மோற்சவத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள்

பிரம்மோற்சவம் தொடங்குவதற்கு முந்திய இருநாட்களில் இரவு நேரத்தில், அருள்மிகு செல்லியம்மன், அருள்மிகு விநாயகர் ஆகியோரின் திருவீதியுலா நடைபெறும்.

முதல் நாள்

இரவு : துலாலக்னத்தில் கொடியேற்றம், யாகசாலை பூஜை, பஞ்ச மூர்த்திகள் வீதியுலா

இரண்டாம் நாள்

காலை : அருள்மிகு சந்திரசேகரர் சூரிய பிறையில் காமதேனுவுக்குக் காட்சி

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் சந்திர பிறையில் காட்சி

இரவு : அருள்மிகு தியாகராஜர் வீதியுலா.

மூன்றும்நாள்

காலை : அருள்மிகு சந்திரசேகரர் சூரியனுக்கு அருளல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் சந்திரனுக்கு அருளல்.

இரவு: அருள்மிகு தியாகராஜர் மூன்றும் திருபவனி பார்த்த சாரதிக்கு அருளல்.

நான்காம் நாள்

காலை : அருள்மிகு சந்திரசேகரர் பிருங்கிக்குக் காட்சி யளித்தல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் தொட்டிவிழா

இரவு : அருள்மிகு தியாகராஜர் நான்காம் திருபவனி. சந்திரனுக்கு அருளல்

ஐந்தாம் நாள்

காலை : அருள்மிகு சந்திரசேகரர் தொட்டிவிழா. இயமனுக்கு அருளல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் விடையூர் திருக்காட்சி, ரிஷப வாகனம், பஞ்சமூர்த்திகள் வீதியுலா

இரவு : அருள்மிகு தியாகராஜர் ஐந்தாம் திருபவனி. இராமருக்கு அருளல்.

ஆறும் நாள்

காலை : அருள்மிகு சந்திரசேகரர் இரட்சசுவிற்கு அருளல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் தொட்டிவிழா

இரவு : அருள்மிகு தியாகராஜர் ஆறும் திருபவனி. இந்திரனுக்கு அருளல்

ஏழாம் நாள்

காலை : அருள்மிகு சந்திரசேகரர் தேர்த்திருவிழா. பிரம்மனுக்குக் காட்சியளித்தல்.

இரவு : அருள்மிகு சந்திரசேகரர் சத்தியகிரி விமானம். அருள்மிகு தியாகராஜர் வீதியுலா

எட்டாம் நாள் :

காலை : அருள்மிகு சந்திரசேகரர் நான்கு மறைகளுக்கு அருளல்

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் பரிவேட்டை விழா

இரவு : அருள்மிகு தியாகராஜர் திருவீதியுலா

ஒன்பதாம் நாள் :

காலை ; கலியாண சுந்தரர் திருக்கல்யாணம். விமானக் காட்சி

மாலை : அகத்தியருக்குத் திருமணக் காட்சி

இரவு : அருள்மிகு தியாகராஜர் திருவீதி உலா

பத்தாம் நாள் :

காலை : அருள்மிகு சந்திரசேகரர் கடல் நீராடல்

இரவு : அருள்மிகு திரிபுரசுந்தரி தியாகராஜ சுவாமி திருமண விழா. கொடியிறக்கம். வான்மீகி முனிவருக்கு 18 திருநடனக் காட்சியருளி வீடுபேறு அளித்தல். பெருஞ்சிறப்பு விழா

பதினொன்றாம் நாள் :

மாலை : அருள்மிகு சந்திரசேகரர் தெப்ப விழா

இரவு : வெள்ளியங்கிரி விமானத்தில் சுவாமி வீதியுலா

விடியற்காலை : அருள்மிகு தியாகராஜர் அருள்மிகு திரிபுரசுந்தரி அம்மனுக்கு அருளல்; பந்தம்பறி; 18 திருநடனவிழா; பெருஞ்சிறப்பு விழா



# பிற விழாக்கள்

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆகிய மாதங்களில் நால்வர் திரு நட்சத்திரமும் அதிபத்தநாயனார் உற்சவமும் நடைபெறுகின்றன ஆடி பூரத்தன்று திரிபுர சுந்தரி காமதேனு வாகனத்தில் அமர்ந்து வீதிவலம் வருவது உண்டு. ஆவணியில் விநாயக சதுர்த்தி பண்டிகை கொண்டாடப்படுகிறது. புரட்டாசி நவராத்திரியின் போது சுக்கிர வார அம்மன் சிறந்த அலங்காரத்துடன் கொலுவிருப்பார்; விஜய தசமியன்று சந்திரசேகரர் உலா நடைபெறும். ஐப்பசிப் பௌர்ணமியன்று மருந்தீசருக்கு அன்னாபிஷேகம் நிகழும். கந்தசஷ்டியின் போது சூரசம்ஹாரம் சிறப்பிக்கப்படும்; அப்போது லட்சார்ச்சனைகளும், ஆறு நாள் அபிஷேகமும் நிகழும். சுப்பிரமணியர் திருக்கல்யாண வைபவம், மயில்வாகன உற்சவம், கார்த்திகை தீபம், ஆருத்ரா தரிசனம் ஆகியனவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. கார்த்திகை சோமவாரத்தன்று நூற்றெட்டு சங்கு அபிஷேகமும், தைமாத மூன்றாவது வெள்ளிக் கிழமையன்று 108 திருவிளக்குப் பூஜையும், மாசி மகாசிவராத்திரி இரவில் நான்கு காலச்சிறப்பு அபிஷேகமும் செவ்வனே நடைபெறுகின்றன. இக்கோயிலில் மாதந்தோறும் நடைபெறும் பண்டிகைகள் பற்றிய விபரங்களை இனிகாணலாம்.

# திருவான்மியூர் திருக் கோயிலில் நடைபெறும் திருவிழாக்களும், பண்டிகைகளும்

## சித்திரை

பண்டிகைகளும், விசேஷ வழிபாடுகளும் :

தமிழ் வருடப்பிறப்பு, தெலுங்கு வருடப்பிறப்பு, சித்திரா பௌர்ணமி, நடராஜர் அபிஷேகம்.

திருநாட்கள் :

விறன் மீண்டர், திருக்குறிப்புத்தொண்டர், அப்பர்சுவாமிகள், சிறுத்தொண்டர், மங்கையர்க்கரசி ஆகிய நாயன்மார்கள்.

## வைகாசி

பண்டிகைகளும், விசேட வழிபாடுகளும் :

வைகாசி விசாகம்,

திருநாட்கள் :

சோமாசி மாறர், திருஞானசம்பந்தர், திருநீல நக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தி அடிகள் ஆகிய நாயன்மார்கள்.

## ஆனி

பண்டிகை : ஆனித் திருமஞ்சனம்

திருநாட்கள் :

ஏயர்ரகோன் கலிக்காமர், அமர்நீதியார் ஆகிய நாயன்மார்கள் மாணிக்க வாசகர்.

## ஆடி

பண்டிகை : ஆடிக் கிருத்திகை, ஆடிப்பூரம்,

திருநாட்கள் :

கலியர், கோட்புலியார், எறிபத்தர், புகழ்ச்சோழர், கூற்றுவர், மிழலைக்குறும்பர், சுந்தரமூர்த்தி, சேரமான் பெருமாள் ஆகிய நாயன்மார்கள்.

ஆவணி பண்டிகைகள் : வரலட்சுமி விரதம், ஆவணி அவிட்டம் காயத்திரி ஜபம், விநாயக சதுர்த்தி, நடராஜர் அபிஷேகம்.

திருநாட்கள் : செருத்துணையார், புகழ்த்துணையார், அதிபத்தர், இளையான்குடி மாறனர், குலச்சிறையார் குங்கிலியக் கலயனர் ஆகிய நாயன்மார்கள்:

புரட்டாசி பண்டிகைகள் : நவராத்திரி மகாபரணி, விஜயதசமி

திருநாட்கள் : நரசிங்க முனையார் உருத்திர பசுபதியார், ஏனாதி நாயனார் ஆகிய நாயன்மார்கள்.

## ஐப்பசி

பண்டிகைகள் :

அன்னாபிஷேகம், தீபாவளி, கேதாரகௌரி விரதம் திருக்கல்யாணம், கந்த சஷ்டி.

## கார்த்திகை

பண்டிகைகள் :

பரணிதீபம், அண்ணாமலை தீபம், சோமவாரம்.

திருநாட்கள் :

கணம்புல்லர், மெய்ப்பொருளார், ஆனாயர், மூர்க்கர், சிறப்புலியார், ஆகிய நாயன்மார்கள்.

## மார்கழி

பண்டிகைகள் : ஆருத்ராதரிசனம், 18 திரு நடனம், போகி.

திருநாட்கள் :

சடையனார், இயற்பகையார், மனக் கஞ்சார், சாக்கியர், வாயிலார் ஆகிய நாயன்மார்கள்

## தை

பண்டிகைகள் :

மகாசங்கராந்தி, பொங்கல், தைப்பூசம்.

திருநாட்கள் :

கண்ணப்பர், அரிவாட்டாயர், சண்டேசர், திருநீலகண்டர் அப்பூதி அடிகள், கலிக்கம்பர் ஆகிய நாயன்மார்கள்.

## மாசி

பண்டிகைகள் :

மாசி மகம், மகா சிவராத்திரி (இரவில் நான்கு கால சிறப்பு அபிஷேகம் உண்டு)

திருநாட்கள் :

எறிபத்தர், கரியனார், கோட்செங்கட் சோழர் ஆகிய நாயன் மார்கள்

**பங்குனி**

பண்டிகைகள் :

பங்குனி உத்திரம், யுகாதி

திருநாட்கள் :

காரைக்கால் அம்மையார், நேசனார், கணநாதர். முனை யாடுவார் ஆகிய நாயன்மார்கள்

# ஆடும் தியாகர்

திருவான்மியூரில் ஐதீக விசேஷம் என்ன? என்று எந்த ஊரில் சென்று கேட்டாலும் தியாகராஜர் திருநடனத்தையே அவர் கள் குறிப்பிட்டுக் கூறுவார்கள். பத்து தியாகர்களில் நடனம் ஆடும் தியாகராஜரைக் கொண்ட தலம் திருவான்மியூர். அருள் மிகு தியாகராஜர் வீதிப் புறப்பாடும், உற்சவமும் இரவுக்காலத்தி லேயே நடைபெற்று வருவது வழக்கம். தியாகராஜரின் வீதிப் புறப்பாட்டிற்கும், மற்ற சுவாமிகளின் வீதிப்புறப்பாட்டிற்கும் நிரம்ப வித்தியாசங்கள் உள்ளன. தியாகராஜரைத் தனிக்கணையிலே (தியாகர்கணை என்று பெயர்) வைத்துக் கயிற்றால் கட்டாமல் ஸ்ரீபாதம் தாங்கிச் சென்று வீதிப்புறப்பாடு செய்யப்படுகிறது வீதிப்புறப்பாட்டின்போது சுவாமியின் திருநடனக் காட்சியைக் காண்பிக்கின்றனர்

இத்திருநடனக் காட்சி ஒவ்வொரு வீதிப்புறப்பாட்டின் போதும், பின் கோபுர வாயிற்படியில் (வான்மீகருக்குத்திருநடனக் காட்சி அருளுவதாக ஐதீகம்) நடப்பது வழக்கம். மேலும் பெருந் திருவிழாவின் போது மூன்றும் நாள், 4-ம் நாள் 5-ம் நாள் 6-ம்நாள் ஆகிய நாட்களில் பவனி மேடையில் தியாகர் பவனி நடைபெறும். திருவிழாவின் பத்தாம் நாளன்று 16 கால் மண்பத்தைச் சுற்றியும்,

11-ம் நாளன்றும் ஆருத்ரா, அரைக்கட்டு உற்சவத்தின்போதும் திரிபுரசுந்தரி அம்மன் சன்னிதிக்கெதிரிலும், 18 திருநடனக் காட்சி நடைபெறுகிறது. கார்த்திகை தீபத்தின் போது, சொக்கப்பானை ஏற்றியபின் அருள்மிகு தியாகராஜரின் 18 வகைத் திருநடனம் 16 கால் மண்டபத்திற்கும், பவனி மேடைக்கும் இடையில் நடைபெறும்.

பவனி மேடையில் நடைபெறும் திருநடனக் காட்சிக்குத் தியாகர் பவனி என்று பெயர். இப்பவனிக் காட்சிக்கும், திருநடனக்காட்சிக்கும் வித்தியாசம் உள்ளது. நடனம் என்பது சாதாரணமாக சுவாமியைச் சாய்த்து நடனம்புரியச் செய்வது. பவனி என்பது சாய்த்து இரண்டடி தூரம் சுவாமியை அணைத்துச் செல்வதாகும் இந்நடனத்தில்போது, பிரம்மதாளம், பூரி, ஆகிய வாத்தியங்களும் விசிறி, பஞ்சா, குடை ஆகியவைகளும் இயங்கும் விதமும், ஸ்ரீபாதாம் தாங்கிகளின் கால் அசைவுகளும் கவனிக்கவேண்டிய அம்சங்களாகும். இத்தைய சிறப்புமிக்க தியாகராஜர் தோன்றிய வரலாறு சுவையானது. அதிதவுட்டிரன் என்ற அரக்கனை வென்று இந்திரனை மீண்டும் அரியணையில் அமர உதவினார் முசுகுந்தச் சக்கரவர்த்தி. அதனால் இந்திரன் அவருக்கு வரம் அளிக்க முற்பட்டான். சிவபூஜையில் அவன் நித்யம் பூசித்து வந்த சுவர்ண தியாகராஜரைத் தனக்கு அளிக்க முசுகுந்தர் வேண்டினர். இந்திரன் அதற்கு ஒப்பாமல் பல தியாகராஜர்களை உருவாக்கி இதில் தாங்கள் எந்தத் தியாகராஜரை விரும்புகிறீர்களோ, அவரைத் தாராளமாக எடுத்துச்செல்லுங்கள் என்றான். முசுகுந்த மன்னரும் இறைவனை உள்ளத்தில் நினைந்து வணங்கினர்.

அருள்மிகு தியாகராஜப் பெருமான் முசுகுந்தர் மனதில் தோன்றி மூலமான சுவர்ண தியாகராஜரை உணர்வித்து நேர்மையை நிலைநாட்டினர் இந்திரனுக்கு அவரைக் கொடுக்கும் அவசியம் ஏற்பட்டது. இதரதியாகர்களையும், வழிபட மனமின்றி முசுகுந்த மன்னரிடம் இந்திரன் கொடுத்து விட்டான்

அனைத்துத் தியாகராஜர்க்ளையும் இந்திர லோகத்தில் இருந்து பூமியில் கொண்டு வந்து, ஆலயங்களில் அமைத்து வழிபட முசுகுந்தர் முற்பட்டார். மூலமான தியாகராஜரைத் திருவாரூரிலும், இதர ஒன்பது தியாகர்களில் ஆறு தியாகர்களை அவ்வூரைச் சுற்றி சப்தவிடங்கஸ்தலங்களாகவும்அமைத்தார். வடக்கில் செங்கல்

பட்டு மாவட்டத்தில்) மூன்று தியாகராஜ உருவங்களை அமைத்தார் அவையாவன :-

1) திருவான்மியூர், 2) திருவொற்றியூர், 3) திருக்கச்சூர்,

இவ்வாறு தியாகராஜர் அருளினை முசுகுந்த மன்னர் பெற்றதை இன்றும் பக்தர்கள் அறியும் வண்ணம் பெருந்திருவிழாவின் இரண்டாம் நாள் நள்ளிரவில் அருள்மிகு தியாகராஜர் முசுகுந்த மன்னருக்கு அருளல் எனும் விழா சிறப்பாக இங்கு நடைபெற்று வருகிறது. தியாகராஜரின் பெருமையைக் குமரகுருபரர் போற்றுகிறார்.

"வையம் முழுதிம் உழுதுண்ண வல்லார்க் களித்து நவநிதியும்
கையில் ஒருவர்க்களித் தேமக்கே கதி வீட்டளித்தோர் கன்னிக்கு
மெய்யில் ஒரு கூறளித் தினரால் விமலர் கமலைத் தியாகர் என்ப
தையர் இவர்க்கே தகும்முகமன் அன்று புகழும் அன்றாமே"

## இன்றைய நிலை

நிர்வாகம் :

துவக்கத்தில் திருவான்மியூர் ஜமீன் எஸ்டேட்டாக இருந்தது தற்போது தமிழக அரசின் சார்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரால் இக்கோயில் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது


வருமானமும் சொத்துக்களும் :

இக்கோயிலுக்கான முக்கிய வருமானம் நிலங்களிலிருந்தும், கட்டிடங்களிலிருந்தும் கிடைக்கிறது. பக்தர்களின் உபயங்களைக் கொண்டும், ஆலயத்தின் வருமானத்திலிருந்தும் உற்சவங்கள், திருவிழாக்கள் போன்றவை நடத்தப்படுகின்றன. இக்கோயில் சிறந்த பிரார்த்தனை ஸ்தலமாக இருப்பதால் காணிக்கைகள், நன்கொடைகள் போன்றவற்றால் சிறிது வருமானம் கிடைக்கிறது. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் அரசினரால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இதன் மூலம் பெற்ற தொகையை வங்கிகளில் வைப்புநிதியாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. அத்தகையமுதலீடுகளிலிருந்து வரும் வட்டித்தொகை கோயிலின் செலவுகளுக்குப் பயன் படுத்தப் படுகின்றது. ஆலயத்திற்குச் சொந்தமாக நன்செய், மற்றும் புன்

செய் நிலங்கள் காலிமனைகள், குடியிருப்புகள் கடைகள் ஆகியன உள்ளன. இவற்றிலிருந்து வரப்படும் குத்தகைப் பணம், அடிமனை வாடகை, கட்டட வருவாய் மற்றும் உண்டியல் வருமானம், அர்ச்சனை, அபிஷேகக் கட்டணங்கள் போன்றவற்றின் மூலம் ஆலயத்திற்கு நல்ல வருவாய் கிடைக்கிறது.

கட்டளைகள் : இத்திருக்கோயிலுக்கு இராமன் செட்டியார் என்பவரால் தனித்தனி இனங்களாகப் பல கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை இராமன் செட்டியார் அறக்கட்டளை என்ற பெயரில் அருள்மிகு மருந்தீசர் திருக்கோயிலுடன் இணைக்கப் பட்டுள்ளன. இவற்றின் மூலம் பெறும் வருமானம் ஆலயத்தின் அன்றாட பூஜைகளுக்கும், விசேட நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன


பங்குனிப் பெருவிழாவின் ஆறும்நாள் உற்சவ செலவுகளுக்காக ஆறும்நாள் அறக்கட்டளை என்ற ஒரு கட்டளை ஏற்படுத்தப் பட்டுள்ளது. திருவிழாவின் போது பக்தர்களுக்கு நீர்மோர் வழங்குவதற்காகத் திரு. வீராசாமி என்பவரால் வீராசாமி தண்ணீர்ப்பந்தல் கட்டளை நிறுவப்பட்டுள்ளது.



**சுபம்**




நரசிம்மர்





அருள்மிகு சுக்கிரவார அம்மன்



பிரதோஷ நாயகர்

# பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 17 | வடிவடைவர்ர்கள் | வடிவடைவார்கள் |
| 2 | 24 | தற்றியூர் | ஒற்றியூர் |
| 7 | 13 | சப்தஸ்கானந்தலங்கள் | சப்தஸ்தானத்தலங்கள் |
| 12 | 8 | சுரோத்தியம் | சுரோத்திரியம் |
| 15 | 10 | கணக்கிட்டுள்னர் | கணக்கிட்டுள்ளனர் |
| 16 | 9 | ஓங்காரம் | ஓங்காரம் |
| 16 | 14 | இடைபாசம் | இடைபாகம் |
| 18 | 2 | சந்நகிக்கு | சந்நிதிக்கு |
| 19 | 16 | அரிவட்டாய நாயஞர் | அரிவர்ட்டாய நாயஞர் |
| 21 | 18, 19 | ஊன்றியவராய்க் | ஊன்றியவராய்க் |
| 24 | 12 | திவிலிருந்த | தீவிலிருந்த |
| 26 | 2 | உள்னன | உள்ளன |
| 30 | 17 | விழாக்கள் | விழாக்களும் |
| 33 | 4 | கலிபாணசுந்தரர் | கலியாணசுந்தரர் |
| 36 | 15 | காலப்பாசக் குறுந்—தொசை | காலப்பாசக்குறுந்தொகை |
| 43 | 27 | சொந்த தேவைக்காக | சொந்தத் தேவைக்காக |
| 47 | 23 | ஒதி | ஓதி |
| 48 | 2 | பார்த்ததுக்கு | பார்த்தனுக்கு |
| 48 | 27 | சந்திரணின் | சந்திரனின் |
| 49 | 6 | தந்தையையுப் | தந்தையையும் |
| 55 | 11, 12 | தண்ணுனம் | தண்ணுமை |
| 55 | 21 | வந்தானெச் | வந்தானென்னச் |
| 55 | 29 | மலரவனுகும் | மலரவனுக்கும் |
| 55 | 36 | அனோருவம் | அனோவரும் |
| 56 | 7 | தொண்டாடியபின் | கொண்டாடியபின் |
| 56 | 14 | இலறஞ்சிறுன் | என இறைஞ்சிஞன் |
| 56 | 29 | வரரங்களின் | வரங்களின் |
| 59 | 7 | சைதை | சைந்தை |
| 61 | 26,27,27 | ஒலம் | ஓலம் |
| 62 | 9 | பனிகளே | பணிகளே |
| 64 | 9 | ராஜஜியத்தை | ராஜ்ஜியத்தை |
| 64 | 23 | வணங்கியவாறு | வணங்கியவாறும் |
| 66 | 24 | தரிசித்தாலு | தரிசித்தாலும் |
| 71 | 24 | கமாநாசனே | காமநாசனே |
| 75 | 2 | சரித்திர்த்தை | சரித்திரத்தை |
| 75 | 3 | ஆதார்ங்கள் | ஆதாரங்கள் |
| 75 | 5 | தென்ன வரலாறு | தென்னக வரலாறு |

| | | | |
|---|---|---|---|
| 75 | 22 | திருக்குகமுகுன்றத்—திற்கும் | திருக்கழுக்குன்றத்திற்கும் |
| 75 | 27 | அதனே சுற்றி | அதனைச் சுற்றி |
| 76 | 13 | வழிபடுவதற்காகவே | வழிபடுவதற்காக |
| 77 | 7 | பகுதியிம் | பகுதியில் |
| 77 | 19 | செட்திகள் | செய்திகளை |
| 78 | 6 | எந் தவிதத்தில் | எந்த விதத்தில் |
| 79 | 27 | தலங்களுக்கு சென்று | தலங்களுக்குச் சென்று |
| 79 | 31 | அவ்வூரிள்ள | அவ்வூரிலுள்ள |
| 79 | 36 | ஒத்தொழியா | ஒத்தொழியா |
| 80 | 20 | எமு | ஏமு |
| 82 | 8 | தீட்ச்சிகர் | தீட்சிதர் |
| 84 | 16 | ம்ருக பெருமானே | முருகப் பெருமானை |
| 86 | 3 | வெளிமண்பத் தூணில் | வெளிமண்டபத்தூணில் |
| 86 | 10 | பொறிக்சப்பட்டுள்ளது | பொறிக்கப்பட்டுள்ளது |
| 86 | 14,15 | சிவபிரன் | சிவபிரான் |
| 87 | 9 | நினற | நின்ற |
| 88 | 14 | வணப்புமிக்கது | வனப்புமிக்கது |
| 89 | 15 | தெரிவதத்காக தன் | தெரிவதற்காகத் தன் |
| 89 | 26 | முற்காலதித்ல் | முற்காலத்தில் |
| 90 | 11 | விஜநகர | விஜயநகர |
| 92 | 19 | உள்மும் | மும் |
| 92 | 19 | என | உள்ளன |
| 93 | 11 | ஊர்த்துவ தாண்டவர் | ஊர்த்துவத் தாண்டவர் |
| 93 | 18 | சிறியராகவும் | சிறியவராகவும் |
| 96 | 1 | குறிப்பிபடப்பட்டது | குறிப்பிடப்பட்டது |
| 96 | 24 | சாணலாம் | காணலாம் |
| 96 | 31 | படியெடுக்கப்படடுள்ளன | படியெடுக்கப்பட்டுள்ளன |
| 100,to,103 | | பன்னிரெண்டு | பன்னிரண்டு |
| 110 | 1 | குழையும் சுருள்தோடுப் | — |
| 110 | 13, 14, | சரணடைந்ததனயே | சரணடைந்ததையே |
| 111 | 13 | இறுதிநிலையைடைந்தான் | இறுதிநிலையடைந்தான் |
| 112 | 6 | வித்யுமான்லி | வித்யுன்மாலி |
| 112 | 7 | அழித்தீரர் | அழித்தீர் |
| 112 | 16 | ஓதித்ய | ஓதிய |
| 112 | 17 | சேலேகளும் | சோலைகளும் |
| 113 | 11 | அறியும் | அரியும் |

| | | | |
|---|---|---|---|
| 114 | 3 | ஒதியன் | ஓதியன் |
| 115 | 20 | உண்ணையல்லால் | உன்னையல்லால் |
| 117 | 16 | நீளகழன்மேல் | நீள்கழன்மேல் |
| 118 | 14 | இன்னல்களையும் | இன்னல் களையும் |
| 119 | 3 | ஆதியாய் | ஆதியா |
| 119 | 12 | வல்லீரேல் | வல்லிரேல் |
| 119 | 14 | மந்தம்ாகிய | மந்தமாகிய |
| 119 | 15 | அடைந்த | அடைந்து |
| 119 | 23 | வுள்ளலாகிய | வள்ளலாகிய |
| 122 | 3 | மதிக்கொமுந்து | மதிக்கொழுந்து |
| 123 | 14 | வணங்கியபி | வணங்கியபின் |
| 124 | 25 | நியைந்த | நிறைந்த |
| 127 | 4 | இழிவன்றோர் | இழிவன்றோ |
| 127 | 11 | ஏத்தரிதாய்ப் | ஏத்தரிதாப் |
| 128 | 1 | பகர்கினற | பகர்கின்ற |
| 129 | 7 | சுவிர்கின்ற | அவிர்கின்ற |
| 129 | 6 | தென்மயமெனும் | தென்மலயமெனும் |
| 130 | 2 | கின்றன | நிகழ்கின்றன |
| 130 | 3 | நிகழ் என்பது | என்பது |
| 139 | 1 | பூமன | பூமன் |
| 139 | 16, 22 | ஒத | ஓத |
| 142 | 8 | திரிபுரசுந்தரித் தாளைத் தரிதாள | திரிபுரசுந்தரி தாளைத்தரித்தாள |
| 143 | 11 | வேத்திண் | வேத்திரத் |
| 143 | 14 | யிகத்தினிவரனருளின் | யிகத்தினிலரனருளின் |
| 144 | 5 | வடக்கிக | வடக்கிக் |
| 145 | 6 | சூழையத் | குழையத் |
| 145 | 7 | நிலவவரூண் | நிலவவருண் |
| 146 | 1 | அவளுடையவரசு | ஆளுடையவரசு |
| 146 | 7 | நித்தாதமியா | நித்தாந்தமியா |
| 146 | 10 | செண்டை | கெண்டை |
| 148 | 5 | விகல்யாணி | பூர்வி கல்யாணி |
| 150 | 22 | திருப்பயிணியிலும் | திருப்பணியிலும் |
| 151 | 4 | வழிபுாடு | வழிபாடு |
| 151 | 24 | நல்லதொரு | நல்லதொரு |
| 152 | 3 | சர்தனங்கள் | சாதனங்கள் |
| 155 | 15 | வானவர்கன் | வானவர்கள் |
| 155 | 24 | சமய சார்பு | சமயச் சார்பு |

| | | | |
|---|---|---|---|
| 156 | 14 | ஒதுவாரும் | ஓதுவாரும் |
| 156 | 20 | தாடர்பு | தொடர்பு |
| 156 | 2ப | போக்கிகெ | போக்கிக் |
| 157 | 4 | வாழிபாடு | வழிபாடு |
| 157 | 4 | திருவிமா | திருவிழா |
| 157 | 9 | அகத்தியருகு | அகத்தியருக்கு |
| 157 | 31 | வழிவ்குக்கின்றன | வழிவகுக்கின்றன |
| 158 | 19 | அர்ச்சகர்கள் | (அர்ச்சகர்கள்) |
| 160 | 19,20, | அசுரர்கஞும் | அசுரர்களும் |
| 162 | 16 | விவபங்கள் | விவரங்கள் |
| 162 | 22 | மூாத்திகள் | மூர்த்திகள் |
| 165 | 2,3 | ஆடிபூரத்தன்று | ஆடிப்பூரத்தன்று |
| 166 | ஆனி | திருநாட்கள் | திருநாட்கள் |
| 166 | ஆனி | ஏயர்ரகோன் | ஏயர்கோன் |
| 166 | 15 | சேரமரன் பெகுமாள் | சேரமான் பெருமான் |
| 167 | 2,3 | ஏறுதி நாயனுர் | ஏனாதிநாத நாயனார் |
| 167 | 17 | சடையளார் | சடையனார் |
| 68 | 17 | தியர்கர்ரஜரை | தியாகராஜரை |
| 168 | 27 | மண்பத்தித் | மண்டபத்தைத் |
| 169 | 22 | தியாகரஜாக்ர | தியாகராஜரை |
| 170 | 19 | கேரயிலின் | கோயிலின் |